# கடவுள்

## சகலமும் கடவுள்

'எல்லாம் கடவுள் செயல்' என்று பலர் கூறக்கேட்கலாம். அப்படியெனில் ஏமாற்று, பொய், வஞ்சம், லஞ்சம், கொலை, கொள்ளை, விபச்சாரம் போன்றவைகளும் கடவுளின் செயலா? என வினவ வேண்டியிருக்கிறது. அதாவது கடவுள் அனைத்தையும் அறிந்தவர், உலகில் நடக்கும் அத்தனைச் செயல்களும் அவருக்குத் தெரிந்து, அவரது விருப்பம், கட்டளைபடியே நடக்கின்றன என்று பேசுகிறார்கள்.

இது உண்மையாக இருக்கும்பட்சத்தில் இப்படியானக் காரியங்கள் கடவுளுக்குத் தெரிந்து, அவரின் வழிகாட்டுதலின் பேரிலேயே இவை நடப்பதாகத்தான் அர்த்தம் ஆகிறது. கடவுள் மனிதனை படைத்தாரா? மனிதன் கடவுளைப் படைத்தானா? என்ற விவாதம் அவ்வப்போது எழுவதுண்டு. யார் யாரைப் படைத்திருந்தாலும் அவையனைத்தும் நன்மைகளுக்காக இருந்தால் நன்றே... மேலும் கடவுள் தூணிலும் இருப்பார் துரும்பிலுமிருப்பார் என்பர். அதாவது எல்லா இடங்களிலும் இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு சிலர், கடவுள் சாக்கடைகள், குப்பைகள், இதர கழிவுகளிலும் இருக்கிறாரா எனக் கேட்பது உண்டு.

## கடவுள் பக்தி ரசங்கள்

கடவுள் பக்தி இல்லாமல் கடவுளர்களை எதிர்க்கும் மனிதர்கள் ஒருபுறம். சகலமும் கடவுள் எனக் கூறும் பெரும்பான்மையான மக்கள் இன்னொருபுறம். அரைகுறை கடவுள் பக்தியோடு இரண்டுங்கெட்டான் ரகத்தில் சிலர். இன்னும் சிலர் கடவுள் இருக்கிறாரா ! இருந்தால்

இருக்கட்டும் !! இல்லையென்றாலும் பரவாயில்லை !!! நமது வேலையைப் பார்த்துக்கொண்டிருப்போம் என்பவர்கள். இவ்வாறாக கடவுள் பற்றிய நிலைப்பாட்டில் மனிதர்கள் பலவாறுப் பிரிந்துகிடக்கிறார்கள்.

கடவுள் இல்லை என உண்மையிலேயே தைரியாமாகக் கூறுகிறவர்கள் மிகுந்த நெஞ்சுரம் கொண்ட தன்னம்பிக்கை உடையவர்களாக இருக்கவேண்டும். இவர்களில் நல்லவர்கள் கூடுதலாக இருப்பது சமுதாயத்திற்கு மிக நல்லது மாறாக இப்பிரிவினர் தீயவர்களாக இருப்பாரேயானால் மிகுந்த ஆபத்தானவர்கள்.

கடவுளை ஏற்றுக் கொண்டவர்களுக்கு, ஒருவேளை கடவுள் என்பவர் உண்மையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பல நன்மைகள் வந்து சேருகின்றன. முதலாவதாக எளிதான முறையில் எவ்விதத் தனி பிரத்தியேக முயற்சியும் இல்லாமல் மனம் ஒருங்கிணைக்கப்பட்டு சாந்தம் அமைதி ஏற்படுகிறது. இது தனியாகத் தியானம் செய்வதில் ஏற்படும் பலனை பத்தில் ஒருபங்கு நேரத்தில் அளிக்க வல்லது இது இவர்களுக்கு இயற்கையாகக் கிடைத்துவருவதால் மனம் சிகிச்சை பெற்று உடலுக்கும் நல்லாரோக்கியம் தருகிறது.

கடைசி இருபிரிவினர் மனஅழுத்தம் இல்லாது எதையும் சகித்துக்கொள்ளக்கூடிய அனுசரித்துப் போகக்கூடியவர்களாக இருப்பார்கள். இவர்களில் பெரும்பகுதியினர் எச்சூழ்நிலைகளிலும் எவ்வித சிரமமும் இல்லாமல் வாழத்தெரிந்தவர்களாக இருக்கலாம்.

## எத்தனைக்கடவுள்

கடவுள் இருக்கிறாரா–இல்லையா, ஒருவரா–பலரா என்பதுமட்டுமன்றி, ஒவ்வொரு மதத்திற்கு–சாதிக்கு என தனித்தனி கடவுள்கள், துணை–இணை கடவுள்கள், சாமிகள் போன்றோர் இருக்கின்றனரா? என்பதும் அறிவானவர்களுக்கு தோன்றும் அறிவுப்பசிக் கேள்வி.

இயற்கையிலேயே கடவுள் என்பவர் இருந்துவிட்டால் நிச்சயமாக எச்சிக்கலும் இருக்க வாய்ப்பில்லை, அனைத்தும் அவரால் படைக்கப்பட்டிருக்கும். ஆனால் இந்த பூமியில், பிரபஞ்சத்தில் நடக்கும் பலவும் அவருக்குத் தெரியாதது மாதிரித் தோன்றுகிறது. ஏனெனில் இவ்வளவு அக்கிரமங்கள் இப்புவியில் ஏன் அனுமதிக்கப்பட வேண்டும். மனிதர்களுக்குள் இவ்வளவு ஏற்றத்தாழ்வுகள் ஏன் இருக்கவேண்டும். இவைகளுக்கான விளக்கங்கள் சரிவரக் கிடைக்கவில்லை.

## புராணக் கடவுள்கள்

இந்து புராணங்கள், இதிகாசங்களில் வரும் சம்பவங்களில் கூட கடவுளின் மறு அவதாரங்களாகக் காட்டப்பட்டிருந்தவர்களுக்கு தங்களுக்கு முன்பு நடப்பதை தெரிந்து கொள்ளமுடியாதது போல் கூறப்பட்டிருக்கிறது. ஏகபத்தினி விரதன் என்கிற இராமபிரானின் மனைவி சீதாபிராட்டிக்கு, இராவணன் பொய்மானாக வந்தது தெரியாமல் போயிற்று. இராவணன் தன்னைக் கடத்திப்போகும்போது கடவுளின் அவதாரமாக இருந்த சீதாதேவி ஏன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள இயலவில்லை. இச்சம்பவத்தை நேரில் நிஷ்டையில் பார்த்துக்கொண்டிருந்த கடவுளாகிய இராமபிரானுக்கு ஏன் இச்செயலைத் தடுக்க இயலவில்லை.

சிறைப்பிடிக்கப்பட்ட சீதாதேவியை மீட்டுவருவதற்கு சாதாரண மனிதர்கள் செய்யும் முயற்சிகளாக இராமாயணத்தில் சொல்லப்பட்டிருப்பது வேடிக்கையாக இருக்கிறது. அனைத்திற்கும் மேலாக மீட்கப்பட்டுத் திரும்ப வரும் தன்மனைவி கற்புள்ளவளா? இல்லையா? என்ற மாற்றானின் கேள்விக்கு சோதனை நடத்திதான் நிரூபிக்கவேண்டுமா. அதேபோல் வாலி என்பவரை குற்றவாளியாகக் கருதியபோது ஒளிந்து மறைந்து ஏன் கொல்லவேண்டும். குற்றச்செயல் என்றால் நேரிடை தண்டிப்பில் என்ன தவறு. இந்நிலைகளில் இவர்கள் கடவுளராக எங்ஙனம் போற்றப்படுகிறார்கள் என்பது விளங்கவில்லை. இக்கேள்வியைக் கேட்பவர்கள் வேண்டாதவராகிவிடுகிறார்கள்.

டார்வின், நியூட்டன், சாக்ரட்டீஸ் போன்றவர்கள் ஏன்? எதற்கு? எப்படி? என சிந்தித்ததால், கேட்கச்சொன்னதால்தான் இன்றைக்கு நமக்கு மாபெரும் அறிவுகள், வாழ்க்கை முறைகள் கண்டுபிடிப்புகள் கிடைத்திருக்கின்றன. அரசனும் நாட்டின் மொத்த மக்களும் தவறாக பூமி தட்டையெனச் சொன்னபோது கலிலியோ தனியாளாக பூமி உருண்டை என தான் உணர்ந்ததை உறுதியாகத் தெரிவித்தார். எனவே கோடானகோடி மனிதர்கள் பரம்பரைப் பரம்பரையாகச் சொல்லி ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக எல்லாம் மெய்யாகிவிடாது.

இவ்வாறே திருமாள் பெண்வேடமிட்டு வந்தது சிவபெருமானுக்குத் தெரியாமல் போய் மயங்கி விந்து சிந்தியதாக கூறப்பட்டுள்ளது. அச்சங்கதியை மோகினி தன் கையில் வாங்கி ஐயப்பன் என்ற அடுத்தக் கடவுள் அவதாரம் ஆக்கப்பட்டார் எனக் கூறுகின்றனர். உலகக் கடவுளான சிவபெருமானுக்குத் தெரியாமல் இன்னொரு புதுக்கடவுள் அவதாரம் உருவாக்கப்பட்டது சரிதானா?

சிவனின் இளைய மகனான முருகனுக்கு தாய் தந்தையரே உலகம் என தனக்கும் தெரியாததோடு, தன் அண்ணன் கூறப்போவதும் தெரியாமல் போய் கோபித்துக்கொண்டு வெளியேறி எங்கெங்கோ ஊர்சுற்றித் திரிந்தது எல்லாமறிந்த கடவுளுக்குப் பொருந்துமா!

## சிலுவையின் மதிப்பு

கிறித்துவ மதத்தில் கடவுள், கடவுளின் மகன், கடவுளின் தூதர் ஆகிய மூன்றிற்கும் இயேசு கிறிஸ்துவை அடையாளம் காட்டுகின்றனர். இதை ஆராய்ந்து பார்க்கையில் முரண்பாடுடையதாகத் தெரிகிறது. மேற்கூறிய மூன்று நபர்களும் ஒருவராகவே இருப்பது பொருத்தமானதாகத் தோன்றவில்லை. இது ஒருபுறம் இருக்க கிறித்தவர்கள் வணங்கும் அவர்களின் அடையாள புனித சின்னமாகிய சிலுவை குறித்து கருத்துவேறுபாடு தோன்றுகிறது. இயேசுவிற்கு முற்காலத்திலிருந்தே கொடியக் குற்றவாளிகளைத் தண்டித்து

மரணமளிக்க கழுமரம் மற்றும் சிலுவையில் அறைந்து கொல்வதை வழக்கத்தில் கொண்டிருந்தனர். அவ்வாறானச் சிலுவையை இயேசுவும் அவருக்கு முன்னும் பின்னும் இரு திருடர்களும் தங்கள் முதுகினில் சுமக்க வைக்கப்பட்டு கல்வாரி மலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

மிக பெரிய அளவிலானதும் அதிகஎடை உள்ளதுமான அம்மரச் சிலுவைகளை அம்மூவரும் மிகுந்த கொடுமைகளுக்கிடையில் தூக்கமுடியாமல் பலமுறை கீழே போட்டு சிலதடவைகள் முதுகில் வைத்து இழுத்துச் சென்ற காட்சிகளை சில கிறித்துவத் திரைப்படங்களில் காண்பித்தனர். அச்சமயங்களில் ரோமானிய போர் வீரர்கள் சாட்டைகளால் சவுக்கடி கொடுத்துத் துன்புறுத்தியதும் காண்பிக்கப்படுகிறது. பின்னர் சம்பவ இடத்திற்குக் கொண்டுசென்று அச்சிலுவைகளின் மேல் படுக்கவைத்து மிகமிகக் கொடிய கொடூரமான முறையில் அவர்களுக்கு அதில் முட்கிரீடம் அணிவித்து, ஆணிகளைக் கொண்டு அறைந்து படுகொலை செய்யப்பட்டனர். பின்னர் அச்சிலுவைகளை நிமிர்த்தி நடப்பட்டதை நாம் கூறக்கேட்கிறோம்.

இவ்வாறாக இயேசுவைக் கொடூரமாகக் கொல்வதற்கு பயன்படுத்தப்பட்ட இச்சிலுவை எவ்வகையினில் புனிதமாகக் கருதப்படுவதற்குச் சாத்தியக்கூறுகள் கொண்டது என்பதை எண்ணிப்பாருங்கள். உண்மையில் இக்காரணத்தினால் அச்சிலுவை அடையாளச்சின்னம் கிறித்துவர்களால் வெறுக்கப்படுவதற்கு உரியதாகவே எடுத்துக்கொள்ள இயலும். உலக கிறித்தவர்கள் எதைச் செய்தாலும் தங்கள் நெற்றி மற்றும் இருமார்பகங்களில் கைகளால் சிலுவை அடையாளக்குறியை போட்டுக்கொள்கின்றனர். சமீபத்தில் ஜெர்மனியில் நடந்த உலகக்கோப்பை கால்பந்து போட்டியில் கிறித்துவ நாட்டைச் சேர்ந்த இருஅணியினர் ஒருவருக்கொருவர் கடுமையாக மோதி இன்னொரு கிறித்துவ நாட்டிற்கு எதிராகக் கோல்களைப் போட்டபின் அவ்வீரர் மிக ஆனந்தமாக தன் நெற்றி நெஞ்சுகளில்

சிலுவைகளைப் போட்டுக்கொண்டது எங்களைப்போன்ற சிலருக்கு வித்தியாசமாக இருந்தது. இன்னொரு கிறித்துவன் தோல்வியில் வருத்தப்படும்போது மற்றொரு கிறித்துவன் அதை மகிழ்ச்சியாகக் கொண்டாடி சிலுவை போட்டுக்கொள்வது மகத்துவமானதா !

## கிறித்தவப் பிரிவுகள்

தங்கள் கடவுளான, கடவுளின் மகனான, கடவுளின் தூதரான இயேசு கிறிஸ்துவைக் கொடுமைப்படுத்திக் கொலைசெய்து, அவரின் இருபுறமும் கொடும் திருடர்களை அவ்வண்ணமே செய்து நிறுத்தப்பட்டு, அவமானப்படுத்துவதற்கு உபயோகமாகிய உங்களின் இச்சிலுவையின் அவசியத்தை நீங்கள் மறுபரிசீலனை செய்துபாருங்கள். கிறித்துவ மதத்தின் புனிதநூலான பைபிலில் உருவவழிபாடு மிகத்தவறானதாகக் கூறப்பட்டிருந்தும் முதல்நிலை கிறித்துவர்களான கத்தோலிக்கர்கள் பழைய யூத ஆடவரின் உருவத்தைக் கற்பனை செய்து இயேசுவிற்கு வடிவம் கொடுத்து வணங்கி வருகின்றனர். இதையே முதற்காரணமாகக் கொண்டு இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்னொரு பெரும் பிரிவினராக புராட்டஸ்டண்ட் வகையினர் உருவாகினர். இந்த இரண்டாவது வகை புராட்டஸ்டண்ட் பிரிவினிலிருந்து மற்றொருப் பிரிவாக பெந்தகோஸ்த்தும் அதன் கிளை இயக்கங்களும் உண்டாகி மதம் வளர்க்கின்றனர். இவ்வாறு கிறித்துவ மதத்திலும் பல குறைகள் குளறுபடிகள் இருந்து வருகின்றன.

## இஸ்லாத்திற்கு விரோதமான இஸ்லாமியர்கள்

அடுத்ததாக முகமதிய மதத்தை சற்று பார்ப்போம். அவர்களின் புனித நூலான குரானில் கூறப்பட்டவைகளுக்கும் அவர்கள் தற்காலங்களில் நடந்துவரும் நடைமுறைகளுக்கும் துளியும் சம்மந்தமில்லாமல் இருக்கிறது. மற்றமதங்களைவிட அன்பு, இரக்கம், உதவி, மனிதநேயம், போன்ற எண்ணற்ற இனங்களில் சிறப்பாக வாழ்க்கை வழிகாட்டுதல்களுக்கு வழிசெய்யப்பட்டிருந்தும், இன்றைய

இஸ்லாமியரின் கணிசமானப் பகுதியினர் தீவிரவாதிகளாகவும் தீவிரவாதத்திற்கு ஆதரவு அளிப்பவர்களாகவும் இருந்துவருவது மிகுந்த மனவேதனை அளிக்கிறது.

இஸ்லாமிய மதத்தில் உருவவழிபாடு அறவே இல்லையெனக் கூறினாலும், இறந்த மதத்தூதுவர்களின் சமாதிகளைக் கொண்டுள்ள தர்கா போன்ற இடங்களை வழிபடுவது தவறு என அம்மதத்தின் ஒரு பிரிவினர் கடுமையாக இயக்கம் நடத்திவருகின்றனர். இவர்களிடத்திலும் ஒரு முழுமையான சரியான இறைக்கொள்கை இல்லாதது தெளிவாகிறது.

## கடவுள்களைக் காப்பது

இவ்வாறு மதங்களில் ஒரு தெளிவான அணுகுமுறை, வழிகாட்டுதல்கள் இல்லாமை ஒருபுறமிருக்க அம்மதங்களைச் சார்ந்த கடவுள்களுக்கு. அக்கடவுள்களின் இருப்பிடங்களுக்கு மனிதர்களால் மனிதர்களிடமிருந்தே பாதுகாப்புத் தேவைப்படுகிறது.

பல கோயில்களில் சாமிசிலைகள் திருட்டுப் போவது, உலோகச் சிலைகள் உடைக்கப்பட்டு வேறு பொருட்களாகிபோனது, லண்டன், நியூயார்க் போன்ற மேல்நாட்டு நகரப் பொருட்காட்சிசாலைகளில் சிறைபிடிக்கப்பட்டிருப்பது போன்றவைகள் தெய்வங்களாக போற்றப்படும் அச்சிலைக் கடவுள்களுக்கு ஏன் தெரிவதில்லை. சாதாரணத் திருட்டுக்களில் சிலர் மாட்டிக்கொள்வதுபோல் சிலைத்திருட்டுக்களிலும் அவ்வப்போது சிலர் மாட்டிக்கொள்ளும்போது கடவுள் தண்டனைக் கொடுத்துவிட்டார் என சிலர் கூக்குரலிடுவது எங்ஙனம் நியாயமாகும். சாமிகளுக்கே தங்களைக் காப்பாற்ற இயலாமல் பெரிய இரும்புக் கதவுகள், பூட்டுகள், காவல்கள், பெரும்மதில்கள் தேவைப்டுகின்றன. அதேநேரத்தில் சகமனிதர்களால் உருவாக்கப்பட்ட கடுமையான சட்டங்கள் இருக்கும் நாடுகளில் அனைத்தும் திறந்துகிடப்பது சாத்தியமாகிறது.

## கடவுளை மனிதர்கள் படைத்திருந்தால் ..

சிலர் கூறுவதுபோல் கடவுள் மனிதர்களால் படைக்கப்பட்டிருப்பதாக இருப்பின் அது எதற்காக நடந்திருக்க வேண்டும் என எண்ணும்போது இப்படி இருக்கலாமோ என யூகித்துப் பார்க்கத் தோன்றுகிறது. அனைத்து விலங்கினங்களும் இயற்கைக்குப் பயந்து வாழ்ந்து வந்திருக்கின்றன. இடி, மின்னல், பெருமழை, எரிமலை, சூறாவளி–புயல் காற்று, கடலின் பேரலைகள், பனிமலை உருகுதல், திடீர் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களைக் கண்டு அஞ்சிய, அதனால் பாதிப்படைந்த மனிதன் அவைகளுக்கு அடிபணிந்தான், வணங்கினான்.

இதுபோக மனிதர்களுக்குள்ளாக பல தேவைகளுக்காகப் போட்டிகள் ஏற்பட்டபோது ஒருவரை ஒருவர் மிஞ்ச, வெற்றிகொள்ள வேண்டிய நிலைகளில் பல உபாயங்களை மேற்கொண்டனர். சில மனிதர்கள் தங்கள் உடல்பலம், கம்பீரம், வீரம் இவற்றால் மற்றவர்களை அடிபணிய வைத்தார்கள். சிலர் தந்திரபுத்திகளால் மற்றவர்களை மிஞ்சி நின்றார்கள். சிலர் உடல் பலமில்லாதபோதும் புத்திசாதுர்யங்களினால் மற்றவர்களை குறிப்பாக உடல் பலத்தால் ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த பலசாலிகளை பின்னுக்குத் தள்ளி அடிமையாக்கினார்கள்.

இந்த மூன்றாவது வகையினர் ஒருவேளை சாமிகள் கடவுள்கள் போன்ற ஏற்பாடுகளைக் கொடுத்து மற்றவர்களைத் தங்களுக்குக் கீழ்படிய வைத்திருக்க வேண்டும். இதற்கு பல இலக்கண இலக்கியங்கள், கணக்கு வழக்குகளை பல ஆயிரம் ஆண்டுகால ஓட்டத்தில் உருவாக்கித் தந்திருக்கலாம். இதற்கு உறுதுணையாக ஓவியர்கள் மற்றும் சிற்பிகளால் பல ஓவியங்கள், சிலைகள் செய்யப்பட்டு அவற்றிற்கு பெயர்கள், கதைகள், முறைகள் என உண்டாக்கியிருக்கலாம். அவைகளே இன்றைய தெய்வங்களாக வணங்கப்பட்டுக் கொண்டிருப்பதாக இருக்கலாம்.

## வழிபாட்டுத் தலங்களின் சிறப்புகள்

யார் சொல்வது–செய்வது சரி என்பதைக் காட்டிலும் கடவுள் கொள்கைகள் மூலமாக மனித சமுதாயத்திற்குக் கூறப்பட்ட நல்ல செய்திகள் கருத்துகளை எடுத்துச் செயல்படலாம். அவை சிறப்பான வழிகாட்டுதல்களாகவே விளங்குகின்றன. எப்படியிருப்பினும் மதவழிபாட்டுத் தலங்களாகிய கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள் மனித சமுதாயத்தின் மிகுந்த போற்றுதலுக்கு உரிய இடங்களாக இருந்து வருகின்றன. அவைகளின் கட்டிடக் கலைகள், சிற்பச் சிறப்புகள், பரிமாண அளவுகள், அமைதி, ஒழுங்குமுறை போன்றவை மனித மேன்மைக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

மேலும் ஏழை பணக்காரன் வித்தியாசங்களை ஓரளவுக்காவது நீக்கி அனைவரையும் ஓரிடத்தில் கூடவைக்கும் சிறப்பைப் பெறுகிறது. மனிதர்கள் கூடி கருத்தைப் பரிமாறுவதற்கு, கலைகளை வளர்க்கும் கலைநிகழ்ச்சிகள், அறிவு நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு மனஅமைதி இசைநிகழ்ச்சிகள் போன்றவைகள் நடத்தப்பட்டு மனிதர்களின் வாழ்க்கைக்கு பேருதவியாக இருக்கின்றன. இதைவிடவும் முக்கியமாக மனிதர்களுக்குள் நட்பு உருவாகி போற்றப்படுவதற்கு, காதல் புரிந்து துணைகளைத் தெரிவு செய்வதற்கு இத்தலங்களும், இதன் விழாக்களும் முக்கிய சேவையாற்றி வருகின்றன.

# கடவுளின் தூதுவர்கள்

## படைப்பு வித்தியாசங்கள்

அடுத்தபடியாக இப்படியும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. கடவுள் என்பவர் இருக்கிறபோது மனிதர்கள் வாழ்க்கை முறை அமைப்பில் எதற்காக இவ்வளவு முரண்பாடு என்பதைப்பற்றி முன்பே பார்த்தோம். ஏழை–பணக்காரன், முட்டாள்–அறிவாளி, நோஞ்சான்– பலசாலி, அவலட்சனம்– அழகு, ஊனம்– ஊனமின்மை,

பெருநோயாளி – நோயற்றவர், அல்பாய்சு–தீர்க்காய்சு, கருச்சிதைவு–முழு குழந்தை இம்மாதிரியான இனங்களில் கோடிக்கணக்கான வித்தியாசங்கள், மலைக்கும் மடுவுக்குமான அளவுகளில் வேறுபாடுகள் காலகாலமாக இருந்து வருகின்றன.

உண்மையில் இவ்வுலகில் எந்த ஒரு தனிமனிதனும் முழுநூறு சதவீதத்திற்கு நல்லவன் என்று சொல்லும் நிலை ஏற்படவே இயலாது. ஆக ஓரளவிற்குதான் சில நல்லவர்களைக் காணக்கிடைக்கிறது. இந்த ஓரளவு நல்லவர்களில் சிறப்பான வாழ்க்கை வாழ்பவர்களும் துன்பப்படுபவருமாக இரு சாரார் இருக்கிறார்கள். மோசமான தீய மனிதர்களிலும் சிறப்பான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்பவர்கள், துன்பப்படுபவர்கள் இருக்கிறார்கள். இதற்கு ஆயிரமாயிரம் நடைமுறை உதாரணமாக எக்கால வாழ்க்கையிலும் தர இயலும். நமது அரசியல்வாதிகள் கணிசமான பகுதியினர் தீயவர்களாக இருப்பினும் அவர்களின் பலரது குடும்பங்கள், குழந்தைகள் தலைமுறைகளாகக் குதூகலித்துக் கொண்டிருக்கின்றனர், இவையெல்லாம் எப்படி சாத்தியமாகின்றன.

## கடவுள் உருவாக்கியிருந்தாரேயானால்...

கடவுள் மனிதர்களைப் படைத்திருப்பதாகக் கொண்டால் எதற்காக ஆரம்பத்தில் ஆதிமனிதர்களாகக் காட்டுமிராண்டிகளைப் படைத்திருக்கவேண்டும். இறுதி வளர்ச்சி நிலையிலுள்ள இன்றைய அல்லது இதைவிட ஒருவேளை அதிகப்படியான அறிவுகளை உடைய எதிர்கால மனிதர்கள் போன்றோரை ஆரம்பத்திலேயே படைத்திருக்கலாமல்லவா. மனிதர்களை மனிதர்கள் வேட்டையாடி கொன்று – தின்று பின்னர் பல்லாயிரம் பலலட்சம் ஆண்டுகள் கழித்து இன்றைக்கு வெடிகுண்டு – அணுகுண்டு ஆயுதங்களால் சண்டைபோட்டுக்கொள்ளும் மனிதர்களை ஏன் உருவாக்க வேண்டும். எல்லாவற்றையும் வழி நடத்துகிற கடவுள் அனைவரையும்

நல்லவிதமாக வழிநடத்தி நல்லவர்களாக ஆக்கியிருக்கலாமே. இன்றைக்கு ஓரளவுக்காவது அறிவுள்ள மனிதர்களாக அதிக அளவில் படைக்கத்தெரிந்த கடவுளுக்கு முன்னரே இது தெரியவில்லையா, இயலவில்லையா அல்லது விருப்பமில்லையா. எதற்காக மனிதர்களை சதா சண்டைப் போட்டுக்கொள்ளச் செய்து சாகடித்துக் கொண்டிருப்பதை சகலமும் அறிந்த கடவுள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு மகிழவேண்டும்.

அப்படியானால் அவர் இருக்கிறாரா இல்லையா, நல்லவரா கெட்டவரா, அல்லது இரண்டையும் கலந்து தீயகுணம் கூடுதலாக உள்ளவரா; கடவுள் என்பவரை குறை கூறுவதற்காக இதைச் சொல்லவில்லை, சிந்திக்கும்போது அப்படித்தானே எண்ணங்கள் வருகின்றன. ஏனெனில் கடவுள் தீயவர்களையும் சேர்த்து படைக்கிறார் அதுவும் மிகஅதிக சதவிகிதத்தில். இன்றைய உலகில் கிட்டத்தட்ட தொண்ணூற்றைந்து சதவிகிதத்திற்கு மேலானோர் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி தீயவர்களாகவே இருக்கின்றனர். மீதமுள்ள ஐந்து சதவிகிதத்தினரிலும் முழுமையான நல்லவர்கள் என்று யாருமில்லை.

## சர்ச்சைகளை ஒதுக்கிவைத்தல்

கடவுள் உண்டு – இல்லை, இருக்கிறாரா – இல்லையா என்கிற விவாதங்களை தற்போதைக்கு ஓரங்கட்டி வைத்துவிட்டு இன்னொரு வகையாக சிந்தித்து செயல்படலாம். கடவுள் இல்லை என்பதைவிட அல்லது இல்லாமல் இருப்பதைவிட அவ்வாறு ஒருவர் இருப்பதே மனிதகுலத்திற்கு வசதியானது மற்றும் சிறப்பானதும் கூட. ஏனெனில் இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றம் அழிவு இவற்றைப்பற்றி எவராலும் எந்த அறிவியல் வளர்ச்சியாலும் உறுதியாக இப்படித்தான் என்று நிச்சயமாக கூறமுடியாது என்பது திண்ணமாகிவிட்டது. ஆகவே இப்பிரபஞ்சத்திற்கு ஒரு முதலாளி / நிர்வாகி / தலைவர் இப்படியான ஒரு மனிதசக்திக்கு

அப்பாற்ப்பட்ட ஏதோ ஒன்று இருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

## கடவுளின் பயன்

கடவுள் என்பவர் இருந்தால்தான் ஏழை எளிய சாதாரண மக்கள் தங்கள் துன்பங்களைச் சொல்லி குறைதீர்த்துக்கொள்ள மிக ஏதுவாயிருக்கும். மனிதர்களின் குறைகளைக் கேட்ட கடவுள், மற்றமனிதர்கள் கட்டாயம் செய்வதுபோல் பிறரிடம் சொல்லி பிறரின் இடுக்கன் நிலையை ரசிக்கும் வேலையை செய்ய வழியில்லை. இவ்வகை மக்களுக்கு நடைமுறையில் உள்ள எண்ணற்ற வழிபாட்டு முறைகளினால் அவ்வப்போது மனபாரங்கள் குறைக்கப்பட்டு ஒரு மனமருத்துவம் கிடைக்கப்பெற்று, வாழ்க்கை ஒருவழியாக ஓடிக்கொண்டிருக்கிறது.

## அனைவருக்கும் கடவுள்

சமூக விரோதிகள், திருடர்கள், தீயஅரசியலார்கள், லஞ்ச ஊழல்வாதிகள், அயோக்கிய வியாபாரிகள் ஆகிய மேலாண்மையோருக்கு அனுதினமும் இக்கடவுள் வழிபாடு மிகவும் அவசியமானதாகிறது. இவர்கள் அவர்களின் தொழில்களை தினசரி ஆரம்பிக்கும்போது முடிக்கும்போது கடவுளை வழிபட மறப்பதில்லை. ஆனால் உண்மையான மனிதசேவை என்பது மட்டும் இவர்களிடம் இருக்கவில்லை.

## இடைமனிதர்கள் – இலஞ்சங்கள்

கடவுளுக்கு இடைத்தரகர்கள், சிபாரிசு செய்பவர்கள் போன்றோர் அவசியமா? மனிதர்களின் வேண்டுதல்களை அவர் நேரடியாக ஏற்றுக்கொள்ளமாட்டாரா? கடவுளுக்கு லஞ்சமாக காணிக்கைகள், காவடிகள், ஆட்டப்பாட்டக் கூத்துகள், குடியாட்டம், கோலாட்டங்கள், மாறுவேடப் போட்டிகள் போன்றவைகளைச்

செய்தால்தான் அவர் கருணை பாலிப்பாரா? நல் எண்ணங்கள் இல்லாமல், நற்காரியங்கள் செய்யாமல் தாங்களும் தங்கள் குடும்பத்தினர் மாத்திரம் சுபிட்சமாக வாழ அவரவர் மதங்களுக்கேற்ற வகையில் ஏதேதோ சொல்லி, பேசி, பாடி, இசைத்து கடவுளை வழிபடுவோருக்கு கடவுள் நன்மைகளை செய்வாரே எனில் அக்கடவுள் நமக்கு தேவையில்லை. துதிகள் எதுவும் பாடத்தேவையில்லாமல் நல்ல எண்ணங்களுடன் நற்செயல்களைச் செய்பவர்களை கடவுள் ஆதரிப்பாரேயானால் அப்போதுதான் அவர் தேவையானவராக ஆகிறார்.

கடவுளுக்கு இடைத்தரகர்கள் என்று சிலபலர் இருந்துகொண்டு ஏதேதோ மந்திர தந்திர வித்தைகளின் மூலம் மக்கள் கூட்டத்தை மயக்கி அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றனர். இவர்கள் ஆடம்பரமாக வாழ்வதற்கு மக்களை பழிகடா ஆக்கிவருகின்றனர். கடவுள் சேவை செய்வதற்கு ஆடம்பரங்கள், பகட்டு ஆடை, பங்களா, கார், தொழில் துறைகள், சொந்தக் கல்லூரிகள், இத்தியாதி செல்வங்கள் எதற்காக தேவைப்படுகின்றன. சில இடைத்தரகர்கள் முன்னால் குற்றவாளிகளாக இருந்து, செல்வம், செல்வாக்கு சேர்ந்தபிறகு நல்லமனிதர் வேடத்திற்கு வந்து தொழில் நடத்துகின்றனர். இப்படியான இடைத்தரகர்கள் மூலமாகத்தான் இறைவன் அருள்பாலிப்பை செய்வாரெனில் அவர் நமக்கு வேண்டப்படாதவரே.

## கடவுளின் கடமை

கடவுள் மதம், இனம், மொழி, நாடு வேறுளந்த இனப்பாகுபாடும் இல்லாமல் அனைவருக்கும் நல்வழி காட்டுதல்களைக் கொடுத்து மகிழ்ச்சியான வாழ்க்கையைத் தர மன்றாடுகிறோம். மதத்திற்கு ஒரு கடவுள் என்ற நிலையிலிருந்து அனைத்து மதங்களுக்கும் பொதுவானதொரு கடவுளே எங்களுக்கு ஏற்புடையதாகிறது. அதுபோல மக்களையும் வரும்காலங்களில் மதங்களின் மூலம் பிரித்து

கொன்றுகுவிப்பதற்கு வழியில்லாமல் செய்து ஒரே குலத்தின்கீழ் அனைவரையும் கொண்டுவரவேண்டியது கடவுளின் முக்கியக் கடமையாகும்.

இன்றைய நிலையில் இருக்கிற மதங்கள் இருப்பதையும், வேறு மதங்கள் தோன்றினாலும் ஏற்றுக்கொண்டு அனைத்து மதத்தினரும் ஒருவருக்கொருவர் வேண்டாத பொருளாகக் கருதாமல் அனைவரும் சுமூகமான முறையில் வாழ இனியாவது கற்றுக்கொள்ளுங்கள் – கடவுள் நம்மை ஒருகுடையின் கீழ் கொண்டுவரும்வரை. அனைத்து மதத்தினரும், அனைத்து மனிதர்களும் மனிதர்களே என்கிற உணர்வை மேலோங்கச் செய்ய வேண்டும். மதம் என்பது ஒரு பிரிவு கூட்டத்தின் அடையாளமே. மனிதர்களை நெறிப்படுத்தி வாழ்க்கை ஒழுக்கம், நாகரீகம் ஏற்படுத்தி வாழ்க்கை முறையை மேம்படுத்தும் ஒரு திறந்தவெளிப் பல்கலைக் கழகம். பல பல்கலைக்கழகங்கள் இருப்பதுபோல் பலர் தங்கள் வசதி விருப்பத்திற்கேற்ப பல பிரிவுகளில் சேர்ந்துகொண்டிருக்கின்றனர்.

## மனிதர்கள் மதங்கள் கடவுள்

பிறக்கும் அத்தனை மனிதர்களும் தங்களுடைய மதங்களை விரும்பித் தேர்ந்தெடுத்தவர்கள் அல்லர். தங்களுடைய முன்னோர்கள் மூத்தோர்கள் பலவிதக் காரணங்களால் ஒரு மதத்தைத் தழுவியிருப்பதினால் அவர்கள் வாரிசுகளாகிய இவர்கள் பிறப்பால் அந்த மதத்துக்காரர்களாகின்றனர். மிகமிக சிலரே இடையில் தாங்களாக வேறு மதங்களுக்கு மாற்றம் செய்து கொள்கின்றனர். இத்தருணத்தில் ஒன்றைக் கூறுவதற்கு கடமை எடுத்துக் கொள்ளப்படுகிறது. அப்படி மதம் மாறுதல் மனிதனின் எண்ணத்தால் மட்டுமே நடைபெறவேண்டுமே அன்றி, மதத்துக்காரர்களின் கட்டாயங்கள், தூண்டுதல்கள், உதவிகள், இலவசங்கள் போன்றவற்றால் நடைபெறக்கூடாது. அனைத்து மதத்தினரும்

இப்பூமியில் இருப்பதை அனைத்து மதத்தினரும் அங்கீகரித்து மனதார ஏற்றுக்கொண்டு ஒருவருக்கொருவர் சகமனிதர்கள் என்ற அடிப்படையில் வாழ்க்கை பரிமாற்றங்களைச் செய்துகொண்டு வாழப் பழகிக்கொள்வதை எளிய நடைமுறையாக்கிக் கொள்ளவேண்டும். இவை அனைத்திற்கும் கடவுள் உதவி செய்யவேண்டும்.

கடவுள் இதுமுதற்கொண்டாவது நல்லவர்களை மட்டுமே படைத்து அதன் மூலம் அவரும் முழு நல்லவராக இருக்க விரும்பப்படுகிறது. அவ்வாறன்றி இப்போதுபோல் தீயவர்களை மிகப்பெருமளவில் படைத்து அவர்களும் அவர்களுடைய பல தலைமுறைச் சந்ததியினரும் சகல சம்பத்துக்களுடன் சௌகரியத்துடன் வாழ அனுமதித்துக் கொண்டிருப்பதை ஏற்க இயலாது. மறுபிறவி, அடுத்தடுத்த பிறவி என்ற பிறவிக்கணக்கு மற்றும் நரகத்தில் தண்டனை கொடுக்கப்படுவதாகச் சொல்லிக்கொண்டிருப்பது எல்லாம் தேவையில்லை.

குற்றவாளிகளுக்கு அவரவர்கள் தலைமுறையிலேயே சக மனிதர்களின் கண், மெய் சாட்சிகளுடன் தண்டனை கொடுக்கப்படுவதே மாண்பு. எனவே கடவுள் என்பவர் இருப்பதாக ஏற்றுக் கொண்டவர்களுக்கு அவர் மிக நல்லவராக இருக்கவேண்டுமென்பதே நம் அனைவரின் பிரார்த்தனை.

# காமம்

## கலாச்சார மாறுபாடு

பழைய பண்பாடுகள் கலாச்சாரங்கள் மாறிப்போய் ரொம்ப நாட்களாகிவிட்டது, இதுசம்மந்தமாக இன்னும் இந்தியர்களைப்பற்றி சற்று உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கும் நிலைகளுக்கும் இங்கே தற்சமயம் உள்ள சூழ்நிலைகளுக்கும் சிறிதளவுகூட சம்மந்தமில்லை. இவர்கள் பொருளாதாரம், சுகாதாரம், சுற்றுச்சூழல் போன்றவற்றில் மேல்நாடுகளின் தரத்தை நெருங்க முடியாவிட்டாலும் அவர்களுடையக் கலாச்சாரத்தை வேகமாக நெருங்கி அவர்களையும் மிஞ்சி வருகின்றனர்.

முக்கியமாக பாலுணர்வுச் சார்ந்த அதன் செயல்பாடுகளில் இந்தியர்களுக்கும் மேல்நாட்டுக் காரர்களுக்கும் இப்போதெல்லாம் பெரிய வித்தியாசங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இங்கே 'ஆணுறை அணியுங்கள்' என்கிற விளம்பரங்கள் போன்ற சங்கதிகள், அதுவரை அவ்வளவாக அதைப்பற்றியச் செய்திகள் எதையும் தெரியாத சிறுவர்-சிறுமிகளுக்குக்கூட எல்லாவற்றையும் கட்டம்போட்டுக் காட்டிக்கொண்டிருக்கின்றன. சட்டையணிவதுப் போலாகிவிட்டது ஆணுறை அணிவது!

## தானியங்கி ஆணுறை இயந்திரங்கள்

கேரள மாநிலத்தில் சமீபத்தில் காசு போட்டு பொத்தானை அழுத்தினால் ஆணுறைகள் தரும் இயந்திரங்கள் முக்கிய இடங்களில் வைக்கப்பட்டு எல்லோருக்கும் எளிதில் கிடைக்கும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே புதுடெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திலும் இவ்வியந்திரம் வைக்கப்பட்டு பாதுகாப்பான உடலுறவுகளுக்கு மறைமுகமாக வழிவகுக்கப்பட்டு,

கட்டாயமாக்கப்பட்டுள்ளது. விரைவில் இம்முறையை மற்ற மாநிலங்கள், பல்கலைக்கழகங்கள், பெரும் நிறுவனங்கள் பின்பற்றக் கூட வாய்ப்புகள் உள்ளன.

குடும்பத்தில் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகமாகாமல் தடுப்பதற்கும், பால்வினை நோய்கள், எய்ட்ஸ், தேவையற்றக் கருவுறுதல் போன்றவற்றைத் தடுப்பதற்கும் இந்த ஏற்பாடுகள் எனப் பாதுகாப்பாகக் கூறப்படுகிறது. இவைகளில் அதிகமானவை எப்போது ஏற்படும் என்பது அனைவரும் அறிந்ததே, தவறானத் தகாதஉறவுகள் மூலம்தானே வரமுடியும். ஆக இதன் மூலமாக இங்கு மேற்படி சமாச்சாரங்கள் தவறானமுறையில் அதிகம் என்பது நிரூபனமாகிறது. பிறகு எங்கிருந்து இது சம்மந்தப்பட்டத் துறையில் கலாச்சாரம் இருக்கும்.

## எதிர்பாலின நட்புப் பெருமை

பெரும்பான்மையான பள்ளிகளில், கல்லூரிகளில் இருபாலரும் சேர்ந்து படிக்கும் சூழ்நிலை இருந்துவருகிறது. அங்கு ஒருபாலின நட்பைவிட எதிர்பாலின நட்பே அவசியமாகிப் போற்றப்பட்டு அவர்களைப் பெருமைகொள்ள வைத்திருக்கிறது. பல எதிர்பாலின நட்புகளில் நடக்கும் அவ்வப்போதைக்கானத் தற்காலிக உடலுரசல்கள், இயற்கையின் இயற்கையான நிரந்தர உடல் இணைப்புகளுள் கொண்டுபோய் விடும் நிலைமையை நிச்சயம் பெறும் என்பதை பொய்யாக வேண்டுமானால் பலர் மறுக்கலாம். பஞ்சும், நெருப்பும் பக்கத்தில் இருந்தால் பற்றிக்கொள்ளும் என நியாயவாதிகளான நம் பழமை மனிதர்கள் சொல்லிச்சென்றிருப்பது பொய்யா? இந்த உலகுக்கு அனைத்தையும் வழங்கிச் சென்றது அவர்கள்தானே.

இதற்குப் பதிலாக பல வெளிநாடுகளில் உள்ளது போல இங்கேயும் இதை ஒரு சாதாரண விடயமாக்கி விடலாமே. கற்பு, அது இது எனக் காலநாடகமாடத் தேவையில்லை. இப்போதுதான் இதற்கு ஆணுறை இருக்கிறதே... அது போக மேலும் பல உபாயங்கள்

பாதுகாப்பு நாட்கள் போன்றவைகளும் தேவையற்றக் கருவுறும் ஆபத்தை தடுக்கும் தன்மைகொண்டவைகளாக பலருக்கும் பயன்படுகின்றன. பசிக்கு, தேவைக்கு உணவு சாப்பிடுவது, மற்ற தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள அனுமதிப்பது போல் இதையும் அனுமதித்துவிட்டால் பின்னர் பிரச்சினைக்கே வழியில்லாமல் போய்விடும். எல்லா மனிதர்களின் மனங்களும் ஒதே மாதிரியானத் தன்மைக்கு மாற்றம்பெற்று, திருமணத்திற்கு முன் உள்ள இளமைத் தேவைகளுக்கு இருந்த காம உணர்வுகளால் ஏற்பட்ட காம உறவுகள், கற்பழிப்புகள் போன்ற எந்த சிக்கல்களும் இல்லாமல் வருங்கால பாரத சந்ததியினர் வலுவான, வளமான வாழ்க்கைகள் வாழ வழிகள் வந்துவிடும் அல்லவா. என்னசெய்வது, திருட்டை திருட்டு என்று கருதினால்தானே அது குற்றமாகும், அதையே வாழ்வின் முறையாக எடுத்துக்கொண்டுவிட்டால் குற்றம் சாட்டுதலும், தண்டனையும் இல்லாமல் ஆகிவிடும். எனவே, ஏதாவது ஒரு முறையை ஒளிவுமறைவின்றி உண்மையாகப் பின்பற்றுதலே நேர்மையான தாகும்; சிந்தித்துச் செயல்படுங்கள்.

## காமம் - 2

### மனித இனத்தோற்றம்

மனித இனம் தோன்றிய விதத்தை இரு வேறு விதமாகக் கூறுகின்றனர். ஒன்று கடவுள் மனிதனைப் படைத்ததாகக் கூறுவது. இது ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொருவிதமாகக் கூறப்படுகிறது. இருப்பினும் பெரிய மதமாகி வளர்ந்துள்ள கிறித்துவ மதத்தில் சொல்லப்பட்டுள்ளவை மேலோங்கி நிற்கின்றது. ஆதாம் – ஏவாள் எனும் முதல் மனித ஆண்,பெண் அவர்களின் கடவுளால் உருவாக்கப்பட் டதாகக் கூறுகிறார்கள்.

இன்னொன்று இயற்கையின் அறிவியல் பரிணாமக் கொள்கை இதற்கு முற்றிலும் மாறுபட்டு பின்வருமாறுத் தெரிவிக்கிறது.

ஆரம்பத்தில் இரசாயன மாறுபாடுகள், கலவைகளால் ஒருசெல் உயிரினம் தோன்றி அதிலிருந்து படிப்படியாகப் பல விலங்குகள் உண்டாகி மனிதன் வரை வந்திருப்பதாகக் கூறுகிறது. இதற்குப் பல காரணிகளால் நியாயங்கள் கற்பிக்கப்பட்டு நிரூபனம் தரப்படுகிறது.

## விலங்குகளின் தோன்றல்களுக்கு வேறுமுறை

இந்த இரண்டு முறையிலும் அல்லாமல் வேறு வழியில் கூட மனிதஇனம் உருவாகியிருக்கலாம். டார்வின் கொள்கைப்படி சூழ்நிலைகளின் தேவைகளுக்கேற்ப தங்களை உட்படுத்திக்கொண்ட விலங்கினங்கள் மென்மேலும், தங்கள் பலம், பழக்கவழக்கங்கள், அறிவு போன்றவற்றை வளர்த்துக்கொள்வதோடு இயற்கைச் சீற்றங்களையும் தாக்குப்பிடித்து தங்களினத்தை அபிவிருத்திச் செய்துகொள்பவைகளாக இருந்திருக்கின்றன என்பதாகும்.

இதற்குச் சற்றுவிலகி மனிதன் தோன்றிய விதத்தை ஆராயும் நிலையில் ஒரு புதிய யோசனை வருகிறது. புதுவகையான விலங்கினங்கள் தோன்றுவதற்கு உள்ள பல வழிகள் உள்ளது இப்போகது நிரூபனமாகிவருகிறது. இரண்டு வெவ்வேறு வகை விலங்குகள், தாவரங்களை ஒட்டிணைப்புச் செய்து பரிசோதனைக் கூடங்ளில் அவ்வப்போது பல புதிய உயிரினங்கள் உற்பத்திச் செய்யப்பட்டு அப்புது இனங்களுக்குப் புதுப் பெயர்களும் வைக்கப் படுகின்றன. இதன் சாத்தியக் கூறுகள், இறுதிநிலை வெற்றிகள் போன்றவைகளை எண்ணுகையில் பண்டைய காலங்களில் பல வெவ்வேறு வகையான உயிரினங்கள் தோன்றியதற்கு இதையொட்டியக் காரணமும் எண்ணிப்பார்க்கப்படவேண்டும்.

துரதிஷ்டவசமாக சில இடங்களில் சில **நேரங்களில்** சிலமனிதர்கள் சில விலங்குகளுடன் இக்காலங்களில் உடலுறவு கொள்வது செய்திகளாக, நீலப்படங்களாக வெளியில் வந்து மனிதமேன்மையைக் கேவலப்படுத்திக் கொண்டிருப்பது பலர்

அறிந்ததே. எனவே, ஆதிகாலத்து மிக-அறிவுக்குறைந்த அம்மண மனிதர்கள் சக மனிதர்களையே வேட்டையாடி பச்சை நர மாமிசம் தின்று வந்து வாழ்ந்திருந்தது நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறான அன்றைய மனிதர்கள் சகமனிதர்கள் மட்டுமல்லாமல் மற்ற விலங்குகளோடும் உடலுறவு வைத்திருந்திருக்கக் கூடிய வாய்ப்புகள் மிகக்கூடுதலாக இருந்திருக்கும். அவ்வாறே பல இன விலங்குகளுக் கிடையிலும் உடலுறவுகள் ஏற்பட்டிருக்க வேண்டும். இப்படியாக மனிதர்கள் விலங்குகளுடனும், ஒரு இன விலங்குகள் வேறின விலங்குகளுடனும் கொண்டாடிய இவ்வகை உறவுகளினால் பழைய காலங்களில் எண்ணற்றப் பல புது உயிரினங்கள் உண்டாகியிருக்கலாமே!

## மனிதக்கூட்டத்தின் காமம்

எப்படியோ மனித இனம் இப்பூமியில் தோன்றி மிகப்பெரும் கூட்டமாகி ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் பெருத்துக்கொண்டே போகிறது. இன்றைக்குச் சுமார் எழுநூற்றைம்பது கோடி மனித உறவினர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மனிதன் தோன்றியதிலிருந்து இதுநாள் வரை இறந்தவர்களின் தொகை பல கோடிகோடி இருக்கக் கூடும். இப்போதிருப்பவர்கள் அனைவரும் இறந்துபோயும், உலகம் அழியும் காலம் வரைக்கும் பல ஆயிரம் கோடி மனிதர்கள் பிறந்து - இறக்கப் போகிறார்கள்.

இவ்வளவு மனிதர்கள் பிறந்து வாழ்ந்திருந்தாலும், வாழ்ந்துகொண்டிருந்தாலும் ஒரு மனிதனைப் போல் நூறு சதவீதம் அப்படியே இன்னொரு மனிதன் இருந்திருப்பதாக, இருப்பதாகத் தெரியவில்லை. இரட்டையர்கள், மூவர்களுக்குள் கூட ஏதாகிலும் சிறுசிறு வித்தியாசங்கள் நிச்சயமாக இருக்கத்தான் செய்யும். ஒரு வேளை வருகிற காலங்களில் 'குளோனிங்' முறையில் நூறு சதவீதம் ஒரேமாதிரியான மனிதர்களை உருவாக்கிவிடுவார்களோ என்னவோ ! காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

இவ்வாறு மனிதர்களில் வேறுபாடு இருப்பினும் சில பல விடயங்களில் பெரும்பகுதி மனிதர்கள் ஒத்த குணமுடையவர்களாகவே விளங்குகின்றனர். வயிறு பசிக்கும்போது சாப்பிடத்தோன்றுவது போல் சில இயற்கைத் தேவைகளால் ஏற்படும் உணர்வுகள் வெளிப்படும்போது ஒத்த பண்புள்ளவர்களாக இருக்கின்றனர். ஆண்களில் குறைந்த சதவீதத்திலான ஒழுக்க சீலர்களைத் தவிர பெரும்பகுதி காமத் தூண்டுதலின்பால் செயல்படுபவர்களாக இருக்கின்றனர். உலகத்தில் அனைத்திற்கும் அடிப்படை காமம் எனும் தத்துவம் எவ்வளவு தூரம் உண்மை என ஆராய்ந்து பார்த்தால் பல விபரங்கள் வெளியாகிறது.

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என அழகு தமிழின் அடுக்குமொழி வார்த்தைகள் ஏதோ ஜால வித்தைக்காகச் சொல்லப்பட்டதில்லை. மிக அனுபவப்பூர்வமாக, ஆராய்ச்சிப்பூர்வமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மண்ணாசை, பொன்னாசை ஆகிய இரண்டும் இளமைப்பருவத்தின் இறுதியிலிருந்து ஆரம்பமாகி இறக்கும் வரை மனிதர்களை ஆட்டிப்படைக்கின்றன. ஆனால் பெண்ணாசை என்பது சுமார் பத்து வயதிலிருந்தே ஆரம்பமாகிறது என்றே கூறவேண்டும். இந்த பெண்ணாசை என்கிற வார்த்தை ஆண்களுடைய உணர்வுகளை மட்டுமே வெளிப்படுத்துவதற்கானது. பெண்களுடையது ஆணாசை என்பதாகும்.

## சிறுவர்களும் பாலுறுப்பு வித்தியாச உணர்வுகளும்

மூத்தவர்கள் சிறார்களை அழகுப்படுத்தி ஆடை அணிவிக்கவேண்டிய அவசியம் ஏற்படும் வரையில் இதைப்பற்றிய உணர்வு இல்லாமல் இருக்கலாம். சிறுவர், சிறுமியர் தங்களுக்குள் சகஜமாகப் பழக முடிகிறது. ஆண்-பெண் குழந்தைகளுக்கு எதிர் பாலினர் தங்களைப் போன்றவர்கள் அல்லர், அவர்கள் வேறு விதமானவர்கள் என்கிற உணர்வினை இயற்கை தக்கசமயங்களில் அறிவிக்கிறது. பாலுறுப்புத் தோற்ற வித்தியாசங்களினால் மனதிற்குள்

மாற்றங்கள் நிகழ்கிறது. தன்பால் உறுப்புகளைப் பார்க்கையில் வராத வெட்கம், கூச்சம் மாற்றுப்பால் உறுப்புகளைக் காணும்போது தானாகவே வருகிறது. இது ஆண்-பெண் இருவருக்கும் பொருந்தும்.

ஆரம்பத்தில் சிறுவர்-சிறுமியர் பொதுவான அடிப்படையில் தாங்கள் அழகாக இருக்க விரும்புகிறார்கள். அதுவே போகப்போக முக்கியமாக எதிர்பாலைக் கவருவதற்காக மாறத்தொடங்குகிறது. பிறகு செய்யும் பல வேலைகள் மற்றவர் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்ற நோக்கில் அமைகின்றன. சுற்றுப்பகுதியிலுள்ள தன்பால் நண்பர்கள், முகம் தெரிந்தவக்களைவிட எதிர்பால் இளமை மனிதர்களை ஈர்க்கும் விதமாக இருக்கிறது. இது மிக இயற்கையானது.

## நாய் – மனிதப்பிரிவுகள், குணங்கள்

இது மிக இயற்கையானது. நாம் விலங்குகளிடமிருந்து பரிணாம மேன்மை பெற்று வந்த சமுதாய விலங்கினம். நம்முடைய பழக்கவழக்கங்கள் விலங்குகளை ஒத்தவைகளாக இருப்பது ஒன்றும் விந்தையன்று. நமக்கு எளிதாகக் காணக் கிடைக்கும் தெரு நாய்களின் பழக்கவழக்கங்கள் பலவும் மனிதர்கள் அப்படியே பின்பற்றுபவைகளாக உள்ளன. மனிதனிடம் மிக நெருங்கிப் பழகுகிற, பழக அனுமதிக்கப்பட்ட பிராணிகளுள் முதன்மையானது இந்த நன்றியுள்ள நாய்கள். ஒரு காரணத்திற்காக இவைகளை நான்கு விதங்களாகப் பிரித்துக்கொள்வோம். முதல் வகை வீட்டு நாய் – இது வீட்டிற்குள்ளேயே வளர்க்கப்படுவது. அடுத்தது பல வீட்டுநாய் – இது ஒரு குறிப்பிட்டப் பகுதியை எல்லையாகக் கொண்டு செயல்படும். அவ்வெல்லைகளைத் தாண்டினால் அடுத்த எல்லை நாய்கள் குதறிவிடும். மூன்றாவது பல தெருக்கள், கடைத்தெருப் பகுதிகளில் சுற்றிவருபவைகளாகும். கடைசி வகை தெருப்பகுதிகளுக்கு வராமல் ஊருக்கு ஒதுக்குப்புறங்களில் கிடைக்கும் இறந்த மிருகங்கள், பறவைகளின் இறைச்சி, எலும்புகள், மீன் கழிவுகள் போன்ற நாற்றங்களைத் தின்று வாழும் மிக முரட்டு நாய்கள்.

இவ்வகைகளைப் போலவே மனிதர்களும் பிரிவுகளாகி இருக்கிறார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட ஆண் நாய்கள் ஒரு பெண் நாய்க்காகப் போட்டிப் போடுகின்றன, இப்போட்டி சண்டையாக மாறி அதில் வெற்றி பெற்றது மற்ற நாய்களை விரட்டுவது போன்றவை மனிதர்களைப் போலவே நடக்கின்றன. மேலும் ஆண் நாய் தன் காமத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு பெண்நாயிடம் என்னமாய் வித்தைகள், அன்பு சேட்டைகள், அரவணைப்புகள், கொஞ்சல்-கெஞ்சல் என எல்லாம் செய்கின்றன. இந்த விடயத்தில் சராசரி மனிதன் தோற்றுவிடுவான். அனைத்து மிருகங்களும் இதில் திறமை பெற்றவைகளே.

இதில் இன்னொருக் கூத்து என்னவெனில் ஒரு பெண்நாய் மற்றும் ஒரு ஆண்நாய் புணைத்துக்கொண்டிருக்கும்போதே சில சமயங்களில் மேலும் ஒருசில ஆண்நாய்கள் காமப்போதை வெறி ஏறிய நிலையில், அந்நேரம் வாய்ப்பு இல்லாவிடிலும், ஆகாத வேலையாகினும் அவைகளும் அங்கே அதற்கு (தங்கள் வெறியைத் தீர்த்துக்கொள்ள) முயற்சித்துப் பார்க்கும். இந்த குணங்கள் சில மனிதர்களிடமும் காணக் கூடியதாகவே இருக்கிறது.

## எதிர்கால இலகுவானக் காமத்தீர்வு

முற்காலத்தைவிட தற்காலத்தில் ஆண்-பெண் நேசித்தல்கள் அனைத்து மனிதர்களுக்கும் எளிதாக்கப்பட்டுள்ளது. அதற்கான சூழ்நிலைகள், உபகரணங்கள், நாகரீக நடைமுறைகள், மனப்பக்குவங்கள் எல்லாம் இப்போது கூடியிருக்கின்றன. மேலைநாடுகளில் பல ஆண்டுகளுக்கு முன்னரே இம்முறையிலான வாழ்க்கை நடைமுறைகள் வந்துவிட்டன. இருப்பினும் அங்கேயும் இவ்விடயத்தில் அம்மனிதர்கள் முழு திருப்தி பெற முடியவில்லை அல்லது பெற்றுவிட்டதாக உணரக்கூட இயலவில்லை. இதற்கு எண்ணற்ற காரணங்கள் உள்ளன. மனிதர்களின் பேராசைக்

குணங்களில் முதலில் இருப்பது இந்தக் காமத்தைச் சார்ந்த எண்ணங்கள். இதைத் தொடர்ந்து மறைமுகத் தாக்கத்தினால் மற்ற உழைப்புகள், முன்னேற்றங்கள் வருகின்றன.

## இனக்கவர்ச்சி செயல்கள்

சிறுவர்–சிறுமிகளில் ஆரம்பித்து இளைஞர், வாலிபர், நடுவயதினர் மற்றும் வயதானவர்கள் வரை இந்த இனக்கவர்ச்சி அனைவரிடமும் இருந்து வருகிறது. எனினும் இதை பலர் நேர்முகமாய் உணரமுடியாமல் இருக்கிறார்கள். அவரவர்களுக்குள்ள மனபளு, வேலைப்பளு, சம்பாத்திய வெறி, அவசர வாழ்க்கை, குடும்பச் சுமைகள், போட்டி உலக வாழ்க்கை மற்றும் பொழுதுபோக்குகள் எல்லாமும் பல மனிதர்களுக்கு நாம் இப்படித்தான் இருக்கிறோம் என்பதை துல்லியமாக எண்ணிப்பார்ப்பதற்கு மனப்பக்குவம் கிடைப்பதில்லை, அமைவதில்லை. என்றபோதிலும் அந்தந்தக் காலத்திற்கேற்ற நாகரீகத் தோற்றத்தில் இருப்பதற்கு, பிறரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தோற்றம், பேச்சு, செயல் ஆகியவை இருப்பதற்கு விரும்புகின்றனர். இந்தவகை செயல்கள் தன் இனப்பாலினரைவிட எதிர் பாலினருக்காக மிக அதிகமாகத் தேவைப்படுகின்றன.

பெண்களால் கவனிக்கப்படும்போது அல்லது அருகிலிருக்கும்போது ஆண்களின் செல்பாடுகளும், ஆண்களால், மேலேக்குறிப்பிட்டவைகளின்போது பெண்களின் செயல்பாடுகளும் பல இடங்களில், நேரங்களில் இயல்பு நிலையிலிருந்து மாறி சற்றுக் கூடுதலாகவோ குறைந்தோ காணப்படுகிறது. பல அளவு நிலைகளிலுள்ள, பலரது மனநோய்களுக்கு முக்கியமானதொரு காரணம் அவர்களது காதல், காம விருப்பங்கள் போதிய அளவில் தீர்க்கப்படாதது என்பது நிறைய பேரிடம் தெளிவாகத் தெரிகிறது.

உண்மையில் நடைமுறை அனுபவத்தை வைத்துப் பார்க்கும்போது பல மனிதர்கள் தங்கள் காம உணர்வுகளுக்கு

தற்காலிகச் சட்டைபோட்டு மூடி பொய் மனிதர்களாக உலவிவருகின்றனர். நாங்கள் இப்படிப்பட்டவர்கள், இந்தந்த மனநிலைகள் எங்களுக்கு உள்ளன, இவையிவற்றிற்கு ஆசைப்படுகிறோம் என்று எவரும் உண்மை பேசுவதில்லை, பேசவும் இயலாது. சட்ட திட்டங்கள், சமுதாய அமைப்பு முறைகள் ஆகியவை அவ்வாறு கட்டாயமாகக் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றன. இதில் நாட்டுக்குநாடு செயல்பாடுகளில் சிற்சில வித்தியாசங்கள் இருக்கலாம்.

அடங்கிக் கிடக்கும் மனிதர்கள் பல சமயம் செயற்கைச் சூழ்நிலைகளினால் சீரழிகின்றனர். நண்பர்களின் அமைப்பு, அருகில் இருப்பவர்களின் பேச்சுக்கள், பொழுதுபோக்கு சாதனங்கள் மற்றும் பத்திரிகைகளில் வரும் செய்திகள்-படங்கள், திரைப்படங்கள், நீலப்படங்கள், பெண்களின் கவர்ச்சி உடைகள் - தோற்றங்கள் - அனாவசியபார்வைகள் - உடலசைவுகள் போன்றவை கிரியா ஊக்கிகளாக இருந்து மகாக் கெடுதல்களைச் செய்கின்றன.

மனிதர்கள் பல நேரங்களில் இக்காமத்தின் காரணத்தினால் கவனம் சிந்தியவர்களாக உள்ளனர். சில நேரங்கள், நாட்கள் அதே நினைவாக இருந்து தாங்கள் மேற்கொண்டுள்ளப் பணியினைச் சரிவர செய்ய இயலாமல் பாழ்படுத்துகின்றனர். இதில் மாணவர்கள், தொழிலாளர்கள், அலுவலர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள், வியாபாரிகள், விளையாட்டு வீரர்கள் என அனைவரும் அடங்குவர்.

## பெண்களின் மயக்கம்

அதேபோல் ஆண்களிடம் மயங்கிக் கிடக்கும் மகளிர் கூட்டம் முன்பைவிட இப்போது அதிகமாகிப் பெருகி வருகிறது. பெண்களைப் பற்றி வெளிப்படையாக ஒரு ஆண் பேசுவது பெரிய பிரச்சினையாகி விடலாம். அதனால் பல உண்மைகளை வெளிப்படையாக சொல்ல இயலுவதில்லை. அவ்வாறு சொல்லும் பட்சத்தில் அவ்வாண்கள் பெண்களின் எதிரிகளாகச் சித்தரிக்கப்பட்டுவிடுவார்கள்.

பெண்களாகவும் தங்களைப் பற்றி எதையும் வெளிப்படையாக வெளியிடமாட்டார்கள். திரும்பத் திரும்ப பழசாகிப்போய் அழுத்து உழுத்துப்போன ரசனைகள்தான் அவர்களிடமிருந்து வெளிவருகின்றன. கோல–ரங்கோலிகள், சமையல் வகைகள், துணி ஆடை தினுசுகள், நகை அலங்காரப் பொருட்கள், சினிமா, சீரியல்கள் ஆகியவற்றில் அதிக ஆவல் கொள்வதுடன், ஆணுக்குப் பெண் சமம், பெண்களுக்கு அனைத்தும் தெரியும், பெண்கள் வல்லவர்கள் எதையும் சாதிப்பார்கள் என்பனவற்றைத் திரும்ப திரும்ப சொல்கிறார்கள்.

அவர்களின் உண்மையான மன உணர்வுகள், அந்தரங்க எண்ணங்கள், விதவிதமான நடத்தைகள், பெண்களிடம் உள்ள நல்லகுணங்களைச் சொல்வதுபோல் யோக்கியத்தனத்துடன் கூடிய அயோக்கியத்தனத்தையும் தைரியமாக வெளிப்படையாகச் சொல்லத் துணிவு வரவேண்டும். அப்போதுதான் பெண்களுக்குள் தவறுகள் உணரப்பட்டு திருத்தங்கள் வந்து ஒழுக்கம் கூடும். பெண்களிடம் ஒழுக்கம் கூடுமெனில் ஆண்கள் ஒழுக்கும் தானாக உயரும். பெண்களின் துணை இல்லாமல் ஆண்களால் அதிக ஒழுக்கக் கேடு அடையமுடியாது.

## ஆண்களை மட்டுமே அடையாளம் காட்டுவது

ஆனால் சமுதாய அமைப்பில் குற்றம் சாட்டவும், குறை கூறவும் ஆண்களை அடையாளம் காட்டுவதை நடைமுறை வழக்காக்கி வைத்திருக்கின்றனர். லஞ்ச–ஊழலிலிருந்து, திருட்டு, கொலை, கொள்ளை, கற்பழிப்பு, விபச்சாரம், நீலப்படமெடுத்தல், கடத்தல், கொடுமைப்படுத்துதல், போதைப் பொருட்கள் விற்பது, அரசியல் தில்லுமுல்லுகள் என எல்லாவற்றிலுமே பெண்களின் கணிசமானப் பங்கு – ஈடுபாடு இருக்கிறது. இவற்றை விருப்பத்துடன் செய்பவர்கள் போக, விருப்பமில்லாமல் கட்டாயத்தில், பயமுறுத்தலில், தவறுகளில் மாட்டிக்கொண்டு அதைவைத்து பிளாக்மெயில் செய்யப்பட்டு செய்கின்றவர்களும் இருக்கின்றனர்.

## பெண்களின் தவறான உடன்பாடுகள்

தவறானச் செயல்களுக்கு பெண்களின் உடன்பாடுகளை இரண்டு வகைகளில் காணலாம். ஒன்று வயிற்றுப்பிழைப்புக்காக, குடும்ப சூழ்நிலைகளின் பொருளாதார நிலைகளுக்காக ஆகுவது. மற்றொன்று உடல் கொழுப்பில் தவறானப் பல ருசிக்கு ஆசைப்பட்டு ஈடுபடுவது. இவற்றிற்கு நட்பும் சுற்றமும்கூட காரணமாக இருக்கும்.

விருப்பமில்லாத வகையினரில் பொய் காதல்களில் அகப்பட்டுத் தவறுகள் செய்து, அவை புகைப்படங்கள், வீடியோ, கடிதங்கள் – காட்சிகள், சாட்சிகள், கர்ப்பங்கள் ஆகியவை மூலமாக மாட்டிக்கொள்கின்றனர். பின்னர் இவர்கள் எந்த தவறையும் செய்யும் சூழலுக்குத் தள்ளப்படுகிறார்கள். மேற்கத்திய, ஆப்பிரிக்கப் பெண்கள் நீலப்படத்தில் நடிப்பது பெரிய விடயமல்ல; அது அவர்களின் குலத்தொழில் போலாகிவிட்டது. நம் இந்திய–தமிழகப் பெண்கள் நீலப்படத்தில் நடிக்கும் அளவிற்கு இருக்கிறார்களே என எண்ணும்போது மனது வேதனை அளிக்கிறது. தொழில்முறை விபச்சாரிகளை வைத்து சில நீலப்படங்கள் எடுத்திருந்தாலும் பல நீலப்படங்கள் அடிமையாக்கப்பட்டக் குடும்பப் பெண்களை வைத்தே எடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் பள்ளி–கல்லூரி பெண்கள் முதல் வேலைபார்க்கும் பெண்கள், திருமணமான குடும்பப் பெண்கள் வரை பலர் இருப்பது திடுக்கிட வைக்கிறது.

இவர்களில் பெரும்பாலோர் பொய் காதல் அல்லது திருட்டு உறவு எனும் சாக்கடைகளில் இதற்கென்று உள்ள அயோக்கியர்களிடம் மாட்டிக்கொண்டவர்களாக இருக்கிறார்கள். இப்பெண்களுக்கு தெரிந்தும் தெரியாமலும் அவர்களின் மிக அந்தரங்கச் சமயங்களில் அசிங்கமாகப் புகைப்படம், வீடியோ எடுத்து அதைவைத்தே ஆயுளுக்கும் மிரட்டி வருகின்றனர். இவர்களிடமே பணம் வாங்கிக்கொள்வதுடன் இவர்களை நீலப்படங்களில் நடிக்கவைப்பது,

வேண்டியவர்களுக்கு சுகம் கொடுக்க உத்தரவிடுவது, தீய காரியங்கள் செய்யவைப்பது என பலவும் நடந்தேறி வருகின்றன.

இப்படியான அடிமைப்பெண்கள் நீலப்படங்களில் நடித்திருக்கும் காட்சிகளைப் பார்க்கும் போது பல உண்மைகள் புலப்படுகின்றன. அவர்களை அடித்து உதைத்து, கண்ட இடங்களில் மிதித்து நசுக்கப்பட்டு கடுமையாகத் துன்புறுத்தப்பட்டு நடிக்க வைக்கப்பட்டிருப்பது பல காட்சிகளில் நன்றாகத் தெரிகிறது. நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு இவர்களாலேயே அசிங்கப்பட்டுத் துன்பப்படுகிறார்கள். இம்மாதிரியானப் படங்களுக்கும், தங்கும் விடுதிகளில் திருட்டுத்தனமாகப் படமெடுக்கப்பட்ட உண்மையான உடலுறவு காட்சிகளுக்கும் நல்ல விலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இதற்கெல்லாம் யார் காரணம் என்ற கேள்வி எழும்போது முதலாவதாக இப்படிப்பட்டப் பெண்களைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. காதலுக்கு கண் இல்லை, காது-மூக்கு-தொண்டை இல்லை என்று எவனெவனோ சொல்லியதை வைத்துக்கொண்டு கண்மூடித்தனமாக இப்பெண்கள் காதலில் இறங்குகிறார்கள். மேலும் காதல் அல்லாத காமத்தின் தூபமும் இவர்களைச் சீரழிக்கிறது. ஒன்னரை ரூபாய்க்கு வாங்கும் பொருளை ஓராயிரம் தடவை விசாரித்து ஆராயும் மனப்பாங்கு உள்ள இந்தப்பெண்கள், தங்களது வாழ்நாளின் ஆயுளுக்கும் தேவைப்படும் மிக முக்கிய செயலில் கண்மூடித்தனமாக நடந்துகொள்வது நியாயமா? பலர் போலிகளிடம் ஏமாந்து போகிறார்கள். பொய்த் தோற்றங்கள், ஆடைக் கவர்ச்சிகளை நம்பி ஏமாந்து போகிறார்கள். இதற்கு இவர்களின் ஆணுக்கு சரிசமமான காம உணர்வுகளின் உந்துதலைத்தானே காரணமாகச் சொல்லவேண்டியுள்ளது.

இந்த பெண்பத்திரிகை, பெண்கள் இயக்கங்கள், இம்மாதிரி தேவைகளுக்கு வழிகாட்டுதல் செய்யாமல், வேறேதேதோ செய்துகொண்டிருக்கின்றன. அவர்களுக்கு அவசரப்படாமல் ஆண்களைத் தேர்வு செய்யக் கற்றுக்கொடுக்கபட வேண்டும். பெண்களிடம் நிறைய குறைகள் இருப்பதை வெளியில் வந்து பார்த்தால் தெரிந்துவிடும்; இதில் படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற வித்தியாசம் இல்லை.

உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சொல்லி இதை முடித்துக்கொள்வோம். பேருந்துகளில் தொடர்ந்து பயணம் செய்யும் பலருக்கு இனி வருகிற விடயம் நன்றாகத் தெரிந்திருக்கும். இளவயது, வாலிப நடத்துனர் – ஓட்டுனர்களிடம் எல்லா நிலைப் பெண்களும் மொய்க்கிறார்கள். ஒரேநேரத்தில் பல பெண்கள் அத்தொழிலாளி ஒருவரை கொஞ்சுது சர்வசாதாரணமாகிவிட்டது. அவர்கள் வேறு ஒரு சில பெண்களோடு கள்ளத் தொடர்பு வைத்திருப்பது தெரிந்தும், அதே நபரிடம் இவர்களும் தங்களைத்தர தயாராகி வழியப்போய் அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கின்றனர். இதில் திருமணமானப் பெண்களும் கணிசமான அளவில் உள்ளனர். இவர்களின் கணவர்கள் என்ன பாவம் செய்தார்களோ!

சுறுசுறுப்பாக இயங்கும் ஆண்களை பெண்களுக்கு மிகவும் பிடிக்கும் என்றிருந்தாலும் இவ்வாறு நடப்பது மிகமிகத் தவறாகும். பெண்களுக்காக படுபயங்கர வேகத்தில் பல சாகசங்களுடனும் பேருந்து இயக்கப்படுவது இந்நாட்களில் சாதாரணம். இந்தவகை ஊழியர்களே இப்பெண்களுக்கு தினசரி கண்களில்படும் சாமர்த்திய மனிதர்கள். இவர்களைவிட பலமடங்கு கடின உழைப்பு, சாதுரியம், வருமானம் கொண்ட வேறு வகை ஊழியர்கள் லட்சக் கணக்கில் பல தொழிற்சாலைகளில் பணிபுரிவது இவர்களின் கண்களுக்குத் தெரிய வாய்ப்பிருந்தால் இப்பேருந்து ஊழியர்களை சீண்டக்கூட மாட்டார்கள்.

இந்த ஒரு விடயத்தில் பெண்களைவிட ஆண்கள் பரவாயில்லை என்று தோன்றுகிறது. பொதுவாக ஒரு பெண்ணிடம் ஒரு ஆண் தொடர்பு வைத்திருந்தால் மற்றொரு ஆண் அந்தப்பெண்ணை அவ்வளவாக சீண்டமாட்டான். பெரும்பாலும் இம்மாதிரி இருப்பினும் சில விதிவிலக்குகள் இருக்கலாம். ஆனால் பெண்கள் சதவீத அளவிற்கு ஒருவரிடமே ஒரே நேரத்தில் தெரிந்திருந்தும் உறவு வைக்கமாட்டார்கள்.

## இந்து புராணத்தின்படி கலியுகப்பெண்கள்

இப்பிரபஞ்சத்தின் முடிவில்லாத நிகழ்வுகளான படைத்தல், பாதுகாத்தல், அழித்தல் ஆகியவற்றின் சுழற்சி முறையில் நான்காவது பருவம் கலியுகமாகும். மதங்களின் முழு வீழ்ச்சி, வெறுப்புடனான ஒத்துழையாமை இக்கலியுகத்தில் ஏற்பட்டு, உண்மை, ஒழுக்கம் மறைந்துபோகும். அப்போது விஷ்ணு ஒரு அவதாரம் எடுத்து பூமியிலுள்ள எல்லாத் தீமைகளையும் அழித்து மீண்டும் சத்ய யுக சுழற்சி வரும்.

கலியுகத்தில் சமூகம், நீதி, மதக்கோட்பாடுகளை பெண்கள் தகர்த்தெறிந்துவிட்டு எதிர்விதமாக நடந்துகொள்வார்கள் எனப் புராணம் கூறுகிறது. மேலும் அப்பெண்கள் உண்மை, ஒழுக்கம், நாகரீகம் குறைந்து நிலைத்தபுத்தி இன்றி சினம், சுயநலம், சோம்பேறித்தனம் கொண்டு எந்தவித நன்முயற்சியுமில்லாமல் பொய் மற்றும் தவறுகளின்பால் மிகுந்த விருப்பமுள்ளவர்களாக இருப்பர் எனவும் கூறுகிறது. மிகஅதிகப் பெண்கள் நிறையக் குழந்தைகளைப் பெறுவார்கள் எனவும் குழந்தைகளைப்பற்றிக் கவலைப்பட வழியிருக்காது எனவும் புராணம் கூறுகிறது.

கலியுகத்தில் பெண்கள் மிகச்சிறு வயதிலேயே பூப்படைந்து ஐந்து வயதிலிருந்து குழந்தை பெற்றெடுப்பார்கள் எனவும் புராணம் கூறுகிறது. அந்த வயதிலேயே உடலுறவுச் செயல்கள் ஆரம்பித்துவிடுவதால் உறவு கொண்டாடும் பையன்களுக்கு நல்ல,

உண்மையுள்ள மனைவியராக இருக்கமாட்டார்களெனவும், இந்துமதப்படி அழிவற்றத்தன்மை கொண்டதாகக் கருதப்படும் திருமண முறையை மதிக்கமாட்டார்கள் என்றும் கூறுகிறது.

நகைகள், தங்க-வைர ஆபரணங்கள், உடைகள் ஆகியவற்றோடு மலர்களைக் கொண்டு அலங்காரம் செய்து கொள்வதையும் மறந்து விடுவார்கள் என்றும், தங்கள் முடிகளைக் கொண்டே முக்கிய அலங்காரம் செய்பவர்களாக இருப்பர் எனவும். விஷ்ணு புராணம் தெரிவிக்கிறது.

இந்தியாவின் வடகிழக்கு நாகாலாந்து மாநில அகதிகள் முகாமில் சுமார் பத்து வயது அம்மா சிறுமிகள் தகப்பன் தெரியாத தங்கள் குழந்தைகளை இடுப்பில் சுமந்து திரிவதைக் காணும்போது இதன் ஆரம்பம் தெரிகிறது.

மதங்களின் புராணங்கள், ரிஷிகளின் உபதேசங்கள், சித்தர்களின் சிந்தனைகள், ஞானிகளின் கருத்துக்கள் போன்றவை மூலமாக உலகின் அனைத்து மதங்கள்-மக்களுக்குப் பொருந்தக் கூடியதை அவ்வாறே நிகழ்ந்து வருவதை நன்றாக உணரமுடிகிறது. சில விதிவிலக்குகளைத்தவிர பல விளைவுகள் ஏற்கெனவே நிரூபனம் செய்யப்பட்டுள்ளன. எனவே இங்குக் கூறப்பட்டுள்ளவைகள் பிற்காலத்தில் நடைமுறைக்கு வருவதற்கு அதிக சாத்தியக்கூறுகள் உள்ளது இப்போதே அறியமுடிகிறது.

உதாரணத்திற்கு முன்னையக் காலத்தைவிட பெண்கள் பூப்படையும் வயது குறைந்து வருவதும், அவர்களுடைய பழக்கவழக்கங்கள், உரிமைகள், சூழ்நிலைகள், கலாச்சாரங்கள் மாறிவருவதும் நன்றாகத் தெரிகிறது. அழகுப் போட்டிகளில் மாடலிங் என்ற பெயரில் அரை, முக்கால், முழு அம்மணங்களில் சற்றும் கூச்சமில்லாமல் தோன்றுகிறார்கள். மேலும் உலகம் முழுவதும் சதை

அழகிகள் அனைத்து மக்களாலும் பெரிய அளவுகளில் போற்றப்பட்டுக் கொண்டாடப்படுகின்றனர்.

புராணங்களில் கூறப்பட்டுள்ள முறைகளில் மூன்றில் ஒருபகுதிக்கு மேற்பட்ட பெண்கள் இப்போதே மேல் நாடுகளில் உலாவிக்கொண்டிருக்கின்றனர். அங்கே அது அறுதிப்பெரும்பான்மை மற்றும் இரண்டில் மூன்று பங்கு மெஜாரிட்டிக்கு வந்தபிறகு இங்கேயும் எங்கேயும் இம்முறைகள் வருவது நிச்சயமே. வருடங்கள்தான் இன்னும் எத்தனை பாக்கி எனச் சரியாகத் தெரியவில்லை. இதற்கு பெண்கள் மட்டும் காரணமாகமாட்டார்கள்; பெண்ணுரிமை என வேறுவிதமாகத் திசை திருப்பியவர்களும் காரணமாகலாம்.

## பயணங்களில் பெண்கள்

### நெரிசல்களில் உடலிணைப்புகள், சில்மிசங்கள்

பேரூந்து மற்றும் இரயில் பயணங்களில் பல வேடிக்கைகள், கொடுமைகள் அனுதினமும் நடந்து வருகின்றன. ஆண்களும் பெண்களும் அழுத்தமாக உரசிக்கொள்ளுதல், நெருக்கிக் கொள்ளுதல், இடித்தல், தேய்த்தல் என நெருக்கிய கூட்டத்தில் விரும்பியும் விரும்பாமலும் பலவும் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. இதில் பெண்களில் சிலர் மட்டுமே தங்களைக் கவரும் விதமாக உள்ள ஆண்களை விரும்பி நடப்பதாக இருக்கிறது. மற்றபடி ஆண்கள் நிறையபேர் வயது வித்தியாசம் இல்லாமல் பெண்களுடன் நெருக்கிக் கொண்டு நிற்பதை மிக விரும்புகின்றனர். இதில் பல இளைஞர்கள், நடுத்தரவயது ஆண்களுடைய கைகள் பல தவறான வேலைகள் செய்கின்றன. இடித்தல், தேய்த்தல், லேசாகக் கிள்ளுதல், அழுத்துதல், உடம்போடு ஒன்றிரண்டை மட்டும் செய்யாமல், செய்யஇயலாமல் தற்காலிக சிறிதுநேரத்திற்கு உடல்களோடு இணைந்துவிடுவது என அனைத்தும் அரங்கேற்றப்படுகின்றன.

மிகுந்த கூட்ட நெரிசல்களால் இதை சக பயணிகள் தவறு என்று சொல்வதற்குக் கூட வாய்ப்பில்லாமல் போகிறது. இது நம்மவர்களுக்கு நிரம்பக் கொண்டாட்டமாகிப் போகவே தினசரி இலவசமாக பாதி காம உணர்வுகளைத் தீர்த்துக்கொள்கின்றனர். சிலருக்கு இச்செயல்களை மனம் விரும்பினாலும், கௌரவம், நிலை, அந்தஸ்து, சுற்றுப்புற அழுத்தம் போன்றவற்றால் செய்வதற்கு தைரியம் கிடைக்காது. இதைப்பற்றி நிறைய நிறைய சொல்லமுடியும். சில பெண்கள் இவற்றை விரும்பாமல் செய்வதறியாது மறத்துப்போய் நிற்பார்கள். சிலர் ஆரம்பத்தில் விருப்பம் இல்லாமலிருந்து பின்னர் உடல் சூடு ஏற ஏற அதற்கு உடந்தையாகித் தாங்களும் ருசி அனுபவிப்பவர்களாக ஆகிறார்கள். சிலருக்கு இவ்வாறானத் தற்காலிக நீண்டநாட்ளாக தொடர்பு ஏற்பட்டு அதன்மூலம் அவ்வப்போதைக்கான முழு உடல் சேர்க்கைகள்வரை போகிறது. கொஞ்சம் சிலருக்குக் காதலாக மாறி அவர்கள் தம்பதிகள் ஆவதுமுண்டு.

ஆண்களில் நிறைய உரசல் மன்னர்கள் இருப்பதுபோல் பெண்களில் ஓரளவுக்கு அதை விரும்புகிற கூட்டமும் உண்டு என்பதை ஒருவேளை பெண்கள் மறுத்தால் நாம் என்ன செய்யமுடியும். பல உண்மைகளை உலகில் வெளியே பேச இயலாது உள்ளது. இவ்வாறு பயணம் செய்பவர்களில் முகம் தெரிந்தவர்கள், தெரியாதவர்களிடம் அந்த ஒரு சிறிய பயணத்திற்குள் உடல் சூடாகிக்கொள்வது, உணர்ச்சிவசப்படுவது, தற்காலிக முகமொழிகளின் பரிமாற்றம் போன்ற சிலுமிசங்கள் எங்கேயும் எல்லா நேரங்களிலும் நிகழ்கின்றன. பயணம் முடிந்தபின்னும் சிறிதுநேரம் அந்த நினைவுகளுக்குள் இருந்துவிட்டு அதன் பிறகு வழக்கமான மனிதர்களாகி வந்தவேலைகளைப் பார்க்கிறார்கள். சிலர் ஒருநாள் உரசியவரை தொடர்ந்து தேடிக் கண்டுப்பிடித்து, தினசரி உரசி உரசி தன்வழிக்குக் கொண்டுவருபவர்களாகவும் இருக்கிறார்கள்.

பாவம், இந்தப்பெண்களைப் பெற்றவர்கள் ! என மனம் துடிக்கிறது. தாங்கள் சிரமப்பட்டு சம்பாதித்து மகள்களை சகோதரிகளை படிக்க, வேலைக்கு அனுப்பும்போது, காலை முதல் இரவு வரை அவ்விடங்களில் நடக்கும் கூத்துகள் பல இவர்களுக்குத் தெரியாமல் போகின்றன, தெரிந்தாலும் என்ன செய்ய இயலும்.

## தகாத உறவுகள்

### ஆண்களின் ரகங்கள்

மேற்கண்டக் கொடுமைகளே பரவாயில்லை என எண்ணத்தோன்றுகிறது சில இடங்களில் நடக்கும் அக்கிரமங்கள். சுற்றுப்புறத்தினர், சக மாணவர்கள், ஊழியர்கள், செல்லும் இடங்களில் சந்திக்கும், பழகும் மனிதர்கள், பல வயதிலான உறவுக்காரர்கள், சகோதர முறையினர், தகப்பன் முறையினர், உடன் பிறந்த சகோதரர்கள், நம்பமுடியாத வகையில் பெற்ற தகப்பன்கள் எனப் பலதரப்பட்ட மனிதர்களின் காமப்பசிக்கு பெண்கள் இரையாகின்றனர் அல்லது ஈடுபடுகின்றனர். மற்றவர்கள் கிடக்கட்டும், தொலைந்து போகட்டும். ஆனால், தகப்பன் - சகோதரர்களுடன் ஆன உடல் சேர்க்கைகள் மிருக வாழ்வுமுறைக்கு கொண்டுபோகிறது. இன்னமும் மனிதன் ஐந்தறிவு விலங்கினமாகவே இருக்கிறான் என்பதற்கு இது எடுத்துக்காட்டாகிறது. பத்திரிகைகளில் அவ்வப்போது வரும் செய்திகளும் சுற்றுப்புறங்களில் நடப்பவைகளும் பல அசிங்கங்களை அறியவைக்கின்றன. சில இடங்களில் தகப்பன்-மகள், அண்ணன்-தங்கை உறவுகள் நேர்மையாக இருப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் மிக மிக குறைந்த சதவிகிதத்தினர் என்றபோதிலும் நாளடைவில் இக்கொடுமைகள் வளர்ச்சி பெற்று பெருத்துவிட வாய்ப்பிருக்கலாம். இதற்கு அனுகூலமாக ஆணுறை - பெண்ணுறை, இதர கருத்தடை சாதனங்கள் நிறையவே வந்துவிட்டன.

இவ்வழக்கம் ஒருசில நூற்றாண்டுகளுக்குப் பின் சர்வசாதாரணமாகி, கற்கால மனிதனின் நாகரீகமற்ற விலங்கினப் பழக்க வழக்க வாழ்வுமுறைக்கு எடுத்துச் சென்றுவிடும். தந்தை – மகள் உறவிலுள்ள சீர்கேட்டைப் போல் தாய் – மகன் உறவில் சொல்லிவிட முடியாது. இருப்பினும் இதற்கும் உட்படும் மிருகமனிதர்கள் எங்கேயாவது இருக்கக்கூடும். இதற்கு மனக்கோளாறுகளும், அதிக பட்ச தன்னிலை மறக்கும் போதைகளும், காமவெறித் தூண்டுதலாகி விடுகின்றன. சமீபத்தில் ஒரு தினசரி நாளிதழில் தங்கையிடம் தகாத உறவுக்கு முயற்சித்த அண்ணனை தாயும்–தங்கையும் அடித்துக் கொன்ற செய்தி வந்திருந்தது. அந்த நன்கு வளர்ந்த மிருக மனிதன் போதையில் தாய் தங்கைகளுக்கு முன்பு அடிக்கடி அம்மணமாக நின்று தன் நிர்வாணப்பெருமையைக் காட்டிக்கொள்வானாம்.

## தாய் – மகன் உறவு

இதைப்போல் சில ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்து நாட்டிலிருந்து வந்த ஒருசெய்தி பெரும்பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. ஒரு இளைஞன் அவனைவிட சுமார் இருபது வயதுக்குக் கூடுதலாக உள்ள பெண்ணிடம் காதல் கொண்டு திருமணம் செய்ய இருவரும் முடிவெடுத்தனர் அப்பெண்ணைப் பற்றி தன் தந்தையிடம் சொல்லி அறிமுகப்படுத்த அழைத்து வந்தபோது அதிர்ச்சி காத்திருந்தது. தன்னைப் பெற்ற தாய்தான் தன் காதலி என்பதையும், தான் பெற்ற மகனே, தன்காதலன் என்பதும் அங்கே தெரிந்துவிட்டது.

இதற்கு முன்பாகவே அவர்கள் இருவரிடமும் பலதடவைகள் **அனைத்தும்** நடந்தேறியே இருந்தது. ஒருவர்மீது ஒருவர் அளவிடமுடியா காதலைக் கொண்டிருந்தனர். தந்தை விவாகரத்து செய்த பெண் அவள் என்பதும், அவர்கள் இருவருக்கும் பிறந்தவன் இவன் என்பதும் மூவரின் சந்திப்பில் தெரியவந்ததும் பிரச்சினை பெரிதாகியது. தெரிந்த பிறகும் தாயும் மகனும் தங்களுக்குள் இருந்த

காதலை கைவிடவோ, திருமண எண்ணத்தை புறக்கணிக்கவோ விரும்பவில்லை. ஆனால் அவனுடைய தந்தை இதற்கு சம்மதிக்காததோடு கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

நாடு முழுவதும் பத்திரிகைகளில் பரபரப்பாகப் பேசப்பட்டு, நீதிமன்றம், நாடாளுமன்றம் வரை இப்பிரச்சினை கொண்டு செல்லப்பட்டது. இறுதியில் இருவரும் (தாயும்-மகனும்) திருமணம் செய்துக்கொள்ளக் கூடாது என உத்தரவிட்டிருந்தது. எனினும் பிரியமுடியாத காதலர்கள் தொடர்ந்து தங்கள் காதலை நடத்திவந்தார்கள் என்ற செய்திஇருந்தது. அதன்பிறகு என்ன நடந்தது என்பதும், இன்றைய நிலை என்னவென்பதும் தெரியவில்லை. அது நமக்கு அவ்வளவு அவசியமும் இல்லை.

## மிருகநிலை காமத்திற்கு வரைமுறை இல்லை

நாம் இதிலிருந்துத் தெரிந்துகொண்டது என்னவெனில் காதலுக்கு கண் உண்டோ – இல்லையோ, இந்தக் காமத்திற்கு சிலஇடங்களில் எந்த வரைமுறையும் இருப்பதாகத் தெரியவில்லை. மனிதன் நாகரீகமேன்மை பெற, பெறுவதற்கான சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்கள், வரைமுறைகள் பல ஏற்படுத்திக் கொண்டனர். இந்த நாகரீக வளர்ச்சியின் இடைக் காலத்தில் கூட உடன்பிறந்த சகோதர சகோதரிகளுக்குள் திருமணங்கள் நடந்து வந்திருக்கின்றன. உலக அழகியாகப் போற்றப்பட்ட கிரீஸ் நாட்டு பேரரசி கிளியோபாட்ரா தன் சகோதரர்களையே ஒருவர் பின் ஒருவராக திருமணம் செய்துகொண்டதாக ஒரு வரலாறு தெரிவிக்கிறது. ஒருசில ஆப்பிரிக்க பழங்குடி இனத்தவரில் திருமணமாகப் போகும் பெண்ணை குடும்ப முதியவர் உறவுகொண்டு, சோதித்து தகுதிச்சான்று அளித்தப்பின்னரே அம்மணமகள் திருமணத் தகுதியடைவதாகக் கருதப்படுவார். காமத்தின் விளைவுகளைப்பற்றி ஆயிரமாயிரம் பேசமுடியும்.

அடுத்ததாக ஆண்-பெண் இடையிலானத் தகாத உறவுகளில் கிராமப்புறங்களை விட நகரங்களிலும் அதைவிடப் பெரும் நகரங்களிலும் மிகுதியாக இருப்பதாகத் தெரிகிறது. பெருநகரங்களில் நடந்துவரும் இவ்வகையானச் செயல்களை எழுதுவதற்கு ஒருகோடி புத்தகங்கள் போதாது அத்தனைவிதமான மனிதர்கள் ஆண்களும் பெண்களுமாக ஆங்கே புதுப்புது யுத்திகளுடன் உலாவிக் கொண்டிருக்கிறார்கள் அங்கே நடந்துவரும் பலநபர் கூடுதல்கள், கலவிச் சமாச்சாரங்கள் மிகவும் அறுவறுக்கத்தக்கவை. நவநாகரீக உடையணிந்த நாணமற்ற மக்கள் கூட்டம் எங்கும் வாரி இறைக்கப்பட்டிருக்கிறது. அங்கே இன்னும் நல்லவர்களாய் இருந்து கொண்டிருப்பவர்களுக்கு அநேக நமஸ்காரம்!

## எளிதாக காமத்தீர்வுகள் – யுக சுழற்சிகள்

இனிமேலும் பொய்வாழ்க்கை வாழாமல் எல்லாவற்றையும் வெளிப்படையாக்கிவிட்டால் மனித பரிணாமவாழ்க்கையின் ஒரு சுழற்சி முறை பூர்த்தியாகிவிடும். பழைய நரமாமிசம் உண்ணும் காட்டுமிராண்டி காலத்திற்குப் போய் திரும்பவும் அங்கிருந்து மனிதன் முன்னேற ஆரம்பிக்கும் காலம் ஏற்பட்டு இப்போதிருப்பது போன்ற நிலையை இதன்பிறகு பலலட்சக்கணக்கான ஆண்டுகள் கழித்து அடையும் சூழ்நிலை வரலாம். ஒருவேளை உலகத்தில் பிராணிகளும் மனிதர்களும் இதுவரையில் இப்படி பலமுறை சுழற்சி அடிப்படையில் வந்திருப்பார்களோ என்ற ஐயப்பாடு எழுகிறது.

இப்போது நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் காலம் மனித வாழ்வியல் தத்துவ சுழற்ச்சியில் உச்சமாக இருப்பதாக வைத்துக் கொள்ளலாம். பலரால் விருப்பப்படும் முரண்பாடான மிருகரக காமத்தேவைகள் சர்வசாதாரணமாக எளிதில் பூர்த்தியாகும் சூழ்நிலைகள் இன்னும் சில காலங்களில் ஏற்பட்டுவிடலாம். அதற்குண்டான உபாயங்கள், உபகரணங்கள் மற்றும் மன சமுதாய அமைப்புகள்

வந்துவிட்டன. இதன்பிறகு மனிதர்களுக்கு மற்ற செயல்களைப்போல் இது மிகச் சாதாரணமாகி விடும். சாப்பிடுவது, காலைக்கடன்களை முடிப்பதுபோல் இயற்கையாக எந்தநேரத்திலும் எல்லா இடங்களிலும் வாய்த்துவிடும்.

## முழு பூர்த்தியான காமத்தின் பின் விளைவுகள்

இதை பிரபல ரஜனீஷ் சாமியாரின் பூனா ஆசிரமத்தில் அனுபவப் பூர்வமாகச் செயல்படுத்தி வெற்றியும் கண்டுள்ளனர். மடத்தின் உள்ளே அனுமதிக்கப்பட்ட ஆண் பெண் அனைவரும் நிர்வாணமாகச் சிலநாட்கள் தங்கவைக்கப்பட்டு தேவையான உணவளித்து இயன்றளவிற்கு உடலுறவு செயல்களை நடத்திக்கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. இவ்வகையில் உள்ளே சென்ற மனிதர்களில் பெரும்பகுதியினருக்கு ஓரிரு நாட்களிலேயே காம விருப்பத்தை வெகுவாக மறக்கடிக்கப்பட்டு அவர்கள் அதை வெறுத்து வெளியேறினால் போதும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். இவ்வகையில் வெளியில் வந்த சிலர் குறிப்பாக ஆண்கள் பல மாதங்கள், ஓரிரு வருடங்கள் கூட இல்லற சுகத்தை மறந்து துறவரத்தை நாடி உள்ளனர். ஒருசிலர் நிரந்தரமாகக் கூட இல்லற சுகத்தை கைவிட்டுவிட்டனர். இப்படி சிலர் இருப்பினும் எதற்கும் அடங்காதக் காமுகன்கள் பலரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவ்வாறாகக் காமத்தின் அடிப்படையிலிருந்து வரும் தேவைகள் பூர்த்தியாகும் போது இதர தேடுதல்கள் குறைந்து பல செயல்கள் மறைந்துபோகும். அதன்பிறகு மனிதர்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ள மாட்டார்கள். ஆடை அணிவது அவசியமற்றுப்போய் அம்மணமாகிவிடுவார்கள். அனைத்துப் போட்டிகள், கண்டுபிடிப்புகள், தேடுதல்கள் அவசியமற்றதாகிப் போய்விடுகிறது.

இயந்திரங்கள், மின்னணு சாதனங்கள் தேவையில்லாமல் போகும். இது இன்னொரு வகையில் எப்படியும் ஒருநாள் இவ்வுலகில்

நடக்கும். உலகலாவிய வேலையில்லாத் திண்டாட்டங்கள் ஏற்படும்போது அதற்கான ஒரே நிரந்தர தீர்வு இதுவாகத்தான் இருக்கும். மனிதர்களுக்கு வேலையில்லாமல் ஆக்கிக்கொண்டிருக்கும் மின்னணு சாதனங்கள், இயந்திரங்கள், கம்ப்யூட்டர்கள் ஆகியவற்றை படிப்படியாகக் குறைத்து அவற்றிற்கு வேலையில்லாமல் ஆக்கி உலகத்திலிருந்து ஒருநாள் ஒழித்துவிடப் போகிறார்கள்.

ஏற்கெனவே தேவைக் குறைந்துபோனப் பல பொருட்கள் இவ்வுலக உபயோகத்திலிருந்துத் தூக்கியெறியப்பட்டது நினைவுக்கு வருகிறது. வால்வு ரேடியோக்கள், சில எலக்ட்ரானிக் சாதனங்கள், ஸ்பிரிங் கடிகாரங்கள், கிராமபோன் பெட்டி–இசைத் தட்டுக்கள், வீடியோ கேசட்டுகள் அதன் பிளேயர்கள், பேஜர்கள், சுழற்றி டயல் செய்யும் போன்கள், சென்றகாலத்திய நீராவி என்ஜின்கள் என பலவற்றை சொல்லமுடியும்.

இயற்கை எரிபொருள்கள் தீர்ந்தபிறகு திரும்பவும் கால்நடைகள் / மனிதர்கள் இயக்கும் இழுக்கும் வண்டிகள், இதர சாதனங்கள் உபயோகிக்கும் காலம் வரலாம். கால்களால் பலநூறு மைல்கள் பயணம் செய்வர். பாஸ்ட் புட், பலதினுசு உணவுகள் போய் பழைய சாதாரண உணவுமுறை கைக்குத்தல்கள், கூல் போன்றவை உணவாகலாம். ஆடைகள் குறைந்து கோமணமாகி, கோமணம் போய் மரப்பட்டைகள்–இலைகள்–சருகுகள் போன்றவை உடலை மறைக்கும். இதன்பிறகு இவைகளும் போய் கையால் மூடிக்கொள்வது, மரங்கள், பொந்துகளில் ஒளிந்து கொள்வது நிகழலாம். அதற்குப்பிறகு மற்றபாகங்கள் வெளியே தெரிவதுபோல் பாலுறுப்புகள் சாதாரணமாக வெளியில் தெரிவது இயல்பாகிவிடும்.

அப்போதைய மனிதர்கள் விலங்குகளை வேட்டையாடி சுட்டும் பச்சையாகவும் சாப்பிடுவார்கள். விவசாயம் நின்றுபோகும், பூமியில் இயற்கையாக கிடைக்கும் கிழங்குகள் பழங்கள் போன்றவற்றை அதிகம் உண்ணுவார்கள். இவற்றால் உடல் பலம் அதிகமாகி, அடங்காத

மனிதர்களாகி சகமனிதத்தை அடித்துக் கொன்று தின்னுவார்கள். தின்பதோடு காட்டுமிராண்டித் தனங்களுடன் திரிவார்கள்.

அங்கிருந்து சில பிரலய காலம் கழித்துத் திரும்பவும் மனிதன் இயல்பு பெற ஆரம்பித்து பல மாற்றங்களுக்கு பிறகு இப்போதிருப்பது போன்ற அல்லது வேறு தோற்றத்திலோ அறிவுநிலையிலோ உருவாகலாம். இவ்வாறு திரும்ப திரும்ப சுழற்சி முறை வந்துகொண்டிருக்கலாம். இயற்கைத் தத்துவமும், உயிரின வாழ்க்கைச் சுழல் ஆய்வுகளும் ஆரம்பித்த இடத்தில் முடிந்து திரும்ப ஆரம்பித்து ஒரு சுழற்சியிலேயே இருக்கும் என சொல்லுகின்றன.

உலகில் பண்டைய மனிதர்களின் மேலான வாழ்விற்கு ஆதாரமாகக் கிடைத்திருக்கும் பல அறிய விடயங்கள், செய்திகள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களின் கண்டுபிடிப்புகளைப் பார்க்கும் போது இப்படித்தான் இருந்திருக்குமோ என்ற வினா எழுகிறது. வான சாஸ்திரங்கள், கல்வெட்டுகள், குகைகள், குகைக்கோயில்கள், சிற்பங்கள், மலை மீதான செதுக்கல்கள், பிரமீடுகள் மற்றும் தாவரங்கள்–விலங்குகளாகியவற்றின் பாறைப்படிவுகள் அவற்றின் மிச்சசொச்சங்கள் என பலவும் முந்தைய காலத்து மனிதர்களின் அறிவுநிலைக்கு ஆதார மிச்சங்களாகக் காணக்கிடைக்கின்றன. முன் காலத்தில் மனித சுழற்சி வாழ்வு உச்சங்களில் பல கண்டுபிடிப்புகள் இருந்திருக்கலாமோ என்ற எண்ணம் ஏற்படுவது நியாயமே.

எனவே, காமத்தீர்வுகள் மிக எளிதாகும் நிலையில் ஒரு யுக சுழற்சியின் பூர்த்திக்கான வேகக்கூடுதல் சாத்தியமாகிறது. இப்போது வளர்ந்து வரும் உலகில் இக்காமத்தீர்வுகள் நாளுக்குநாள் எளிதாகி வருவது எவருக்கும் தெரியும். முன்பு ஆண்கள் பெண்களை விரட்டிய காலம் போய், தற்போதையப் பெண்கள் ஆண்களை விரட்டும் காலம் வரத்தொடங்கிவிட்டதாகத் தெரிகிறது. இதில் ஆச்சரியம் என்னவெனில்

மனிதர்களைத் தவிர வேறு எந்த விலங்கிடத்திலும் இக்குணம் இன்னும் அதிகளவில் வரவில்லை, வராது என்றேத் தோன்றுகிறது.

## பெண்களின் உடைகளினால் காமத்தூண்டுதல்கள்

இந்நாட்களில் இச்செயலுக்கானப் பல நியாயமானக் காரணங்களுள் ஒன்றாக, ஆண்களைவிட பெண்கள் தொகை அதிகமாகியதாக இருக்கலாம். ஆக முந்துதல் போட்டிக்கு பெண்கள் தள்ளப்படுவதோடு இப்போதையக் கலாச்சாரம், உணர்வு தூண்டும் உணவுகள்–சூழ்நிலைகள், கோமாளித்தனமான நாகரீகங்கள் என கோர்வையாகக் கூடியுள்ளன. சில பெண்கள் உடையணிந்திருப்பதைப் பார்த்தால் எந்த நியாய வாதியும் , சோனியும் தூண்டி தட்டி எழுப்பப்பட்டு துள்ளித் தள்ளப்படுவான். மேலாடையின் உறுத்தல்கள் வேண்டுமென்று ஆண்களை அவதிப்பட வைக்கவேண்டுமென்கிற எண்ணமிருப்பதாய்படுகிறது. பெண்களில் சிலர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாகத் தோற்றமளிக்கின்றனர். இதற்கெல்லாம் முடிவு அவர்கள் கையில்தான் இருக்கிறது.

எந்தப்பக்க மாற்றத்திற்கு அதிக கவனம் செலுத்தப் போகிறார்கள் என்பதைத் தீர்மானிக்க வேண்டியது அவர்கள்தான். ஒன்று, ஒரு ஐம்பது நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த ஒழுக்க முறைக்கா அல்லது மேல்நாடுகளில் இப்போதிருப்பதை விடவும் கூடுதலான நிலைக்கு மாறி முழுவதுமாக ஒழுக்கம் இழப்பதற்கா! பின்னதை கடைபிடிக்கும் நிலையில் திரும்பவும் பழைய காட்டுமிராண்டி வாழ்க்கைக்குப் போய் அதன்பிறகு மெல்லமெல்ல முன்னேறும் மனிதஇனத்தை உண்டாக்குகிறவர்களாக ஆகிறீர்கள்.

பாலுறுப்பு பெறாத மேல்மேனியை கொண்ட ஆண்கள் கழுத்திலிருந்து உடல் முழுவதும் நன்றாக மூடியிருக்கும் வகையிலான ஆடைகளை அதிகம் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு மாறாக பாலுறுப்பு மேனியை கொண்ட பெண்கள் பாலுறுப்புகள் எடுப்பாக

தெரியும் விதமாக அரைகுறை ஆபாச மேலாடைகளை அணிவது எங்ஙனம் நியாயமாகும். இதை பல காலங்களுக்கு முன்பிருந்தே ஆண்கள் தங்களின் ருசித் தேவைகளுக்காக உருவாக்கியிருக்கின்றனர் என்பதை பெண்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இதுநாள்வரை பெண்கள் அடக்கிவைக்கப்பட்டிருந்ததால் எதுவும் வெளியில் அம்பலமாகாமல் இருந்து வந்தது. இப்போது முழு சுதந்திரத்துடன் அவர்கள் வெளியே வந்ததும் அவர்களின் பல தவறுகள் அம்பலமாகி பெண்கள் இப்படியும் செய்வார்களா என்று பயங்கொள்ள வைக்கிறது. எதற்கும் துணிந்துவிட்டவர்களாகப் பெண்கள் பலர் வலம் வருகின்றார்கள். இங்கே ஒழுக்கமானப் பெண்களைப்பற்றி யாரும் எதுவும் பேசுவதற்கு யோக்கியதை இல்லை. இச்சூழ்நிலையிலும் ஒழுக்கமான பெண்களாய் இருப்பவர்களின் கால்களுக்கு மலரபிஷேகம் செய்யலாம். அவர்கள் அனைவரும் உயிருள்ள வாழும் தெய்வங்கள் என்பதில் மிகையில்லை. அவர்கள் மரியாதைக் குரியவர்கள், போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரியவர்கள். எனவே அப்படிப்பட்டவர்கள் சிறிதளவும் வருந்தவேண்டாம். உங்களைப் பார்த்து மற்றவர்களும் உங்களைப்போல் மாறினால் மிக்கமகிழ்ச்சியே! என்றபோதிலும் அந்நிலை இனி வருமா என்பதில் சந்தேகம்தான்.

## அலங்காரத்தின் அவசியம்

இன்றைய மனித வாழ்க்கைச் சூழ்நிலை வேறுவிதமாகிவிட்டது. உலகத்தின் பெருந்தலைவர்கள் முதல் சாதாரண மனிதர்கள் வரை தங்களை எப்படியாவது சிறப்புற அலங்கரித்துக் கொள்ளவேண்டுமென்பதில் குறியாயிருக்கின்றனர். இந்த அலங்காரங்கள் எப்படி வந்தது, எதற்காகத் தேவைப்படுகிறது என்பதை கவனிக்க வேண்டும். தங்களை மற்றவர்கள் மதிப்பதற்கும், விரும்புவதற்கும் அத்துடன் உயர்வாக, பலசாலியாக, அறிவாளியாக, வசதிமிக்கவராக மற்றும் அழகானவராகக் கருதவேண்டும் என்பதாகவும் இருக்கிறது.

இவைகள் எதனெதன் அடிப்படையில் உருவானவை என்பதைப் பார்க்கலாம். இவைகளுக்கானக் காரணங்களை இன்றைய மனிதர்களிடம் தேடுவதைவிட முந்தைய மனிதர்களிடமிருந்துதான் வரவேண்டும். வயிற்றுப்பசி, உடற்பசிக்கு மனிதன் போட்டிப்போட வேண்டியிருந்தக் காலமிருந்தது. அப்போட்டிகளில் முந்தியவர்கள், வென்றவர்களுக்கு இவைகள் தேவைப்பட்ட அளவில் கிடைத்தன. இவை சிலருக்கு மிதமிஞ்சி கிடைத்து அத்தேவைகள் பூர்த்தியானபிறகு மெல்லமாக அறிவுப்பசி ஏற்பட்டு வேறு தேடுதல்கள் ஆரம்பமானது. புதியவற்றை உருவாக்கியவர்கள் கண்டெடுத்தவர்கள் போற்றப்பட்டனர். இவர்களுக்கு மற்றவர்களைவிட எல்லாமும் கூடுதலாக வந்திருக்க வேண்டும்.

இவ்வகையான வாழ்க்கைகளின் காரணமாக மேற்படி இத்தியாதிகள் வளர்ந்து அதிகமாகி இன்றைய மனிதர்களின் இந்நிலைக்கு வந்திருக்க வேண்டும். மனிதர்களின் செயல்கள் பலவும் ஒருவிதக் கவரும் மனநிலையில் உருவாகின்றன. ஆடை அணிவது, நாகரீகமாகப் பேசுவது, உடலைச் செம்மையாக்குவது, வீரம்-அழகுடன் தோன்றுவது, விளையாட்டுகளில் பங்கெடுப்பது மற்றும் இசை-ஆட்டம்-பாட்டம்-கொண்டாட்டம், பகட்டு ஆடம்பரம், அதிகாரம், சேட்டை, முரட்டு தீய செயல்கள், வித்தை வாகன சவாரி இன்னும் என்னவெல்லாம் உண்டோ இவையனைத்தும் நேர்முக மற்றும் மறைமுகத் தாக்கத்தினால் வருவது. சிலர் சூழ்நிலைத் தேவைகளை நன்றாக யோசித்து உணர்ந்து தெளிந்து செய்வார்கள். சிலர் அரைகுறையாக உணர்ந்து செயல்படுகிறவர்களாக இருப்பர். மற்றசிலர் தங்களை அறியாமலேயே சூழ்நிலைக் கட்டாயத்தினால் இவைகளைச் செய்கிறபோதிலும் இந்நிலைகளுக்கு இயற்கையாகவே பொருந்தி பொருத்திக்கொள்கிறார்கள்.

## அனைவரும் காமக்காரர்களே

உலகத்தின் அனைத்து மனிதர்களும் காம உணர்வுகளின் தாக்கத்திற்கு உட்பட்டவர்களே. மன்னர்கள், ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள், நாட்டுத் தலைவர்கள், அமைச்சர்கள், பிரபுக்கள், பெரும் அதிகாரிகள், பெரும் செல்வந்தர்கள், பெரும் அறிவாளிகள் என அனைவரும் பிரபல்யம், அந்தஸ்து என பலவற்றிலும் செல்வாக்கு மேன்மை உள்ளவர்களாக இருப்பர்; ஆனால் இவர்களில் பலருடைய அந்தரங்கங்கள் மிக சுவாரசியமானதாக இருக்கும். குடும்பத் தாம்பத்தியம் போக இதற்காக வேறு தேவையில்லாத மாதிரியும் அதை வெளியிடத்தில் காட்டிக்கொள்ளாமலும் மிகுந்த மிடுக்குக் காட்டிக் கொள்வார்கள், இருப்பினும் மேல்நிலை மனிதர்களில் பலர் கவர்ச்சியானவர்கள், பிரபலமானவர்களை விரும்புவது, உறவாடுவது, சமயத்தில் சிலர் மாட்டிக்கொள்வது என நிறைய உண்டு.

அமெரிக்காவின் முன்னால் ஜனாதிபதியும், அமெரிக்க ஜனாதிபதிகளுள் உலகமக்கள் அனைவராலும் மிகவும் கவரப்பட்டவருமான பில்கிளிண்டன் கதை நாம் அனைவரும் அறிந்ததே. மோனிகா லிவின்ஸ்கி எனும் தன் பெண் ஊழியருடன் தொடர்பு வைத்திருந்தது அம்பலமாக்கப்பட்டு மாட்டிக்கொண்டுச் சந்திசிரித்ததை உலகமறியும். இதில் என்ன வேடிக்கை எனில் பொது ஒழுக்க வாழ்வு கட்டாயமோ அல்லது அவ்வளவாக அவசியமில்லாது போன அமெரிக்க பொதுமக்களுக்கு தங்கள் ஜனாதிபதி ஒழுக்கமாக இருக்கவேண்டுமென்கிற கட்டாயம் இருக்கிறது. ஆனால் நமது நாட்டில் இதற்கு மாறாக ஒழுக்கம் பொதுமக்களுக்குக் கட்டாயமானதாகவும், தலைவர்களுக்குக் கட்டாயமில்லாததாகவும் இருக்கிறது.

இந்த மோனிகா லிவின்ஸ்கி பில்கிளிண்டனுடன் எப்போதோ நடந்த உடலுறவுகளுக்கு அத்தாட்சியாக அந்த அழுக்கு ஆடைகளை பல ஆண்டுகளுக்கு வைத்திருந்து இவர் ஜனாதிபதியானபின் வம்புக்கு

இழுத்திருந்தார். இதற்கு என்ன நோக்கம் இருந்திருக்கும் என்பதை அவரவர் நோக்கத்திற்கு விட்டுவிடுவோம். இருப்பினும் ஒரு நியாயமான கேள்வி மட்டும் எழுகிறது. இவர் சொல்லியிருந்ததுபோல் பில்கிளிண்டன் பலவந்த தகாத உறவு கொண்டிருந்தால் அதை அன்றோ அடுத்த நாட்களிலோ புகார் கொடுத்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா? அதுதானே உண்மையில் அப்பெண் பாதிக்கப்பட்டிருந்ததாக நினைத்திருந்தால் செய்திருக்க வேண்டும். பல ஆண்டுகள் கழித்து என்ன காரணங்களுக்காக இப்படி செய்திருக்கிறார். புகழ், விளம்பரம், பணம், வேண்டப்பட்ட பிறருக்கு உதவி செய்வதற்காக, குரோத பழி வாங்கும் உணர்வாக அல்லது வேறு எதற்காகவோ இவர் இப்படி செய்திருப்பதாகக் கருதவேண்டியுள்ளது.

திருமணம், இல்லறம், சுகம் என எல்லாவற்றையும் மறந்து தன் இன மக்களுக்காக அயராது உழைத்து வந்த பாலஸ்தீன தலைவர் யாசர் அராபத் என்ன செய்தார்? தனது அறுபத்தைந்தாவது வயதில் தன் உதவியாளரான முப்பத்தைந்து வயது சுகாவை திருமணம் செய்துகொண்டார். இத்திருமணம் ஒரு நாள் காதலில் வந்ததாக இருக்க முடியாது. சில ஆண்டுகளாவது ஒருவரையொருவர் ஆழமாகக் காதலித்திருக்க வேண்டும். இருப்பினும் இது வெளி உலகுக்கு தெரிந்திருந்ததாகச் செய்திகள் வந்ததில்லை. அதன்பிறகு சில ஆண்டுகளிலேயே மிக நோய்வாய்பட்ட அராபத் அவர்களுடைய பெண்குழந்தையைக்கூட நீண்ட நாட்கள் கொஞ்ச இயலாமல் சந்தேக சர்ச்சைகளுடன் கூடிய மரணத்தினால் இம்மண்ணுலகை விட்டு மறைந்து போனார்.

பிரான்ஸ் நாட்டை ஆண்ட மன்னன் எட்டாம் லூயி தன்காதலியுடன் வாழ்வதையே பெரிதாகக் கொண்டு நாட்டு மன்னன் அரச பதவியை தூக்கி எறிந்தார். நாட்டை ஆள்வதில் இருந்த சந்தோசம், சுகத்தைவிட தன் காதலியுடன் களிப்புறுவதையே தனக்குள் வலிமையாக நியாயப்படுத்திக் கொண்டார். சிந்தித்துப் பார்க்கும்போது

இவரது அன்றைய செயல்கூட ஒருவகையில் மிகச்சரியானதோ என எண்ணத்தோன்றுகிறது. வாழும் குறுகிய காலத்தில் நல்ல உடல் நலமும் மகிழ்ச்சியும் இரு கண்களாகப் பாவிக்கப்படுவது நியாயமாகும். நல்ல உடல் நலத்திற்கு பணத்தைவிட நல்ல மனது, உடல் உழைப்பு, நல்லுணவு, நற்பழக்க வழக்கங்கள் தேவை. மகிழ்ச்சிக்கு உண்மையான முதல் தேவை எது என்ற கேள்விக்கு பல பதில்கள் இருப்பினும் முதன்மையானது, பருவமடையும் முன்பிருந்தே சாகும்வரை பாலுணர்வு விருப்பத்தின் செயல்படு நிலைகளுடன் கூடிய வகைகளிலான திருப்தியாக இருக்கலாம்.

## சிற்றின்ப ஆசை

உலகில் உள்ள சூழ்நிலைகள், சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் இயலாமைகளினால் தங்கள் ஆசைகளை பலர் அடக்கியே வாழ்ந்து வீழ்ந்து வருகின்றனர். பெரும்பகுதி மனிதர்கள் மற்ற இனங்கள் பலவற்றில் பெரும்பகுதி திருப்திக்கொள்ள இயன்றாலும் ஒரு விடயத்தில் பூரணத்துவம் பெற்றதாக அவர்கள் உள்மனது ஒத்துக்கொள்வதில்லை. அதுதான் காமத்திற்கானத் தீர்வாகிய சிற்றின்பங்கள். ஓசோ போன்ற சிலர் சிற்றின்பத்தின் மூலம் பேரின்பம் காணலாம் எனக்கூறியதை ஆராயும்போது அதிலுள்ள பெரிய நியாயம் புலப்படுகிறது பெரும்பான்மையாக உள்ள சாமான்ய மக்களுக்கு சிற்றின்பம்–பேரின்பம் ஒன்றாகவே இருக்கிறது. பேரின்ப தியானம், முக்தி மற்றும் மோட்சம் போன்றவைகளைப்பற்றி அவர்களுக்கு தெரியாது. தெரியவேண்டிய அவசியம் இருக்கிறதா? என்பதை இத்துறை மேதைகள் சொல்லட்டும்.

## பலதர மனிதர்களின் செயல்பாடுகள்

காமத்தின் பொருட்டு சில குறிப்பிட்டப் பிரிவு மனிதர்களைத் தொடர்புபடுத்திப் பார்க்கையில் சில வினோதங்கள் தெரிகின்றன. குள்ளம், குண்டு, தொப்பை, வலுக்கைத்தலையர்கள், நரை,

அவலட்சனங்கள் போன்றோர் தங்களின் குறைகளை மறைப்பதற்காக பல குணதினுசுகளில் செயல்படுகிறார்கள். இவர்களில் வலுக்கையர்கள் காமப் புணர்ச்சிக்கு மிகுதியான ஆவல் உள்ளவர்களாக இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. இவ்வாறானக் குறைகள் உள்ளவர்கள் மிகவும் மனம் புழுங்கி இருப்பவர்களாக தெரிகிறார்கள். இருப்பினும் அதை வெளிக்காட்டிக்கொள்வதைக் காணமுடியாது. கிடைத்ததை இருப்பதை இவ்வளவுதான் தங்களுக்கு உரியது என்ற மனநிலைகளோடு மனிதர்கள் இருக்க இயலாததற்கு பெரிய அடிப்படைக் காரணம் காமம் என்ற ஒன்று இருந்து கொண்டிருப்பதுதான். மேற்கூறியக் குறை உள்ளவர்கள் தங்கள் மனைவியருடன் வெளியே இருக்கும்போது மற்ற மனிதர்களுக்கு மத்தியில் இவர்கள் செய்யும் வினோதங்கள் வித்தியாசமாக இருக்கிறது. கூடுதலான அன்புச்செயல்களுடன் மனஅழுத்தம் மற்றும் படபடப்பு உள்ளவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

வயது அதிகம் ஆகிக்கொண்டிருக்கும் காலங்களில்தான் காமத்தை மிஞ்சிய செல்வத்தின்பால் ஈர்ப்பு சற்று அதிகமாகிறது. அதுவரையில் பொருள் ஈட்டுவதில் அயராது உழைத்து வந்தாலும் காமத்திலான நாட்டம் கூடவே வந்துகொண்டிருக்கும்.

## இளமைத் தோற்றத்தில் மட்டுமே விருப்பம்

இளநரை எனும் இயற்கைகுறைபோக வயது கூடுகிறவர்களுக்கு நரை எனும் வெள்ளைமுடி ஏற்படுவது உடற்கூற்றின் உண்மைத் தன்மை. இந்தத்தோற்றத்தை இன்றைய இரசாயன உலக மனிதர்கள் எளிதில் ஏற்றுக்கொள்வதில்லை. இத்தோற்றம் தங்களைத் தன்னம்பிக்கை இழக்கவைத்துவிடுமோ என எண்ணுகிறார்கள். இருப்பினும் இதைவிட நரைத்தோற்றத்தை தெரியவிடாமல் செய்வதற்கான முக்கியக்காரணம் ஒன்றுள்ளது அது இவர்கள் அதிக காலத்திற்கு இளமைத்தோற்றத்துடன். இருக்க

விரும்புவதே. இந்த இளமை தோற்றத்திற்கான மிகுந்த அவசியத்தை அறியாதவர்கள் நம்மில் யாரும் இருக்கமாட்டார்கள். இதற்காக வகைவகையான நிறம் மாற்றும் இரசாயன, இயற்கை கலவைகள், பவுடர்கள் சந்தையில் சிந்து பாடிக்கொண்டிருக்கின்றன. இன்றைய மாக்கெட்டில் அழகு சாதனப்பொருட்கள் விற்பனையில் முடிகளின் நிறமாற்றிகள் முதன்மையானவை.

அடுத்தப்படியாக சேவிங் எனும் முகச்சவரத்தை எடுத்துக்கொள்வோம். கத்தி, பிளேடு போன்ற இத்யாதிகள் கண்டுபிடிக்கப்படாத நாட்களில் இக்கஷ்டத்தை அதிகமான அளவில் செய்யவேண்டியது இல்லாமலிருந்திருக்கும். தேடலில் உயர்ந்து வந்தபோது ஆண் முகத்தில் முளைக்கும் முடியை நீக்குவது அவசியமெனக் கருதினார்கள். கத்திபோல் தீட்டப்பட்ட கற்கள், மரப்பட்டைகள், ஓலைகள் போன்றவற்றை வைத்து தேவையற்றப் பகுதிகளில் முக்கியமாக முகம் மற்றும் இடையூறு தரும் இடங்களிலுள்ள முடிகளைச் சிரமப்பட்டு நீக்கியிருக்கவேண்டும். பின்னர் வயோதிகத் தோற்றம் தரும் முகநரையை மழித்திருப்பர், அதன்பிறகு பலர் கூட்டமாக, நெருக்கமாக, வெப்பப்பகுதிகளில் வாழ்ந்திருந்ததால் புழுக்கம், அரிப்பு, அழுக்கு சேர்வது, தோல்நோய்கள், கொடும் தோற்றம்-நாற்றம் ஆகியவற்றுடன் முத்தத்தடுப்பு போன்றவைகளுக்கும் மேற்படி முகமுடி காரணமாவதால் அவற்றை நீக்குவதற்குறியச் செயல்களை வாலிபப் பிராயத்திலிருந்தே செய்துவந்திருக்கலாம்.

இதன் தேவைகள் அதிகமாகி புதிய உபகரணங்களுக்காக உழைத்தபோது, கத்திகள், அதன்பிறகு பிளேடுகள் உருவாக்கப்பட்டிருக்கும். இவ்வாறாக உருவாக ஆரம்பித்தப் புது வரவுகளால் இன்றைய முகச்சவர உபகரணங்களின் ஆயிரம் அணிவகுப்பை அறியாத ஆண்மக்கள் இருக்கவியலாது.

## உடலிலுள்ள முடிகளினால் பலம்

சீக்கிய மதத்தில் முகச்சவரம் தடைசெய்யப்பட்ட ஒன்று. அதற்கொரு அனுபவப்பூர்வமான காரணமிருப்பதாக அனுபவசாலிகள் கூறுகிறார்கள். உடலில் இருக்கும் உரோமத்தின் அளவிற்கு உடல்வலு கூடியிருக்கும் என அக்காலந் தொட்டு இக்காலம் வரை சிலரால் பலமாக நம்பப்படுகிறது. பைபிளில் வரும் சிம்சோனின் கதை இதற்கு ஆதாரமாக விளங்குகிறது. மகாபலம் பொருந்திய சிம்சோன் என்பவர் வாழ்ந்து வந்ததாகவும், அவருடைய மொத்த பலத்தின் இருப்பிடக் கேந்திரம் அவருடைய வெட்டப்படாமலிருக்கும் தடைமுடியில் இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த ரகசியம் தெரியாததால் அவருடைய தீய எதிரிகள் எவ்வளவோ முயன்றும் சிம்சோனை வெற்றிக்கொள்ள முடியவில்லை. ஒருமுறை எதிரிகள் எப்படியோ அவரின் கை, கால்களை சங்கிலிகளால் கட்டி ஒரு பெரும் மண்டபத்தின் நான்கு தூண்களில் கட்டிவிட்டனர். சிம்சோன் தன் முழு பலத்தையும் பிரயோகித்து அம்மண்டபத்தையே இழுத்து இடித்து சாய்த்துவிட்டார்.

இறுதியாக அவரைக்கொல்லச் சதித்திட்டம் தீட்டி அவருடைய மனைவியைக் கொண்டு காரியம் சாதிக்கின்றனர். தங்களின் வழிக்கு அவரின் மனைவியை ஒருவழியாகக் கொண்டுவந்துவிட்டனர் எதிரிகள்– பலஇடங்களில் நடப்பதுபோல்! அந்த அயோக்கிய மனைவியும் அவர்களுக்கு உடன்பட்டு சிம்சோனிடம் கெஞ்சி–கூத்தாடி அவருடைய மகாபலத்தின் ரகசியத்தை கேட்டறிந்தாள். 'பெண்ணிடம் சொல்லக் கூடாதது–ரகசியம்' என யாரோ விளையாட்டாகச் சொன்னதுஇங்கு வினையாகிப்போனது. சிம்சோன் தூங்கும்போது அவருடைய தலைமுடியை மனைவி வெட்டியெடுத்து விடுகிறாள். எழுந்து பார்த்த சிம்சோன் தலைமுடி வெட்டப்பட்டிருந்ததால் அழுது–புரண்டு அரற்றி–நொந்து நொடித்துப்போனார். எதிரிகள் வீழ்த்தி கொன்றுபோட்டார்கள்.

இம்மாதிரி மனைவியர்களாக இருக்கும் சில கொடும்பெண்களால் சாமானியர்களிலிருந்து சரித்திரம் படைத்தவர்கள் வரை பலர் பலவாறு துன்பப்பட்டிருப்பதாக வரலாறு உள்ளது. உலக புகழ்பெற்ற குங்பூ மன்னன் புரூஸ்லீ அவரது மனைவியால் விஷம் வைத்துக் கொல்லப்பட்டார் எனக் கூறுவதுண்டு. அரிஸ்டாட்டிலின் கொடுமைக்கார மனைவி அவரை மிகக் கேவலமாக நடத்தி பலமுறை முறம் போன்றப் பொருளால் அடித்து விரட்டியதாக எப்போதோ படித்து நினைவுக்கு வருகிறது.

இப்போது முகச்சவரமென்பது ஒவ்வொரு நாளில் காலைக் கடமையாகிப் போனது இன்றைய மனிதர்களுக்கு. அதிலும் குறிப்பாக முகத்தில் நரைவந்தவர்கள் காலையில் முதல்வேலையாக முகத்தை மழித்து வெள்ளையை நீக்கிவிட்டுதான் மற்றவேலைகளைப் பார்க்கக்கூடும். அவ்வளவு ஆசை இளமையாகப் பொய் தோற்றமளிப்பதற்கு. இப்படியாக அது இன்றைய நடைமுறைச் சமுதாய சட்டமாகி சில பணிகளில் தினசரிக் கடமையாகி, உயர்வு, தூய்மை, மற்றும் ஒழுக்கத் தோற்றத்திற்கு முகச்சவரம் என்பது அவசியமென்றாகிப் போனது.

இஸ்லாமிய மதத்தில் முகச்சவரம் அவ்வளவாக ஆதரிக்கப்படவில்லை. பெரும்பாலான முகமதியர்கள் நீண்ட தாடி வைத்திருப்பவர்களாக இருக்கின்றனர். அக்காலத்து யூதர்களும் இயேசுகிறிஸ்துவும் நீண்ட தாடியுடனேயே தோற்றமளிப்பதாகச் செய்திருக்கிறார்கள். குளிர்பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு முகத்தில் முடிகளின் அவசியத்தைப்பற்றித் தெரியும்.

நல்லவேளையாக விலங்குகள் தாங்களாக முகச்சவரம், முடிவெட்டிக்கொள்வது போன்றவற்றைச் செய்வதில்லை. ஆண்சிங்கம் தன் தாடியை வெட்டிக்கொண்டால் அது அசிங்கமாகி ஆணும்–பெண்ணுமற்ற இரண்டுங்கெட்டான் சிங்கமாகியிருக்கும்.

குதிரைகளுக்கு முடிவெட்டுவது, ஆடுகளிலிருந்து உரோமம் வெட்டுவது போன்றவை கம்பளி செய்வது போன்ற நமது வசதிக்காகத்தானே ஒழிய அது அவைகளுக்குத் தொல்லைகளே. குளிரைத் தாங்குவதற்கு குளிர் பிரதேச ஆடுகளுக்கு உரோமம் கூடுதலாக இருப்பது இயற்கையின் அன்பளிப்பு. அதை மனிதன் தன் தேவைக்காகப் பிடுங்கிக் கொள்வதாகவே தோன்றுகிறது. வெப்பப் பிரதேசங்களில் உள்ள செம்மறி ஆடுகள் இப்பகுதிகளுக்காக உருவானவையாக இருக்க வாய்ப்பில்லை. மனிதர்கள் அவற்றை இனப்பெருக்கம் செய்து அதிகமாக இங்கு வளர்க்கிறார்கள். ஆடுகள், விலங்குகள் மாமிசத்திற்காகக் கொல்லப்படும்போது அவற்றின் தோல்களை எவ்வகையில் வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்வதில் தவறில்லை.

## விலங்குகள் – மனிதர்கள் முகம், குணம் ஒன்றுமை

விலங்குகளைப் பற்றி பேசும்போது அவைகளுக்கும் மனிதர்களுக்கும் அநேக ஒற்றுமைகளிருப்பது அநேகருக்கு தெரியாமலிருக்கலாம். பரிணாம மாறுபாட்டு வளர்ச்சியில் எண்ணற்ற விலங்குகளின் தோன்றலுக்கு பின் உருவானது மனித இனம் என்பது கூற்று. எனவே அநேக மனிதர்களிடம் இவ்விலங்குகளின் தோற்றமும், குணமும் நன்றாகத் தெரிகிறது. ஒவ்வொரு மனித முகமும், குணமும் கிட்டத்தட்ட ஏதாவதொரு விலங்கின் முகம் மற்றும் குணத்தின் சாயலில் இருப்பதைக் கூர்ந்து ஆய்ந்தால் உணரமுடியும். சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விலங்கினங்களின் கலவையாக இவை இருக்கலாம். இந்த விலங்குகளில் அதிகப்படியாக, நமக்கு சற்று முந்தின முன்னோரான நாய், நரி, கழுதை, எருமை, குரங்கு ஆகியவற்றின் முகங்கள் அதிகமான மனிதர்களிடம் இருப்பதென்பது சாத்தியமான உண்மை.

சிலருக்கு சிங்கம், கரடி, ஓநாய், கொசு போன்றவைகளின் குணாதியசங்கள், முகத்தோற்றங்கள் பொருந்தும். குரங்குகளாக,

அதற்கடுத்தபடியாக நரிகளாக எண்ணற்ற மனிதர்கள் இப்புவியில் உள்ளனர். சிலர் எருமைகள், பன்றிகள், கழுதைகளாக உள்ளனர். இவைகள் இங்கு நகைப்புக்காகக் கூறப்படவில்லை. உண்மையிலேயே மனிதர்களின் முன்னோர்களாகிய இவ்விலங்குகளின் குணங்கள் தோற்றங்கள் பின்னோர்களுக்கு இருப்பது இயற்கையின் சாத்தியம்.

## ஆணாதிக்கம்

இப்படியான மனிதர்கள் ஒவ்வொருநாளும் வாழ்க்கையில் அல்லல் படுகிறவர்களாக இருப்பது மனதுக்கு வேதனை தருகிறது. இதற்குக் காரணம் இவர்களன்றி வேறு உயிரினங்கள் இல்லை. ஆண்பாலை பெண்பாலும், பெண்பாலை ஆண்பாலும் விரும்புவது இயற்கையின் சித்தாந்தம்; என்றபோதிலும் பெருவாரியாகப் பார்க்கும்போது ஆண்களே பெண்களை துரத்தி, விரட்டி எல்லாம் செய்வதுபோல ஒரு தோற்றம் இருக்கிறது. இக்காலத்தில் நிலைமை மாறிஇருப்பது ஓரளவுக்கு உண்மையென்ற போதிலும், இங்கு ஆண்களின் அதிகளவு ஆதிக்கம் எப்படி வந்திருக்க வேண்டும் என்பதை ஆராய்ந்தறிவது இக்கணத்தேவையாகிறது.

## ஆண், பெண் வகைகளின் இயற்கையானத் தனித்தன்மைகள்

பெரும்பாலான விலங்குவகைகளில் பெண்விலங்கு இனப்பெருக்கம் செய்து தன் குழந்தைகளுக்குப் பாலூட்டி, உணவளித்து, பராமரித்து வளர்த்து வரும் செயல்களைச் செய்து வருகின்றது. ஆண்இனம் வெளியில் சென்று வேட்டையாடி தன் பாரியாளுக்கு, குழந்தைகளுக்கு உணவு கொண்டுவருவதோடு எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும் முக்கிய வேலைகளைச் செய்துவருகிறது.

இதைத்தான் ஆரம்பகால மனிதர்கள் செய்து வந்தார்கள். அதிர்ஷ்டவசமாக இன்றைக்கும் சிலபல குடும்பங்களில் இம்முறை

இருந்துவருகிறது. வழக்கமாக மற்ற மிருக இனங்களிலும் மனித இனத்திலும் ஆண்வகைகள் சராசரி கணக்கில் அதிக உயரம், பருமன், எடை, பலம் கொண்டதாகவும், பெண்வகைகளைவிட அதிகப்படியான உருவ கூடுதல்கள் கொண்டதாகவும் விளங்குகின்றன. எனவே, இவை வேட்டையாடுதல், உணவு கொண்டுவருதல், காத்தல் மற்றும் தன் வாரிசுகளை உருவாக்குதல் போன்ற வேலைகளைச் செய்து வருகின்றன. தங்கள் புஜபராக்கிரமத்தினால் கூடிய வலுவுடனான வீரத்தைக்கொண்டு பெண்வகைகளை அடக்கி ஆண்டு வந்துள்ளன. தங்களுக்கு விருப்பம் வரும் தேவையான நேரங்களில் தங்களின் முழு உரிமையுள்ளதும், உரிமையில்லாததுமான பெண் இனங்களுடன் புணர்ச்சி செய்வது ஆண் விலங்குகளின் வழக்கமாக இருக்கிறது. இதற்கு போட்டிகள் ஏற்படும்போது நிகழும் பலத்த சண்டைகளில் மிகுந்த வீரமுள்ள விலங்கு வெற்றிபெற்று தன்தேவையைப் பூர்த்தி செய்துகொள்கிறது.

## ஆண் மனிதர்களின் செய்கைகள்

விலங்குகளிலிருந்து உருமாறிய மனித இனமும் ஆதிகாலத்திலிருந்து இதைத்தான் செய்துவருகிறது. ஆதிமனிதன் தொடங்கி இன்றுவரையில் இதற்கானத் தேவைகளுக்காகத் தங்களை மெருகேற்றி, போட்டி ஏற்பட்ட நிலையில் பெண்களைக் கவருவதற்கான அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அங்கே சண்டைகள், விளையாட்டு, நடனம், பாட்டு, இசை, ஓவியம், சிற்பம், கவிதை, கதை என எல்லாவற்றையும் ஆண்கள் ஏற்படுத்தி பெண்களை வர்ணிக்கத் தொடங்கி, நடைமுறையாகி வழக்கமாகி வாழ்க்கையாகி விட்டது.

ஆண்மனிதர்கள் பெண்மனுசிகளை யார் அதிகமாகக் கவரமுடியும் என்பதில் வெற்றி காணவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. தங்கள் உணர்வுகளின் மிகுந்த உந்துதலினால் பெண்களே அழகு, அதிசயம், சிறந்தவர்கள், பணம், மனமுள்ளவர்கள்,

தெய்வங்கள் என எவ்வளவு தூக்கி உயர்த்த முடியமோ அவ்வளவு தூரத்திற்கு உயர்த்தி புகழ்ந்துள்ளனர். இதன் ஆரம்ப அடிப்படை காமத்தின் காமமேயன்றி வேறொன்றுமில்லை. பின்னர் அது இயல்பாகி வழக்கமாகி மனித இனத்தில் மட்டும் பெண்களே அழகுக் கூடுதலாக உள்ளவரென ஆகிப்போனார்கள். அன்றிலிருந்து இன்றுவரை பெண்களை சுயமாகச் சிந்திக்க ஆண்கள் அனுமதிக்கவில்லை. இன்றைக்கு வளர்ந்துவிட்டதாகச் சொல்லும் பெண்கள் பேசுவது, எழுதுவது, செய்வதெல்லாமே ஆண் இனம் ஆயிரமாயிரம் ஆண்டுகாலம் அவர்களுக்குள் விதைத்துவைத்த விதைகளின் விளைச்சலாக வரும் ஆணின் சிந்தனைகளே! பெரும்பாலும் ஆண் மற்றொரு ஆணை காமஉணர்வு அடிப்படையில் புகழவேண்டிய அவசியம் இல்லை. பெண் சுகத்தேவைக்காகப் பெண்களைப் பற்றி பாட, புகழ, அர்ச்சனை செய்ய வேண்டியது சிந்திக்கத்தெரிந்த சமுதாய விலங்கினமான மனிதனுக்கு இயல்பாகி இயற்கையாகிய ஒன்றானது.

## பெண்களின் வலுகுறைவு

உண்மையில் ஆரம்ப நாட்களிலேயே பெண்களுக்குச் சமமான வலுவிருந்திருந்தால் அவர்களும் ஆண்களைப்போல் செயல்பட்டிருப்பார்கள். ஆண்களைப் புகழ்ந்துபாடி ஆண்கள் செய்த அத்தனையையும் செய்து ஆண்களே அழகு என சொல்லியிருப்பார்கள். ஆண்களைப்போல் எண்ணற்றவற்றைக் கண்டுபிடித்திருப்பார்கள், உருவாக்கியிருப்பார்கள், உலகுக்கு பல அதிசயங்களைக் கொடுத்த மேதைகளாகி இருப்பர். ஆனால் இயற்கையின் கொடுப்பினையில் அவ்வாறாகப் பெண்கள் செயல்பட முடியவில்லை. உலகுக்கு வழங்கப்பட்டத் தொண்ணூற்றொன்பது சதவீதத்திற்கு மேற்பட்ட புதிய வரவுகள் அனைத்தும் ஆண்களாலேயே வழங்கப்பட்டன, வழங்கப்படுகின்றன.

இதுவரையில் பலநூறாயிரம் கோடிகளாக வாழ்ந்திருந்த, வாழ்ந்துகொண்டிருக்கின்ற பெண் இனத்தால் மேற்கூறியதில் குறிப்பிடும்படியாக இல்லை. யாராவது லட்சம் கோடியில் ஒருவர் சிறிதாக ஏதேனும் செய்துவிட்டாலும்கூட பெரும் எக்காளம் கேட்கிறது. இதற்கு காரணம் ஆரம்பநாட்களிலிருந்தே ஆணாதிக்கம் நிலைபெற்றிருந்தது என்பதைத்தான் சொல்லவேண்டும். இது இயற்கையின் தத்துவமா அல்லது செயற்கையாக மேற்கொள்ளப்பட்டதா எனக்கூற இயலவில்லை.

## பெண் விருப்பக்கவர்ச்சியில் ஆணின் சிறப்புச் செயல்கள்

பெண்ணுரிமைக்காக சில ஆண்கள் போராட, கவிபாட, சீர்திருத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். இப்படி செய்தவர்களில் பலர் தங்களைச் சுற்றி பல கூடுதல் பெண்களைக் கவருவதற்காக கூட இருந்திருக்கலாம். இப்போதும் அப்படியானச் செயல்கள் நடந்துதான்வருகின்றன. பின்னர்தான் உலகெங்குமுள்ள பெண்கள் தங்களுக்கும் இப்படிப்பட்ட உரிமைகள் உள்ளதென்பதை உணர ஆரம்பித்தார்கள். இப்போது போராடுகிறார்கள்; இருப்பினும் அவர்களின் மூளைகளுடைய செல்களின் ஒவ்வொரு அணுவிலும் ஏற்றப்பட்டிருப்பது பலலட்சம் ஆண்டுகால ஆண்களுடைய சிந்தனைகள், கருத்துகள், விருப்பங்கள். இன்னமும் முழுமையாக ஒரு பெண் அந்தளவு, மூளை சுதந்திரப் பெண்ணாக சிந்தித்ததாக ஏற்க இயலவில்லை. எல்லா சிந்தனைகளும் பரம்பரை பரம்பரையாக மனிதவரலாற்றில் வந்த ஆண்களால் உருவாக்கப்பட்டதால் அவற்றின் பக்கத்தோன்றுதலாகத் தெரிகிறதே தவிர அசல் இன்னும் காணக்கிடைக்கவில்லை.

ஆண்கள் எப்போதும் கெட்டிக்காரர்களாகத் திகழ்கிறார்கள்; ஏமாற்றுவதிலும் வல்லவர்கள், இவ்வாண்கள் பெண்களை மட்டுமே அழகு என்று வர்ணித்து, அந்த அழகையே தங்களின் மகிழ்வுக்காக,

பெண்களை வைத்தே பராமரித்து அலங்கரித்துவரச் செய்துவிட்டனர். மேலும் அவர்களின் அழகைப்பற்றி அவர்களையே பெருமையாகப் பேசவைத்து மொத்தப் பெண்ணினத்தையும் சிந்திக்க விடாமல் தடுத்து செய்துவிட்டனர். ஆண்களுக்கு பெண்கள் அழகு என்றால், இயற்கை விதியின் அடிப்படையில், அவசியத்தில் பெண்களுக்கு ஆண்கள்தானே அழகாகத் தோன்றியிருக்க வேண்டும். ஆனால் இதற்கு மாறாக பெண்களுக்கு பெண்களே அழகானவர்கள் என எண்ணவைத்ததே இந்த ஆணினம்தான். திரும்ப திரும்ப சொல்லி அடிமேல் அடியடித்து தங்களின் கருத்தை, ருசியை பெண்ணினத்திடம் திணித்து அதையே அவர்களிடம் மறு சிந்தனையில்லாமல் முழுமையாக ஏற்கவைத்துவிட்டது ஆணாதிக்கத்தின் வெற்றிச்செயல்.

பெண்கள் முன்னரே சிந்தித்திருந்தால் அவர்களுக்குள்ளும் பெரும் தத்துவஞானிகள், விஞ்ஞானிகள், மேதைகள், கவிகள், இசைஞானிகள் எனத் தோன்றியிருக்கக்கூடும். இது எப்போது ஏற்பட்டிருக்கலாம் என ஆராயலாம். ஆண்கள் பெண்களின் மேலுள்ள வெளிப்படையான ஆர்வத்தால் செயல்பட்டபோது கிடைத்த தூண்டுதல்கள், தேவைகளால் ஆண்களுக்குள் அறிவுசிந்தனை ஏற்பட்டது. அவ்வண்ணமே பெண்கள் அவர்களின் நேரம் மற்றும் கவனத்தை கபளிகரம் செய்யும் தங்கள் சுய அலங்கார மோகத்தைக் குறைத்து தங்கள் தேவைகளை வெளிப்படையாகத் தெரிவித்து அதற்கானத் தேவைகளைக் கைகொண்டிருந்தால் அவர்களுக் குள்ளும் ஒருவேளை ஆண்களுக்கு இணையான அறிவுஜீவிகள் தோன்றியிருக்கக்கூடும்.

### ஒரு பிரிவு மட்டுமா அழகு

ஆனால் ஆண்கள் தங்கள் மிக முக்கிய தேவைக்காக ‘பெண்களை மட்டுமே அழகு’ என நம்பவைத்து அவர்களை அலங்கரித்துக்கொள்வதில் மட்டுமே அதிகக் கவனம் செலுத்துமாறு செய்து சிந்திக்கவிடாமல் சூழ்ச்சி செய்துவைத்திருக்கிறார்கள். இதை

ஆண்கள் திட்டமிட்டுச் செய்தார்கள் என்பதற்கில்லை. இயற்கையிலேயே அவர்களின் உடல்பல, மனபல ஆதிக்கம் இப்படியானச் சூழலை வகுத்துவிட்டது. மற்ற மிருகங்களிலும் இவ்வாறே காணப்படினும் சிந்திக்கும் திறன் கொடுக்கப்பட்ட ஆறறிவுள்ள மனித இனத்திலும் இறுதிவரை இப்படித்தான் இருக்கவேண்டும் என்பதை ஏற்பதற்கில்லை. அதிகப்படியான செயற்கை அழகுக்காக அதிகக் கவனம் செலுத்த, ஆரம்பித்த இந்த இனம், அறிவில் நிச்சயமாக உறுதியான ஆழமான கவனம் மற்றும் ஈடுபாடுகொள்ள இயலாது என்பதை ஆணித்தரமாகக் கூற இயலும்.

ஒருவேளை பேச்சுக்காக ஆண்கள் பெண்களைவிட தாங்களே அழகு என கருதி தங்களை அழகுப்படுத்திக் கொள்வதில் காலம் கடத்தியிருந்தால் ஆண்களுக்குள்ளும் இன்றையவரையில் இந்தளவிற்கு மேதைத்தனம் கொண்டவர்கள் இருந்திருக்க வாய்ப்பேஇல்லை. ஆனும் ஆங்காங்கே பூச்சூடி, மை, பவுடர், கிரீம், பலதினுசு அணிகலன்கள், கசாமுசா ஆடைகள் என இடைப்பட்டக் காலம் வரைக்குமே வளர்ச்சி வந்திருக்கும். இன்றைய அறிவியல் இயந்திரங்கள், மின்னணு இயந்திரப்புரட்சிகள் எதுவும் கிட்டியிருக்காது, அதிஷ்டவசமாக அப்படி நடவாமல் போனது இன்றைய மக்களின் பேரதிஷ்டம்–பெண்ணினத்திற்கும் சேர்த்தே !

பெண்கள் இவ்விடயத்தில் ஆண்களுக்கு நிகராக இல்லாமல் போனதற்கு ஒரு முக்கியமான நியாயமானக் காரணம் அவர்களின்–உடலமைப்பு மற்றும் அதன் மற்றைய இனப்பெருக்கம் சம்மந்தமான செயல்பாடுகள் என்று சொல்வதில் தவறில்லை. இயற்கையின் படைப்பில் விலங்கின வகைகளின் ஒவ்வொரு பிரிவிலும் ஆணினமே கூடுதலானத் தோற்றப்பொலிவு பெற்றுவிளங்குகின்றன. சிங்கம், யானை, மயில், நாய், காளை, சேவல், மான், ஆடு, குதிரை ... என அடுக்கிக் கொண்டே போகலாம். ஆண்சிங்கத்தின் பிடரி, ஆண்யானையின் தந்தம், ஆண்மயிலின் தோகை, சேவலின்

கொண்டை, காளையின் திமில், ஆண்மானின் பெரும்கொம்பு என கூடுதல் தோற்றப்பொலிவுகள் ஆணினங்களில் உள்ளன. மேலும் ஆணிவிலங்குகளே கம்பீரமாகவும், வீரம், வேகம், சுறுசுறுப்பு, கூடுதல் அழகுமிக்கதாயும் விளங்குகின்றன. மனிதர்களில் மட்டும் வித்தியாசமாகப் பெண்பிரிவு மட்டுமே அழகு என்று சொல்லப்படுவதை முக்கியமாக இந்தப் பெண்கள் எப்படி நம்புகிறார்கள். இது அவர்களுக்கு ஆண்களால் திணிக்கப்பட்டதேயன்றி வேறொன்றுமில்லை.

## நிர்வாணத்தில் ஒப்பிட்டுப் பார்த்தல்

சராசரி ஆணும் பெண்ணும் எவ்வித அலங்காரமும் இல்லாமல் நிர்வாணமாய் பார்க்கப்படுகையில் அனைத்து அமைப்புகளிலும் அவர்களில் யார் கூடுதலாகி உள்ளனர் என்பதை எவரும் அறியமுடியும். உண்மையில் பொதுவாக ஆண்களின் உடலமைப்பில் கூடுதல் கவர்ச்சி உள்ளதாக இருக்கவேண்டும். பெண்ணுக்கு கூடுதலாக மார்பகங்களின் பெருக்கம் இருக்கும்போது ஆணுக்கு கூடுதலாக ஆண் உறுப்புகள் அதைச்சார்ந்த பகுதி வளங்குகிறது. கிறிஸ்துவ மார்க்க பெந்தகோஸ்தே பிரிவில் அலங்காரம் செய்துகொள்ளாத பெண்கள் எப்படி தோற்றமளிக்கிறார்கள் என்பதை உள்ளார்ந்தமாக, உண்மையாக உணர்ந்து பார்க்கவேண்டும், ஒரே தோற்றநிலையிலுள்ள இரண்டு பெண்களில் ஒருவரை கூடுதல் அலங்காரம் செய்து மற்றொரு அலங்காரம் செய்யப்படாதப் பெண்ணுடன் நிறுத்தி அவர்களுக்குள் ஏற்படும் வேற்றுமை எங்கிருந்து வருகிறது என்பதை உணரலாம்.

இதைச் சொல்வதன் மூலம் பெண்கள் அழகில்லை என்று சொல்வதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஏனெனில் பெண்களுக்கு மிகமிகப்பிடித்தது அவர்களை அழகு என்று சொல்வதுதான். அதைச்சொல்லித்தான் அவர்களும் இவர்களும் காலகாலமாக ஏமாந்து, ஏமாற்றி வருகிறார்கள், சிந்திப்பதிலிருந்து விலகிப்போகிறார்கள். பாடி

(BODY) என்றொரு ஆங்கிலப்படம் சில பத்தாண்டுகளுக்கு முன்பு வந்திருந்தது. அது அறிவியலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டத் திரைப்படமாக விளங்கியது. அதில் சிறுவயதிலிருந்து வயதானவர் வரை பலரை வரிசையாக எந்த ஆடை அணிகலன்களும் இல்லாமல் ஆண்களை ஒருபுறமும், பெண்களை ஒருபுறமும் நிற்க வைத்திருந்த காட்சி ஒன்று இருந்தது. அதில் பலநாடுகளைச் சார்ந்த பலநிற ஆண், பெண்கள் தோன்றியிருந்தார்கள். அக்காட்சியை ஊன்றிக் கவனித்தவர்களுக்கு உண்மையில் பின்வருமாறுதான் தோன்றியிருக்கும். உடற்பொழிவு, கம்பீரம், உயரம், நரம்புகள்–சதைகளின் பிரிவுகள் இவற்றை வைத்துப் பார்க்கப்பட்டபோது ஆண் வரிசையினர் சற்று கூடுதல் ஈர்ப்புடன் திரைப்படம் பார்த்த ஆண்களுக்கே தோன்றியதை பலர் பரிமாறிக்கொண்டனர்.

## மேன்மைப் பெண்கள்

எந்தஒரு சமுதாயத்திற்கும் ஆண்களும் பெண்களும் அவசியமானவர்கள். இருபாலருமே, எடை, உயரம் போன்றவைகளில் வித்தியாசங்கள் இருந்தாலும் அவற்றை இயற்கை நியதியாகக் கருதி அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சமஅழகு, அறிவுடன் திகழ்ந்தால் இரு பிரிவிலும் ஏறக்குறைய சம அளவிலான சிறப்பு மனிதர்கள் இருக்கக்கூடும். எனவே பெண்கள் இனிவரும் காலங்களில் தங்கள் அழகிலேயே, அழகுசார்ந்த செயல்களிலேயே அதிக கவனம் செலுத்துவதைவிடுத்து மெய்யான மேன்மைப்பெண்களாக விளங்குவதற்கு மனமாற்றம் பெறவேண்டும். புதுமைப்பெண் என்பதைவிட 'மேன்மைப்பெண்' என்பதே சிறப்புக்குறியதாகத் தெரிகிறது. பெண்கள் எதிலும் வருங்காலங்களில் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபனம் செய்யவேண்டும். இதற்கான வாய்ப்புகள் இந்நாட்களில் எங்கெங்கும் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. உடல், ஆடை அலங்காரத்தைக்காட்டிலும் அறிவு அலங்காரத்தில் சிறப்புப் பெற்று அறிவு அழகிகள் வளம்வர வரம் பெறுங்கள்.

பலகோடிப் பெண்களில் எங்கேயோ, எவரோ ஒருவர் எதையாவது சாதித்துவிட்டால், அதையே பலகாலம் பெருமை பேசிக்கொண்டிருப்பதை விடுத்து பத்து, நூறு பேர்களில் ஒரு சாதனையாளர் உருவாகுமாறு நிலைமையை மாற்றுங்கள். பலரால் விமர்சிக்கப்படுவதுபோல் ஏமாற்றிக் கொண்டிருக்கும் அழகுப் பதுமைகள் என்கிற வார்த்தைகளை உடைத்தெறியுங்கள்..

ஆண்கள் தங்கள் தேவைகளுக்காகவே பெண்களை அழகு என்று சொன்னார்கள், சொல்கிறார்கள், சொல்லப் போகிறார்களேயொழிய அது பெண்களின் தேவைகளுக்காக, முன்னேற்றத்திற்காகச் சொல்லப்படவில்லை. பெண்கள் தங்களை அதிகமாக அழகுப்படுத்திக்கொள்வதிலேயே யுகத்திற்கும் கவனம் செலுத்திக்கொண்டிருக்கும் செயலை விட்டொழியுங்கள். இன்னும் சொல்லப்போனால் ஆண்கள் தங்களுக்கு உரிமையான பெண்களைவிட உரிமையில்லாத பெண்களிடமே அதிகளவு வார்த்தைகளால் அழகி, பேரழகி என ஆராதிக்கிறார்கள்.

பெண்கள் சரியான, அறிவான பாதையில் செல்ல ஆரம்பித்துவிட்டால் ஆண்கள் வெகு சீக்கிரமாக சில நூற்றாண்டுகள் மிகப்பின்னுக்கு தள்ளப்பட்டுவிடுவார்கள். ஏனெனில் பெண்களிடம் சிலரைத் தவிர ஆண்களிடம் உள்ளதுபோன்ற பெருங்குடிப்பழக்கம், இதர பலவகையான போதைகள், புகைப்பழக்கங்கள், உக்கா, பான்பராக், சூதாட்டம், விபச்சாரத்திற்கு போவது என்று உடலைப்பாழாக்கும் பல சமாச்சாரங்கள் மிகக்குறைவு. இவைகளெல்லாம் நிறைய ஆண்களைத் தொற்றிக்கொண்டு தொற்றுவியாதியாகப் பரவிவருவதால் அவர்களால் அச்சமயங்களில் பெரும் வெற்றியைப் பெற இயலாது. ஒருவேளை ஆண்களுக்கு இப்படியான வியாதிகள் இல்லாமல் இருந்திருந்தால் அவர்கள் இப்போதிருப்பதைவிட சராசரியாக இன்னும் அதிக உடல்பமு, மனவலிமை, முன்னேற்றம் கொண்டவர்களாக ஆகியிருப்பார்கள்.

அதிர்ஷ்டம் எப்போதும் பெண்கள் பக்கம் இருந்துவருவதால் ஆண்கள் நல்ல பழக்கவழக்கங்கள், அதிக உடல் வலிமை இல்லாதவர்களாகி ஓரளவுடன் கூடிய முன்னேற்றத்துடன் மட்டுமே வாழ வேண்டியதாயிருக்கிறது.

எனவே பெண்கள் இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு வெகுவிரைவில் மேன்மைக்கு வந்துவிட முடியும். ஆனால் இதற்கு இந்த பெரும்அலங்கார ஆபத்திலிருந்து அகன்று வரவேண்டும். இது இக்காலப் பெண்களுக்குச் சாத்தியமா என்பது பெரும் கேள்விக்குறியாகித் தொக்கி நிற்கிறது. ஏனெனில் பலலட்சம் ஆண்டுகளாக அவர்களின் செயல்கள் அனைத்திற்கும் ஆண்களால் திணிக்கப்பட்ட கட்டளை, வேண்டுகோள், விருப்பம், அன்பு, அறிவு ஆகிய அனைத்தும் இந்த அலங்காரம், அதனாலானத் தற்காலிக அழகைச் சுற்றியே அமைந்துவிட்டது. மேலும் மாற்றம் நிகழ்ந்தால் அழகு சாதனப்பொருட்களின் விற்பனை வேறு குறைந்து போய்விடும்.

## நிரந்தர மெய்யழகு

உண்மையில் அழகு என்பது இயற்கையாக, நிரந்தரமாக அமையவேண்டும். நல்ல உடல் வாளிப்பாலும், அறிவுத் திறமையினாலும், முகத்தில் பிரகாசம் வரவேண்டும். நீண்டநாள் நீடிக்கும் நல்ல உடல் வாளிப்பிற்கு நல் உணவுகளும், உடல் உழைப்பும் தேவை. செயற்கைப் பூச்சுகளும், அலங்கரிப்புகளும் தரும் அழகு பொய்யானது, மிகத் தற்காலிகமானது, உடலுக்கு கேடு விளைவிக்கக் கூடியது, விரைவில் முதுமைத் தோற்றத்தைத் தரவல்லது. முகத்திற்குப் பூசப்படும் இரசாயனப் பவுடர்கள், கிரீம்கள், முகத்தின் தோலை பாழ்படுத்துவதைப் பலர் அறிந்திருக்கவில்லை. முகத்திலுள்ள வேர்வைத் துவாரங்களை இயற்கையாகச் செயல்பட விடாமல் தொந்தரவு செய்கின்றன. இவற்றையெல்லாம் பெண்கள் உணர்ந்துகொண்டால் எண்ணற்ற ஏமாற்றுக்காரர்கள் ஏமாந்து போவார்கள். இவைகள் நடக்குமா, பொறுத்திருந்து பார்ப்போமே...

# இஸ்லாமிய மதத்தின் சிறப்புகள்

## இறைதூதர்கள்

இயேசு கிறிஸ்துவுக்குப்பின் சுமார் ஐநூறு ஆண்டுகள் கழித்து முகம்மது நபி என்னும் ஒரு தீர்க்கதரிசி தோன்றினார். அக்கால மக்கள் இஸ்லாம் உட்பட பல மதங்களைத் தழுவி நின்றனர். அந்நாளில் இருந்த சில மதங்கள் இப்போது மறைந்து போயிருக்கின்றன. இஸ்லாம் மதத்தின் இறை தூதராக, ஒளி விளக்காக நபி பெருமானார் திகழ்ந்து பல புதுமைகள், சிறப்புகள், அறிவுப்பூர்வமான வாழ்க்கை வழிகளை அம்மதத்தைத் தழுவிய மக்களுக்கு வழங்கினார். இஸ்லாமியர்களின் புனித நூலான குரான் அதற்கு அத்தாட்சியாக விளங்கி வருகிறது.

ஏனைய மதங்களின் இறை தூதர்களோடு நபிபெருமானை ஒப்பிட்டுப் பார்க்கையில் பெரிய வித்தியாசமுள்ளது. இவருடைய கருத்துகள், வழிகாட்டுதல்கள் ஆகியன அறிவுப்பூர்வமாக இருந்து நேற்று, இன்று, நாளை என எக்காலத்தினரும் ஏற்கும் விதத்தில் அமைந்து, அம்மதத்தை தழுவிய மக்களுக்குப் பல நன்மைகளை அருளிக்கொண்டிருக்கின்றன.

கிறித்துவ மதம் கொள்கை, கருத்து வேறுபாடுகளினால் கத்தோலிக்கம், புராட்டஸ்டண்ட் எனும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிந்தது. அதன் பின்னரும் இரண்டாவதாகத் தோன்றிய புராட்டஸ்டண்ட் பிரிவிலிருந்து பலர் மாறுபட்டு பெந்தகோஸ்தே போன்ற வேறு பிரிவுகளைத் தோன்றுவித்தனர். கிறித்தவர்கள் தங்களுக்குள்ளாகவே வழிபாட்டு முறைகள், உருவ வழிபாடுப் பிணக்குகள், மதக் கொள்கைகள் ஆகியவற்றில் வேறுபட்டு இன்று வித்தியாசம் பாராட்டுகின்றனர்.

இயேசு கிறிஸ்து தேவனா, தேவதூதனா அல்லது தேவகுமாரனா என்பதற்கு சாமான்யன் புரிந்துகொள்ளும் சரியான விளக்கம் இல்லை. இயேசுவை தேவன், தேவதூதன், தேவக்குமாரன் என கூறி வணங்கி வருகிறார்கள். தேவன், தேவதூதன், தேவக்குமாரன் ஆகிய மூன்றும் ஒன்றா அல்லது மூவருக்கும் வித்தியாசமிருக்கிறதா என்பதைப் பற்றிய கருத்து முடிவை அவரவர் விருப்பத்திற்கு விட்டுவிடுவோம்.

இஸ்லாம் மதத்தில் ஷியா, சுன்னி . . . . . போன்ற உட்பிரிவுகளுக்குள் தகராறுகள் இருந்தாலும் அவர்களின் கடவுள் கொள்கை வழிபாட்டு முறைகளில் சட்டப்பூர்வ வித்தியாசம் இருப்பதாக அறிய முடியவில்லை, மற்ற மதங்களைவிட இஸ்லாம் பல கூடுதல் சிறப்புகளைக் கொண்டிருப்பதால் இம்மக்கள் எளிதான, மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். மற்ற மதங்களில் இல்லாத பல சிறப்பான நடைமுறைகள் இம்மதத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அவைகளில் சிலவற்றின் சிறப்புகளை, அனுபவரீதியான உண்மைகளை ஆராய்ந்து பார்த்தோமேயானால் அவற்றின் நியாயமானப் பயன்பாடுகள் மற்றவர்களாலும் உணரப்படும்.

## பெற்றோரைப் பேணுதல்

## அனாதைப் பெற்றோர் – முதியோர் மிகக்குறைவு

மானிடர்களின் முக்கியக் கடமையாக பெற்றோர்களைப் பராமரிப்பது எடுத்துரைக்கப்படுகிறது. பெற்று வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தையரை அவர்களின் வயதான காலத்தில் போற்றிப் பராமரித்து நல்ல உணவளித்து, தக்க காலத்தில் நோய்களுக்கு சிகிச்சை செய்து அவர்களின் மனம் மகிழும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது வளர்ந்த மகன்கள், மகள்களின் மனமுவந்த பணியாகக் கொள்ள வேண்டும். வயதானவர்களை அவர்களின் இறுதி காலத்தில் அனாதைகளாக விட்டுவிடாமல் அந்நாட்களில் அவர்களை மகிழ்வுறுமாறு பேணுதலை இஸ்லாம் வழியுறுத்துகிறது. அமமதத்தில்

வயதானவர்கள் தங்கள் குழந்தைகளால் கைவிடப்பட்டு அனாதைகளாக உள்ளவர்களை அதிகமாகக் காணமுடிவதில்லை. ஆனால் மற்ற மதங்களில் இது சாதாரணமாகக் காணக்கிடைப்பதுடன் மேலும் அது நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

இதற்கென எண்ணற்ற முதியோர் இல்லங்கள் நகரங்கள் தோறும் இயங்கி வருகின்றன. மேலும் அனாதை முதியோக்களின் எண்ணிக்கையின் அபரிமித வளர்ச்சியினால் இருக்கிற மையங்கள் போதாமல் போகவே மேலும் திறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு சிலர் சேவை மனப்பான்மையுடன் இதை செய்து வருவது பாராட்டுக்குரியது என்றபோதும் பலர் இதை ஒரு நல்ல வருமானம் தரும் தொழிலாக ஆக்கிவிட்டனர். இரு சமுதாய அவசியமாகிப்போன ஒரு மகாக்கொடுமை. மனிதர்கள், பணத்தோடு, செல்வத்தோடு கட்டிப்புரண்டுக் கருமாதியாகிப் போவதே சரியான வாழ்கை என்பதாக நினைத்து கொண்டிருக்கிறார்கள். பாவம் என்ன செய்வது, உண்மையை அறியாதவர்கள், உண்மையை அறியவும் மனமில்லாமல் மறுத்து மறைகிறார்கள்.

## இளவயதுத் திருமணம்

### மனிதப்பருவங்கள்

இஸ்லாம் மார்க்கம் திருமணங்களை இளம் வயதுகளில் நடத்திக்கொண்டிருப்பதுடன் அதன் அவசியத்தையும் சிறப்புகளையும் விளக்குகிறது. எந்த ஒரு விலங்கினத்திலும் குழந்தைப் பருவம், இளமைப்பருவம், நடுப்பருவம் மற்றும் கிழப்பருவம் என நான்கு நிலைகள் உண்டு. சமுதாய விலங்கான மனித இனத்திற்கும் இதுதான் நியதி. குழந்தைப்பருவம் சுமார் பன்னிரண்டு வயதிற்குள்ளும், இளமைப்பருவம் சுமார் முப்பத்தைந்து வயதிற்குள்ளும், மனித வாழ்க்கை இரண்டு சிறப்பு பெற்றப் பருவங்களை கொண்டிருக்கிறது. அதையடுத்து நீண்ட நடுப்பருவத்தை ஐம்பது அறுபது வயதிற்குள்ளும்

கிழப்பருவத்தை அதற்கு மேலும் தோராயமாக வகை பிரிக்கலாம். இதில் மனிதனுக்கு மனிதன், நாட்டுக்கு நாடு வயதுகளில் ஏற்ற இறக்க வித்தியாசங்கள் இருக்கக் கூடும். நாற்பது வயது கிழவர்களும், எழுபது வயது இளைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்கட்டும்; இன்றைய காலக்கட்டத்தில் அநேகமாக பல மதங்களில் மனிதர்களின் நடுப்பருவத்தில் இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் நடுப்பருவத்தின் நடுவயதுக் காலங்களில் திருமணம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இஸ்லாம் மார்க்கம் வேறு விதமாக அதாவது இளம் வயதில் திருமணம் செய்து நடத்திக்கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக பெண்களுக்கு பெரும்பாலும் பூப்படைந்த ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாகவே திருமணம் செய்துவைக்கப்படுகிறது. அவர்களின் நியாயமானக் கருத்துப்படி திருமண வாழ்க்கைக்கு, சிறப்பான இல்லற தாம்பத்தியத்திற்கு மற்றவைகளை விட இளமை, பலம், வீரியம், வேகம் போன்றவை அதிகம் தேவை என்பது இயற்கை. இவைகளை உணாந்த இஸ்லாம் மார்க்கத்தினர் காலத்தே பயிர் செய் எனும் பழமொழிக்கேற்ப சரியானப் பருவங்களில் உறவுகளை உண்டுபண்ணுகிறார்கள்.

## வீரியம் மிகுந்த இளமை

எந்த ஒரு மலராகிலும், காயாகிலும் அதைத் தக்ககாலத்திலே சூடவோ, சுவைக்கவோ செய்தால்தான் கொள்பவருக்கு முழுப் பலனளிக்கும். அதுவல்லாமல் காலங்கடந்து செய்வதால் ஒருவருக்கும் முழுப்பயன் கிட்டாது. மலர்களின் மகரந்தச் சேர்க்கை கூட தக்க சமயங்களில் நடந்தாலன்றி கருவுறுதல், காயாகுதல், கனியாகுதல் ஆகியவற்றில் தொய்வு ஏற்பட்டு தோட்டக்காரனுக்கு நஷ்டத்தை ஏற்படுத்திவிடும். மற்ற மதங்களில் மனிதர்களின் நடுத்தர வயதுகளில் இனச் சேர்க்கை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறபோது இஸ்லாத்தில் மட்டுமே இயற்கை வலியுறுத்துகிற அவசியம் மிகுந்த வீரியம் மிகுந்த

இளமைக்காலத்தில் மன, இனச் சேர்க்கைகள் ஆரம்பமாகின்றன. உண்மையில் சூழ்நிலைக்கட்டாயத்தால் காலம் கடந்து உடல்சேர்க்கை ஆரம்பித்த பலர் இளவயதிலேயே திருமணம் செய்யாமல் போனதை எண்ணி மனதுக்குள் புலம்புவது வெளியே கேட்கமுடிகிறது.

## காலம் கடந்த திருமணங்களின் விளைவுகள்

பிற மதங்களின் மனிதர்களில் பெரும்பாலோர் பொய் வேடம் போட்டிருப்பதாக எண்ணத்தோன்றுகிறது. இயற்கையின் நியதியான தங்களின் காம உணர்வுகளை நீண்ட காலத்திற்கு விதியே எனத் தள்ளிப் போடுகின்றனர். இதுபோக மற்ற பலர் பலருடன் பலவிதமான ருசி பார்க்கின்றனர். இவர்களில் ஆண்கள், பெண்கள் என்ற பாகுபாடு இல்லாததோடு இவர்கள் வெளியில் உத்தமர்கள் போல நடந்து கொள்வார்கள், பேசித்திரிவார்கள். இங்கே கலாச்சாரம் பண்பாடெல்லாம் பலமாகப் பேசப்பட்டு வருகிறது; ஆனால் எல்லோரும் வேறுவழி இல்லாத நாடகக்காரர்கள். உலகமெனும் நாடக மேடையில் இவர்கள் ஒவ்வொரு விநாடியும் பொய்த் தோற்றங்களின் தோன்றல்களைத்தான் காட்டுகிறார்கள். உண்மையான உணர்வுகளைப் பற்றி எண்ணுவதற்கு, பேசுவதற்கு பலருக்கு இங்கே தைரியம் கிடையாது. திருமணத்திற்கு முன்னரே பல ருசி பார்த்தவர்கள் திருமணத்திற்குப் பின் வரும் லைசென்சு துணையுடன் எங்ஙனம் நேர்மையாக நடக்க முடியும்; சிலரை மட்டுமே இதில் விதிவிலக்காக சேர்க்க இயலும்.

## எதிர்பாலினத்தின் மீதான ஆசைகள்

இந்த உலகில் ஆண்களில் அநேகமாக அனைவரும் எந்த வயதுக்காரர்களாக இருந்தாலும் அழகுப் பெண்களை **ஆ** வென்று வாய்பிளந்து பார்க்கும் குணம் உடையவராகிறார்கள். பலருக்கு எதுவும் இயலாவிட்டாலும் கூட ஆசை தலைக்கு ஏறி நிற்கிறது. இதற்கெல்லாம் காரணம் எவருடைய ஆசைகளும், இறுதிவரை முழுமையாகத்

தீர்க்கப்படாததாக இருக்குமோ! இவ்விஷயங்களில் பெண்கள் எப்படியெனப் பெண்கள்தான் கூற வேண்டும்.

நடைமுறையில் பல பெண்கள் பூப்படைவதற்கு முன்பே ஆண்களை நேசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதிலும் இக்காலச் சூழ்நிலைகளில் குழந்தைப் பருவத்திலிருந்தே கெட்டுக் குட்டிச்சுவராவதற்கு ஏராளமான வாய்ப்புகள் எங்கு பார்த்தாலும் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றன. திரைப்படம், தொலைக்காட்சியின் தொல்லைக்காட்சி நிகழ்ச்சிகள், புத்தகங்கள், திரை முதல் சுவர் வரையுள்ள விளம்பரங்கள், மூத்தவர்களின் மூடத்தனப் பேச்சுக்கள், செய்கைகள் என எல்லாமும் எல்லாவற்றையும் எல்லாக் குழந்தைகளுக்கும் வாரிவழங்கிக் கொண்டிருக்கின்றன. மூத்தவர்களைவிட எதையும் எளிதில் உள் வாங்கிக் கொள்ளும் குழந்தைப் பருவத்தினர் இதையெல்லாம் எப்போதும் இலவசமாக வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போதுள்ள வாழ்க்கைத்தரம், பொருளாதாரம், உணவுகள் ஆகிய அனைத்தும் இன்றைய குழந்தைகளை வீரிய மிக்கவர்களாக வைத்திருக்கின்றன என்றபோதிலும் திருமணத்திற்கு மட்டும் இன்றைய நிலையில் பெண்ணுக்கு சட்டப்படி பதினெட்டு வயதாகவும், ஏற்றபடி இருபத்தொன்றாகவும் வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இங்கு நிலவுகின்ற சமுதாயக்கட்டாயம் அவ்வாறு செயல்படுத்த வைத்துள்ளது. இருப்பினும் இயற்கைக் கட்டாயம் அதுவல்ல என்பதே மெய். இதனாலேயே இஸ்லாம் மார்க்கம் இயற்கையான வாழ்வு முறையை ஆதரித்து வழிநடத்துகிறது. பெண்களுக்கு பூத்த நாட்களிலிருந்து எவ்வளவு விரைவாக திருமணம் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாகத் திருமணம் நடத்துவதை மதக்கொள்கையாகக் கொண்டு நடைபெற்று வருகிறது. அதனால் அங்கே திருமணத்திற்கு முன் பாலியலில் தவறுகள் நடப்பதற்கு வாய்ப்புகள் குறைந்து போகிறது.

மற்றயோரில் ஆடிப்பாடிக் கூத்தடித்துக் கும்மாளம் போட்டு எல்லாம் முடிந்த பிறகு இருக்கிற நடுத்தர பகுதியினருக்கும், அதையும் தாண்டி வந்துக்கொண்டிருக்கும் நடுத்தர வயதின் இறுதிப் பகுதியிலுள்ள முன்பகுதி கிழவன் கிழவிகளுக்கும் திருமணக் கச்சேரிக் கூத்து நிகழ்வுகள் நிகழ்ந்தேறுகின்றன. இயற்கையில் இவற்றையெல்லாம் ஒரு வகையான சாபமும் பாவமுமாகத்தான் கருத வேண்டியதாகிறது, சுகங்களை ஓரளவுக்காவது திருப்தியாக அனுபவிக்க முடியாமல் ஆவ் ஆவென்று ஆசை அடங்காது அலையும் கிழங்களாக நீண்ட ஆண்டுகள் தங்களுக்கும் பிறருக்கும் சுமையாக வாழ்வதைவிட நன்றாக அனுபவித்துவிட்டு ஒரு அறுபது வயதுகளில் சாவது மேல் எனக் கூறுவோரும் உண்டு. தமக்காக வாழ்ந்த பிறகுதான் பிறருக்காக வாழ்வது தருமமாகும். தனக்கு மிஞ்சிதான் தானம் தர்மம் என்ற திரைப்படப் பாடல் வரிகள் இவ்விடத்திலும் பொருந்தலாம்.

## கிழட்டுக் கல்யாணங்கள்

இச்சமுதாயத்தில் பலர் தொங்கிப்போய், துவண்டு போய், சுருங்கிப்போன, சுறுசுறுப்புப் போன சதைப்பிண்டங்களாக முட்டிமோதிக்கொண்டு, ஒட்டிக்கொண்டு ஏதோ தலைவிதியே என வெளிவேடமிட்டு குடும்பங்கள் நடத்துகின்றனர். இதில் அவ்வப்போது பெரும் கூக்குரல்கள் வேறு போடப்பட்டு வெற்றுப் பெருமை பகற்றப்படுகிறது. இயற்கைத்தனமாக வாழ வேண்டிய மனிதக்கூட்டம் செயற்கைக் கோமாளிகளாகக் குழுமிக்குலாவிக் கொண்டு செய்வதறியாது அடுத்தவர்களை எள்ளி நகையாடுகிறது.

பருவ நேரத்தில் கத்தும் மாடுகளுக்கு காளை போட வேண்டுமென்பது பண்டைக்காலத்திலிருந்து தெரிந்து வந்திருக்கும் செய்தி. இப்போது அதற்கு செயற்கை ஊசி முறை வந்துவிட்டது வேறு விஷயம். அதுபோல பருவக் காலத்தில்தான் உறவு மிகுதியாக ருசிக்கும் தன்மையுடையதாக இருக்கும். இந்தவகை மிகுதியான ருசிக்கு திருட்டுத்தனமான ரகசிய உறவுகள்தான் இங்கு வசதியான

இந்நாட்களில் வழிகாட்டப்பட்டு வருகின்றன. வயதாகி வயதாகி வாழ்க்கைப்பருவத்தின் பாதியை, வலிமைப்பருவத்தின் முக்காலை இழந்தபின் நடக்கும் மனச்சேர்க்கையில் அரை வாழ்க்கைக் கூட தேறாது. அதை கால் வாழ்க்கை என்றுதான் சொல்ல இயலும்.

காமத்தீர்விற்கு, வயது மூப்பில் கிடைக்கப்பெறும் அறிவு அனுபவ வலிமையைக்காட்டிலும் வாலிபத்திலிருக்கும் உடல் வலிமையே இன்றியமையாதது. நம்மில் சிலபலர் கூறுவது போல் மனப்பக்குவம் வேண்டும், உடல் பக்குவம் வேண்டும் அது இது என்பதெல்லாம் ஒரு வகையான ஏமாற்று வேலைகளாகத்தானிருக்க வேண்டும். நமக்கு முன் உலகம் முழுவதும் வாழ்ந்த மக்கள் இளவயதில் திருமணம் செய்து அனுபவித்து உலகத்திற்கு அனைத்தையும் வாரி வழங்கிவிட்டுச் சென்றவர்களே. இப்போதிருக்கும் இளைஞர் கூட்டம் முன்னைய காலங்களில் இருந்ததைவிட **எல்லாவற்றிலும்** முதன்மையா யிருக்கிறார்கள் என்பதே உண்மை.

இன்றைய மனிதர்கள் எல்லாவித உணர்வுகளையும் மிகத்தற்காலிகமாக மறைக்கச்செய்து சூழ்நிலைக்கட்டாயத்தில் பலவித ஆடைகள், சீருடைகளைச் சுற்றிவிட்டு சுழன்று கொண்டிருக்கிறார்கள். உயர்கல்விகள் என்ற போர்வையில் அது சிலருக்கு மட்டுமே வாழ்வளிக்கக்கூடியதும் பலருக்குப் பயன்படா நிலையிருந்தும் எண்ணற்ற இளைஞர்களின் காலம் வீணாக்கப்படுகிறது; எப்படியோ பெற்றோர்களால் பிள்ளைகளின் இளைய வயது வளரும் காலம் நிரப்பப்பட்டு விடுகிறது. இதில் பெருமைக்காக, பிறருக்காக வாழவேண்டியிருப்பது இன்றைய நிலையில் தவிர்க்கமுடியாத மாதிரியானத் தோற்ற நிலையை உண்டாக்கியிருக்கிறது.

## முதிர்கன்னிகளின் கூட்டம் பெருகுதல்

பலவிதக்காரணங்களினால் பருவத்தில் மணம் முடிக்க மறந்து போன திருமணமாகா முதிர் வயதுக்கன்னிகளின் கூட்டம்

பெருத்துக்கொண்டு போகிறது. இந்தவகையில் மிகமிகக்குறைவாக உள்ள ஆண்கள் எப்படியும் சமாளித்து ஏதோ ஒரு சப்பானி வாழ்க்கையாவது வாழக்கிடைக்கப் பெற்றுவிடுவார்கள். இந்த முதிர்கன்னிகள் கூட்டத்தில் சேர்வதற்கு பலர் எவ்விதப் போட்டியுமில்லாமல் எளிதாகச் சேர்ந்து வயதுகளில் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் நிலைமை சமுதாயத்தின் மிகுந்த கவனத்திற்குரியதாகக் கொள்ளப்படவேண்டும்.

இப்போதெல்லாம் தனியார் தொழில் வர்த்தக நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் இந்த முதிர்கன்னிகளை மொத்தக் குத்தகை எடுத்து சிறைபிடித்துள்ளனர். அவர்களை எங்கே வெளியில்விட்டால் யாரையாவது திருமணம் செய்துகொண்டு விடுவார்களோ, தங்கள் உரிமைப் போய்விடுமோ என எண்ணுவார்களோ என்று எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவர்கள் ஆண்களுக்கு வேலையே கொடுப்பதில்லை; அப்படியே இருந்தாலும் பெயருக்காக ஒன்றிரண்டு பிச்சைப்போட்டிருப்பார்கள்.

மேற்படிப் பெண்களை, அவர்கள்தம் வீடுகளிலிருந்து பணியிடம் வரை தங்கள் நிறுவன வாகனங்களில் ஏற்றி மேற்படியாளர்களுக்கு, எங்கேயும் பாய்ந்து ஓடிவிடாதபடி கடிவாளம் போட்டு நடத்துகின்றனர். அதன் பின்னர் கம்பெனியாரின் மேற்பார்வையில், கட்டுப்பாடுகளில் பணிபுரிய வேண்டும். இவ்வாறு தினசரி காலை முதல் மாலை மற்றும் இரவு வரை வைத்திருந்து இவர்களின் காலம் கடத்தப்பட்டு வருகிறது. இப்படியிருந்தால் பெற்றோர்களாலும் திருமணம் நடத்தி வைக்கப்படாத இப்பெண்கள் எங்கிருந்து எப்படி துணையைத் தேர்ந்தெடுக்க இயலும்; இதுபெரு நகரங்களுக்குப் பொருந்தாது. பொதுவாகவே பெண்களின் சதவிகிதம் கூடிக்கொண்டு வருகிறது. வரும்காலங்களில் பலர் அப்படியே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இவற்றை இப்படியானப் பெண்கள் உடைத்தெரிவது எளிதில்

சாத்தியமில்லை எனத்தோன்றுகிறது; ஏனெனில் பணம் சம்பாதிக்க வேண்டுமென்பதற்காக எட்டையும் ஏட்டையும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

## வாழ முயற்சி செய்யுங்கள்

இவர்களுக்குக்கெல்லாம் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவெனில் திருமணத்திற்கு முன் உங்களின் வயதுகளை அதிகரித்துக்கொள்ளாதீர்கள்; உங்கள் வாழ்க்கைத்துணைக்கு உங்கள் வீட்டார் – உற்றார் – உறவினர் முயற்சிக்காவிடில் நீங்கள் முயற்சிசெய்யுங்கள். உங்களுக்குப் பொருத்தமான ஒருவரைக் கண்டு பிடித்து வாழ்வதற்கு வழி செய்து கொள்ளுங்கள், வாழ்க்கை ஒருமுறை – அதில் வாலிபம் அரைமுறைதான். அதற்கு சிறைகளையும் தடைகளையும் பாதிப்பில்லாமல் கடந்து செயல்பட வேண்டியிருக்கும்; அதற்காக அவசரத்தில் படுகுழிகளில் சாக்கடைகளில் விழுந்து விடக்கூடாது, ஏனெனில் இவைகள் நிரந்தர நரகத்தில் தள்ளிவிடும் என்பதை மறக்கக் கூடாது.

இவ்விளைவுகள் தற்காலிக முகமதிய மக்களுக்கும் மெல்லமெல்ல உண்டாகி அவர்கள் மதத்திலும் வயது கடந்த திருமணங்கள் நடைபெற ஆரம்பித்திருப்பது வருத்தம் தரும் செய்தி; அவர்களுக்கு சொல்லப்பட்டக் கடமைகளை மீறுகிறார்களோ என எண்ணும்படி உள்ளது.

## கற்பும் – பெண்களும்

சமீபத்தில் முன்னால் தமிழ் சினிமாக் கதாநாயகி ஒருவர் தமிழ்ப் பெண்களின் திருமணத்திற்கு முந்தைய உடலுறவு சமாச்சாரத்தைப்பற்றி ஏதோ சொல்லிவிட்டதால் பலர் எகிறி குதித்தார்கள். பலர் நாங்கள் அனைவரும் யோக்கியர்கள் என்று குரல் கொடுத்தனர், வழக்குகள் போட்டனர். இதில் பெண்களைவிட ஆண்களில் பெரும் கூட்டம் பெரிய சத்தம் போட்டது.

ஆண்களுக்குத்தான் பெண்கள் கற்புள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதில் மிகத்தீவிரம் தெரிகிறது. அதே நேரம் ஆண்கள் பல பெண்களைத் தேடுகிறார்கள், உறவாடுகிறாகள். பின்னர் எல்லாப்பெண்களும் ஆண்கள் எண்ணுகிறமாதிரி எப்படி சாத்தியமாகும். இவ்விசயத்தில் பெண்கள் எப்போதும் அவ்வளவாக அலட்டிக்கொள்வதில்லை. அதை பெரிதுபடுத்திப் பேசுவதும் கிடையாது. எத்தனை குடும்பத்துப் பெண்கள் இதைப்பற்றி தங்கள் குடும்ப நபர்களிடம் ஏளனமாகப் பேசியிருப்பார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். ஜெயலெட்மிகளாகட்டும், ஜெகஜோதிகளாகட்டும், சாமியார்களின் வைப்பாட்டிகளாகட்டும் எவரைப்பற்றியும் பெண்கள் பெரிதுபடுத்திக் கொள்வதில்லை, இருப்பினும் மேற்படி திரைப்பட கதாநாயகி விவகாரத்தில் சில பெண்களும், பெண்கள் அமைப்புகளும் கூட எதிராகக் குரல் கொடுத்தார்கள்.

ஆனால் இவர்கள் சத்தங்களெல்லாம் பொய்யா உண்மையா! ஒருவேளை அந்த நடிகை சொன்னது மாதிரியான சூழ்நிலைகளில் வாழ்கிறோமா என்பது தெரியவில்லை. நாம் எப்போது உண்மைகளை அப்பட்டமாக ஒத்துக்கொண்டிருக்கிறோம்.

## பலதார முறை

### அதிகமான அளவினில் பெண் இனம்

இயற்கையை நன்கு படித்தவராக நபிகள்நாயகம் விளங்குகிறார்கள். அநேகமாக அனைத்து உயிரின வகைகளிலும் இனப்பெருக்கம் செய்கிற, பலன்தருகிற பெண்இனம் அதிகமாகவும், இனப்பெருக்கத்திற்கு அவசியமான ஆண்இனம் குறைவாகவும் தென்படுகின்றன. இது ஒரு வகையான இயற்கையின் பாதுகாப்பு ஏற்பாடாக இருக்குமோ என வியக்க வைக்கிறது. ஏனெனில் ஒருவேளை ஆண்இனம் அதிகமாகவும் பெண்இனம் குறைவாகவும் இருப்பதாகப் படைக்கப்பட்டிருந்தால் ஆண்இனம், குறைவாக உள்ள

பெண்ணினத்திற்காக போட்டிப் போட்டு படுபயங்கர சண்டைகள் ஏற்பட்டிருக்கும். மேலும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டு பெருமளவு ஆண்இனம் இறந்து போயும், மீதமுள்ளவை முடங்கிபோய் செயலற்றுப் போகிறதுமாகியிருக்கும். பெண் இனத்துடன் இனப் பெருக்கம் புரியக் கூடிய ஆண் இனமே இல்லாமல் போயிருப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். மேலும் இம்மோதல்களில் பெண் இனங்களும்கூட குறிப்பிட்ட ஆண் இனத்தை விரும்பிய காரணங்களினால் மற்ற ஆண் இனங்களின் கோபத்திற்கு உள்ளாவது மற்றும் ஆண்களின் சண்டையில் சம்மந்தமில்லாமலே மாட்டிக்கொள்வது போன்றைவைகளினால் அழிந்து போயிருக்கும். இந்த நிலை ஏற்பட்டிருக்குமானால் மொத்த அவ்வகை உயிரினங்களும் அழிந்து போயிருக்கும்.

உண்மையில் அதிகமான உயிர்களை வெளிக்கொணர்வதற்கு பெண்இனமே அதிகம் அவசியமானது. இவைகளினால்தானோ என்னவோ பெண்கள் இனம் எல்லா விலங்கினத்திலும் கூடுதலாகவும், ஆண் இனம் குறைவாகவும் தென்படுகிறது. இந்த ஆண் இனம் பல விலங்கு வகைகளில் பல விகிதாச்சாரக் குறைவுகளில் காணப்படுகின்றது; விதிவிலக்காக சில விலங்குகளில் மட்டுமே ஆண் இனம் கூடுதலாக இருக்கலாம்.

மனித வர்க்கத்திலும் ஆண் பெண் இனங்கள் சரிசம சதவிகித எண்ணிக்கையில் இல்லை என்பது நிதர்சனமான உண்மை. முந்தைய காலங்களில் இந்த விகிதாச்சாரம் எப்படி இருந்ததோ தெரியவில்லை; ஆனால் கடந்த சில நுற்றாண்டுகளாக பெண்கள் அதிக சதவிகிதத்தில் இருந்து வருவதாகத் தெரிகிறது. அதிலும் குறிப்பாக சமீப காலமாக பெண் குழந்தைகளின் பிறப்பு சதவிகிதம் மிக அதிகமாக இருப்பது எவரும் மறைக்க முடியாத உண்மை. அனைத்து மருத்துவமனைகளின் தினசரி மற்றும் ஆண்டு மொத்த பிறப்புவிகிதமும், அரசுத்துறையின் பிறப்புப் பதிவுகளும் இதற்கு அத்தாட்சிகளாக உள்ளன.

இது சம்மந்தமான ஒரு கருத்து முகமதியர்களின் புனிதக்குரானில் கூறப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. உலகம் அழியும் சமயங்களில் பல அறிகுறிகள், சூழ்நிலைகள் இருக்கு மெனவும், அப்போது அதிகமானப் பெண்கள் இருப்பார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதில் ஒரு ஆணுக்கு அதிகபட்சமாக ஏழு பெண்கள் வரை என்ற எண்ணிக்கையில் பெண்கள் விகிதாச்சாரம் உண்டாகி, ஆண்கள் பெண்களால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொடுமைப்படுத்தப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது. இவ்வாறானால், பிற்காலச் சூழ்நிலைகளை முன்னரே அறிந்துதானோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ அம்மதத்து மக்களுக்கு ஒரு ஏற்பாட்டைச் செய்துள்ளார்கள். தேவையானக் காரணங்களுடன் எல்லா வலிமைகளுமிருந்தால் ஒரு ஆண் நான்கு பெண்கள் வரை மணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இது எல்லா ஆண்களுக்கும் கட்டாயமில்லை, அவசியமும் இல்லை. இந்த இஸ்லாமியச் சட்டம் இவ்வளவு காலமாக இருக்கிறது என்றபோதிலும் பெரும்பாலான இஸ்லாமிய ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்ணைத் திருமணம் செய்வதில்லை.

ஆண்களுக்கு பல மனைவியர் அனுமதிக்கப்பட்டதுபோல பெண்களுக்கு பல கணவர்முறை ஏன் இல்லை என்ற கேள்வி எழலாம். முதல்வகையில் பிறக்கும் குழந்தைக்கு தந்தை யார் என தாய்க்குத் தெரிந்து உலகிற்குத்தெரிந்துவிடும். இரண்டாம் வகையில் குழந்தையின் தந்தை எவர்என உலகுக்குத் தெரியாததோடு பெற்றதாய்க்கும் தெரியாமல் போய்விடும்.

ஒருவேளை உலகில் அதிசயமாக பெண்கள் எண்ணிக்கை மிக அதிகமாகக் குறைந்து ஆண்கள் எண்ணிக்கை மிக அதிகரித்துவிடும் நிலை ஏற்படுமாயின் இரு மற்றும் பல புருஷர்கள் முறைதான் தீர்வாகமுடியும். அந்நிலையில் மேற்கண்ட பிரச்சினையை எப்படி

சமாளிப்பது. ஒன்று கருவுற்று உறுதிசெய்யப்படும்வரை அதிகபட்சமாக ஒரு ஆறுமாதம் கணவர்களில் ஒருவர் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும். இந்த முறையில்அடுத்தக் கருவுறுதலுக்கு ஆறுமாதம் வரை அடுத்தகணவருக்கே அனுமதி வழங்கப்பட வேண்டும். இந்தமுறையில் சுழற்சியாக ஒவ்வொரு தந்தைக்கும் தனித்தனி குழந்தைகள் பிறக்கலாம்.

அல்லது வேறு முறையாக சராசரியாக ஒரு ஆண்டுக்கு ஒருகணவருடன் இல்லறம் நடத்தும் முறையில் மற்ற கணவர்கள் அதே வீட்டிலோ அல்லது வெளியிடங்களில், தூரதேசங்களுக்கோ சம்பாதிக்க சென்று ஹெச்.ஐ.வி பரிசோதனைச் சான்றுடன் வரவேண்டும். மேற்சொன்ன முறைகளுக்கு வரிசைக்கிரமத்தில் கணவர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் தேர்வுமுறையைப் பயன்படுத்தலாம்; அதுவே பாரபட்சமில்லாதது. இருப்பினும் மனைவியின் முடிவே இறுதியானது. அவரிடமே அனைத்து அதிகாரமும், உரிமையும் இருக்கும்; ஆண்கள் தொழிலாளர்கள் போல் நடந்துகொள்ள வேண்டும்.

ஏற்கெனவே பஞ்சபாண்டவர்களுடன் திரௌபதி பாஞ்சாலி வாழ்ந்த கதை நம்மிடமிருக்கிறது. அவர்கள் எந்தமுறையில் வாழ்ந்தார்களோ? சரிவர ஒருவரும் சொன்னதில்லை. அர்ச்சுனன் மட்டும் தாம்பத்திய இல்லறம் கொண்டிருந்தார் என சிலர் கூறுவதுண்டு. விபரமறிந்தவர்கள் தெளிவாகக் கூறினால், பிற்காலத்தில் மேற்சொன்ன நிலை ஏற்படுமாயின், அம்முறையைப் பின்பற்றலாமே!

பலதார முறையின் இதன் முக்கியக்கருவாக எக்காலத்திலும் பெண்கள் யாரும் திருமணமாகாமல், திருமண வாய்ப்பு பெறாமல் போய்விடக்கூடாது என்பதற்காகவும் இருக்கலாம். இந்துக் கடவுளர்களில் முக்கால் பாகத்திற்கு மேல் இரு மனைவியர் கொண்டுள்ளதாக வரலாறு தருகிறது. பரமசிவனுக்கு பார்வதி – கங்கை. முருகப்பெருமானுக்கு வள்ளி – தெய்வானை. வடஇந்தியப்

பிள்ளையாருக்கு லட்சுமி –சரஸ்வதி. மதுரைவீரனுக்கு வெள்ளையம்மாள் – பொம்மியம்மாள். வெங்கடாசலபதிக்கு அலமேலுமங்கை – பத்மாவதி. கண்ணணுக்கு ஆயிரம் மனைவியர் என இப்படியாக இந்துக்கடவுள்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கடவுள் மனிதர்களின் வழிகாட்டி, எனவே இங்கேயும் அந்தத் தத்துவம் மறைமுகமாக்கப் பட்டுள்ளதாக அறிய வேண்டியுள்ளது.

### தலாக்

திருமணம் செய்வதற்கு, அதன் பிறகு வாழும் வாழ்க்கை முறைக்கு பலவித வழிகாட்டுதல்கள் சொல்லப்பட்டுள்ள மதம் இஸ்லாம் ஒன்றே. உலகிலுள்ள கோடான கோடி அனைத்து மனிதர்களுக்குள்ளே ஒரு மனிதனைப்போல எந்தவிதத்திலும் அப்படியே இன்னொரு மனிதர் இருப்பதில்லை. குணம், தோற்றம், பழக்கவழக்கங்கள், செயல்பாடுகள் இன்னும் என்னவெல்லாம் உண்டோ அனைத்திலும் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறான்.

### இருவேறு நபர்களின் கூடுதல் – விரிசல் – பிரிதல்

ஒரு குடும்பத்தில் பிறந்த சொந்த இரத்த சம்மந்தமுள்ள சகோதரர்கள் சகோதரிகளுக்குள்ளேயே உண்மையான ஒற்றுமை, பாசம், அன்பு பல வீடுகளில் இருப்பதில்லை. இவ்வாறான இவ்வுலகில் இரண்டு புதிய நபர்களாக ஒரு ஆணும் ஒரு பெண்ணும் திருமணம் என்ற பந்தத்தில் திடீரென இணைகிறார்கள், அல்லது இணைக்கப்படுகிறார்கள். அதன் முக்கியமான முதலாவதானத் தேவை என்பது வயிற்று பசிக்கு அடுத்ததாக உருவாகும் காமம் என்பதற்குத் தீர்வு தரப்படுவதற்காக இருக்கும் என்று கூறுவதைத் தவறெனச் சொல்வது தவறு.

முன் காலங்களில் மனிதர்கள் விலங்குகளாக வாழ்ந்தபோது இப்படியெல்லாம் இருந்திருக்காது. நம் முன்னோர்கள் கிட்டதட்ட

மிருகங்களைப்போல இருந்திருக்க வேண்டும். கால மாற்றத்தில் அவ்வப்போது மனிதர்களுக்குள் தோன்றிய சிந்தனை மனிதர்களால் பல ஆயிரம் வழிகாட்டுதல்கள், கண்டுபிடிப்புகள் வாழ்க்கை முறைகள் உருவாக்கப்பட்டன. இவைகள் யாவும் ஒன்றன்பின் ஒன்றாக மிகமிக மெதுவாக பல ஆயிரம் லட்சம் ஆண்டுகளின் சுழற்சியில் வந்தவை.

இவ்வாறாக முறையானத் திருமணம் என்பதைக் கண்டெடுத்து, பல காலகட்டம் பல மாற்றங்களுக்குப் பின் இன்றைய மனிதர்களின் இணைப்பு முறை வந்திருக்கிறது. இரு வெவ்வேறு சூழ்நிலைகளில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வந்த சில வயது வித்தியாசமுள்ள ஒரு ஆணும் ஒரு பெண்ணும் திருமணம் என்ற பந்தத்தின் மூலமாக சேர்ந்ததில் உலகில் அதிக அளவிளான தம்பதிகள் உண்மையான ஒற்றுமையுடனும் புரிதலுடனும் இல்லை என்பதே வரலாறு. இன்றைய அநேகக் குடும்பங்களில் ஏதோ ஒரு கட்டாயத்தில்தான் காலம் ஓடிக்கொண்டிருக்கிறது; நூற்றுக்கு நூறு ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழும் கணவன் மனைவி மிகக்குறைவே. இருப்பினும் ஒன்றை நிச்சயமாகப் பாராட்டவேண்டும்.

இந்தியா போன்ற நாடுகளில் எப்படியோ இறுதிவரை பெரும்பகுதியானக் குடும்பங்கள் வெற்றிகரமாக குடும்பக் கடை நடத்தி வருகிறார்கள். இதில் நாட்டுக்கு நாடு சதவிகித வித்தியாசம் இருக்கும். அவ்வகையில் இந்தியர்கள் மேன்மையானவர்கள் என சொல்லாம். சகிப்புத்தன்மை, பொருளாதாரச் சிக்கல், இயலாமை, வேறு வழியின்மை போன்ற பல காரணங்கள் இதில் இந்தியர்களுக்கு உதவுகின்றன. வருங்காலங்களில் பெரும்பகுதி இந்தியப் பெண்கள் சுய பொருளாதார வலிமை பெற்றுவிடுவர். அப்போது இப்போதுள்ள இந்திய முறை மாறி மேல்நாட்டு முறையில் சொற்பகால ஒரு குடும்பநிலை வந்துவிடும்.

வளர்ந்த மேல்நாட்டுக்காரர்களுக்கு இப்படியானக் காரணிகள் குறைவு என்பதால் கணிசமானத் தம்பதியினர் கடைசி வரை சேர்ந்து

இருப்பதில்லை; அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் பிடிக்காத நிலை வரும்போது இருவரும் பேசி முடிவு செய்துகொண்டு ஒதுங்கி விடுகிறார்கள். அங்கே பெரும்பாலும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் ஒத்துக்கொண்ட விவாகரத்துதான் அதிகம். மிகக்குறுகியக் காலத்தில் சட்டபடியான மனமுறிவைப் பெற்று வேறு துணையுடன் வெகுசீக்கிரத்தில் சேர்ந்து விடுவார்கள். இப்படியாகப் பல தம்பதியர் பலமுறை விவாகரத்துகள், மறுமணங்கள் செய்துகொள்வதுண்டு. அவர்கள் நம்மவர்களைவிட முன்னரே அறிவு முற்றியவர்கள் என்பதால் விஞ்ஞான வாழ்க்கை வாழ்கிறார்கள். இன்னும் ஒரு பத்தாண்டுகளில் இங்கேயும் அங்கே உள்ள மாதிரிதான் நடக்கப்போகிறது என்பது வேறு விஷயம்.

## பொய் வாழ்க்கை

தற்கால நடைமுறையில் நம்மில் பலர் எப்படியோ ஒட்டி ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். சில குடும்பங்களில் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாமல், ஒன்றாக அமர்ந்து சாப்பிடாமல், படுக்காமல், பார்க்காமல்கூட கணவன் மனைவியாக வாழ்வார்கள், வாழ்ந்திருக்கிறார்கள். இப்படி, வாழும் காலத்தை வீணடித்து, வயதாகி, வற்றி, செத்து சுண்ணாம்பாகி மடிவதைவிட எப்படியாவது மீதமிருக்கும் காலத்தை வாழவேண்டும் எனக்கருதி முகமதுநபி அவர்கள் ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்துள்ளார்கள்.

ஒருவருக்கொருவர் பிடிக்காத தம்பதியர் பொய் வாழ்க்கை, ஏமாற்று, கட்டாய வாழ்க்கை வாழ்வதை நபிகள் ஆதரிக்கவில்லை. இரு மனிதர்களுக்குள் தீர்க்க முடியாத நிரந்தரமான கருத்து வேறுபாடுகள் வந்துவிட்டால் பிரிந்து விடுவதுதான் சாணக்கியம், அதுதான் மிச்சமிருக்கும் நாட்களுக்கு யோக்கியம். அதை விடுத்து காலமெல்லாம் துன்ப வாழ்க்கை வாழ்வதை, சிரிப்பாய் சிரிப்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. விருப்பமில்லாத மனைவியோடுகூட ஒரு

கணவன் வாழ்ந்துவிட முடியும். ஆனால் விருப்பமில்லாத கணவனால் தன் மனைவியோடு வாழ இயலாது. ஏனெனில் ஆணின் மனம் ஒப்பி இணக்கம் இருந்தால்தான் உடலுக்கு உந்து சக்திவந்து கருவி உத்தரவு பெற்று இயக்கம்பெற இயலும்.

## சரியான நடைமுறை

இஸ்லாமிய மார்க்கத்தில் ஒத்துவராதத் தம்பதிகளை சிலமுறை தனித்தனியாகவும் பிறகு ஒன்றாகவும் சேர்த்து பெரியவர்கள் பேசுவார்கள். அதற்குமேலும் எவரேனும் ஒருவருக்கு ஏற்புடையதாக இல்லாமல் போனாலும் எளிதாகத் திருமண முறிவு செய்துவிடுகிறார்கள். ''தலாக்'' என மூன்றுமுறை சொன்னால் மணமுறிவு, விடுதலை எல்லாம் கிடைத்துவிடுகிறது. இதில் யாதொரு தவறுமில்லை என்பதை உறுதிபட விளக்கமுடிகிறது. இது நீண்ட தொலைநோக்குப் பார்வையில் கொண்டு வரப்பட்ட மிக அவசியமான ஒரு செயல்பாடு என உணரலாம்.

இருவருக்கும் மனம் ஏற்கும் வகையில் சொத்து, ரொக்கம், எதிர்காலத்திற்கு தேவைப்படும் வசதிகள் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. இதில் பெண்களுக்கு மிக அதிகமாக வழங்கப்படுகிறது. பெண்கள் பிறந்தவீட்டிலிருந்து கொண்டுவந்த அனைத்தையும் எடுத்துக்கொள்ளலாம். குழந்தைகளிருந்தால் அவர்கள் தாய் தந்தையரில் யாரை விரும்புகிறார்களோ அவர்களிடம் ஒப்படைத்துவிடுகிறார்கள். மறுமணம் சர்வசாதாரணமாக நடைபெறுகிறது. இவைகள் சரியான முறையாக இருப்பதால்தானே இம்மதம் இந்நாள்வரை வளர்ந்து உலகின் இரண்டாவது பெரிய மதமாக வேறூன்றியிருக்கிறது.

## மற்ற மதங்களின் கொடுமை முறை

ஆனால் இந்து, கிறித்தவம் போன்ற மதங்களில் மேற்கண்ட நடைமுறைகள் மிகக்கடினமாக உள்ளன. ஒருவன் ஒருத்தியிடமோ

அல்லது ஒருத்தி ஒருவனிடமோ திருமணம் என்ற முறையில் அகப்பட்டுக்கொண்டால் இலேசில் விலகிவிட முடியாது. காய்ந்து, வதங்கி, கிழடானப் பின்னரே சட்டம் பிரிய அனுமதிக்கும் – இதுவும் இதை விரும்பும் அனைவருக்கும் கிட்டிவிடாது. பெண்களுக்குக் கூடுதல் சலுகைகளுடன் அவர்கள் ஒருதலைப்பட்சமாக விரும்புகிற போதிலும் எளிதான மனமுறிவு கொடுக்கப்படலாம்; அதேசமயம் ஆண்கள் என்றால் சுக்காக்கி விடுகிறார்கள்.

சட்டம் இயற்றிய வயதான அனுபவசாலிகளுக்கு பெண்கள் அனைவரும் உயர்வாகவும் ஒட்டுமொத்த ஆண்கள்இனம் மோசமானதாகவும் உணரப்பட்டது ஆண் இனத்திற்கான சாபம். ஏனெனில் பெண்களில் கணிசமானப் பகுதியினர் பல விதங்களில் பயங்கரத்திலிருந்து படுபயங்கரவாதிகளாகவும், கொடுமை வாதிகளாகவும் உள்ளதை இச்சமுதாயம் உணராதது மாதிரி நடிக்கிறதுபோலும். அதேமாதிரியாக ஆண்களில் பல அருமையான மனிதர்கள், பயந்தாங்கொள்ளிகள், சாதுக்கள், சாணிகள் போன்றோர் இருக்கிறார்கள் என்பதை இந்த சட்டவாதிகள் ஏன் உணரவில்லை. இனி வருங்காலங்களிலாவது இது சம்மந்தப்பட்டவர்கள் சற்றுச் சிந்தித்து செயல்பட்டால் நீதி பரவலாக்கப்படலாம்.

அற்புதமானப் பெண்கள் அயோக்கியர்களிடம் அகப்பட்டு அல்லல்படுவதைப்போல நல்ல குணவான்கள் பலர் கொடுமைக்காரிகளிடம் மாட்டிக்கொண்டு படும் சித்திரவதைகளை சொல்லிமாளாது; என்றபோதிலும் சட்டம் என்பது அற்புதப் பெண்களைக் காப்பதுபோல் அயோக்கியப் பெண்களையும் பாதுகாத்து வருகிறது. ஆண் தோற்றத்திலிருக்கும் பல மிருகங்களுக்கும் அதற்கு எதிர்விதமாக உள்ளவர்களுக்குமாக, இரண்டுவகை ஆண்களுக்கும் ஒரே சட்டம் கடுமையாக இருந்து கழுத்தை நெறித்து வருகிறது.

ஒரு ஆண் தன் மனைவியை பிடிக்காமல் விவாகரத்து கேட்டு கோர்ட்டுக்குப் போகும்பட்சத்தில் எத்தனை ஆண்டுகள் கடந்து எண்ணற்றத் துன்பங்கள், செலவுகள், அலைக்கழிப்புகள் அனுபவித்து ஆண்மை அகன்றுபோய் கிழட்டுக் குருடான பிறகு அது கிடைக்கலாம் அல்லது கிடைக்காமலும் போகலாம்; அப்படி செய்யச் சொல்லித்தான் நம் மாண்புமிகு நீதிபதிகளுக்கு சட்டம் இயற்றியவர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள். இந்த மதங்களும், சட்டங்களும் மனிதர்களை வாழவைப்பதற்காக உருவாக்கப்பட்வையா அல்லது கொடுமைகள் செய்து நசுக்குவதற்காகவும் மகிழ்ச்சியாக வாழவிடக்கூடாது என்பதற்காகவும் இயற்றப்பட்டவையா.

## கொஞ்சமாவது வாழ வழி செய்யலாம்

இந்தத் தருணத்தில் சம்மந்தப்பட்ட அனைத்து ஆன்றோர் சான்றோர்களிடம் விண்ணப்பிப்பது என்னவெனில் மனிதர்கள் வலிமையாயிருக்கும் காலத்திலேயே மகிழ்ச்சியுடன் வாழும் வழிகளை ஏற்படுத்துங்கள்; பூமியிலேயே இறுதிக் காலம்வரை நரகத்தில் வாழக் கட்டாயப்படுத்தாதீர்கள். நரகத்தில் மாட்டிக்கொண்ட மனிதனை சொர்க்கத்திற்கு அனுப்ப வேண்டாம்; கொஞ்சமாவது சுகம்பெற வழி செய்யுங்கள். அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து சுதந்திரம் கொடுங்கள். இஸ்லாம் மார்க்கம் இதற்கெல்லாம் நல்ல வழிகளை சொல்கிறது, அவற்றை அப்படியே கடைபிடிக்காவிட்டாலும் அதன் தத்துவார்த்த உண்மைகளை உணர்ந்து, வேண்டிய அளவிற்காவது ஏற்கப்பட்டு பின்பற்றப்படலாம்.

இங்கு இந்து சட்டம் இயற்றிய காலத்திலிருந்த மாமனிதர்களுக்கு கிடைத்திருந்த வாழ்க்கைத் துணைகள் மிக நல்லவர்களாக இருந்திருக்க வேண்டும். அதனால் அவர்கள் அதை கணக்கிற்கொண்டு கணக்கிட்டிருக்கலாம். அக்கால மக்கள் குறிப்பாக பெண்கள் மற்றும் வாழ்க்கை முறைவேறு , இன்றைய ஆண்கள்,

பெண்கள் வாழ்க்கை முறைவேறு. அனைத்தும் வெகுவாக மாறியதுடன் அதுவும் போதாமல் இன்னமும் மாறிக்கொண்டிருக்கிறது. ஆனால் சட்டம் மனிதாபிமானமான முறையில் மாற்றப்படாமல் ஒருதலைப்பட்சமாக சர்வாதிகார முறையில் இன்னமும் கடுமையாகிக்கொண்டு வருகிறது.

## அசைவ உணவுகளின் அவசியம்

### அதிக அசைவம்

இன்றைக்கு வாழும் சுமார் ஏழுநூற்றைம்பதுகோடி உலக மனிதர்களில் ஏறக்குறைய எண்பது சதவீதம்பேர் அசைவ உணவுக்காரர்களாக உள்ளனர்; மீதமுள்ள இருபது சதவீதத்தில் இருப்பவர்களே சைவ உணவர்கள். உடலுக்கு, ஆண்மைக்கு வேண்டிய அதிகப்படியானச் சத்துக்கள் சைவ உணவுகளைவிட அசைவ உணவுகளில் பலமடங்கு அதிகமுள்ளன என்பது உலகறிந்த ரகசியம். இருப்பினும் ஒருசாரார் சைவ உணவே சிறந்தது என அம்முறையைப் போற்றி காத்து வருகின்றனர், மேலும் உலகம் முழுவதும் பரவலாக மிகச்சிலர் அசைவத்திலிருந்து சைவத்திற்கு மாறுகின்றார்கள். இவ்வாறு மாறுகிறவர்களில் பெரும்பாலோர் செரிமானம் குறைந்த வயதானவர்களாக அல்லது நோயாளிகளாக இருப்பர்.

சைவ உணவே சிறந்தது எனக்கூறும் மனிதர்கள் யார் என்று மேலும் ஆராயும் நிலையில் ஒரு உண்மை புலப்படுகிறது. உடல் உழைப்பு குறைவாக உள்ளவர்கள், நோயாளிகள், வயதானவர்கள் மிகச்சிறு குழந்தைகள் போன்றோருக்கு இது தலைசிறந்த உணவு. ஆனால் கடுமையான உடல் உழைப்பாளிகள், வீரமிக்க சிறுவயது இளைஞர்கள், இல்லறத்திலுள்ள நடுவயது மக்கள், தொழிலாளர்கள், விளையாட்டு வீரர்கள் போன்றோருக்கு அதிக சக்தி, சுறுசுறுப்பு, நம்பிக்கை தேவை. இவர்களுக்கு இந்த அசைவ உணவுகளே கற்பக விருட்சம்.

## பொய்பேச்சு

அசைவம் சாப்பிடுகிறவர்கள் மந்தப்புத்திக்காரர்கள் என்ற பொய்யானக் குற்றச்சாட்டைச் சிலர் இங்கே உலவவிட்டு இருப்பது வருத்தத்திற்குரிய ஒன்று. உலகில் பலகாலமாகச் சைவம் சாப்பிட்டுவரும் பரம்பரையினர் எதையும் பெரிதாகச் சாதித்திருக்கவில்லை, கண்டுபிடித்து தரவில்லை. இன்றைக்கு இப்பூமியில் அனுபவித்துக் கொண்டிருக்கும் எல்லாவற்றையும் கொடுத்தவர்கள் அசைவத்தை சக்கைப்போடு போடும் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி நாட்டுக்காரர்கள் மற்றும் யூதர்கள் வாழும் நாடுகளைச் சார்ந்த மேற்கத்திய மாமனிதர்கள்.

### அசைவத்தின் வலிமைச் செயல்கள்

பரம்பரைபரம்பரையாக பல நூற்றாண்டுக்காலம் அசைவம் சாப்பிட்டு வருவதால் குறிப்பாக இந்தியர்களைத் தவிர மற்ற உலக மக்கள் பலசாலிகளாக, மேதைகளாக, விஞ்ஞானிகளாக, பெரும் விளையாட்டு வீரர்களாக விளங்கி வருகின்றனர். இந்திய வீரர்கள் சைவம் அல்லது சிறிதளவே அசைவம் கலந்த உணவுகளை அதிகமாக பரம்பரை வழியாக மேற்கொண்டு வருவதால்தான் இவர்களின் விளையாட்டுத்திறமைகள் உலகின் எல்லைகளிலேயே இருக்கின்றன. இன்னும் ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் இந்தியர்கள் பெரும்பான்மையான விளையாட்டுகளில் சராசரியாக மேலே முன்னேற முடியாது. இவர்கள் சற்றுக் கூடும்போது மேற்கத்தியர்களும், ஆப்பிரிக்கக்காரர்களும் பலமடங்கு கூடிவிடுவார்கள்.

பரம்பரையாக அசைவம் சாப்பிடுகிற வழியில் வந்த ஒரு சானியா மிர்ஸா போன்றவர்கள்தான் உலகளவில் எட்டிப்பார்க்க முடிகிறது. இல்லாவிடில் நாள்கணக்கில் கூட்டமாக கோவிந்தா போடும் கிரிக்கெட் ஆட்டத்தை மட்டுமே இந்தியர்கள் உலக இறுதிவரை ஆடிக்கொண்டிருக்கலாம். இவ்விளையாட்டில் கலவையாகப் பலர்

உள்ளதாலும், பணம், ஆதரவு, சூதாட்டம் போன்றவை இருக்கிறது என்பதாலும் ஓரளவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

ஹாக்கி விளையாட்டில் முன்பு உலகின் உச்சானிக்கொம்பில் இருந்த இந்தியர்கள் இப்போது மெல்லமாக கீழே போய்க்கொண்டிருக்கிறார்கள். மற்றபடி வேறு எந்த விளையாட்டிலும் உதைத்து, அடித்து–விரட்டி வெளியே எறிந்துவிடுவார்கள். கால்பந்து விளையாட்டை இந்தியர்கள் காலகாலமாக விளையாடி வருகிறபோதிலும் உலகம் உள்ளவரையில் உலகக் கால்பந்துப் போட்டி ஒன்றில் கால் இறுதிக்குக்கூட காலை நகர்த்த முடியாது என்பதை வருத்தத்துடன் கூற வேண்டியிருக்கிறது.

நூற்றுப்பத்துக்கோடி பேரில் ஓரிருவர் எப்போதாவது ஏதாவது செய்துவிட்டால் அதைப் பெரும் பேச்சாகப் பேசுவதற்கு நாம் வெட்கப்படுவதில்லை; அதெல்லாம் நமக்கு இருந்தால்தானே தெரியும். சைவப் பரம்பரையில் வந்து சைவமே சாப்பிடுகிற எந்த ஒரு இளைஞன் – இளைஞியும் உலக அளவில் உடல் தேவைப்படும் விளையாட்டொன்றில் எட்டிக்கூடப் பார்க்க இயலாது. சைவக்காரர்கள் யானையை உதாரணம் கூறுவர்; அதேசமயம் சிங்கம், புலியை இவர்கள் அறியவில்லையா.

இல்லற வாழ்க்கையைப்பற்றி பார்க்கும்போது மேலும் முழு திருப்தியுடன் கூடிய இன்பமான வாழ்விற்கு வலுவான குடும்ப நபர்களுக்கு இந்த அசைவ உணவுகள் மகத்தானவை. எனவேதான் நபிகள் தன்வழி வந்தவர்களுக்கு புலால் உணவை முதன்மையாக்கியிருக்கிறார். தற்கால இஸ்லாமியர்கள் சிலருக்கு நாகரீக வரவுகளினால் உடலுழைப்புக் குறைந்துபோக செரிமானக் குறைவு ஏற்பட்டு சிறு உடல் உபாதைகள் வருவதுண்டு. அதற்காக இம்முறையை தவறு என ஒரு சிறு கூட்டம் கூறுவதால் தவறாகிவிடுமா.

## இஸ்லாமியர்களின் பொருத்தமான உடைகள்

அம்மணமாய் காடுகளில் காட்டுமிருகங்களோடு மிருகங்களாய் சுற்றித்திரிந்த பழைய மனிதர்கள், சகமனிதர்கள் மற்றும் விலங்குகளை வேட்டையாடி, கொன்று தின்று வாழ்ந்துவந்த காலம் ஒன்று இருந்தது. பின்னர் படிப்படியாகப் பல ஆயிரமாயிரம் ஆண்டுகளின் ஓட்டத்தில் மிகமிக மெதுவாக சிறிது சிறிதாக மாறுதலுக்கு உட்பட்டவன் மனிதன். இருபால் அம்மணங்களும் ஆரம்பத்தில் இலைகள், மரப்பட்டைகள், கைகள் போன்றவற்றைக்கொண்டு அரைகுறையாக முன்பகுதி கீழ்பாகத்தை மூடிவந்தவர்கள் பின்னாளில் மேல் பாகங்களையும் போட்டடித்து மூடிக்கொண்டனர்.

இந்த வெட்கம், தேவை எப்படி வந்திருக்கவேண்டும் எனப்பார்க்க வேண்டியுள்ளது, ஒருவழியாக மனிதர்களின் வயிற்றுப்பசி அவ்வப்போது தீர்ந்தபோது காமப்பசி என்னும் இயற்கைத்தேவை கிளம்பி எழுகிறது. காமத்திற்கு முக்கியமாக சம்மந்தப்பட்ட எதிர்பால்களின் முக்கிய பாகங்கள் அதிக ஈடுபாடுகளுடன் பார்க்கப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுக் கையாளப்பட்டன. மனிதர்களின் குறி, விருப்பம், மகிழ்ச்சி, வாழ்க்கை என அனைத்தும் அவற்றைச் சுற்றியே இருந்ததை உணர ஆரம்பித்தார்கள். எனவே அப்பாகங்கள் திறந்திருந்த நிலமையினால் போட்டிகள், போர்கள், கொலைகள், கடத்தல்கள், உடல் விண்ணங்கள் ஏற்படக் காரணமாயிருந்தன.

## இனப்பெருக்க உறுப்புகளின் மறைத்தலுக்காக வந்த 'பின்னல்' முறை

ஆகவே அவ்வகைகளிளான ஆபத்துகளைக் குறைக்க வேண்டியதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரே நேரத்தில் ஒருவரிடம் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களின் ஊடல் முயற்சிகளைத் தடுக்க வேண்டியது கட்டாயமாகி இருக்கக்கூடும். அக்காலச்

சூழ்நிலைகளில் அருகில் கிடைத்த மிகச்சில பொருட்களில் முக்கியமானது இலைகள், மரப்பட்டைகள் போன்றவைகள். சில காலம் வரையில் இவற்றைக்கொண்டு அரைகுறையாக இனப்பெருக்க உறுப்புகளை மறைத்துவந்த மனிதர்கள் யோசித்ததன் விளைவால், பின்னல் முறை கிட்டியது. முதலில் தென்னை, பனை போன்ற மரங்களின் கீற்றுகளை பின்னல் செய்து நீண்ட நாட்களுக்கு உழைக்கும் தடுப்பு, மறைப்புகளை உருவாக்கினார்கள்.

பின்னர் அவ்விதியைக்கொண்டு பஞ்சுக்காய்களிலிருந்து பஞ்சை எடுத்து நூலாகத்திரித்து அதைக்கொண்டு பின்னல் செய்து துணிகளைக் கண்டுபிடித்தவன் மனிதன். துணி கண்டுபிடித்தபின் மேற்படி பிரச்சினைகளுக்கு ஓரளவு நல்ல தீர்வானதுடன் மழை, குளிர் போன்ற நேரங்களில் தாக்குப்பிடிப்பதற்கும் உடலைச்சுற்றி பாதுகாத்துக் கொண்டார்கள்.

இதையடுத்து துணிகளை ஊசிகளைக்கொண்டு கைகளால் தைத்து அணிந்தார்கள். இவ்வாறாக வந்த பல ஆடைகளை உருவாக்கிய வாழ்க்கை வழிகாட்டிகள் எந்தெந்தக் காலங்களில், சூழ்நிலைகளில் என்னென்ன வகை உடைகள் அணியலாம் என சிந்தித்ததின் விளைவாக இன்று வரையில் பலவித ஆடைகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. நபிபெருமானார் தன் இன மக்களுக்கெனப் பிரத்யேகமான ஆடைகளை அளித்திருக்கிறார்கள்.

## அவர்களின் ஆடைப்பிரிவுகள்

ஆண்ளுக்கு கைலிகள், பைஜாமா, பெரிய அங்கிகள், ஜிப்பா, குல்லா போன்றவைகள் உள்ளன. அவர்களின் ஆடைகள் நல்ல தொளதொளப்பாக உடலுக்கு நல்ல காற்றோட்டம் கிடைக்குபடியாகச் செய்யப்பட்டுள்ளன. வெப்பப் பிரதேசங்களில் வாழ்பவர்கள் இறுக்கமாக, மொத்தமானத் துணிகளை அணியும்போது அதிக வியர்வையால் தோல் நோய்கள், ஆஸ்துமா, உடல் நாற்றம்

போன்றவை ஏற்படுவதுடன் எந்த வேலைகளையும் எளிதாக, வேகமாகச் செய்ய இயலாது. இவற்றையெல்லாம் யோசித்தே இவ்வாறு அவர்களது ஆடைகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலும் வெள்ளை நிறத்தினாலான துவாரங்கள் கொண்ட தலைக்குல்லாய் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. இவ்விடத்திலும் அறிவுப்பூர்வ அணுகுமுறை புலப்படுகிறது. வெள்ளைநிறம் தலையில் விழும் சூரிய ஒளியை பிரதிபலித்து திரும்ப மேல் நோக்கி செலுத்துவதற்கும் அதிலுள்ளத் துவாரங்கள் வழியாகக் காற்று போவதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. உடலின் பிரதானப் பகுதியானத் தலைப்பகுதி அதிக சூடு அடையாமல் அதே நேரம் தேவையானக் குளிர்ச்சி பெறுமாறு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் குளிர்நாடுகளில் மொத்தமான குல்லாய்கள் அணியும் பழக்கமும் இருந்து வருகிறது.

## உணர்ச்சித்தூண்டாத பெண் உடைகள்

ஆண்களின் உடைகளைக் காட்டிலும் பெண்கள் உடை விஷயத்தில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது நன்றாகத் தெரிகிறது. வேறு எந்த மதத்திற்கும் இல்லாதத் தனிச்சிறப்பு இங்கே இருக்கிறது. முன்பே சொன்னதுபோல மனிதர்களின் காமப்பசி மிகவும் கொடூரமானது; அதிலும் குறிப்பாக ஆண்களின் காமவிருப்பத் தேவைக்கு அளவே கிடையாது. இதற்காக எதையும் செய்யக்கூடியப் பாதகர்கள் ஏராளமாக நிரம்பிக்கிடக்கிறார்கள்.

எனவே மனிதர்களின் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடாத நிலையில் நடந்துகொள்ளும் அவசியமும் கட்டாயமும் சமுதாயத்திற்கு இருக்கிறது. இதை ஏனைய மதத்தினர் ஏனோ புரிந்துகொள்ளவில்லை. அரைஇஞ்ச், கால் இஞ்ச், ஆடைகளோடு வீதிகளில் உலாவந்து உரிமை, சுதந்திரம், நாகரீகம், தர்மம் எனப் பேசுகிறார்கள்.

இம்மாதிரியானத் தொல்லைகள், குழப்பங்கள் இருக்கக் கூடாதென்பதில் இஸ்லாம் மார்க்கம் உறுதியாய் இருப்பது அச்சமுதாயத்தின் மாபெரும் வெற்றிகளுள் ஒன்று. மாதரை முக்கால் மேனி திறந்த உடம்புடன் மற்றவர்களுக்குக் கவர்ச்சிப் பதுமைகளாகப் பஜாரில் சுற்றிவரவிடுவது அங்கில்லை. அவர்களுக்கெனப் பிரத்தியேகமானத் தனி உடைகள் உள்ளன. பெண் உடலின் எப்பகுதியும் வேற்று ஆடவா. பார்க்க முடியாதபடி அமைத்திருப்பதால் திடீர் காம உந்துதல்களும் அதைத் தொடர்ந்தத் தொல்லைகளும் ஏற்படாமல் தடுக்கப்படுகிறது.

துரதிஷ்டவசமாக இப்போது சில இடங்களில் மற்ற மதத்துப் பெண்டிரைப்பார்த்து இச்சமுதாயப் பெண்டிர் தூண்டப்பட்டு ஆடைகளில் எல்லைத் தாண்டுதல் ஆங்காங்கே சிறிதளவு காணக்கூடியதாய் இருக்கிறது. அவர்கள் தங்கள் மதத்தின் வழியே சிறந்தது என்பதை உணர வேண்டும். எதற்காக பிற மக்களுக்கு தங்கள் அழகை, உடலை கட்டம் போட்டுக் காண்பிக்க வேண்டும். இதனால் செல்வம், அறிவு, வீரம், அழகு, மதிப்பு கூடிவிடுமா? இதன் அர்த்தம் புரிவதேயில்லை. தவறான உள் மனங்களின் பிரதிபலிப்பாகவே அரைகுறை ஆடைகளை எடுத்துக்கொள்ள முடிகிறது. அதுவும் சிலபல செயற்கைப் பிதுக்கல்களுடன் எதற்காக இம்மாதிரி நடந்துகொள்ள வேண்டும். உடல் நலம், மரியாதை, பொருளாதாரம், சமையல், உணவு போன்றவற்றை இது தருகிறதா, பின் எதற்காக என விபரமறிந்தவர்கள் விளக்கட்டும்.

முதலில் ஆடைமுறைகளில் ஒழுங்கு வரும்போது சமுதாயத்தில் மற்ற ஒழுக்கங்கள் தானாகவே வந்துவிடும். மேல்நாடுகளில் மிக மோசமான ஒழுக்கக் கேடுகளுக்கு பெண்களின் படுபயங்கரக் கவர்ச்சி உடைதினுசுகள் ஒரு இமாலயக் காரணம் என்றால் அது மிகையாகாது.

## பொருத்தமற்ற மேல்நாட்டு பெண் உடைகள்

பல மேல்நாடுகளில் பெரும்பகுதி குளிர்காலமாக இருக்கிறபோதிலும் பெண்கள் உடலின் பெரும்பகுதி தெரியும்வண்ணம் கவர்ச்சி உடைகளை அணிகிறார்கள். அவர்களுடைய கோடைக்காலமும் நம்நாட்டைப்போல் அதிக சூடு இல்லாதது. இவ்வாறானக் குறைந்த வெப்ப நிலைகளில் காமத் தூண்டுதல்கள் மிக விரைவாக நிகழ்கிறமாதிரி இயற்கை அமைந்துள்ளது. நியாயமாகப் பார்க்கையில் குளிரைச் சமாளிக்க உடல் முழுவதையும் மூடும்படியான உடைகளே அவசியமாகியிருக்க வேண்டும்.

ஆனால் இந்த சூழ்ச்சிக்கார ஆண்கள் தங்களுக்கு குளிரைத்தாங்கும் வண்ணம் உடலை மறைக்கும் கோட்டு சூட்டு போட்டுக்கொண்டு பெண்களை திறந்த உடம்புகளுடன் திரியவிட்டிருக்கின்றனர். ஆண்களின் சுயநலக் கண்டுபிடிப்புகளின் உருவாக்கங்களே பெண்களுக்கான இக்கவர்ச்சி உடைகள்.

பெண்களை ஒட்டு மொத்தமாக இலவசமாக காலகாலத்திற்கு ரசித்துக் கொண்டிருப்பதற்கு இவ்வுடைகள் பயன்பட்டு வருகின்றன. இதை இப்பெண்மணிகள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை ஓரளவுக்கு உணர்ந்திருப்பினும் அவர்களின் ஒரு வகை ருசிக்காகவும் இப்படி நடக்கிறதா? ஒன்றும் புரியவில்லை.

இஸ்லாம் இதற்கெல்லாம் பெரிய முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது. இந்தவகையானக் கலாச்சாரச் சீர்கேடுகள் எக்காலத்திலும் ஏற்படாவண்ணம் இந்தவகை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது ஒரு மேன்மையானத் தொலைநோக்குத் திட்டம் என்பதை எங்கும் மறுக்க இயலாது.

## தர்மம்

தர்மம் தலைகாக்கும் என்பதையும், தர்மமே உலகத்தின் மிகச்சிறந்த செயல் என்பதையும் பறைசாற்றுகிறது இஸ்லாமியம்.

வாழும் காலத்தில் செய்யவேண்டிய முக்கியக் கடமைகளுள் ஈகை செய்தல் இன்றியமையாதது. ஈகை செய்யா மனிதனை, மனிதனாகக் கருதவியலாமல் விலங்காகவே கருத முடிகிறது. ஆண்டு சம்பாத்தியத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதப்பகுதியைக் கட்டாயமாகத் தருமத்திற்கு ஒதுக்கி அதைச் செயல்படுத்துவதை வலியுறுத்திவருவது இச்சமுதாயத்தில் மட்டுமே. மற்ற மதங்களில் சுயநலங்களுக்கு அதிக வழிகளுள்ளது போல் புலப்படுகிறது. இருப்பினும் மற்ற மதத்தினிலும் பெரும் கொடையாளர்கள் உள்ளதை ஒதுக்கி மறைத்துவிட கூடாது.

உறவினர்களுக்குள் வறியவர்களிருந்தால் அவர்களுக்கு கூட்டாக உதவிசெய்து உயர்த்திவிடுவது இம்மதத்தினரின் சிறப்புகளுள் ஒன்று; ஏழைப்பெண்களுக்குத் திருமணம் செய்துவைப்பது இங்கு மிக அதிகஅளவில் காணமுடிகிறது. வாழும் காலத்தில் செலவுசெய்ய அஞ்சாத மக்கள் கொண்டது இச்சமுதாயம். அவ்வாறு வாழும் காலத்தில் செய்து மகிழாமல் செத்து மண்ணாகி காற்றில் கலந்தபினனரா செய்ய இயலும். எனவே மற்ற மதத்தினரும் ஈகைக் குணங்களை இவர்களிடமிருந்து கற்க வேண்டும்.

## இறப்பின் சிறப்பு

இறப்பு என்பது எத்தனை அவசியமானது என்பதை புரிந்துகொண்ட மார்க்கம் இது. பிறந்திருப்பவரெல்லாம் இறப்பில்லாமல் இங்கேயே இருக்கிற மாதிரி ஒரு சூழ்நிலை இருப்பதாக ஒரு பேச்சுக்காக வைத்து அதன் விளைவுகளை எண்ணிப்பாருங்கள். இப்போதிருப்பவர்களுக்கு நிற்பதற்கு கூட இடமில்லாமல் போயிருக்கக் கூடியது மட்டுமின்றி இவர்கள் பிறந்திருக்கத் தேவையான ஒருதுளி இடம்கூட கிடைத்திருக்க வாய்ப்பில்லாமல் போய்விடும். எனவே மனிதர்களின் இறப்பு மிகஅவசியமானது, போற்றிக் கொண்டாடப்பட வேண்டியது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளுதல் அறிவுடைமையாகும்.

சிறு வயதில் அகால மரணமடைவர்களுக்காக மட்டும் வருத்தப்படலாகும். வயதானவர்களின் இறப்புகளைக் கொண்டாடி மகிழ்வதே மாண்பு. அப்போதுதான் இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய ஏதுவாகும். ஒவ்வொரு மனிதரும் தங்கள் இறப்பை ஏற்றுக்கொள்வதற்கு வயதான இயலாத காலத்தில் இறப்பை எதிர்நோக்கிக் காத்திருப்பதற்கு மனம் பக்குவமடைய வேண்டும். இக்கருத்தை ஒவ்வொரு மனிதரும் மற்ற மனிதர்களுக்குப் புரியும்படி செய்யவேண்டும். பிறந்து வாழமட்டும் ஆசைகொள்ளும் மனிதர்கள் இறப்பதற்கு ஆசைப்படுவதில்லை. இறப்புகளை விரும்பி ஏற்கும் மனநிலையை மனிதன் பெறும்நிலை வரவேண்டும். அப்போதுதான் மற்றவர்கள் குறிப்பாக இளையவர்கள், வரஇருப்பவர்கள் வாழமுடியும். தங்களால் முடியாத நிலைக்கு வந்தபிறகு அதை மனப்பூர்வமாக உணர்ந்து இறக்கும் நாளை வரவேற்பதில் ஆர்வமாக இருக்கும்படியாகச் சமுதாயம் மாற வேண்டும்.

இந்தப்பூமிக்கு வந்திறங்கி எல்லா ஆட்டப்பாட்டங்களும் போட்டு ரசித்து, ருசித்து, புசித்து அனைத்தையும் அரைகுறையாகவாவது அனுபவித்தவர்களுக்கு இன்னமும் பல ரகங்களுக்கு மேலும் ஆசை, பேராசை மேலோங்குகிறது. இதற்கு முக்கியக் காரணங்களுள் ஒன்று, பலருக்கு அவர்கள் விரும்புகிற அளவினில் திருப்தி ஏற்படாதது என்பதாக இருக்கக்கூடும். இது இன்றையத் தற்போதைய நிலைமையில், வாய்ப்புகளில் இயலாத காரியமாகப்படலாம். ஒருவேளை இன்னும் சில காலங்கழித்து மக்கள் மனங்களில் சமுதாய பொருளாதார நிலைகளில் மாற்றம் வரும்போது திருப்தியின் சதவீத உயர்வு கூடுதலாகக் கூடுவதற்கான வாய்ப்பு ஏற்படலாம்.

## தீரா ஏக்கம்

குறிப்பாக ஆண் மனிதவர்க்கத்தில் எண்ணற்ற மனிதர்கள் இதயங்களினூடே மிக நுணுக்கமாகப் பயனித்தபோது ஏறக்குறைய

அனைவரும் ஒரு விஷயத்தில் ஏக்கப்பெருமூச்சு விட்டு அலைகிறார்கள். அவர்களின் பல்வேறு வகையிலானக் காமருசிகளின் தேவைகள் பூர்த்தியாகாமல் சாகும்வரை பலரும் ஏக்கத்துடனே வாழ்கிறார்கள் என்பது மகாஉண்மை. மனிதர்களில் பலர் செய்யும் பல முன்னேற்றக் காரணங்களுக்கு, சுயவிளம்பரங்களுக்கு ஒரு மறைமுகமான அடிப்படைக் காரணங்களுள் ஒன்றாக எதிர்பாலினத்தைக் கவரும் எண்ணம் கொண்டதாக இருக்கிறது. தோற்றம், நடை, உடை, பாவனை, குணம், பழக்க வழக்கங்கள் இவையனைத்திற்கும் ஒரு முக்கியக் காரணமாக மேற்ச்சொன்னதைச் சொல்லலாம். இந்தவகையிலான காமத்திலான இனக்கவர்ச்சி இல்லாதிருந்தால் மனிதர்கள் காட்டுமிராண்டிகளாகவே இருந்திருப்பார்கள்.

இத்தனைவிதமானக் கண்டுபிடிப்புகள், மொழிகள், கவிதைகள், கதைகள், இசைகள், சிற்பங்கள், ஓவியங்கள், நாட்டியங்கள், அறிவியல், அன்பு, காதல் உட்பட எதுவுமே இவ்வுலகிற்குக் கிட்டாமல் போயிருக்கும். எனவே இயற்கையின் அற்புத வழங்கல்களில் இன்றியமையாததாக விலங்கினங்களுக்கு காமம் என்னும் பொருளைக் கொடுத்திருப்பது அதிசயத்தக்கதாக இருக்கிறது. சிந்திக்கும் தன்மை பெற்றிருக்கிற மனிதவிலங்கு இதன்மூலமாகவே எல்லாப்பயன்களையும் பெற்றிருக்கிறது.

விலங்குகளில் கூட பால் இனக்கவர்ச்சியில் வெற்றி பெறுவதற்கு போட்டிகள், மிடுக்கு வேலைகள், கொடூரச் சண்டைகள், கொலைகள், வெற்றி தோல்விகள் என அனைத்தும் அரங்கேறி இன்று இந்த நிகழ்வுகளில் சிலவற்றை சர்வசாதாரணமாகத் தெரு நாய்களிடையேகூட காணமுடிகிறது. மனிதர்களைவிடவும் திறமையாக, தந்திரமாக **அந்த** நேரங்களுக்கு முந்தைய சமயங்களில் ஆண் நாய்கள் பெண் நாய்களிடம் செய்யும் உடல் சேட்டைகள், கொஞ்சுவது, கெஞ்சுவது போன்றவை வியப்பளிக்கும் வகைகளில் இருக்கின்றன. பெண்நாயும் தன் பங்குக்கு ஒத்துழைப்புக் கொடுத்து

அன்பு விளையாட்டுகளில் ஈடுகொடுக்கிறது, சில சமயங்களில் மிஞ்சவும் செய்கிறது.

## திருப்தியாக இறக்கும் காலம்

வருங்காலங்களில் எல்லா மனிதர்களும் இந்த விஷயத்தில் அதிகப்படியானத் திருப்தி அடைவதற்கு வழிவகைகள் வருவதற்கான வாய்ப்புகள் கூடிவருகிறது. அதற்கான உபாயங்களாக இப்போது இருப்பவைகளுடன் வேறு புதியனவும் வரஇருக்கின்றன. இந்த நிலை வந்த பிறகாவது அடுத்தவர்களைத் துன்புறுத்தாமல் இன்பமடைந்து வாழ்நாட்களை ருசிப்பதோடு சுய இறப்புகளை மனிதர்கள் ஆர்வமாக வரவேற்கும் நிலை வரவேண்டும்.

மிக வயதானவர்கள் இறந்ததற்காக அதிகப்படியானத் துக்கம் கொண்டாடுவதை அறியாமை என்றே கூறவேண்டியிருக்கிறது. அவர்களை இறப்புக்கு முன்னர் போற்றிப்பராமரிப்பதே சிறப்பு. உயிருடன் வாழும் காலத்தில் நல்ல அன்பு, கருணை, ஆதரவு காட்டுவதே போற்றுதற்குரியது. அவ்வாறின்றி செத்தபிறகுச் சிலாகிப்பது சித்துவேலை செய்வது போன்றது. உலகை ஏமாற்றுவதற்காக இப்படியான நாடகங்கள் எங்கேயும் பரவலாக நடக்கின்றன. இவ்வுலகில் மிகச்சிலருக்காக மட்டுமே இறப்பிற்கு பின்னரும் உண்மையான வருத்தம், துக்கம், நினைவு போன்றவை நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்கிறது.

## மனித எண்ணிக்கை குறைவது அவசியம்

எப்படியாகினும் மனிதர்கள் இறக்கவேண்டுவது மிகமிக இன்றியமையாதது, இன்றைய மக்கள் பெருக்கத்தில் எவ்வளவுக்கெவ்வளவு மனிதக்கூட்டம் குறைகிறதோ, அது எவ்வகைகளாக இருப்பினும் பரவாயில்லை. இயற்கைச் சீற்றங்கள், போர்கள், கலவரங்கள், விபத்துக்கள் போன்றவைகளில் ஏற்படும் எதிர்பாராதத் திடீர் இறப்புகளையும் இதில் சேர்த்துக்கொள்வதில்

தவறில்லை. அவர்களின் இறப்புகள் நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் அது நடப்பதை எவர் தடுக்க இயலும். வயதான காலத்தில் மிகுந்த நோய்வாய்பட்டு இனி பிழைக்கமாட்டார் எனத்தெரிந்தும், பிழைத்தாலும் நடைபிணமாகச் சிலநாட்கள் அல்லது வாரங்களுக்கு மட்டுமே உயிருடன் இருப்பார் என்கிறபோதிலும் அவரை அவருடைய வாரிசுகள் வைத்தியம் என்ன பெயரில் வாட்டி வதைப்பது தேவையற்றது, டாக்டர்களுக்குதான் லாபம்.

இஸ்லாமிய மதத்தில் இறந்தவுடன் பிணமாகிப்போன அந்த முன்னால் மனிதரை வைத்துக்கொண்டு ஒப்பாரிபாடி, அழுது புரண்டு, நாடகங்களாடி நீண்ட நேரத்திற்கு நாழிகைகளை நகர்த்திக் கொண்டிருப்பதில்லை. எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக அடக்கம் செய்துவிடுகிறார்கள். இந்தியாவைவிட வளைகுடா அரபுநாடுகளில் மிகவிரைவான பிணஅடக்கங்கள் செய்யப்படுவதாகக் கூறுகிறார்கள். இஸ்லாமியர்கள் வேறுசில மதங்களில் உள்ளதுபோல் இறந்துபோன பிறகு இருக்கும் மனிதப் பச்சைக்கறியை எரித்து விஷப்புகையை உண்டாக்கி சுற்றுப்புறங்களில் பிணவாடை எனும் கொடும்நாற்றத்தை ஏற்படுத்தி சுற்றுப்புறத்தை மாசுபடுத்துவதில்லை. அதன்மூலமாக இறந்த மனிதர்களை சிலர் இகழ்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதில்லை. அவ்வாறே வயதானவர்கள், குழந்தைகள், ஆஸ்துமா, மூச்சுத்திணறல் போன்ற நோயுள்ளவர்களுக்கு சிரமம் கொடுப்பதில்லை. மனிதர்களின் பல நோய்களுக்குண்டான எண்ணற்றக் காரணங்களின் கலவைகளுள் இவை போன்றவைகளும் சேர்ந்துதான் செயல் படுகின்றன.

இந்து மதத்திலும் சில பிரிவினரில் வயதானவர்கள் இறந்தபிறகு சவ அடக்கம்வரை ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம், வான வேடிக்கைகளுடன் விழாப்போல நடத்தப்படுகிறது. இறப்புகளை இம்மதத்திலும் பலர் சந்தோசமாகப் பாவிக்கிறார்கள் என்பது இதன் அர்த்தமாகிறது. உலகிலுள்ள சில நாடுகளிலும் ஒருசில மதங்களின்

உட்பிரிவுகளிலும் திருமண விழாக்களைவிட இறப்பு விழாக்கள் மிகந்த குதூகலத்துடன் கொண்டாடப்படுவதாகச் செய்திகள் கிடைக்கின்றன.

### சுன்னத் சிறப்புகள்

இறைதூதர் நபிகள்நாயகம் அவர்களின் உன்னத வழிகாட்டுதல்களில் ஆச்சரியப்படவைக்கும் ஒன்று இருக்கிறது; அந்த ஆச்சரியம் அபூர்வமான கண்டுபிடிப்பான '**சுன்னத்**' என்பதாகும். இதன் சிறப்பை, அவசியத்தை சிந்தித்துப்பார்த்தால் பல உண்மைகள் புலப்படுகின்றன. உலகில் நபிபெருமானாருக்கு முன்னும், பின்னும் பல மதங்களில் இறைதூதர்கள் பலர் வந்திருக்கலாம். மிகப்பெரிய விஞ்ஞானிகள் தோன்றி எண்ணற்ற பல புதிய பொருட்களை, தொழில்நுட்பங்களை வழங்கியிருக்கலாம். ஆயினும் நபிகள்நாயகம் அவர்களின் இறைவழிக் கண்டெடுப்புகளில் ஒன்றான '**சுன்னத்**' எனும் முறைக்கு ஈடாகச் எதையும் சொல்ல முடியவில்லை.

### ஈடு இணையற்ற கண்டுபிடிப்பு

அது ராக்கெட், சாடிலைட் டெக்னாலஜியாகட்டும், கம்ப்யூட்டராகட்டும் அல்லது ஐன்ஸ்டீனின் $E=mc^2$ என்ற கோட்பாடாகட்டும் எதுவாயினும் இதனருகில் வரஇயலாது. வாழ்க்கையின் அடிப்படை சரிவர அமைந்தால்தான் எதுவும் பூரணத்துவம் பெறமுடியும். இஸ்லாத்தைத் தவிர மற்ற எல்லா சமயங்களும் ஒரு முக்கியமான பாடத்தில் கோட்டைவிட்டிருக்கிறார்கள். அதிலும் சமீபகாலமாக புறஅழகில் வலிமை தெரிகிறதேயொழிய அக அழகு வலிமைக் குன்றியதாகக் காணப்படுகிறது.

### பூட்டவியலாத செயற்கை காமப்பூட்டு

வாழ்க்கையின் உல்லாசம், சுகம் காணுவதற்கு படிகற்களான வலுவான சிற்றின்பத்தின் மூலம் பேரின்பம் காணும் தத்துவம் வலுவிழந்துத் தோன்றுகிறது. சிற்றின்பத்தின் மூலம் பேரின்பம்

காணுவது சாமான்ய மக்களுக்குச் சாத்தியமான மிக ஆவலான அவசியமாகிறது என்ற உண்மையினை ஒத்துக்கொள்ள வேண்டும். சிற்றின்பத்தில் அல்லாமல் தியானம், யோகம் போன்றவற்றின் மூலமாக ஆன்மா, பேரின்பம் அடைவதென்பது மிகக்குறைவான மேதை மக்களுக்கு வேண்டுமானால் சாத்தியமாகக்கூடும். இதிலும்கூட எத்தனை சதவீதத்திற்கு நடைமுறை அனுபவத்தில் உண்மை இருக்குமென்பது பெரும் கேள்விக்குறியதாக நிற்கிறது. ஒருசில மதங்களில் இப்படியானக் காரியங்களில் ஈடுபட்டிருந்த தலைமை மனிதர்கள் முதல் சாதாரண மனிதர்கள் வரை தலைகீழ் மாற்றமாக நடந்துகொண்டது அவ்வப்போது சிரிப்பாய் சிரிக்கிறது. இதை எட்டு திசைக்கும் கூவல் போட்டு பறை அறிவித்தாகிவிட்டது.

சமீப காலமாக சாமியார்கள், சாமியாரினிகள், மடாதிபதிகள், பாதிரியார்கள் அதிலும் மிக வயதானவர்கள் போட்டு வரும் திருட்டுக் காமஆட்டம், அதற்குத் தேவையாகக் கொலை, கொள்ளை வரையான பக்க ஒத்து ஊதல் வேலைகள் என எல்லாமும் எல்லாவற்றையும் தவிடு பொடியாக்கிவிட்டது. இறுதியில் இவர்களும் தோற்றுப்போய், சாதாரண மனிதர்களைவிடக் கேவலமாக மிகக் கீழேபோய் பொறுக்கி, கேடிகளாய் பரிணமிக்கின்றனர். ஏன் இந்த பொய் வேடங்கள். இயற்கை என்ற ஒன்றிருக்கிறது, அதுபல விடயங்களை பளிச்செனப் பகன்று கொண்டிருக்கிறது. இவர்கள் இயற்கைக்குப் புதுச்சாயம் பூசி, புது வடிவம் கொடுக்க முயற்சித்து தோற்கிறார்கள். தியானம், யோகம் எனத் தனியாகப் பிரித்து பாடம் நடத்தி வருகின்றனர்.

## சாதனை மனிதர்கள் வழி

சென்ற காலங்களில் உலகம் முழுவதும் ஏதேதோ மொழிகள் பேசி, எதையெதையோ உண்டு வாழ்ந்த மனிதர்களின் சாதனைகள் இவர்களுக்குத் தெரியாததல்ல. இன்றைக்கு உலகிலுள்ள அனைத்து இருப்புகளையும் ஊடுருவி, உருவாக்கி வார்த்தெடுத்து வழங்கியவர்கள்

எந்தவகைத் தியானங்கள், யோகங்கள், இன்னும் எவை இருக்கிறதோ அவற்றையும் தனியாகப் பிரித்து செய்ததாக அவர்கள் சொல்லவில்லை.

அவர்கள் செய்த காரியங்களில் முழு மூச்சாக உண்மையான மனப்பூர்வமான ஈடுபாட்டுடன் இருந்து, மிகமிக ஆழமாகச் சிந்தித்து பல பரிசோதனைகளை மேற்கொண்டு பரிசளித்திருக்கிறார்கள். ஜென் மார்க்கத்தில், இவ்வகையான நடத்தையை ஒரு தியானம் எனப்படுகிறது. சித்தர்கள் இவ்வாறு செயல்பட்டதால்தான் பல அற்புதங்களை வழங்கியிருக்கிறார்கள். விஞ்ஞானிகள், தத்துவ ஞானிகள் ஆகியோர் சித்தர் போன்றவர்களாகிறார்கள்.

எந்தவித நோக்கம், செயல் இல்லாமல் கண்களை மூடி அல்லது திறந்து வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் தற்காலிகமாக மறந்து, இந்நாளில் தியானம், யோகம் என்பவற்றை செய்கிறார்கள். இச்சமயங்களில் எப்போதும் இயல்பாக இயற்கையாக நடந்து கொண்டிருக்கும் சுவாசத்தில் சில மாற்றங்கள் செய்து சுவாசக்காற்றை பலவிதமாக நுரையீரல்களுக்குள் இழுத்து சற்று நிறுத்தி வெளியிட்டு செய்வது போன்ற செயல்கள் நல்ல பல பலனைத்தருவதாகச் சொல்கிறார்கள். இதன் பயனை அனுபவித்தவர்கள் அனுபவப் பூர்வமாக சொல்கிற காரணத்தினால் ஏற்றுக்கொள்வோம்.

என்றபோதிலும் இதைவிடச் சிறப்பாக, ஒரு பயனுள்ள காரியத்தில் முழுமையான கவனத்தைச் செலுத்தி, வெற்றியளிக்கும் முயற்சிகள் இதைவிட கூடுதலாக வரவேற்கத்தக்கதாக இருக்க வேண்டாமா. மனம் ஒரு குறிப்பிட்ட ஆக்கப்பூர்வமானச் சிந்தனையில் ஆழ்ந்திருப்பது சாதாரணத் தியானத்தைவிட வலுவானப் பலனளிப்பதாக இருக்கலாம்; இதற்கே மனிதர்கள் முதலாவதாகப் பழகுதல் வேண்டும்.

இதனை மேற்கொண்டுதான் பல நூறாண்டுகளுக்கு முன்பே வாழ்ந்த மேலைநாட்டினர் தாங்கள் மேம்பட்டு இவ்வுலகையும்

மேன்மை படுத்தியிருக்கிறார்கள், பல அற்புதங்களை வாரி வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் வழங்கியுள்ள ஒளி, ஒலி பெருக்கி சாதனங்களை, மின்சாரத்தை பயன்படுத்தி பெரும் கூச்சல் போடுவது, அவர்களால் தரப்பெற்ற காகிதங்களில் செய்யும் எழுத்துப்பதிவைக் கொண்டு கதைவிடுவது என எல்லாம் இங்கே கணக்கச்சிதமாகக் கரையேற்றப்படுகின்றன. கேட்பவன் கேனன் என்றால் சொல்பவன் எதை வேண்டுமானாலும் சொல்வான் என்றொரு நாட்டுப் பழமொழிக்கேற்ப இருசாராரும் இங்கு மிகுந்துள்ளனர்.

## தியானம் செய்யாதவர்கள்

உலகில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் மிகப்பெரும்பகுதியினர் தியானம், யோகம் போன்றவற்றைச் செய்யவில்லை. குறிப்பாக கிராமப்புறத்துச் சகோதர சகோதரிகள் இதைப்பற்றி எல்லாம் தெரிந்துகொள்ளாமல் உழைப்பில் மட்டும் கவனம் செலுத்தி உயர மனம் வளர்க்கிறார்கள். உழைப்பின் அயர்வில் உறங்கிவிடுகின்றனர். இவைகளுக்கு அவர்களிடம் நேரமில்லை. ஒருவேளை நகர்புறத்து வேலைக்குறைவானவர்களுக்கு இது அவசியமாகப்படலாம். மேலும் இது சுயநலத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. பொதுநலனுக்கு சம்மந்தமற்றது என்றே கூறமுடிகிறது.

## மனிதப்பசி வகையறாக்கள்

எனவே உலகின் பெரும்பாலான மக்களின் வாழ்வியல் நடைமுறை உண்மை, சாத்தியக்கூறுகள் எவையெவை என எண்ணிப்பார்க்க வேண்டியதாகிறது. முக்கியமான நான்கு பசிகளான வயிற்றுப்பசி, உடல்பசி, அறிவுப்பசி, செல்வப்பசி போன்றவை மனிதர்களுக்கு இருப்பது எல்லோருக்கும் தெரிந்தது. மூன்றாவதான அறிவுப்பசி பலருக்கு கட்டாயமற்றதாகலாம். ஆனால் முதல் இரண்டு பசிகளில் மனிதன் விலங்குகளைவிட மோசமானவன். அந்த

முதலாவதைக் காட்டிலும் இரண்டாமவதற்காக எதையும் செய்யும் குணம் கொண்டது இந்த மனிதம்.

இதைப்பற்றிய கொடூரமான பல நிகழ்வுகளை தற்கால வரவாகியத் தொலைக்காட்சியிலும் சென்றகாலத் தொழில்நுட்பத்தின் தொடர்கதையான செய்தித்தாள்கள், பத்திரிகைகளில் தினசரி காணமுடிகிறது. எத்தனை ஆயிரம் வித்தியாசங்களில், தந்திரங்களில் மனிதர்கள் இதற்காகச் செயல்படுகிறார்கள், தவறிழைக்கிறார்கள் அல்லது தவறுகிறார்கள் என்பதை நோக்கும்போது இதன் அவசியத்தின் பரிமாணம் வெட்டவெளிச்சமாகிறது. இதுவே மற்ற எல்லாவற்றையும்விட வாழ்க்கையின் மிகப் பிரதானமானதாகக் கருதக்கூடியதற்கானச் சூழ்நிலை பரவலாகப் பரவிக்கிடக்கிறது. இங்கே வந்திருக்கிற கருத்துக்கள் பெரும்பான்மை மனிதர்களுக்கென்பதற்கன்றி மிகச் சிறுபான்மை மாற்றுக்கருத்து, கொள்கையுடைய அக்கட்சியினருக்கானதல்ல.

மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒரு ஒழுங்குக்குள் கொண்டுவந்து குடும்பம் என்ற அமைப்பை உருவாக்கியிருப்பதை நாம் அறிவோம். இந்தக் குடும்பத்தின் இரு தூண்களாக அதைவிடவும் இரு கண்களாக உள்ள இந்த ஆணையும், பெண்ணையும் இறுதி வரையில் எவ்வாறு ஒன்றாக்கி ஒற்றுமையுடன் இயக்குவது என்பதற்கு பலர் பல கோணங்களில் அணுகியுள்ளனர்.

## வலிமையான இல்லறத்திற்கு வழி

இந்தப் பேரியக்கத்தின் பெருமையை, அவசியத்தை அணு அணுவாக ஆராய்ந்திருக்கிற நபிகள்நாயகம் ஒரு விடயத்திற்கு மிகமிகச்சிறந்த வழியை தன்மக்களுக்கு அருளியுள்ளார். இல்லறம் நல்லபடியாக இருப்பதற்கு வலிமையானத் தாம்பத்தியத்தின் முக்கியத்துவத்தினை முதிர்ச்சியுடன் நுகரப்பட்டுள்ளது. வலிமையான, இயற்கையான, இன்பமயமானத் தாம்பத்திய வாழ்க்கைக்கு இருபாலருக்கும் நீண்ட உடல் வலுவுடன் கூடிய நீண்ட நேர

திருப்தியினப் புணர்ச்சி தேவை என்பதைத் துல்லியமாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். எந்த கண்டுபிடிப்புகளும் எளிதில் கிடைத்துவிடாது. நீண்ட நாட்கள் தொடர்ந்த ஆழ்ந்த ஆய்வுகளின் மூலமே முடிவாகி உறுதி செய்திட இயலும்.

நல் இல்லறத்தின் வெற்றிக்கான முதல் தேவையாகிய நீண்ட நேர சக்திவாய்ந்த மனிதப்புணர்ச்சிகளை நடைமுறையில் எவ்வாறு எளிதாக்குவது என்பதற்கு இஸ்லாமிய மார்க்கம் உலகின் வழிகாட்டியாகத் திகழ்கிறது. அவர்களின் உணவுகளில் தேவையான பல சத்துக்கள், புரோதங்கள் மிகுந்த அசைவ வகைகள் பிரதானமாக்கப்பட்டிருப்பதால் பரம்பரையாக வலிமையான உடல் கிடைத்துவிடுகிறது. இதுவே மகிழ்ச்சியான இல்லறத்தின் முதல் மருந்தாகிவிடுகிறது. இதற்கு இன்னும் சிறப்பு சேர்க்கிறது 'சுன்னத்' வழக்கம். 'சுன்னத்' என்பது ஆண்குறியின் முன்தோலை குறிப்பிட்ட அளவினில் வெட்டி, நிரந்தரமாக அத்தோல்பகுதி நீக்கப்படுவதென்பது பலர் அறிந்தது. இருப்பினும் அதனுள் புதைந்திருக்கும் விஞ்ஞானத்தை அதன் உண்மையை எவ்வளவு பேர் அறிந்திருக்கிறார்கள் என்பது பெரும் கேள்வி. ஏனெனில் இதன் மகத்துவம் புரிந்திருந்தால் உலகின் அனைத்து சமையங்களைச் சார்ந்த அனைத்து ஆண்களும் 'சுன்னத்' செய்து கொண்டிருப்பார்கள்.

அதில் அப்படி என்ன சிறப்புகள் உள்ளன என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். மேலைநாடுகளிலிருந்து கீழை நாடுகள்வரை இன்றைக்கு உள்ள ஆண்களில் கணிசமானப் பகுதியினரின் முக்கியப்பிரச்சினை ஒன்று உள்ளது. இதுவரை வெளிவந்தும், வராததுமான ஒளிவுமறைவான ரகசியம் ஒன்று இப்போது ஓரளவு வெளிப்படையாக்கப்படுகிறது. முன்னைய காலத்திலிருந்த மக்கள் கடுமையான உடலுழைப்புகளைச் செய்து, இயற்கை உணவுகளை நன்றாக கடித்து மென்று, தின்று வாழ்ந்திருந்தனர். மேலும் இப்போதுள்ள அவசர உலகின் தாக்கங்களினால் உண்டாகியிருக்கும்

மனம், நரம்பு, இரத்தம் போன்றவற்றின் வேறு நிலைப்பட்ட அழுத்தங்கள், தொய்வு, சோர்வு, அமைதியின்மை, சுற்றுப்புறக்கேடு, உண்மையின்மை, மகிழ்ச்சியின்மை போன்ற சாபக்கேடுகள் அக்காலங்களில் இருந்திருக்கவில்லை. ஒருவேளை இவைகள் இருந்திருந்தாலும் இந்தளவுக்கு இருந்திருக்க சற்றும் வாய்ப்பில்லை.

## மாத்திரை மருந்து மனிதர்கள்

எனவே அந்நாளைய ஆண்கள், பெண்கள் இயற்கையாக வலுவுள்ளவர்களாக விளங்கியுள்ளனர். ஆனால் இன்றைய உலகம் தலைகீழாய் போய்விட்டது. நமது இரசாயன உணவுகள், சக்கைகளை, அவசரமாக உண்டு வருகிற இன்றைய மனிதர்கள் அவ்வுணவுகள் போலவே ஆகிவிட்டார்கள். அனைவரும் மாத்திரை, மருந்து மனிதர்களாகிக் கிடக்கிறார்கள். மனிதர்களின் தலைகளைவிட மருந்துகடைகளின் பெயர் பலகைகள் அதிகமோ என நகைக்கும்படியாக உள்ளது இன்றைய இச்சமூக வாழ்வியல். இன்றைய பெண் கருவுறுவதிலிருந்து பிரசவம் வரை அனைத்தும் செயற்கையாக மருத்துவர்களின் மருந்துகள், கருவிகள் வழியாக நடைபெறுவது தவிர்க்கமுடியாததாகி வருகிறது. அதுபோல ஆண்கள் பலர் செயற்கையாகி அரை மனிதர்களாகி ஆண்மைக் குறைந்தவர்களாக உள்ளனர். இதற்கு முக்கிய காரணங்களாக இன்றைய கட்டாய மதுப்பழக்கம், புகைப்பழக்கம் மனைவியரின் எதிரிடைச் செயல்கள் மற்றும் விரும்பப்பெறாத மனைவியருடன் கட்டாயத்தில் வாழ்தல் போன்றவை என்றால் மிகையில்லை.

## ஆண்மைக்குறைவின் ஒருவகை

ஆண்மைக் குறைபாடுகளில் பல தினுசுகள் உள்ளன; அதிலொன்று விரைவாக விந்தணுக்கள் வெளியேறுவது ஆகும். இது உலகம் முழுவதிலுமுள்ள ஆண்களில் கணிசமானப் பகுதியினரின் பெருங்குறையாக இருக்கிறது. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பே

அமெரிக்காவில் நடத்தப்பட்ட இது சம்பந்தப்பட்ட சர்வே ஒன்று எதேச்சையாய் படிக்கக் கிடைத்தபோது அதில் அதிர்ச்சியான பல தகவல்கள் இருந்தன. அமெரிக்க ஆண்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஏதாவது ஒருவகையில் ஆண்மைக்குறைவு உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்றிருந்தது. அதில் சிறியது முதல் பெரியது வரையிலான வகைகள் அதன் சதவீத விகிதச்சாரங்களில் தரப்பட்டிருந்தது. அதற்கு பலவகையானக் காரணங்கள் கூறப்பட்டிருந்தது. அவற்றில் ஒரு காரணமாக அதிக சதவீத ஆண்மைக்குறைவிற்கு மேற்சொன்ன விந்து முந்துதல் என்பதாகும்.

இந்தவகை ஆண்மைக்குறைவினால் உண்டாகும் பாதிப்பு மற்றக்காரணங்களை விட மிகக்குறைவானது என்றபோதும், அந்நேரங்களில் திருப்தியின்மையையே ஏற்படுத்துகிறது. இந்தவகை கோளாறு பாதிப்புகளுக்கு அமெரிக்கர்கள் மட்டும் உரியவர்கள், மற்ற நாட்டவரெல்லோரும் முரட்டுக் காளைகள் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது; அவர்களைவிட மிக மோசமானவர்கள் எல்லா நாடுகளிலுமிருப்பார்கள்.

தென்னிந்தியர்களின் சத்துக் குறைவான உணவுப் பழக்கங்களினால் இப்பகுதிகளில் இப்பிரச்சினை பரவிக்கிடப்பதை மறைத்துக்கொண்டு மங்களம் பாடித்திரிகிறார்கள். இப்பகுதி வெப்பம் மிகுந்தது எனபதால் குழந்தை பிறப்பதற்கு வலிமையான ஆண்மை என்பது தேவையற்றது. சாதாரண நோஞ்சான் ஆண் ஒருவன் கூட ஒருநாளைக்கு ஓரிரு கருவுறுதலுக்கு வித்திட முடியும்.

## பெண்குழந்தைகள் பிறக்கக்காரணம்

பிறக்கும் குழந்தைகளின் பால் இனத்தை நிர்ணயம் செய்வது ஆண் மட்டுமே என விஞ்ஞானத்தின் ஒரு பகுதி கூறிக்கொள்கிறது. இது பல செய்திகளோடு ஒத்துப்போகக் கூடியதாயிருக்கிறது. உடலுறவில் ஆண், பெண் இருவரில் யார் கருவுறுதலின் நாளன்று அக்குறிப்பிட்ட

நேரத்தின்போது ஆளுமை, கூடுதல் ஆதிக்கம் செலுத்தி வெற்றி பெறுகிறார்களோ அவர்தம் பால்இனம் அக்கருவுறுதலினால் உண்டாகும் குழந்தைக்கு வருகிறது என உலகின் முடிசூடா கிரேக்கச் சிந்தனையாளன் அரிஸ்டாட்டில் சொல்யிருப்பதாக ஒரு துணுக்கு கிடைத்தது. இது ஒருவகையில் சரியென்பதாகப் படுகிறது. அவ்வாறாயின் இக்காலத்தில் பெண் குழந்தைகளின் அதிகமான பிறப்புகளுக்கு 'அதில்' பெண் ஆதிக்கம், வலிமை அதிகமாகிய காரணமாயிருக்குமோ! ஆண்கள் வலிமைகுன்றி அவசரத்தில் முடித்துக்கொண்டு அடங்கி விடுகிறார்களா. இப்போதுள்ள ஆண்களுக்கு இயற்கையான வலிமையில்லை என்பதற்கு எல்லாமும் மூலமாகி நிரூபனமாகிக் கொண்டிருக்கிறது.

இதுவரை கிட்டத்தட்ட மூன்றில் இரண்டுபங்கு குடும்பங்களில் முதலாவது பெண்குழந்தை பிறப்பிற்கும் அதையடுத்து இரண்டாவதாக ஆண்குழந்தை பிறப்பதற்கும் இது காரணமாக இருக்கலாம். பெரும்பகுதிப் பெண்கள் திருமணத்திற்கு முன் அதிகம் கட்டுப்பாடு இழக்காமல் ஒரு வேகத்தில் இருக்கும் நிலையில், பெரும்பகுதி ஆண்கள் பழைய தவறானப் பழக்கங்களின் காரணத்தால் வேகம் குறைந்து இருக்க வாய்ப்புள்ளது.

இக்காரணச் சூழ்நிலையால் பல குடும்பங்களில் முதல் குழந்தை பெண்ணாக இருந்திருக்கலாம். முதலில் பெண்குழந்தை பெற்றுவிட்டதால் தாய்மார்கள் வெளியில் காட்டிக்கொள்ளாவிடினும், உள்மனதில் அதை ஒரு குறையாக நினைத்து வருத்தநிலைக்கு சென்று வேகம் குறைந்து போகலாம்.

## ஆண்குழந்தைகள் அதிகம் பிறப்பதற்கு...

அதற்குமாறாக ஆண், அடுத்ததடவை ஆண்குழந்தைப் பெற்றிட வேண்டுமென உடலை, மனதை, செக்ஸ் ஆளுமையை அதிகப்படுத்திக்கொள்ளும் முயற்சியில் இறங்கலாம். இங்கே முதலில் ஆண்குழந்தை பெற்ற பெண்கள் திருமணத்திற்கு முன் அதிகம்

கட்டுப்பாடு இழந்து வேகம் குறைந்தவர்கள் என எடுத்துக்கொள்ளக் கூடாது. இதற்கென பலநாடுகளில் உள்ள பல அனுபவ கணக்கு வழக்குகள், உபாயங்கள், தந்திரங்கள், நாட்கள் அனுபவசாலிகளின் அறிவுரைகள், நாட்டு–வீட்டு மருந்துகள், சக்தி உணவுகள், டானிக்குகள் போன்றவற்றினால் ஊக்கம் கொள்கிறான். இதனால் இரண்டாவது குழந்தைக்கான செயல்பாட்டில் பெண்ணை அந்நேரத்தில் வெற்றிகொண்டுவிடுவதால் அதிகளவில் இரண்டாவது ஆண் குழந்தை பிறக்கிறதோ, என்னவோ? முழுமையாக யாருக்கும் தெரியாது.

அதிக இடைவெளிநாட்கள் விட்டு ஆணின் அதிக சக்தி சேமிப்புக் கூடுதலுடன் பின்னிரவுகளில் கூடுவது, ஆணுக்கு வலதுபுறத்தில் பெண் படுப்பது, கூடுதலின்போது ஆண் வெற்றிகொள்வதற்கு ஏதுவாக பெண் இயற்கையான மிகுந்த விருப்பத்துடன் விரைவாக உச்ச நிலையை அடைவது போன்றவை ஆண்குழந்தைகள் உருவாவதற்கு வழி வகுக்குமென ஒருசாரார் அனுபவ உண்மையெனக் கூறுகின்றனர்.

இது எதற்காக இங்கே கூறப்பட்டுள்ளதெனில், ஆண் குழந்தைகள் கூடுதலாகப்பிறந்து பெண் எண்ணிக்கைக்கு சமமாக அல்லது சற்று கூடுதல் எண்ணிக்கையில் அமைந்துவிட்டால், பெண்களின் மதிப்பு உண்மையிலேயே அதிகரித்து அவர்களின் தேவைக்கு போட்டி ஏற்படும். அப்போது ஆண்களைவிட பெண்கள் மிக உயர்ந்த உயர்நிலைப் பொருளாகி அவர்களிடம் நிச்சயமாக ஒழுக்கம் கூடி சமுதாயமும் மேன்மை பெற்று விளங்கும். இப்போதிருப்பது போல் ஆடைகுறைப்பு, கவர்ச்சி, விளம்பர போஸ், அம்மணம், விபச்சாரம், தீய தொழில்கள் செயல்களில் ஈடுபடுதல் போன்றவைகள் அவசியமற்றதாகி தொடரக்கூடாததோடு பல மதங்களில் கூறப்பட்டுள்ளதுபோல் பின்னாளில் பெண்கள் தொகை மிக அதிகரித்து தீமைகள் அதிகரித்துவிடக்கூடாது என்ற தொலை நோக்குப்பார்வையிலும் விரும்பப்பட்டதாலாகும்.

தமிழ்நாட்டில் கிராமம், நகரம் என எல்லா இடங்களிலும் சுறுசுறுப்பாக விறுவறுப்பாக வியாபாரமாகிக்கொண்டிருக்கும் 'டாஸ்மார்க்' சரக்குகள் பின்னாளில் பெரும் பயனைத் தரப்போகிறது. அரிஸ்டாட்டில் பிரகாரம் பார்க்கும்போது சம அளவிலான ஆண் குழந்தைகள் பிறக்க வேண்டுமாயின் இயற்கையிலேயே வலிமையான ஆண்கள் தேவையாயிருக்கிறார்கள். அதற்கு வருங்காலங்களில் சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை.

பலவகையான ஆண்மைக்குறைகளில் ஒன்றான விந்து முந்துதல் என்பதன் மூலம் ஆண்களில் பலர் ஒருவகையாகப் பாதிக்கப்படுவதை முன்னரே அறிந்தோம். இதற்கு. இக்குறைக்குப் பல காரணங்கள் இருப்பினும் பலரிடம் கேட்டறிந்ததில் ஒன்றைக் குறிப்பாகச் சொன்னார்கள். ஆண்குறியின் முன்பாகத்தில் ஏற்படும் விரைவானக் கூடுதல் உணர்வு, உணர்ச்சிகள் முக்கியமானதாகச் சொல்லப்பட்டது.

## சுன்னத்தின் மகத்துவம்

இங்கேதான் இஸ்லாமிய மார்க்கத்தின் அறிவியல் அணுகுமுறை ஆச்சரியமூட்டும் விதத்தில் விளங்குகிறது. அதாவது அவர்கள் முறைப்படி, ஆணுறுப்பின் முன்பகுதி தோல் நறுக்கப்பட்டு அகற்றப்படுகிறது. ஆண்குறியின் முன்பகுதி நிரந்தரமாகத் தோலால் மூடப்பாமல் செய்யப்படுகிறது. இது சிறு வயதுகளிலேயே சிறுவர்களுக்குச் செய்யப்பட்டு விடுவதால் பல ஆண்டுகளுக்கு ஆடைகளின் உராய்வினால் அப்பகுதியின் கூச்சம், விரைந்த கூடுதல் உணர்வு அகற்றப்பட்டுவிடுகிறது. சுற்றுப்புற வெப்பநிலையின் நேரடி ஈர்ப்பு நிலையில் இருப்பதால் மெல்லிய தோலையுடைய எப்போதும் திறந்த நிலையிலுள்ள அப்பகுதி மறத்துப்போவது கூடுகிறது. அதனுடன் இவ்வாறிருப்பது மற்றவர்களைவிட இவர்கள் அப்பகுதியில் அடிக்கடி சுத்தம் செய்து அழுக்குகள், கிருமிகள் நீக்கப்படுகின்றன.

அச்சமயங்களில் கைகளினால் ஏற்படும் உராய்வுகளினாலும் கூச்சம் மற்றும் விரைவாக உண்டாகும் உணர்ச்சி விலகுகிறது.

இதனால் ஏற்படும் பயன் யாதெனில், ஆண்மக்களால் கூடுதலான நேரத்திற்கு உடலுறவு கொள்ள முடிகிறது. இது இல்லற தாம்பத்திய வாழ்வில் திருப்தியை ஏற்படுத்தி மகிழ்ச்சியானக் குடும்பத்திற்கு வழிவகை செய்கிறது. உலக வரலாற்றில் இதற்கு அடிப்படையான, அவசியமான சுன்னத் முறையை ஈடு இணையற்ற ஒரு கண்டுபிடிப்பாகப் போற்றலாம். இப்படி இருக்கும் சூழ்நிலையில் வலிமையான உடலின் அவசியம் கூட இரண்டாம் பட்சம்ாகிப் போய்விடுகிறது. சுன்னத்தை தேவையற்றது இயற்கைக்கு புறம்பானது, முன்பகுதி தேவையில்லா நேரங்களில் மூடப்பட்டிருப்பதே நல்லது என சிலர் கூறுவதில் நியாயமில்லை. அதேநேரம் மருத்துவ அறிவியல் இதை வரவேற்கிறது. உடலைச் செயற்கையாக விண்ணம் செய்யக்கூடாதென்றால் காது, மூக்குகளில் எப்படி எதற்காக ஓட்டைப்போடுகிறார்கள், விளக்கம் தேவை.

இஸ்லாமியர்களிடம் ஆண்மைக்குறைவு என்ற சங்கதி மற்றவர்களை விட மிகக்குறைவாக அறியப்படுகிறது. இதற்கு அவர்களின் அதிகப்படியான புலால் உணவுகளும், இந்த அற்புதமான ‘சுன்னத்’ தும் காரணங்களென்பதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை.

மேலும் முகம்மதுநபி அவர்களின் இந்த அணுகுமுறைக்கு வேறு என்ன கூடுதல் காரணங்கள் இருக்கலாம் என சிந்திக்க வேண்டியுள்ளது. புணர்ச்சி நீடித்து இன்பம் பெற்றக் குடும்ப வாழ்வில் ஆண்டிற்கொரு குழந்தை அனாயசமாகப்பிறக்க வாய்ப்பு ஏற்பட்டது. இதன்மூலம் தன் இனம் வேகமாக வளர்ந்து உலகெங்கும் விரைவாகப்பரவியது. இன்னும் சில பத்தாண்டுகளில் இஸ்லாமியர்களே உலகின் முதலாவது அதிக மக்கட்தொகை கொண்ட பிரிவினராக இருப்பார்கள் என்பது உறுதியாகிறது.

இவற்றையும், மகிழ்ச்சியான இல்லறத்தையும் மனதிற்கொண்டும், ‘அங்கு’ எப்போதும் தூய்மை இருக்கவேண்டும் என்பதற்காகவும் இம்முறையை வழங்கி வழிகாட்டப்பட்டிருக்கலாம்.

## திருமண உறவு

## வலிமையானச் சந்ததியினர் உருவாக்கம்

முகம்மதியர்களின் திருமண உறவு ஏற்படுத்தல்களில் சரியான அணுகுமுறை கையாளப்படுகிறது. தாய், தந்தையருடன் பிறந்தவர்களை மணந்துகொள்ளும் முறை அங்கில்லை. வேண்டுமெனில் தாய் தந்தையர்களின் கூடப்பிறந்தவர்களின் வாரிசுகளுக்கு மணம் செய்விக்கிறார்கள். இந்து மதத்தில் சில பகுதிகளில் இருந்துவரும் தாயுடன் பிறந்த ஆணைத் திருமணம் செய்வதை அவர்கள் தவறு எனக் கூறுவது சரிதானே.

மேலும் மருத்துவ அறிவியலின் மூலமாகவும் இம்முறையைக் குறை கூறப்பட்டுள்ளது. வீரியமற்றச் சந்ததிகளுக்கு இது வழி வகுப்பதுடன் பிரசவக் கோளாறுகளை சிலருக்கு ஏற்படுத்துகிறது. எனவே இம்மாதிரி தவறுகளில்லாமல் வலிமையானச் சந்ததிகள் உருவாவதற்கு இஸ்லாத்தில் வழி சொல்லப்பட்டிருக்கிறது. இந்நாட்களில் இந்துக்களிடம் ஓரளவு இது ஏற்கப்பட்டு தாய் மாமன்களைத் திருமணம் செய்வது குறைந்து வருகிறது.

## உறவை, நட்பை கொண்டாடுகிறமுறை

வயதாகி நோயுற்றிருப்பவர்களை மிக விரைவாகப் போய் பார்த்து நலம் விசாரிப்பது அவர்களது நல் மரபு. அவ்வாறன்றி இறந்த பிறகு போய் பொய்த்தனமாக அரற்றுவதில்லை. அவர்களது கூட்டமாக வாழும் பண்புகள், விழாக்கள், நோன்பு முறைகள், பண்டிகை, சுப, துக்க நாட்களில் ஒரே தட்டுகளில் பலர் பகிர்ந்துண்ணுவது போன்றவை அன்பு, நட்பு, பாசம் ஆகியவைகளை மலரச் செய்கிறது.

அவர்களுடையத் தொழுகை இடங்களான பள்ளிவாசல்கள் மூலம் இறப்புச் செய்திகள் அறிவிக்கப்பட்டு அனைவருக்கும் தகவல் தெரிவிக்கப்படும் முறை சிறப்பிற்குரியது. இதனால் கூடிவாழும் உற்றார் உறவினர் அனைவருக்கும் ஒரே நேரத்தில் செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன. இது மற்ற மதங்களில் இல்லாதச் சிறப்பாகும்.

அவர்களின் கடவுள் ஒருவரே, உருவமற்றவர், அவரைத்தவிர மற்றவர்களை வணங்குதல் தவறு என்ற கோட்பாடுகள் மிக ஆழமானவை, மதிப்பிற்குரியவை. சில இடங்களில் இறந்தவர்களின் சமாதிகளை வணங்குவது பழக்கத்தில் இருப்பினும் அதை அம்மதம் அங்கீகரிக்கவில்லை.

## சிறிய குறைகள்

இத்தனைச் சிறப்புகள் இருக்கும் அவர்களிடம் அதேவேளை சில குறைபாடுகள் பரவலாகக் காணக்கூடியதாகக் கிடக்கின்றன. அவர்கள் அதிகமாக வாழும் சில பகுதிகளில் சுற்றுப்புறத்தூய்மை மிகக் குறைவாகக் காணப்படுகிறது. அசைவ உணவுகளின் சமையலுக்கு முந்தைய, பிந்தைய கழிவுகள் சரியான முறையில் கையாளப்படுவதில்லை. அவர்கள் வாழும் பகுதிகளின் தெருக்கள், சந்துகளில், பல இடங்களில் அவலமான நாற்றமடிக்கும் சாக்கடைகள் உருவாக்கப்படுகின்றன. இக்குறைகளை நிவர்த்தி செய்து மேலும் சிறப்பாக வாழ்வதற்கு அச்சமூகப் பெரியவர்கள், மக்கள், இளைஞர்கள் நடவடிக்கைகளை எடுத்து வழிகாட்டுவது தேவைப்படுகிறது.

## ஆண், பெண் பிரத்தியேகக் கடமைகள் ஒதுக்கீடு

குடும்பத்தில் ஆண் என்பவனுக்கு வெளியில் சென்று சம்பாதிப்பது, குடும்பக் கடமைகளைச் செய்து காப்பது போன்றவைக் கட்டாயமாகிறது. பெண்கள் வீட்டைக் கவனித்து சந்ததிகளைப் பெருக்கி, உணவளித்து அவர்களை வளர்த்து வருவது கடமையாகிறது.

ஆணுக்கு சம்பாதிப்பது பெண்ணுக்கு வீட்டிலிருந்து குடும்பத்தை நிர்வகித்து குழந்தைகளை ஆளாக்குவது முறையாக நிர்ணயிக்கப்பட்டு குடும்பம் ஒருநபர் வருமானத்தில் முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் வேலைவாப்பின்மையை அகற்றுவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் ஆண் பெண் இருவரும் ஊழியம் செய்ய எத்தனிக்கும்போது எல்லாக் குடும்பங்களுக்கும் சம்பாத்திய வாய்ப்பை பகிர்ந்தளிக்க முடிவதில்லை.

எனவே எக்காலத்திலும் இப்பிரச்சினை வராவண்ணம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய மார்க்கத்திலிருந்து மற்றவர்கள் கற்றுக்கொள்வதற்கு ஏராளம் உள்ளன. அவற்றை அப்படியே பின்பற்ற முடியாமல் போனாலும் தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்து அவசியமான சிறு மாற்றங்களைச் செய்து மற்ற மதத்தினரும் பயன்பெற வேண்டும் என்பதே இங்கே வைக்கப்படும் முடிவானக் கருத்து.

# சோதிடம், ஆரூடம், மந்திரம், மாந்திரீகம்

மனித சமுதாயத்தின் கணிசமானப் பகுதியினரை சோதிடம், ஆரூடம், மந்திரம் என்ற பல சங்கதிகள் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றன என சொல்வதில் பொய்யில்லை. உலகத்தின் சில நாடுகளில் இவற்றின் கைவரிசை மேலோங்கி இருக்கிறது. இந்தியா, சீனா, மலேசியா, இந்தோனேசியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் சில தெற்காசிய நாடுகளுடன் சில மேலை நாடுகளிலும் இவற்றின் பாதிப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

## மாந்திரீகம் எனப்படுவது யாது?

முதலாவதாக மாந்திரீகம் என்பதைப்பற்றி சிறிது தேடுவோம். எதிரிகள், விரோத மனிதர்கள், வெறுக்கப்படுபவர்கள், பொறாமைக்கு உள்ளானவர்கள், போட்டியாளர்கள் போன்றோரை நேரடியாகத் தாக்காமல் மறைமுகமாக மாந்திரீகத்தினால் தாக்கி தொல்லை கொடுக்க இயலும் என சமுதாயத்தால் நம்பபப்படுகிறது. மேலும் இத்தொல்லைகள் பல அளவு நிலைகளில் உண்டாக்கப்பட்டு இறப்புகள் வரை நிகழ்த்த முடியும் எனவும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்தியாவில் கேரள மாநிலம் இதற்கு முதன்மையானதாகவும் அங்கே இத்துறையில் விற்பன்னர்கள் நிறைய பேர் இருப்பதாகவும் காண்பிக்கப்பட்டு வருகிறது.

சமுதாயத்தில் பலர் எதிரிகளின் தீய மந்திர வேலைகளால் பாதிப்படைந்து இருப்பதாக ஒத்துக்கொள்கிறார்கள், கூறிவருகிறார்கள். அதன் வீரியத்தை மிக அதிகபட்சமாக நம்புகிறார்கள். ஆகவே இத்தொழிலைச் செய்து வரும் மந்திரவாதிகளிடம் மிகுந்த மரியாதையும் பயமும் கொண்டவர்களாக உள்ளனர்.

இந்தவகையான மாந்திரீகங்கள், அவற்றின் செயல்பாடுகள், பாதிப்புகள் உண்மையானதா அல்லது பொய்யான மாயையா என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளளது.

மூடநம்பிக்கை என்கிற கருத்தில் இவற்றை சட்டென்று ஒதுக்கித்தள்ளிவிட முடியாது. எனவே எவ்வகைகளில் இவை சாத்தியமானவை அல்லது சாத்தியமற்றவை என்பதற்கு சாதாரண முறைகளில் சாமானியர்களுக்கும் புரியும் வண்ணம் தெளிவு பெற வேண்டியுள்ளது.

இவைகளெல்லாம் நடைமுறையில் முழுவதும் உண்மையாயிருக்கும் நிலையில் இத்தொழிலை மேற்கொண்டிருக்கும் மாந்திரீகவாதிகள் தங்கள் சக்திகளைக் கொண்டு எவருக்கும் விருப்பமான பல பெரியகாரியங்கள், சாதனைகள், அதிசயங்களை நிகழ்த்தியிருக் முடியும். ராஜா, மந்திரி, அமைச்சர், எம்.பி, எம்.எல்.ஏ, பெரும் செல்வந்தர்கள், அழகிகள் பலரின் மொத்த உரிமையாளராக ஆகியிருக்கக் கூடும். ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை எக்காலத்திலும் இப்படி நடந்திருப்பதாகத் தெரியவில்லை.

மாந்திரீகத்தினால் எதையும் செய்ய முடியுமெனில் உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரச்சினைகள், அரசியல், சினிமா, வியாபாரம், மற்ற அனைத்து முன்னேற்றத்துறைகள் என எல்லாவற்றிலும் நன்றாகப் பயன்படுத்தியிருக்கலாம். எந்தவித உழைப்பு, சிரமங்கள் எவையுமின்றி மந்திரவாதிகளிடம் சென்று அவர்களின் துணைகொண்டு வேண்டப்பட்ட வெற்றியை, விருப்பப்பட்ட நிலையை, ஆசைப்பட்ட உயிருள்ள, உயிரற்ற பொருட்களை அடைந்திருக்கலாம். உலகத்தின் அனைத்துச் செயல்களையும் செய்து கொண்டிருக்கலாம். இவையெல்லாம் நடத்த இயலும் என எவரேனும் சொன்னால் தயவுசெய்து அந்த மந்திரவாதிகளைக் காட்டுங்கள்; அவர் ஒருநாளில் முப்பதாயிரம் கோடி டாலர் சம்பாதித்துவிட வாய்ப்பு தருவோம்.

## மந்திரமும் பனம்பழமும்

எந்த அரசியலிலும், அரசியல்வாதிகளிடமும் ஒரு பருப்பும் வேகாது. சிலர் மாந்திரீகத்தோடு தொடர்புடைய சில வேள்விகள்,

யாகங்கள் போன்றவற்றை அவ்வப்போது செய்து வருகிறார்கள். இவையனைத்தும் எந்தவித நேரடிப்பயனையும் தரவல்லதல்ல. இச்செய்கைகளை சக்தியுள்ளவைகளாக நம்பும் அம்மனிதர்களுக்கு அந்நம்பிக்கையின் மூலம் மனம் வலிமையடைகிறது. அதன் மூலமாக புதிய தைரியம், நம்பிக்கை, உறுதி ஆகியவற்றை இது மறைமுகமாகத் தரும் நன்மையைச் செய்யலாம். இவ்வாறானச் சூழ்நிலைகளில் அத்துறையின் தேர்ச்சி பெற்ற வல்லுனர்களின் செயல்கள் ஓங்கி ரீங்காரமிடுகின்றன.

அந்த வகையிலானப் பல செயல்களின் ஒருங்கிணைப்புகள் மூலம் நினைத்த காரியங்கள் கை கூடுவதாகக் கருதப்படுகிறது. இது காக்காய் உட்கார பனம்பழம் விழுந்த கதையைப்போலாகிறது. பெரும்பாலும் இந்த நிலையை அனேக சூழ்நிலைகளில் காணமுடிகிறது. இக்காரணத்தினால் மனிதர்கள் இரு பிரிவாக பிரிந்து கிடக்கின்றனர். ஒருசாரார் காக்காய் உட்கார்ந்ததினால்தான் பழுத்து விழும் நிலையிலிருந்த பனம்பழம் விழுந்ததாகக் கூறுகின்றனர். இன்னொரு சாரார் வேறு காரணங்களினால் அந்த பழுத்த பனம்பழம் விழுந்ததாகக் கூறுகின்றனர். இந்த இரண்டாம் வகை மனிதர்களின் எண்ணிக்கை மிகமிக அதிகளவில் இருப்பதோடு நாளுக்கு நாள் இக்கூட்டம் மிகப்பெரிய அளவில் வளர்ந்தும் வருகிறது.

## மாந்திரீகம் வாழுவதற்கான அடிப்படைக் காரணங்கள்

உண்மை என்னவெனில் இவர்களின் கடின, தொடர்ந்த, வலுவான உழைப்புகள் அவர்களின் வெற்றிகளை பெற்றுத்தந் திருக்கும் என்றபோதிலும் இந்த வெற்றிகளுக்கு ஒருவேளை வேள்வி, யாகம், மந்திரம் போன்றவை ஆதாரமாக இருந்ததாகக் கருதுவதினால் அவற்றை அதிகப்படியாக நம்புகிறார்கள். இவர்களுக்கு உத்வேகம் கொடுக்கும் கிரியா ஊக்கிகளாக இச்செய்கைகள் செயல்பட்டக் காரணத்தினால் இவைகளுக்கு மதிப்பு கூடுகிறது.

இவ்வாறான மாந்திரீகங்கள் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை இவ்வகை மந்திரங்கள், வேள்விகள், யாகங்கள் குறையப் போவதில்லை. இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக மனிதர்களின் பேராசைகள் இருந்து வருகின்றன. இம்மனிதர்கள் எப்படியாகிலும் வாழும் காலத்தில் அதிகபட்சமாக அனைத்தையும் அடைந்துவிடத் துடிக்கிறார்கள். ஒரு நாட்டு வழக்கில் சொல்லப்படுவது போல 'போகும்போது என்னத்தைக் கொண்டு போகப் போகிறார்களோ தெரியவில்லை.' அதிலும் சிலருக்கு வயதாக ஆக பெரும்செல்வம், புகழ், பெருமை, அதிகாரம், ஆணவம், அந்தஸ்து, உடல் சுகம் போன்றவற்றில் மோகம் கூடிவிடுகிறது.

இவற்றிற்காக இயற்கையான, அவசியமானப் பலவற்றை இழக்கத்தயாராகி மெய் வாழ்வை மறந்து போகிறார்கள். உலகில் நீண்டகாலம் நிலையானப் பெயர் விளங்குவதற்கு அன்பு, பணிவு, அர்ப்பணிப்பு, சேவை, எளிமை, அதிகாரத்தினால் அல்லாத சாதனைகள் போன்ற காரணங்களே உதவி செய்யும். மற்றபடி முரட்டுத்தன அதிகாரங்களைக் கொண்டு செய்யப்படும் காரியங்கள், சாதனைகளாக வர்ணிக்கப்படும் சாதாக்கள் என்ற எல்லாம் தற்காலிக கட்டாயத் திணிப்புகளே.

இச்சூழ்நிலைகளில் மனித நரிகள் பல, பெரும் காசு பண்ணுவதற்கு பொய்யானத் துதிகள் பாடி மேலுள்ளவரை மெய்மறக்கச் செய்துவிடுகின்றன. இவ்வகையானக் காசு பண்ணும் காரியவாதிகளின் கூட்டம் நாளுக்கு நாள் பெருத்துக்கொண்டு போவது இச்சமுதாயத்தில் புரையோடிக் கொண்டிருக்கும் சாபக்கேடு.

## மந்திரவாதிகளால் இவற்றைச் செய்ய இயலுமா!

பலரால் நம்பப்படுவதுபோல மலையாள மாந்திரீகவாதிகள் அத்துறையின் வலிமை மிக்கவர்கள் எனில் அவர்தம் மந்திர வலிமையால் கேரளத்து மாநில ஆட்சியில் தாங்கள் நினைக்கும்,

விரும்பும் மனிதர்களை அமர வைக்க இயலும்; அவ்வாறு ஏன் நடக்கவில்லை. உலகம் முழுவதும் பிரச்சினை உண்டான மனிதர்கள் காவல் நிலையம், வழக்கறிஞர்கள், நீதிமன்றம் மற்றும் கட்டப்பஞ்சாயத்து அடியாட்களிடம் போக வேண்டியதிருக்காது. மந்திரவாதிகளை வைத்து எதிரிகளைத் தீர்த்துக் கட்டிவிட இயலும்; இதுவும் ஏன் நடைபெவில்லை.

## மனபயம்

சில கோழைப் பயந்தாங்கொள்ளிகள் இந்த மாந்திரீகர்களின் மந்திரங்களை உண்மையென உள்ளப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு நிரந்தரமாக நிரம்பிய மனப்பயம் பெறும்போது சில விளைவுகள் உண்டாகிவிடுகின்றன. இதற்கு காரணம் பரம்பரை பரம்பரையாக பல ஆயிரம் ஆண்டுகளில் தொடர்ந்து வந்த பாதிப்புகளினால் நடுக்கமான உள் மனபயம் உண்டாகி அதன் பாதிப்புகளினால் உள்ளார்ந்த அசைக்க முடியாத நம்பிக்கை வருகிறது. இவ்வாறாக இவர்களுடைய எதிரிகளின் மாந்திரீகம் என்ற செயல்களினால் தங்களுக்கு துன்பங்கள், தொல்லைகள் வந்துவிடுவதாக அஞ்சுகிறார்கள். அது என்னவோ இந்த சாதாரண, நோய்வாய்ப்பட்ட, பாவப்பட்ட ஏழை, நடுத்தர மக்களைத்தான் இந்த பாதிப்புகள் அதிகமாகப் பாதிக்கின்றன. ஒருவேளை மந்திரவாதிகளுக்கு பணக்காரர்களிடம் பயமாக இருக்குமோ!

## மனநிலை மாறவேண்டும்

இந்த மனிதர்களின் மனநிலைகளில் மாற்றம் வரவேண்டியதற்கு நல்ல மாறுதல்களை வளர்க்க வேண்டும். இன்றைய அறிவியல் உச்சம் அடைந்துள்ள இருபத்தோராம் நூற்றாண்டிலும் பெரும்கூட்டம் இந்த மந்திரவாதிகளின் பின்னால் சுற்றித்திரிவது வேதனையளிக்கும் செய்கையாகும்.

எந்த ஒரு செயலாகினும் மனித நம்பிக்கை, குணம், எண்ணம் போன்றவற்றை வைத்து விளைவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. நாம்

உள்மனதினில் எப்படி இருக்கிறோமோ, நினைக்கிறோமோ அது அப்படியாகவே வெளியே விளைந்து விடுகிறது, அதுவே உண்மை. மனிதர்கள் குற்றமுள்ள வாழ்க்கை, தவறுகளினால்ஆன பயம், பொறாமை, சூழ்நிலைகளை அனுசரிக்கத் தெரியாமை போன்றவைகள் மனித மனங்களை நோஞ்சானாக்கி விடுகின்றன. நல்லவர்களாக வாழும்பட்சத்தில் தேவையற்றப் பயங்களுக்கு வேலையில்லாமல் எதையும் தைரியமாக நோக்கும் தன்மை வருகிறது.

ஆகவே நமது நம்பிக்கைகள் பல விடயங்களில் சரியானதா என ஊடுருவிப் பார்க்க வேண்டியதாயிருக்கிறது. தவறான நம்பிக்கைகள் வாழ்க்கையை தப்பானப் பாதையிலேயே கொண்டுசென்று கொண்டிருக்கும், மாந்திரீகவாதிகளால் நினைத்ததைச் சாதிக்க முடியும் என்றால் இந்த உலக மக்களுக்கு பல நன்மைகளை கொண்டு வந்து கொடுக்கட்டும்; இதுநாள்வரை ஏன் இவற்றை செய்யாமல் இருக்கிறார்கள். ஒருவேளை மந்திரவாதிகள் அனைவரும் நல்லவை செய்ய விருப்பமில்லாத அயோக்கியர்களா!

## கீழ்நிலைத் தனிமனிதர்களின் முக்கியத்துவம்பெற நினைக்கும் மன ஆசை

மந்திரம் கால் மதி முக்கால் என்பார்கள், உண்மையில் மந்திரம் காலும் இல்லை, அரைக்காலும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அறிவியலின் முறைப்படி அடுத்தவர் மனத்தை அறிவதற்குச் சிலவகைப் பயிற்சிகள் உள்ளன. அப்படியான சில பயிற்சிகள், யூகங்களைப் பயன்படுத்தி அடுத்தவர்களின் ஆழ்மனதிற்குச் சென்று பயமுறுத்தல் வேலைகள் செய்யப்படலாம். இதுபோலவே சிலருக்கு சாமிவந்து ஆடுவதைப்பார்த்திருப்போம். அதிலும் குறிப்பாக பெண்களுக்கு இவ்வகையான சாமிகள் வருவது சகஜம். அதேநேரம் நன்கு படித்த வசதியுள்ள, நல்ல பணியிலுள்ளப் பெண்கள் சாமியாடினதை எங்கேயும் காணோம். மாறாக குடிசைப்பகுதி, ஏழை,

கிராமப்புறப் பெண்டிருக்கே இந்த சாமியாட்டங்கள் வருகின்றன; ஒருவேளை இந்த சாமிகளுக்கு இவர்களைத்தான் பிடிக்கிறதா! அதுவல்ல காரணம்.

மேற்படி சாமியாட்டங்களைச் சிறுவயதிலிருந்து அடிக்கடி பார்த்து மனதுக்குள் உள் வாங்கிக்கொள்கிறார்கள். அப்பெண்கள், அந்நேரக் கதாநாயகிகளாகி சிலர் முக்கியத்துவம் பெறுவது, சிறுவயதிலிருப்பவர்கள் மனதில் ஆர்வத்துடன் கூடிய பாதிப்பை ஏஙறபடுத்தலாம். அவர்களை அறியாமலேயே இந்தமாதிரி நிலைக்கு தங்களைக் கருதிப்பார்த்து, கனவு கண்டிருக்கலாம். பின்னர் தாங்களும் அதற்கு உட்பட்டு வளர்ந்த பெண்ணாகிய பிறகு சமூகத்தில் தங்களுக்கு குறிப்பிடும்படியான தனித்தன்மை இல்லாமையினால் சில மன, நரம்பு அழுத்தங்களுக்கு உட்பட வாய்ப்பிருக்கிறது.

கடவுள் பக்தி மிக அதிகமாக இருக்கும் இப்பெண்கள் அதில் மிக ஆழ்ந்து, மூளை மற்றும் நரம்பு மண்டலம் முழுதும் தற்காலிகமாகத் தன்னிலை மறக்கிறது. அச்சமயங்களில் அதற்கு முன் முன்னவர்கள் நடந்து கொண்ட முறைகளில் தங்கள் சாமியாட்டத்தை சபையேற்றுகிறார்கள். அது ஒரு தன்னிலை மறந்த நேரமாகி நரம்பு மண்டலம் தற்காலிகமாகத் தன்னுடைய சில வேலையை நிறுத்தி வைக்கிறது. எனவே நெருப்பின் சூடு, அடியின் வலி, திடீர் ஆட்டத்தினால் ஏற்படும் உடல் வலி போன்றவற்றை உணர முடிவதில்லை.

அதுபோலவே மந்திரங்களின் பாதிப்புகளை உண்மை என நம்பி உள்வாங்கி பலப்படுத்தும்போது அது என்னென்ன விளைவுகளை உண்டாக்கும் என்பதை காலம் காலமாகச் சொல்லி வந்த முறைகளில் மனது ஏற்று அதற்கு உடன்படுகிறது. அப்போது நம் மனதின் பலவீனத்தால் நாம் எண்ணிப்பார்த்திருக்கும் தீய விளைவுகள் நம்மை தாக்குகின்றன.

எனவே இவற்றில் நம்பிக்கை கொள்ளாதிருக்கும் பட்சத்தில் எந்த மாந்திரீகவாதியாலும் நம்மை ஆட்டவோ அசைக்கவோ முடியாது.

## மனிதர்களுள் தனித்திறமை கொண்ட சாமார்த்தியசாலிகள்

ஒரு மாஜிக் நிபுணர் தனக்கு முன்புறம் அல்லது தன்னைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருக்கும் ஆயிரக்கணக்கான அவர் இனமான அதே மனிதர்களை ஒருதடவை அல்ல பலதடவைகள் எங்ஙனம் ஏமாறுகிறார் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதுபோலவே இந்த மந்திரவாதிகள் மனிதர்களின் மனநிலைகளை அறியும் கலையில் தேர்ச்சி பெற்று அவர்களை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் தன்மை உடையவர்கள் திறமையான மனிதரொருவர் ஒரு தொழிலை முழு ஈடுபாட்டுடன் தொடர்ந்து செய்து வருங்கால் அத்தொழில் அவர் சொல்வது அனைத்தையும் கேட்கும் நிலைக்கு மாறுவதான நிலைக்கு வருகிறது.

இசை, எழுத்து, விளையாட்டு, ஆராய்ச்சி, சிற்பம், விஞ்ஞானம், ஓவியம், தந்திரம், மந்திரம், ஆருடம், சோதிடம், திருட்டு, ஏமாற்று, மருத்துவம், விவசாயம் என எல்லாத்துறைகளும் அப்படித்தான். சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாபழக்கம் என இதற்குத்தான் நன் முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளார்கள். ஜென்மார்க்க தத்துவம் இதை உறுதிப்படுத்துகிறது, ஒருமனிதன் ஒரு செய்கையில் ஆழ்ந்த ஈடுபாடுகளுடன் ஒன்றி உழைக்கும்போது அவன் அதுவாகவே ஆவது ஒரு உன்னத தியான முறையாகிறது. தனியாகத் தியானம் என ஒன்றைச் செய்வதைக்காட்டிலும் இது வலிமை மிகுந்ததாக, ஒரு பயனுடன் நல்ல நோக்கம் கொண்டதாக ஆகிறது. இதில் எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாகச் செல்கிறோமோ அந்தளவுக்குப் பாத்தியம் பெற ஏதுவாகிறது.

# சோதிடத்தை சோதித்தல்

## சோதிட வகைகள்

சோதிடக்கலையை சோதித்துப்பார்க்கையில் அங்கு பொய்யும் மெய்யுமாகக் கலந்து கிடக்கிளது. இதில் பொய் மெய்களின் சதவீத வேறுபாடுகள் இடத்துக்கு இடம் பிரிவுக்குப் பிரிவு மாறுகிறது. பல வகையான சோதிட முறைகள் பல நாடுகளில் இருந்து வருகின்றன. இதற்கு அடிப்படையாக ராசிகள், நட்சத்திரங்கள், பிறந்த நேரம், தேதி, பெயர், கை–கால் ரேகைகள், நிறங்கள், நகங்கள், ஓலைச்சுவடி, எண் சோதிடம், கிளி, முயல், எலி சோதிடம், வாஸ்து, குடுகுடுப்பை, தம்புரா இன்னும் பல நாடுகளில் உள்ள பலமுறைகள் சேர்ந்து ஆயிரமாயிரம் வகைகள் இருக்கலாம்.

மனிதர்களின் தோற்றம், முகப்பொலிவு, சுற்றுப்புற நிலைகள், நடை – உடை – பாவனைகள், பேசும் மொழிகள், அதன் தன்மைகள் போன்றவற்றை வைத்தே பெரும்பாலான சோதிடங்களில் முக்கால் பாகம் பூர்த்தியாகி விடுகிறது என்பது ஒரு சோதிட நிபுணர் நட்பு முறையில் ஒத்துக்கொண்ட உண்மை. இந்த சோதிட வகைகள் அனைத்திற்கும் கோடானகோடி ரசிகப்பெருமக்கள் எங்குப்பார்க்கினும் மலிந்து கிடக்கிறார்கள்.

## பேராசையின் தூண்டுதல்

மனிதர்கள் சோதிடம் பார்க்கும் ஆர்வ அதிகரிப்பிற்கு முக்கியக் காரணங்களுள் முதன்மையானவைகள் எவையெனில் சரிவரத் தன்நிலையைப்பற்றி அறியாமலிருப்பது, அதற்கு முயற்சிக்காதது, தன்னம்பிக்கை இல்லாமை, பேராசைக்குணம் போன்றவைகள். தன் நிலையை தான் அறிந்து கொள்ள முடியாமல் எங்கேயோ பல மைல்களுக்கு அப்பால் இருக்கிற இன்னொரு மனிதரின் மூலமாக அறிய விரும்புவது ஒருவகை . . . . . . தனம் என்று சொன்னால் என்ன

தவறு. இருப்பினும் இவ்விடத்தில் ஒரு உண்மை ஒளிந்து கிடக்கிறது. சோதிடக்காரர்கள் வாடிக்கையாளரை உயர்வாக, உயர்த்துவதாக, ஆதரவாக, அனுசரனையாக, பெருமையாக, மகிழ்வூட்டுவதாகக் கூறும் செய்திகள் வாடிக்கையாளருக்கு ஒரு புதுஉற்சாகம் தரும் 'டானிக்' ஆக செயல்படுகிறது என்பது நடைமுறைச் சாத்தியமே.

இவ்வகைக் கிரியாஊக்கிகளின் உந்துதல்களினால் சோர்ந்து சோம்பிப்போயிருக்கும் மனிதர்கள் சுறுசுறுப்படையும் பிரகாசமான வாய்ப்பு ஏற்படுகிறது. சாதாரணமாக மற்ற மனிதர்கள் பிறரை இவ்வாறு முன்னேறுவீர்கள் எனச் சொல்லமாட்டார்கள். ஏனெனில் எவரும் அடுத்தவரின் முன்னேற்றத்தை விரும்புவதில்லை. எனவே சோதிடர்களின் பேச்சு எவருக்கும் இனிக்கும். சோதிடர்கள் நன்மைகள் வரும் எனக்கூறி ஒரு தேதியைச் சொல்லிவிடுவார்கள்; அநேகமாக இத்தேதிகள் மழைக்காலம், குளிர்காலம் முடிந்து ஆரம்பக் கோடைகாலத்தோடு கூடிய அறுவடை மாதங்களில் ஆரம்பமாகி இருக்கும்.

அச்சமயங்களில்தான் கூடுதல் பணப்புழக்கம், அதைஒட்டிய தொழில்கள், ஒன்றை ஒன்று சார்ந்திருக்கிற அனைத்துத் தொழில்கள், வியாபாரங்கள் சுபிட்சமடைவதோடு. திருமணம், காதணிவிழா போன்றவைகளும் கொண்டாடப்படுகின்றன.

இக்காலங்களில் உறுதியானத் தெளிவான பாதையில் உழைக்கும்பட்சத்தில் வெற்றி வந்து சேர்வது நியாயமானது. இதனால் சோதிடம் மாதிரியான ஏற்பாடுகளும் மனித சமுதாயத்திற்கு உபயோகப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

## வேடிக்கை சோதிடங்கள்

என்றபோதிலும் இந்நாட்களில் இது பலப்பல பலவிதமானக் கிளைகளாகப் பிரிந்து பெருத்த வியாபாரமாகிப் போயிற்று. இயந்திர வேகங்களில் விதவிதமான முறைகளில் வேடிக்கையான வாழ்க்கை வியாபாரமாகிப் போயின இன்றைய சோதிடங்கள்.

தினசரி காலையில் தொலைக்காட்சியில் சேனலுக்கு சேனல் போட்டி போட்டுக்கொண்டு அசுர வேகங்களில் ராசிபலன்கள் கூறுவதை சிந்திப்பவர்கள் கேட்டால் சிரித்து மகிழலாம். ஆனாலும் அடங்கா ஆசை, பேராசைக் கொண்ட நமது மனிதக்கூட்டம் மிகமிக ஆவலாக அவற்றைக் கேட்டபிறகே தம் காலைக்கடன் உட்பட அன்றைய அனைத்து அலுவல்களையும் ஆரம்பிக்கிறது. லட்சோபலட்சம் கோடானகோடி மக்களுக்கு யாரோ ஒருசில மனிதர்கள் மாற்றி மாற்றி சில வார்த்தைகளைச் சொல்வது இவர்களுக்கு பெரும் அறிவுப்பூர்வமான பொக்கிஷமாகி இருக்கிறது. இதில் இன்னொரு உண்மை என்னவெனில் அங்கு பல ராசிகளுக்குச் சொல்லப்பட்ட ஓரிரு வார்த்தைப் பலன்களில் கிட்டத்தட்ட பாதி ரகங்கள் ஒவ்வொரு மனிதருக்கும் ஒரே நேரத்தில் பொருந்தக்கூடியதாக இருக்கும்.

## சோதிடத்தின் அடிப்படைச் சூத்திரங்கள்

மனிதர்களின் பலதரப்பட்ட வாழ்க்கை முறைகள், நிகழ்ச்சிகள், தேவைகள், சூழ்நிலைகள், ஒவ்வொரு காலத்திலும் ஏற்படும் மாற்றங்கள் இவற்றைக் கணக்கில், மனதில் வைத்து சோதிடக்கலை செயல்படுகிறது. தொழில், வியாபாரம், வேலை, பயணம், நட்பு, உறவு, உடல்நலம், குடும்ப சூழ்நிலை, கணவன் மனைவி பிரச்சினைகள், வாலிபக் கோளாறுகள், செல்வங்கள், வழக்குகள் மற்ற பல இன்றைய காரணிகள் எனப் பலவற்றை அடிப்படையாகக் கொண்டு சோதிடர்களின் சிந்தனையின் மூலம் வாக்குகள் மெருகூட்டப்படுகின்றன.

இதற்கு ஆதாரமாகப் பல நிலையானக் கணக்குவழக்குகள், பலவகைப் பிரிவுகள், சூத்திரங்கள், வழிமுறைகள், ஆவணங்கள் முன் காலத்திலேயே தயாரிக்கப்பட்டு இன்றைய சோதிட வியாபாரிகளுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளின் உதவியுடன் சோதிடர்களின் தனித்திறமை, வாழ்க்கையாளர்களின் வாய் உளறல்கள், அங்க சேட்டைகள், தன்னைப் பற்றி மிகத்தெளிவாக

எவரும் அறியும் வண்ணம் காட்டும் மிடுக்கு வகையறாக்கள் போன்ற அனைத்தும் சேர்ந்து நல்ல சோதிடமாக மாறிவரும்போது மனிதர்கள் முழு திருப்தி அடைகிறார்கள்.

சோதிடம் கூறுவதில் பல ரகசியத்திறமைகள் பொதிந்து கிடக்கின்றன. சோதிடத்தை எள்ளளவும் கற்றிருக்காதச் சாதாரண மனிதர்களில்கூட முக்கால்வாசிப் பேர் அடுத்த புதிய மனிதரை சில நேரம் கூர்ந்து கவனித்தால் புரிந்துகொண்டு விடுவார்கள். இதையே தொழிலாகக்கொண்டு இதில் ஊறித்திளைத்து நாளுக்கு நாள் இத்துறையில் அறிவை அனுபவத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றனர் சோதிடத்துறை அன்பர்கள். எனவே இவர்கள் நம்மைவிட பத்து மடங்கு நூறு மடங்கு கூடுதலாக, பார்த்தவுடன் பிறரை அறியும் அறிவைப் பெற்று விளங்குவார்கள். இதுவும் சோதிடம் கலைகளின் அடிப்படைகளில் ஒன்றாக இருக்க வேண்டும்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல ஒரு மனிதனின் முகப்பொலிவு, முகத்தில் கவலைகளின் சிந்தனைகள், உடல் தோலின் பளபளப்பு, தோற்றத்தில் கம்பூரம், ஆடை அணிகலன்கள், அவற்றை அணிந்திருக்கும் விதம், உடல் அசைவுகள், பார்வைகளின் வித்தியாசங்கள், பழக்க வழக்கங்கள், குணங்கள், பேசும் பாணி, சொற்களின் உபயோகம், தேக ஆரோக்கியம், தலைமுடி பராமரிப்பு, கொண்டிருக்கும் பொருட்கள் போன்ற காரணிகளோடு இன்னும் பல தகவல்கள் சில வினாடிகளில் ஒரு மனிதனை யார் என அடையாளம் காட்டிவிடும். விதிவிலக்காக எந்நிகழ்வுகளிலும் உள்ளது போல் ஒரு சில போலிகளைத் தவிர பெரும்பாலான மனிதர்களை சாமான்யர்களும் உணரக்கூடியதாகத்தானே இருக்கிறது.

## தன்னம்பிக்கையில் முன்னேற்றம்

சோதிடக்கலை, சோதிடர்கள், சோதிடத்தை நம்புகிறவர்கள் என எவற்றையும் இங்கே குறை கூறுவதற்கு வரவில்லை. இருப்பினும்

அதன் அடிப்படையில் மட்டுமே செயல்படுத்துவதை விடுத்து தங்களின் தன்னம்பிக்கையுடன் உண்மையாக, விடாமுயற்சியோடு, உள்ளப்பூர்வமாக உணர்ந்து அதற்குத்தக்கபடி தொடர்ந்த மிகச்சரியான பாதைகளில் செயல்படுவது மிகச் சிறந்தது. அவரவர்களின் அளவுக்குத் தகுந்த முன்னேற்றங்கள் நிச்சயம் வந்து சேரும்.

எல்லாநிலை மனிதர்கள் இவ்வுலகுக்குத் தேவையாயிருக்கிறார்கள். அனைத்து தெழில்கள் செய்வதற்கும் ஆட்கள் தேவை. எத்தொழிலாயினும் செய்யும் தொழிலே தெய்வம். இன்னும் சில காலங்கள் கழித்து நம் நாட்டிலும் சில மேல் நாடுகளைப்போல கடினமான, துன்பமான வேலைகளுக்கு கூடுதல் கூலிகள் கொடுக்கப்படும் காலம் வரலாம். சோதிடக்கலை பல நாடுகளில் இருப்பினும், சோதிடம் என்றால் என்னவென்றே தெரியாத எண்ணற்ற வேற்று நாட்டு மக்கள் எவ்வகைகளில் நம்மைவிட பல மடங்கு உயர்ந்திருக்கிறார்கள்; அறிவில், அறிவியலில் பல பத்தாண்டுகள் நம்மைவிட முன்னால் இருக்கிறார்கள் என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு செயல்படுவது தவறில்லை என்பது இவ்விடத்தில் கூறவருகிறக் கூற்றாகும்.

# எந்நாளும் திருநாள் எந்நேரமும் நல்லநேரம்

சிறிது சிறிதாக மிகமிக மெதுவாக பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளின் செலவில் பல மாற்றங்களை உருவாக்கிக் கொண்டது மானிடம் என்பது அனைவரும் அறிந்ததே. இயற்கையிலேயே இருந்தவைகளையும், செயற்கையாகவும் பல கண்டுபிடிப்புகளையும் கண்டறிந்தனர் மனிதர்கள்; இன்னமும் கண்டறிகிறார்கள், கண்டறிவார்கள்.

**காலத்தைக் கணக்கிட்ட முறை**

அவற்றில், முக்கியமான கண்டுபிடிப்புகளுள் ஒன்று, காலநிலையை ஆராய்ந்தறிந்து பல வகையான வகைபாடுகளைச் செய்து கொண்டதாகும். வான சாஸ்திரத்தில் நீண்டகால ஆராய்ச்சிகள்செய்து அந்த ஆராய்ச்சிகளிலேயே வாழ்ந்து பல அற்புதச் செய்திகளை உலகுக்குத் தெரியப்படுத்தினர். பூமி தன்னைத்தானே ஒரு குறிப்பிட்ட சற்று நீள்வட்ட வடிவிலானப் பாதையில் சூரியனைச் சுற்றி வருவதை உணர்ந்தனர். ஒருமுறை அவ்வாறு சுற்றி வருவதற்கு ஆகும் காலத்தை கணக்கிடுவதற்கு சரியான வழிமுறை ஒன்றைத் தேர்வு செய்ய முயற்சியை மேற்கொண்டனர்.

சூரியன் தோன்றும் காலையிலிருந்து மறையும் மாலைப்பொழுது வரை பகல் எனவும், சூரியன் மறைந்து திரும்ப தோன்றும் வரையிலுள்ள சூரியன் இல்லாத நேரத்தை இரவு எனவும் பகுத்துக் கொண்டனர். இவையிரண்டையும் ஒன்றாக்கி ஒருநாள் எனக் கொண்டனர். இவ்வாறு முன்னூற்றி அறுபத்தைந்தேகால் நாட்களில் பூமி சூரியனைச் சுற்றி வர அக்காலத்தை ஒரு வருடம் என அழைக்கலாயினர். இந்த ஒரு வருடத்தை பலக் காலக்கட்டங்களில், பலமுறைகளில் பலப் பிரிவுகளாகப் பிரித்து வாழ்ந்து வந்தனர். இறுதியாகப் பல நாட்டு மக்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இப்போது நடைமுறையில் உள்ள பன்னிரண்டு மாதங்கள் எனும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டது.

ஒரு நாளை பல பிரிவுகளாகப் பிரிக்கும் முயற்சியை மேற்கொண்டதில் அதற்கு எண்ணற்ற பல ஆண்டு காலம் உழைத்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. ஏதேதோ பலவித முயற்சிகளுக்குப் பின் விரல்களால் சுண்டும் நேரத்தை ஒரு நொடிப்பொழுது என்ற நிலையை அடிப்படையாக எடுத்துக் கொண்டு, ஒருநாள் முழுக்க பலர் ஒரேநேரத்தில் சுண்டிப்பார்த்து ஒரு இறுதியான எண்ணிக்கையாக எண்பத்தாறாயிரத்து நானூறு (86400) நொடிகள் ஆகியதை கணக்கில் எடுத்துக் கொண்டனர். இந்த மொத்த நொடிகளை பகலுக்கு ஒரு டஜன் பிரிவுகளாக, இரவுக்கு ஒரு டஜன் பிரிவுகளாக, மொத்தம் இரண்டு டஜன் அதாவது இருபத்திநான்கு மணி நேரங்களாகப் பிரித்தனர்.

பின்னர் ஒரு மணி நேரத்திற்கு வரும் மூவாயிரத்து அறுநூறு நொடிப்பொழுதை மேலும் பல சிறு பிரிவுகளாகப் பிரிக்கும் முயற்சியை மேற்கொண்டனர். ஒரு மணி நேரகால

அளவுக்கும் அதன் நொடிகளுக்கும் இடையில் நிமிடம் என்ற அலகை உருவாக்கி ஒரு மணி நேர காலத்திற்கு ஆகும் மூவாயிரத்து அறுநூறு நொடிப்பொழுதில் நொடிகளும் நிமிடங்களும் ஒரே எண்ணிக்கையில் வரும் வகையில் கணக்கிட்டனர். இவ்வாறு அறுபது நொடிகள் ஒரு நிமிடமாகவும், அறுபது நிமிடங்கள் ஒருமணி நேரமாகவும் உருவாயிற்று. இவையெல்லாம் வழி வழியாகவே ஏற்பட்டிருக்க முடியும்.

இந்தச் 'சிரமங்களெல்லாம் நமக்கில்லாமல் போனது நமது பேரதிஷ்டம்'. இப்பிரிவுகளோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் ஏழு நாட்களை ஒரு தொகுப்பாக்கி, அதற்கு வாரம் எனப் பெயரிட்டனர். ஏழு நாட்களுக்கும் தனித்தனியாகப் பெயர் வைத்தனர். நாட்கள் அப்பெயர்களிலேயே சுழற்சியாக ஒன்றன்பின் ஒன்றாக வருமாறு அமைத்துக் கொண்டனர். அவ்வாறே பன்னிரண்டு மாதங்களுக்கும் தனித்தனிப் பெயர் வைத்தனர். இவ்வாறு நாட்களுக்கு, மாதங்களுக்கு வைத்தப் பெயர்களுக்குள் பல சரித்திரக் காரணங்கள் இருக்கின்றன.

### முன்னோர்களின் முத்தானச் செயல்கள்

எண்ணற்ற மனிதர்களின் ஆயிரமாயிரம் ஆண்டுகாலக் கடின உழைப்புகளின்றி பல பெரிய மாற்றங்கள் இவ்வுலகில் நிகழ்ந்திருக்க இயலாது. உலகம் முழுக்க ஏகப்பட்ட ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள், குளங்கள், குட்டைகள், செயற்கை மலைக்குகைகள், பாதைகள், சாலைகள், செயற்கை பள்ளத்தாக்குகள், விளை நிலங்கள், பிரமிப்பூட்டும் அதிசயக் கட்டிடங்கள், சிற்பங்கள், ஓவியங்கள்,

மொழிகள், இலக்கண இலக்கியங்கள், தாவர தானியங்களின் பயன்கள், இயற்கை மருத்துவங்கள், இசைகள், உணவு முறைகள், நன்மைகள், தீமைகள், பழமொழிகள், எண்கள், உலோகங்கள் இன்னும் ஆயிரமாயிரம் அற்புதங்களை உருவாக்கி கொடுத்துவிட்டனர் நம் முன்னோர்கள். இப்போதிருப்பவர்களுக்கெல்லாம் பெரிய அறிவு வேலைகள் ஒன்றும் இருப்பதாக எடுத்துக் கொள்ள இயலவில்லை. அடிப்படை அறிவை ஏற்கெனவே கண்டெடுத்துக் கொடுத்து விட்டனர் நம் முன்னோர்கள்.

## இன்றையவர்களின் தேவையற்றவைகள்

ஏதோ சில ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் போக மற்றபடி கோமாளித்தன ஆடை தயாரிப்புகள், வாழும் கால நேரங்களில் என்ன செய்வதென்று புரியாமல் ஏதாவது செய்ய வேண்டுமென்று நடத்தப்படும் பாஷன் பரேடுகள், அர்த்தமில்லாத, அவசியமில்லாத, அசிங்கமான நடனங்கள், நம்பமுடியாத, பொய்யான, போலியான, சினிமாக்கள் மற்றும், சினிமா நடிகர், நடிகைகள், மக்கள் நலனில் உண்மையான அக்கறையில்லாமல், போட்டிபோட்டுக் கொண்டு பழிக்குப்பழி வாங்கிக் கொள்ளும் அரசியல்வாதிகள், சமூக மேன்மையைப் பற்றி துளியும் தெரியாத, கடுகளவும் ஆர்வமில்லாத மக்கள் பிரதிநிதிகள் என எல்லாமே ஏமாற்று வேலைகளாகத்தான் இருக்கின்றன.

## பண்டிகைகள் பலவிதம்

ஒரு ஆண்டை முன்னூற்று அறுபத்தைந்து நாட்கள் / ஐம்பத்திரண்டு வாரங்கள் / பன்னிரண்டு மாதங்கள், அதோடு இரவு, பகல், மணி, நிமிடம், வினாடி என

காலத்தைக் கணக்கிடுவதற்கு வழி செய்து கொடுத்திருக்கின்றனர். ஆனால் சிலரின் செய்கைகளால் முன்னூற்றி அறுபத்தைந்து நாட்களில், சில நாட்களை மட்டும் மிகச்சிறந்த நாட்களாகவும், அந்த தினங்களில் பண்டிகைகள் கொண்டாடப்படுவதும் பல நாடுகளில் வழக்கமாக இருந்து வருகிறது. இதில் நாட்டுக்கு நாடு, மாநிலத்துக்கு மாநிலம், மதத்துக்கு மதம் பண்டிகைகளும் அவை கொண்டாடப்படும் தினங்களும் மாறுகின்றன. ஒருசாராருக்கு கொண்டாட்ட தினங்களாக ஆக்கப்பட்டவை மற்றவர்களுக்கு சாதாரண தினங்களாக ஆக்கப்பட்டுள்ள நிலைமை மனிதர்களுக்குள் உள்ள தவறான காலகணக்குகள் மற்றும் ஒவ்வாமையை சுட்டிக்காட்டுகிறது.

இந்தப் பண்டிகை தினங்களை அடுத்து மேலும் சில தினங்களை சுப தினங்கள் என பஞ்சாங்கம் போன்ற பலவிதக் கணக்குகளை வைத்து முன்கூட்டியே தீர்மானம் செய்து வைத்து விடுகின்றனர். இந்த நாட்கள் போக மற்ற நாட்களெல்லாம் முக்கியமற்ற சாதாரணமான, இன்னும் ஆழமாகப் போனால் ஒதுக்கப்பட்ட நாட்களாக, நல்வாழ்க்கைக்குப் பொருத்தமில்லாத, தரங்குறைந்ததாக ஆக்கப்பட்டிருக்கிறது. இது எவ்வகைகளில் நியாயம் என்பது தெரியவில்லை!

### கொண்டாட்டங்களின் துன்பங்கள்

வருடத்தின் ஒருசிலக் குறிப்பிட்ட தினங்களில் மட்டுமே பெருந்தீனி தின்ன வேண்டிய கட்டாயத்திற்காக, பலகாரங்கள், இனிப்புகள், வகை வகையான உணவு வகைகள் செய்யப்படுகின்றன. இப்பண்டிகைகளின் அளவுக்கு மீறிய

உணவு வகைகளால் பலருக்கு உடற்கோளாறுகள் ஏற்படுகின்றன என்பது பலருக்குத் தெரிந்த அனுபவ உண்மை. சிலருக்கு உடனேயோ அல்லது ஒருசில தினங்களிலேயோ வாந்தி, பேதி, காலரா, வயிற்றுவலி போன்ற உபாதைகள் வரும் அல்லது மலச்சிக்கலாவது ஏற்படும். பலருக்கு சில நாட்கள், சில வாரங்கள் கழித்துக்கூட மேற்படி பண்டிகை சமாச்சாரங்களால் உடலினுள் சிறியவகை நோய், நோய்க்கிருமிகளின் வளர்ச்சியினால் உடல் பிரச்சினைகள், நோய்கள் வந்து தாக்கும். அச்சமயங்களில் இதற்கு ஒருசில வாரங்களுக்கு முன்பு வந்துபோன பண்டிகைகள்தான் காரணம் என்னும் உண்மையை, பலர் உணரும் நிலையிருக்காது! நமது உடலின் பெரும்பாலான நோய்களுக்கு அளவுக்கதிகமான, பொருத்தமற்ற, தேவையற்ற உணவு அயிட்டங்களே காரணம்! என்பதை அனைவரும் அவசியம் உணர வேண்டும்.

இப்பண்டிகைகளெல்லாம் மருத்துவமனைகள், மருத்துவர்கள், மருந்துக்கடைகள் போன்ற இனங்களுக்குப் பேருதவி செய்து நல்ல அறுவடை செய்து கொள்ள உதவுகிறது. நோய்களை இப்படி உண்டாக்கிக் கொண்டு, இம்மருத்துவமனைகள் மற்றும் மருத்துவர்களிடம் எதற்காக இப்படி வரிசைகளில் மணிக்கணக்கில் காத்துக் கிடக்க வேண்டும்? பொன்னான நேரத்தை வீணாக்குவதோடு, சிரமப்பட்டு உழைத்துச் சம்பாதித்த சொற்பப் பணத்தின் கணிசமானப் பகுதியை, ஒருசிலரின் ஆடம்பர வாழ்க்கைகளுக்காக ஏன் விரயம் செய்ய வேண்டும்? இவ்விடத்தில் சற்றேனும் சிந்திப்பது நலம்.

ஒருசில நாட்களில் மட்டும் கூத்தடித்துவிட்டு, அத்தினங்களில் சமைத்ததை சாப்பிடக்கூட இயலாமல் வீணடித்து, மற்றப்பல நாட்களில் அரைகுறையாக உண்பதும், சிலர் வறுமையில் வாடுவதும் ஏன்? நமது முன்னோர்கள் பலவிதமான வாழ்க்கை முறைகளை நமக்குத் தந்துள்ளனர். அவர்களின் அன்பளிப்பில் பல நன்மைகள் இருப்பது போலவே சிலத் தீமைகளும் இருக்கவே செய்கின்றன! எப்போதும் எல்லோரும் ‘எல்லாவற்றையும்’ மிகச்சரியாகச் செய்துவிடவோ சொல்லிவிடவோ முடியாது! நாகரீக வளர்ச்சியில் அறிவு முதிர்ச்சியில் நன்மை தீமைகளை கண்டறிவது எல்லா மானிடனுக்கும், அதிலும் முன்னேறும் அறிவுடைமைக்கு மிக இன்றியமையாதது.

அவ்வகையில் ஒருசில நாட்களை மட்டும் நல்ல நாட்கள் என்றும், ஏனைய பெரும்பகுதி நாட்களை கெட்ட நாட்கள் என்றும் சொல்லியிருப்பது சொல்லிக்கொண்டிருப்பது கேலிக்குரியதாகிறது. அதை நாம் கண்மூடிக் கொண்டு பின்பற்றுவது எவ்வளவு மடைமை என்பதை சிந்திப்பவர்களால் ஏற்க முடியும். சில நாட்களை மட்டும் நல்ல நாட்கள் எனக் கருதிவிட்டால், பின் இயற்கையாகவே மற்ற நாட்கள் கெட்ட நாட்கள். அல்லது புறக்கணிக்கப்பட்ட நாட்களாகிவிடுகின்றன. நாட்களுக்குள்ளும் இந்த பாரபட்சத்தை ஏன் உருவாக்க வேண்டும்.

## இயன்ற அனைத்து நேரத்தையும் உபயோகிப்பது

உலக பிரபஞ்சத்தில் நாம் வாழும் காலம் மிகச்சிறியது; அதற்குள் ஒவ்வொரு நாளையும் இயன்ற

அளவிற்கு நாம் வாழ்ந்து பார்க்க வேண்டும், வாழ்ந்துவிட வேண்டும். நல்ல நாட்கள் எனக் கூறப்பட்டுள்ள தினங்களில், ஒருவேளை நமக்கு உடல்நலம் சரியில்லாமலும், கெட்ட நாட்களாகக் கருதப்பட்ட சமயங்களில் நல்ல ஆரோக்கியத்துடனும் இருக்கும்பட்சத்தில், 'மேற்படி சம்பிரதாய நடைமுறை பல நாட்களை பாழாக்கிவிடும்' எனவே நியாயப்படிப் பார்த்தால் அனைத்து நாட்களையும் கொண்டாட வேண்டுமென்பதே நியதியாக இருக்க வேண்டும். கொண்டாடுவதென்றால் எல்லாவற்றையும் அளவுக்கதிகமாகச் செய்து கூத்தடிப்பதில்லை, கும்மாளம் போடுவதில்லை, உடலைக் கெடுத்துக் கொள்வதென்பதில்லை. பயன் மற்றும் மகிழ்ச்சி தரும் வகைகளில் பயன்படுத்திக் கொள்வதே சரியான முறை ஆகும்; திருப்தியாக மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்பதே சித்தாந்தம்.

புத்தாடைகளைக்கூட ஒருசிலக் குறிப்பிட்ட தினங்களுக்காக வாங்குவதை, பெருங்கூட்டங்களைத் துணிக்கடைகளில் ஏற்படுவதை, தையற்கடைகளுக்கு அலைவதை தவிர்க்கலாம். அச்சமயங்களில் துணிகளின் விலை, ரகம், டிசைன்கள் எப்படியிருக்குமென்பது துணிக்கடைகள் நடத்துபவர்களுக்கும் ஆண்டவனுக்கும்தான் வெளிச்சம்! கூட்ட நெரிசலில் எதையும் சரியாகத் தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பிருக்காது. எனவே சௌகரியமான எந்த நாளிலும் ஆடைகளை எடுத்துக் கொள்ளும், தைத்துக் கொள்ளும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்வது முதிர்ச்சியை உணர்த்தும்!

எல்லா நாட்களையும் நேசிக்கக்கற்றுக் கொள்ளுதல் மிக இன்றியமையாதது. குறிப்பாக 'நாம் நலமுடன் இருக்கும்

நாட்கள்' மிக முக்கியமானவை; அந்நாட்களில்தான் நாம் இன்புற்றிருக்க இயலும். பலகாரங்கள், இனிப்புகள், தின்பண்டங்கள் போன்றவற்றை ஒரே நாளுக்காகச் செய்து ஒருசில நாட்களிலேயே தின்று சிரமப்படுவது ஒரு வகையான அறியாமையே! இதற்கு பதிலாக மாதம் அல்லது மாதத்திற்கு இருமுறை ஒவ்வொன்றாகச் செய்து சாப்பிட்டால் தொடர்ச்சியாக வருடத்தின் எல்லா நாட்களுக்கும் 'மகிழ்ச்சி பரவலாக்கப்பட்டு' உடல் நலமும் பாதுகாக்கப்படும். தின்ற பலகாரங்களினால் ஏதேனும் பயனும் பலமும் கூட வரலாம்! இதற்கெல்லாம் மனநிலை முதிர்ச்சி, ஆராய்ச்சி, பக்குவம் வரவேண்டும்.

## நேரங்களை அழிக்கும் வழிகள், வழிகாட்டுதல்கள்

அதேபோல் நாம் எவ்வளவு நாட்கள் எப்படியெல்லாம் நேரத்தை வீணடிக்கிறோம் என்பதைக் காணுங்கள்; பல வேடிக்கைகள் புலப்படும். வாரத்தின் ஏழு நாட்களில் சனி, ஞாயிறு கிழமைகள் அரசு விடுமுறையாக உள்ளன. மீதமுள்ள ஐந்து நாட்களில் இன்னுமொரு நாள் ஏதாவது காரணத்திற்காக சராசரிக் கணக்கில் அரசு விடுமுறை நாளாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதற்கு பண்டிகைகள், திருவிழாக்கள், தலைவர்களின் இறப்புகள், பெருமழை, வெள்ளம், இயற்கைச் சீற்றங்கள், தேர்தல்கள் போன்றவை வழிவகுத்து விடுகின்றன.

இவைப்போக தேர்த்திருவிழாக்கள், கொண்டாட்டங்கள், ஊர்வலங்கள், வேலை நிறுத்தங்கள், சாலை மறியல்கள், தகராறுகள், கோஷ்டி பூசல்கள், பலவகையான விபத்துக்கள் எனப் பல இடையூறுகளினால் பல நாட்கள்

வீணாகிப்போகின்றன. தொடர் மழைக்காலத்தில் பலக் காரியங்களை ஆரம்பிக்கவோ, செய்யவோ இயலாது. மேலும் தனிமனித, குடும்பத்தினர்களின் சுகமின்மைகள், சண்டை சச்சரவுகள், ஊடல்கள் மற்றும் உறவினர், நண்பர்கள் அவர்தம் குடும்பத்தினரின் நல்ல, கெட்ட நிகழ்ச்சிகள், காரியங்களுக்குச் செல்ல வேண்டியிருப்பது போன்றவைகளால் பல நாட்கள் இழப்பு வரும்.

இவைகளையும் கடந்து மீதமிருக்கும் நாட்கள் மற்றும் நேரங்களில் ஏதேனும் செய்ய நினைத்தால், முயற்சித்தால் சடங்கு, சம்பிரதாயங்கள், கால தோஷங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இராகு, எமகண்டம், குளிகை, சூலம், அஷ்டமி, நவமி, கெட்ட நேரங்கள், சகுனத்தடைகளாகக் கருதப்படுகிற பூனை, விதவை, வறியவர், ஒத்தைப் பார்ப்பணர், திடீர் தும்மல், கல் தடுக்கல், எங்கே போகிறாய்? என்றக் கேள்வி இன்னும் பலவும் பலரின் செயல்பாடுகளை நிறுத்திவிடுகின்றன. இவைபோக சோதிடர்களின் எச்சரிக்கை, அவசியம் செல்ல வேண்டிய நேரத்தை, திசையை பொருத்தமற்றதாகச் சோதிடம் சொல்லி ஆகாததாக்குவது, முக்கிய வேலைகளுக்காகக் கிளம்பிக் கொண்டிருக்கும்போது திடீர் நண்பர்கள், உறவினர்கள் வந்துவிடுவது போன்றவைகள் மேலும் தடுப்பு வியூகம் போட்டு விடுகின்றன.

**நாயைக் காணோம்**

இதையும் தாண்டி மீதமிருக்கும் ‘சொற்ப நாட்களின் நேரங்களில்’ செயலாற்ற எண்ணும்போது குறிப்பிட்ட அந்நேரத்திற்குத் தேவைப்படும் செலவுகளுக்கு பணமிருக்காது; ஆடை தயார் நிலையிலிருக்காது, பேருந்து

ஓடாது அல்லது சற்று முன்னர்தான் போயிருக்கும். இவைற்றையெல்லாம் சரிப்படுத்தி அமைத்துக்கொண்டு எப்படியும் ஒரு செயலுக்காகச் சென்றுவிட்டால் அதற்குரிய உத்தரவு, அனுமதி, உதவி தரவேண்டிய வேலை செய்ய வேண்டிய சம்பந்தப்பட்ட அலுவலர்கள், மனிதர்கள் அங்கே இருக்க மாட்டார்கள். "கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம" என்னும் நிலையாகிவிடும்.

சிலருக்கு சில கிழமைகள் ஆகாது அல்லது சிலகிழமைகளில் சில திசைகள், குறிப்பிட்ட நேரங்கள் ஆகாது. ஆனால் அச்சமயங்களில்தான் நிச்சயமாகவே சம்பந்தப்பட்ட உதவும் மனிதர்கள் சம்பந்தப்பட்ட இடங்களில், திசைகளில் கிடைக்கப்பெறுவார்கள். ஆயினும் என் செய்வது? எல்லாம் இழப்பும் தோல்வியுமே இறுதியில் மிஞ்சும்.

## முன்னேறியவர்கள் காலத்தடைகளை கணக்கிடவில்லை

இவ்வாறாக எல்லாம் போக வருடத்தில் சுமார் இருபது, முப்பது நாட்களே பலரால் செயல்பாடுகளுக்கு உட்படுத்திக்கொள்ள முடிகிறது. நாள் நட்சத்திரம் பார்க்காத சிலர் மட்டுமே பல நாட்களைப் பக்குவமாக பயன்படுத்துகிறார்கள். இவை போன்ற காரணங்கள் இந்தியா போன்ற இம்மாதிரி வழக்கங்கள் கொண்ட மக்களை உடைய நாடுகள் வேகமாக முன்னேற இயலாமல் போவதற்கு காரணிகளாக இருக்கின்றன என்பதில் யாதொரு ஐயமுமில்லை. இந்தியாவில் மூடநம்பிக்கையைப் பற்றி

சொல்லவே வேண்டியதில்லை, அந்தளவுக்கு பெரும்பாலான மக்கள் அவற்றில் மூழ்கிக்கிடக்கிறார்கள். இவர்களை திசைத் திருப்புவது சாமானியப்பட்ட காரியமில்லை. இறுதி வரையிலும் இவ்வாறே இருந்தாலும் ஆச்சரிய மொன்றுமில்லை!!

பல முன்னேறிய மேலை நாடுகளுக்கெல்லாம் இவ்வகையான காலவிரயமெல்லாம் கிடையாது. 'எப்படி எப்படி காலத்தை விரயம் செய்யலாம்' என்பதற்காக, நம்மவர்களைப் போல அவர்கள் பலகணக்குகள் போட்டு வீணடித்துக் கொண்டிருப்பதற்கு அன்று முதல் இன்று வரையில் முயற்சி மேற்கொள்ளவில்லை! எப்பொழுதெல்லாம் அவர்களால் செயல்பட முடிகிறதோ, வாய்ப்பு அமைகிறதோ அப்பொழுதெல்லாம் செயலாற்றுவார்கள். அதனாலேயே வளரும் நாடுகள், ஏழை நாடுகளைவிட சுமார் இருபத்தைந்து முதல் ஐம்பது ஆண்டுகள் வரையில் முன் நிற்கிறார்கள். இந்தியாவில் இப்போதுதான் ஐம்பது ஆண்டுகளுக்கு முந்தைய ஐரோப்பிய வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதுவே இங்குள்ள அரசியல்வாதிகளுக்கு பெரிய வளர்ச்சியாகத் தெரிவது நமது துரதிஷ்டம்!

எனவே ஒவ்வொருவரும், வெற்றி பெறுவதற்கு எந்தக்கால நிலையையும் பயன்படுத்திக் கொள்ளும் சாதுரியம் வரவேண்டும். நல்லவேளையாக கல்விக் கூடங்கள், தேர்வுகள், அலுவலகம், வியாபாரம், தொழிற்சாலைகள் போன்றவற்றிற்குச் செல்ல பெரும்பாலான சாஸ்திர சம்பிரதாயங்கள் தடைகளாக இருக்கவில்லை. ஒருவேளை அப்படி இருந்திருந்தால் பலர் படித்திருக்கவோ, தேர்வு

எழுதவோ வாய்ப்பில்லாமல் போயிருக்கும். அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் ஊழியர்கள், தொழிலாளர்கள் பல சமயங்களில் இருந்திருக்க மாட்டார்கள். வியாபாரமும் எந்நேரமும் நடக்க வாய்ப்பில்லாமல், மக்கள் விரும்பிய நேரங்களில் பொருட்களை வாங்கியிருக்க இயலாது. இவைகளை சாஸ்திர சம்பிரதாயங்கள் கண்டுகொள்ளாமல் விட்டு வைத்தது நமது பாக்கியம்!

## ஒரு இந்திய மனித ஆயுளுள் பயன்படுத்தப்படும் நாட்கள்

மனித வாழ்க்கை வரலாற்றின் இடைப்பட்டக் காலங்களில் அவ்வப்போது பல நல்ல நிகழ்வுகளும், சிலதீய நடைமுறைகளும் பழக்கவழக்கங்களும் வந்து விடுகின்றன. இதற்குப் பல உதாரணங்களைக் கூறலாம். இங்கே ஒருசில நாட்கள் மட்டும் சிறப்பானதாகவும், மற்றவைகளை சிறப்பில்லாததுமாக்கியது வேதனைக்குரியது. அதாவது ஒரு மனிதன் சராசரியாக எழுபது வயது வரையில் வாழ்வதாக வைத்துக் கொள்வோம். அதில் ஆண்டொன்றுக்கு சராசரியாக பத்துப் பதினைந்து நாட்கள் முக்கியமான தாக்கப்பட்டு, மொத்த வாழ்நாளின் எழுபது ஆண்டுகளில் சுமார் எழுபது முதல் நூறு நாட்களுள் மகிழ்ச்சி, கொண்டாடட்டங்களுக்கு சிறப்பு நாட்களாக்கப்பட்டிருப்பது பேதமை என்றுதான் சொல்ல முடியும்.

நாம் உடல்நலம், மனநலம் மற்றும் மகிழ்ச்சி, வாய்ப்புகள், சூழ்நிலைகள் இருக்கும் ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு வினாடிப்பொழுதையும் இயன்ற வரையில் சிறப்பாகச் செயலாற்றி வாழ்ந்து விடவேண்டும். சிலர்

அதற்காக எந்நேரமும் போதை அருந்திக் கொண்டு கும்மாளமிடுவது மிகமிகக் கேவலமானது மட்டுமின்றி அருவருப்பானதும் கூட. இதைவிட செயலற்று வாளாயிருப்பது எவ்வளவோ மேல்! ஒவ்வொரு வினாடிநேரம், நம்மை விட்டுப் போய்க் கொண்டிருக்கும்போது நாமும் ஒவ்வொரு வினாடியாக இவ்வுலகிலிருக்கும் காலத்தில், நமது ஆயுளில் கழிந்து கொண்டிருக்கிறோம் என்பதை அறிதல் வேண்டும்.

யாருக்கு எப்போது மரணம் சம்பவிக்கும்? என்பது எவருக்கும் தெரியாது. சிலருக்கு குழந்தைப் பருவங்களிலும், சிலருக்கு சிறு, நடு வயதுகளிலும் மரணம் வந்து விடுகிறது. கொடிய நோய்கள், விபத்துக்கள், கொலைகள், தற்கொலைகள் போன்றவற்றால் சிலருக்கு அகால மரணம் நேர்ந்து விடுகிறது. சிலர் நீண்ட ஆயுள் பெற்றிருந்தாலும் பலவித உடலின் உட்புற, வெளிப்புற, செயற்கை ஊனங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இவர்களிலும் சிலர் முக்கால் பாகத்திற்கும் மிகுதியான காலம் இறப்பு நிலையில் பல மாதங்கள், ஆண்டுகளைக் கடக்க வேண்டியிருக்கிறது.

அப்படியே நம்மில் பலருக்கு பெரிய நல்ல ஆயுள் கிடைத்தாலும், வயது ஆக ஆக வலிமை, எடை, உயரம், அகலம், உணவு, சுவை, வீரியம் என எல்லாம் குறைந்து கொண்டே வந்து உடல் தளர்ந்து இறப்பை நோக்கிய வாழ்க்கையே மேலிடுகிறது.

### துன்பத்தில் சிரிக்க வேண்டியதில்லை

பல நாட்களில் பல சமயங்களில் பலவிதத் துன்பங்கள் வருகின்றன. அப்போதெல்லாம் நாம் மகிழ்ச்சியாக இருந்துவிட முடியாது. ‘துன்பம் வரும்

வேளையிலே சிரிங்க' என திருவள்ளுவர் போன்றவர்கள் சொல்லியிருந்தாலும், அம்மாதிரியான அநேக நேரங்களில் கொடும் துயரங்களில் இக்கட்டான சூழ்நிலைகளில் யாருக்குத்தான் சிரித்து மகிழ இயலும். அப்படியான சூழ்நிலைமைகளில் சிரிப்பவர்கள் பைத்தியங்களாகவே கருதப்பட வேண்டியதிருக்கும்!

**மனநிலை மாற்றம்**

எனவே ஒருசிலப் பண்டிகை நாட்களை மட்டுமே கொண்டாடும் வழக்கத்தை மாற்றி ஒவ்வொரு நாளையும், மணித்துளியையும் பண்டிகை நாட்கள், நேரத்திற்கு சமமாகப் பாவித்து வாழும் மனநிலையை பெறுவோம்.

அதேபோல் புத்தாடைகளை வாங்குவதற்கு பண்டிகை தினங்களை எதிர்பார்க்காமல், பணமிருக்கும் மற்றும் தேவைப்படும் சமயங்களில் வாங்கிக் கொள்வதில் தவறில்லை. விலைக்குறைப்பு, தள்ளுபடிக் காலங்களில் செலவு குறைந்து பணம் மிச்சமாகும். எல்லோரும் குறிப்பிட்ட நாட்களிலேயே ஒன்றாக மொய்க்க வேண்டுமென்ற அவசியமில்லை. 'எல்லாம் மனம்தான் காரணம், மனமிருந்தால் மார்க்கமுண்டு'.

**பட்டாசுக் கொளுத்தும் முறை**

தீபாவளி போன்ற பண்டிகைகளின் போது அபரிமிதமாகப் பட்டாசுகள் கொளுத்தப்படுகின்றன. வசதி படைத்தவர்களுடன், போட்டிப்போட்டுக் கொண்டு நடுத்தர, ஏழை மக்களும் பட்டாசுகள் கொளுத்தி, அவர்களின் தகுதிக்கு மீறி தங்கள் காசையும் கொளுத்திக் கொள்கிறார்கள். பல ஏழை, நடுத்தர மக்களின் அளவுக்கு

மீறின பட்டாசுக்கான செலவு, சிலருக்கு கொளுத்த வருமானம் தந்து கோடி கோடியாகக் கொட்டி தந்து பெரும் கோடீஸ்வரர்களாக்குகிறது.

பட்டாசு கொளுத்துவது சிறுவர்களுக்கு மட்டுமின்றி பெரியவர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தரக்கூடியது. என்றாலும் அவரவர் வீட்டு வாசல்களில் அவசியம் அதிகபட்சமாக பட்டாசு கொளுத்தப்பட வேண்டும். என்பதில்லை. திருவிழாக்கள், கோவில்கள், பொது நிகழ்ச்சிகளில் ஒரு பொது இடத்திலிருந்து கொளுத்தப்படும் போது நாமனைவரும் ரசிப்பதில்லையா, அதைப் போல மற்றவர்களின் வீட்டு பட்டாசு வெடிப்பையும் ரசிக்கலாமே!

அடிக்கடி பட்டாசுகளினால் விபத்துக்கள் ஏற்பட்டு மரணங்கள் உடலுக்கு ஊனங்கள் கொடுத்து விடுகின்றன. அந்நாட்களில் வாயு மண்டலம் பயங்கரமாகப் பாதிக்கப்பட்டு, சிறு குழந்தைகள் மற்றும் வயதானவர்களுக்கு, சுவாச நோயாளிகளுக்கு பெரும் தொல்லை கொடுக்கிறது. குடிசைப் பகுதிகள் சில தீச்சுவாலைக்கு இரையாகின்றன. எனவே பட்டாசுகளை அவரவர் வீட்டு வாசல், தெரு, சாலை போன்ற இடங்களில் கொளுத்துவதைக் காட்டிலும் ஊருக்குச் சற்றுத் தள்ளி ஒதுக்குப்புறமான இடங்களில் ஒன்று கூடி, அவரவர் தகுதிக்கு அளவுடன் கொளுத்தி மகிழலாம். இதனால் பலப் பிரச்சனைகளுக்குத் தீர்வு கிட்டுவதோடு எதிர்பாராத பல நன்மைகள் சேரும். இம்மாதிரியாக ஒத்தக்கருத்தில், ஒரு மனநிலையில் பலர் ஒன்று கூடும்போது, ஆழமான நட்புகள், ஒற்றுமை, ஒருங்கிணைப்பு, புரிதல் ஏற்பட்டு சமுதாயம் மலர்ச்சியடையும்.

## எந்நாளும் திருநாள்

இறுதியாக, ஒரு வழக்கத்திலிருப்பவர்கள் தீடீரென ஆரம்பத்தில், நடைமுறையில் எல்லா நாட்களையும் அவ்வளவாகக் கொண்டாட முடியாது என்பது அனுபவ உண்மை என்றாலும், எந்நாளையும் தாழ்வாகக் கருதாமலிருத்தலே அந்நாளுக்கு சிறப்பு சேர்ந்துவிடும்! குறைந்தபட்சமாக மாதத்தின் ஏதாவது இரண்டொரு நாட்களை உதாரணமாக ஏதாவதொரு சனி, ஞாயிறு கிழமைகளை, குடும்பத்துடன் அல்லது நண்பர்களுடன் கொண்டாடுவதற்கு ஒதுக்கிக் கொள்ளுதல் வாழ்விற்கு அர்த்தம் சேர்க்கும். இந்நாட்களில் அளவான தின்பண்டங்கள், நடனம், சினிமா, டிராமா, சர்க்கஸ், கடற்கரை, கடைத்தெரு, பிக்னிக், சாகசம், மேஜிக், சமூக சேவை, இசை நிகழ்ச்சி, போட்டிகளில் பங்கேற்றல் போன்றவைகளின் ஒருசிலவற்றில் மனம் செலுத்தி மகிழ்ந்துணர்ந்து இன்புறுவோம். 'எல்லோரும் கொண்டாடுவோம், எந்நாளையும் கொண்டாடுவோம். எந்நேரத்தையும் கொண்டாடுவோம்.'

# அறிவாளிகள் புத்திசாலிகள்

மனிதர்களின் அறிவு, புத்தி நிலையை வைத்து அவர்களை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்கலாம். அறிவாளிகள், புத்திசாலிகள், அரைகுறைகள், மண்ணாங்கட்டிகள். என நான்கு பெரும் பிரிவினர் ஆவார்கள். இவர்களுள் மூன்றாவதான அரைகுறைகள் நான்காவதான மண்ணாங்கட்டி. மனிதர்களைப் பற்றி நாம் இவ்விடத்தில் கவலைப்படப்போவதில்லை. இந்த அறிவாளிகள், புத்திசாலிகள் யார் யார் இவர்களுக்கிடையில் உள்ள வித்தியாசங்கள் எவை என ஆராய்வோம்.

**அறிவாளிகள் :**

அறிவாளிகளில் இயற்கை விஞ்ஞானிகள், தத்துவஞானிகள், மேதைகள், இயற்கையான மனிதத்தலைவர்கள், மாபெரும் படைப்பாளிகள் போன்றோர் வருகின்றனர். இப்படியானவர்கள் எப்போதாவது தோன்றுவதும் லட்சத்தில் கோடியில் ஒருவராகவும் இருப்பார்கள். இவர்கள் தங்களுக்காக வாழாமல் பிறருக்காக வாழும் நிலையில் எப்போதும் பொது உலக நலன்களுக்கானச் சிந்தனை உடையவர்களாகத் திகழ்வார்கள். அறிவை ஆள்பவர்களே அறிவாளிகளாகத் திகழ்கிறார்கள்.

இவர்களுக்கு இயற்கை அறிவும் சிந்திக்கும் ஆற்றலும் மிகுந்திருக்கும். இவர்கள் வீண் பேச்சு பேச விரும்பாததாலும், சிறிது முன்கோபமிருப்பதாலும் யாருடனும் எளிதில் பழக இயலாது. மற்றவர்களுக்கு இவர்களுடன் நட்பு

கொண்டாடுவது சிறிது சிரமமே. இதனால் இவர்கள் சில சமயங்களில் கெட்டபெயர் எடுத்துக் கொள்வார்கள். அதோடு எளிமையாகவும், அடக்கமாகவும் சற்று மெய்மறந்த சோகத் தோற்றத்துடன் காணப்படுவார்கள். அரைகுறைகளும் இவ்வகைகளில் இருப்பார்கள். அவர்களை இந்த அறிவாளிகளோடு சேர்த்து விடமுடியாது.

மேற்கண்ட காரணங்களுடன் வெளிப்படையான பாரபட்சமில்லாதச் செயல்பாட்டுடன் இவர்கள் இருப்பதால் பெரும்பகுதி மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தாத நிலையில் குறைவான முக்கியத்துவமே இவர்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும்.

இவர்களுக்கு நேர்மை, நாணயம் போன்றக் குணங்களோடு நேரம் வீணாக்காமையும் பண்புகளாக இருக்கும். இவர்களில் பலருக்குக் கடவுள் கொள்கையில் அவ்வளவு ஈடுபாடு இல்லாமலும், எதிராகவும் கூட இருப்பார்கள். சுய விருப்பங்களைக் குறைத்து எதற்கும் அதிகமாக அலட்டி கொள்ளாததோடு, கவலைப்பட்டுக் கொண்டிருக்கவும் மாட்டார்கள். இவ்வகையினரில் பலருக்கு ஞாபகச் சக்திக் குறைவாகவும், அந்த குறிப்பிட்ட நேரத்திற்குத் தேவைப்படும் செய்தி, வார்த்தை போன்றவைகள் கிடைக்காமல் தடுமாறக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். பிரபல விஞ்ஞானி ஒருவர் எதற்காகவோ வரிசையில் நின்று தன்முறை வந்தபோது அவரிடம் உங்கள் பெயர் என்ன எனக் கேட்டபோது தன் பெயரையே சொல்ல முடியாத அளவுக்கு மறந்து கண்ணீர் விட, பின்னால் வந்தவர் இவர் பெயரைக் கூறியதும்தான் மேற்படி விஞ்ஞானி நிலைக்கு வந்தாராம். இது உண்மையாக நடந்த சம்பவமாகும்.

எல்லா மனிதர்களைப் போல இவர்களுக்கும் பலஆசைகள் இருந்தாலும் அதை நிறைவேற்றிக் கொள்வதற்கு, முயற்சிக்க நேரம் செலவு செய்ய இவர்களால் இயலாமல் போய்விடும். இவர்களில் பலர் செல்வநிலையில் சுமார் அளவையே எட்டமுடிகிறது. மொத்தத்தில் இவர்கள் நல்லவர்களாகவும் கனவில் கூட பிறருக்குத் தீங்கு இழைக்காதவர்களாகவும் இருப்பதற்கு அதிக வாய்ப்புகளுண்டு.

## புத்திசாலிகள் :

புத்திசாலிகள் என்பவர்கள் புத்தி சாதுரியம் மிக்க சாமார்த்தியசாலிகளாக உலக நடப்புகளைக் கிரகித்துக் கொண்டு சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி செயல்படுபவர்களாக இருப்பவர்களாகிறார்கள். இவர்களை நல்ல புத்திசாலிகள், தீய புத்திசாலிகள், இரண்டும் கலந்த புத்திசாலிகள் என மூன்று நிலைகளில் வகைப்படுத்தலாம். இவர்களுக்குத் திறமையும் ஞாபகசக்தியும் அதிகமாக இருப்பதினால் நிறைய நட்புகளுடன், உறவையும் பேணி வருவார்கள். பலரும் இவர்களுடனான நட்பை விரும்புவார்கள். இவர்களுக்குச் சுயநலம் அதிகமிருந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் தனக்காகவும், தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்காகவும் தேவைப்படும் காரியங்களை எச்சரிக்கையாகச் செய்துகொள்ளும் காரியவாதிகளாவார்கள்.

ஆடம்பரம், படாடோபத்தை விரும்பும் இம்மனிதர்கள் நல்ல தந்திரம் தெரிந்தவர்களாக மனிதக் கலையை நன்கு புரிந்தவர்களாக இருக்கக்கூடும். படிப்பாளிகள், அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், வியாபாரிகள், சமூக

சேவகர்கள், சமுதாயத் தலைவர்கள், சினிமாத்துறையினர் போன்றோர் இந்தப் புத்திசாலிப் பிரிவினரில் வரக்கூடியவர்களாக இருப்பார்கள். இவர்கள் அதிகம் சாதுரியம் பேசும் திறமையைப் பெற்றிருப்பதோடு நன்றாக உழைக்கக்கூடியவர்களாகவும் இருப்பதால் அதற்கேற்ற உயர்நிலைப் பெற்று முக்கியத்துவம் அடைந்து பெயர், புகழுடன் தலைமைப் பதவிக்குத் தகுதியுடையவராகிறார்கள். அந்தந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குத் தேவைப்படும் மிகத் துல்லியமான செயல்பாடுகளை உறுதியுடன் கொடுத்து விருப்பங்களை பூர்த்தி செய்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகிறவர்களாக இருப்பார்கள்.

பழைய காலங்களில் இவ்வகை மனிதர்கள் குறைவாக இருந்திருந்தாலும் தற்காலத்தில் அதிகப்படியானோர் நல்ல புத்திசாலிகளாகத் திகழ்ந்து வருகிறார்கள். புத்திசாலிகள் சிலரிடம் நேர்மை, நாணயம், பிறருக்கு உண்மையாக உதவுவது, மற்றவர்களின் உயர்வைப் பொருத்துக் கொள்வது போன்ற தன்மைகள், குணங்கள் குறைந்தே காணப்படுகின்றன. புத்திசாலிகளாக இருப்பவர்கள் எங்கேயும் எப்படியும் பிழைத்துக் கொள்வார்கள். இவர்களில் பலருக்குக் கடவுள்பக்தி அதிகம் இருக்கக்கூடும். ஓரளவுக்கு நல்ல பெயரை சம்பாதித்துக் கொள்வார்கள்.

அறிவாளித்தனம், புத்திசாலித்தனம் என இரண்டும் சேர்ந்து சிலர் பிரகாசிப்பார்கள். இப்படியானவர் மிகக் குறைவாகத்தான் தோன்றுவார்கள். இம்மாதிரி அமைந்து விடும் மனிதர்கள் உலகப்புகழ் பெறுவார்கள். இவர்களே உலகில் மிகச் சிறப்புப் பெற்ற மனிதர்களாவார்கள்.

# காதலும் பெண்களும்

நல்ல வாழ்க்கைத்துணை அமையப்பெறுவது ஒரு பேரதிஷ்டம். இது பெரும்பாலானவர்களுக்குக் கிடைக்கப்பெறவில்லை என்பதே உண்மை. ஏதோ ஒருவித சகிப்புத் தன்மையோடு, திருப்தியின்மையோடுதான் பல குடும்பங்களில் இரு பாலருமே காலத்தை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இதனூடே பல இடங்களில் சண்டை சச்சரவுகள், குழப்பங்கள், தவறுகள், பிரிவுகள் எனப் போய்க்கொண்டிருக்கிறது மானிட வாழ்க்கை.

## பழைய சித்தாந்தம் தேவையில்லை

அப்படியானச் சூழ்நிலையில் ஓரளவுக்காவது பொருத்தமான துணையைத் தேர்ந்தெடுப்பது மிக அவசியமாகும். ‘காதலுக்குக் கண்ணில்லை’, ‘கண்டதும் காதல் கொண்டதே கோலம்’ எனும் பழைய சித்தாந்தத்தைத் தகர்த்தெறிந்துவிட்டு, தேவையற்ற அவசரத்தை ஒதுக்கி, கவனமாக நல்ல துணையைத் தேடவேண்டும். குறிப்பாக இவ்விஷயத்தில் பெரும்பகுதிப் பெண்கள் தேர்ச்சியற்றவர்களாக காணப்படுகிறார்கள். காதலனைத் தேர்ந்தெடுப்பதில் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; இது வாழ்க்கையின் மிக முக்கியமானக் கட்டம்.

காதலித்துத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படும் பெண்கள், ஒருவனைக் காதலனாக்குவதற்கு முன் அனைத்து வழிகளிலும் அவனைப்பற்றி நன்றாக விசாரியுங்கள். முடிந்த அளவுக்கு உங்கள் வீட்டினரிடம் அல்லது நம்பிக்கையானவர்

களிடம் தெரியப்படுத்தி உங்களுக்கும், குடும்பத்திற்கும் அவருடைய பழக்கவழக்கங்கள், அறிவு, அழகு, கல்வித்தகுதி, பொருளாதார நிலை, உணவுப்பழக்கங்கள் போன்றவை 'ஓரளவுக்காவது' பொருத்தம்தானா? என்பதைக் கட்டாயமாகத் தெரிந்து கொள்வது நல்லது. இதற்கு நண்பர்கள், உறவினர்கள், ஏஜென்சிகள் மூலம் முயற்சி செய்யலாம். துப்பறியும் ஏஜென்ஸி முறை விருபப்பட்டால், நாடு முழுக்க சிறு நகரங்கள்வரை இத்தொழில் ஆரம்பமாகி, பலருக்கு வேலைவாய்ப்பைத் தருவதுடன், திருமணங்கள் விரைவாக நடப்பதற்கும் வழி வகுக்கும்.

திருப்தியான, நம்பிக்கையான தகவல் கிடைத்த பிறகே காதலை ஏற்றுக் கொள்ளுங்கள். தேர்ந்தெடுத்தபிறகு இரு குடும்பத்தினரின் சம்மதத்துடனேயே திருமணம் செய்து கொள்ள முயற்சிக்கவும். முக்கியமாக உங்கள் இருவரில் ஒருவருக்காவது, வாழ்க்கைக்கான 'போதுமான வருமானம்' உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளவும்.

**காதலில் அவசரம் கூடாது**

கண்ணில்படும் நபரின் தோற்றத்தையெல்லாம் உண்மையென நம்பி விடாதீர்கள். போலிகள், ரவுடிகள், சோம்பேறிகள், முட்டாள்கள், தீய பழக்கமுள்ளவர்கள், தீய தொழில்செய்வோர், வாழ வழியற்றோர் போன்றவர்கள் அதிகமிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை அவசரமாகவும் அறியாமலும் காதலித்துத் திருமணம் செய்துகொண்டு, சிக்கிக்கொண்டு எந்த வகையிலும் பொருத்தமில்லாமல் சொல்லொண்ணா வேதனைப்படும், தினமும் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த,

படித்த பண்புள்ள அழகுள்ள, அற்புதமானப் பெண்கள் பலரை இச்சமுதாயத்தில் எவரும் காணக் கூடியதாக இருக்கிறது.

இதற்கெல்லாம் முக்கியமான காரணங்களில் ஒன்று பெரும்பகுதி பொழுதுபோக்கிற்காகவும், மிகைப் படுத்தலுடனும், நிஜ வாழ்க்கையில் பொருந்தாதுமான கதைகள், சம்பங்கள் கொண்ட தவறான திரைப்படங்கள், டிவி சீரியல்கள் தயாரிக்கப்படுவதாகும். இவைகளின் பாதிப்பினால் பெரும்பாலான பெண்களின் மனநிலையில் பெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது.

வயதுக்கோளாறு, சுற்றுப்புறத் தூண்டுதல், மோசக்காரர்களின் விடா முயற்சி, வஞ்சக சக்திகள், காம இச்சைகள், தோழிகள்-தோழர்களின் தவறுதலான வழிகாட்டுதல்கள் போன்றவைகளினால் பொருத்தமில்லாத காதல் திருமணம் செய்து கொள்கின்றனர். இதன் காரணமாக பெரும் துன்பத்திற்குள்ளானப் பெண்களின் பெற்றோர்களுள், தற்கொலை செய்து கொண்டவர்கள், நோயில் படுத்தபடுக்கையாகி இறந்தவர்கள், சரியான உணவை வெறுத்தவர்கள், அவமானம், துக்கம் தாளாமல் செய்யும் தொழிலை, வேலையைவிட்டு ஊரைவிட்டே போனவர்கள், குடும்பமே அழிந்து போனவர்கள் என ஏகப்பட்ட சம்பவங்கள் உண்டு. இதே பாதிப்புகள் இப்பெண்களுக்கும் ஏற்படத்தான் செய்கின்றன.

ஆனால் சில பெண்கள், பெரும்பாலும் ‘காம இச்சைகள் ஏற்பட்டு காதல் சுகத்தை அனுபவிக்கும் வெறியில்’, சிறிது காலமே சந்தோஷத்தைத் தரும் சிக்கலான, நிலையற்ற வாழ்க்கையை முதிர்ச்சியற்ற வயதில் அமைத்துக் கொண்டு வருகிறார்கள். இதன் மூலம்

பெற்றோரை, குடும்பத்தினரை, சகோதர-சகோதரிகளை, உறவினர்களைத் துன்பப்படுத்துகிறார்கள். காதல், காம சுகத்திற்காக பெற்றோரையும், சகோதர சகோதரிகளையும் தூக்கியெறிந்து விடாதீர்கள்.

## ஆண்கள் சாமார்த்தியசாலிகள்

ஆண்களைப் பொருத்தவரை காதலியைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனமாக, புத்திசாலித்தனமாக எல்லா நிலைகளிலும் தனக்குச் சமமாகவோ அல்லது உயர்வாகவோ உள்ளவகையில்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். காதல் திருமணம் செய்து கொண்ட ஆண்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் பெரும்பாலும் அப்படியொன்றும் பிரச்சனைகள் வருவதில்லை.

சினிமாக்கள் கூட அதிகபட்சம் பணக்காரப் பெண்கள் ஏழையைக் காதலித்துத் திருமணம் செய்யும் தன்மையில்தான் எடுக்கப்படுகின்றன. இதனால் பணக்காரப் பெண்கள் தூண்டப்படுவது ஓரளவுக்கு உண்மைதான். மாறாக பணக்கார ஆண்கள் ஏழைப் பெண்களைக் காதலிப்பதாகவோ, திருமணம் செய்து கொள்வதாகவோ நூற்றில் ஒரு படம் வந்தால் கூட ஆச்சரியமே! ஏனென்றால் பணக்கார ஆண்களிடம் இந்த ஏமாற்று வேலை அதாவது ஏழைப் பெண்களைக் கவர்வது, காதலிப்பது எல்லாம் அவ்வளவாக நடக்க முடியாது. இதில் ஆண்கள் மிக ஜாக்கிரதையாகவே இருப்பதாகத் தெரிகிறது. சூழ்ச்சிகள் செய்து 'அப்படியொரு சூழ்நிலையில் மாட்டிவிடும்' சம்பவங்களில் தான் விருப்பமில்லாமல் ஆண்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மாட்டிக் கொண்டு சிரிப்பாய் சிரிக்கிறார்கள்.

**சினிமாக்காதல்**

பெரும்பாலான இந்திய சினிமாக்களில் பணக்காரப்பெண் ஏழைப்பையனைக் காதலிப்பதாகவும், அதற்கு பெண்ணின் தந்தை, அண்ணன் மற்றும் உறவினர்கள், அக்காதலர்களுக்கு எதிரிகளாகவும் காட்டப்பட்டு வருகிறது. சமுதாயத்திலும் அதன் தாக்கம் ஏற்பட்டு இன்று பல குடும்பங்களில் குறிப்பாக வசதியுள்ள இடங்களில் பெண்கள் மீது குடும்ப உறவினர்கள் ஒருவருக்கொருவர் நம்பிக்கை, ஈடுபாடு, அன்பில் குறைந்து, பெண்கள் எதிரிகளாக்கப்பட்டு ஒரு வகையான வெறுப்புச் சூழ்நிலையில் தள்ளப்பட்டுள்ளார்கள். இதனால் குடும்பத்து நபர்களின் கல்வி, வியாபாரம், தொழில், முன்னேற்றம், கௌரவம், அந்தஸ்து இவற்றில் பின்னடைவுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இத்திரைப்படங்கள் செய்வது சரியான செயலா? சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**கவனமானத் தேர்வு**

நல்ல பொருத்தமானக் காதலனைத் தேர்ந்தெடுப்பது கொஞ்சம் சிரமம்தான். பலரும் பார்ப்பதற்கு நல்லவர்கள், படித்தவர்கள், பண்புள்ளவர்களாக மிடுக்கான உடையணிந்து நல்ல தோற்றத்தோடு, பணக்காரர்களாகக் கூடத் தெரிவார்கள். ஆனால் இதில் பாதிக்கு மேல் ஏன் முக்கால்வாசிக்கு மேல்கூட போலிகள் என்பதை இத்தருணத்தில் தெரிந்து கொள்ள வேண்டும்.

எப்போதும் சாலையோரத்தில் நிற்பவனையும், விடாமல் விரட்டுபவனையும் எளிதில் நம்பக் கூடாது. மாறாக திமிர், கர்வம், கம்பீரம், அலட்சியம், மற்றவர்களை அவ்வளவாகக்

கண்டு கொள்ளாதவர்கள், கடுமையாக உழைப்பவர்கள், முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவர்கள், பெண்களை சரியாகக் கவனியாதவர்கள் போன்றோரை ஓரளவுக்கு நம்பலாம். ஆணின் வயது சற்றுக் கூடுதலாக இருப்பதே விஞ்ஞானம் மற்றும் அனுபவப்பூர்வமாக நல்லது.

எந்த வருமானமும், வேலைவெட்டியும் இல்லாத சிலர் பணக்காரப் பெண்களைத் தேர்ந்தெடுத்து முதல் நாள் செருப்பு, எச்சில் துப்புதல் பெறுவது போன்ற அவமானங்களில் ஆரம்பித்து, சில நாட்களில் உயிருக்கு உயிரான காதலாக்கி விடுகிறார்கள். பிறகு எப்பாடுபட்டாவது திருமணம் செய்து, அதன் மூலம் செட்டிலாகிவிட திட்டம் தீட்டிச் செயலாற்றும் கயவர்களும் இருக்கிறார்கள்: இப்படி ஏற்கெனவே செட்டிலான பலர் இருக்கிறார்கள். இது உழைக்காமலும், உழைக்க விருப்பமில்லாமலும் குறுக்கு வழியில் திருட்டு வழியில் முன்னேறும் திட்டம் போன்றது.

**பெண்களின் சராசரி இயல்பு**

தொடர்ச்சியான முயற்சிகளால் ‘எப்பேர்ப்பட்ட பெண்ணும் எவ்வளவு தரம் தாழ்ந்தவனிடமும்’ அகப்பட்டுக் கொள்வதைப் பார்க்க முடிகிறது. பெண்களில் சிலர், பெற்றோர்கள், சகோதரர்கள் அரும்பாடுபட்டு உழைத்து, சம்பாதித்துச் சேர்த்த செல்வத்தைத் திருடி சுருட்டிக் கொண்டு, காதலனோடு ஓடி விடுகிறார்கள். இது மிகக் கேவலமானச் செயலாகும்.

காதல் ஏற்பட்டால் வீண் செலவுகள், நேரம் வீணாவது, பேசியதையே எப்போதும் பேசுவது, கவிதைகள் எழுதுவது, ஊர் சுற்றுவது, சினிமாக்கள், ஹோட்டல்களுக்குச் செல்வது,

பாட்டுகள் பாடிக் கொண்டிருப்பது, வேறு எந்த வேலையிலும் நாட்டமில்லாமலிருப்பது போன்ற 'மிகச்சிறந்த' பணிகள் அரங்கேறிக் கொண்டிருக்கும். இது பரவாயில்லை நடப்பது நடக்கட்டும் என்று இனிமேலும் விடுவதற்கில்லை! கொஞ்சம் புத்திசாலித்தனமாகவும் அந்நேரங்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமென்றே தோன்றுகிறது.

**ஒன்றில்லாவிடில் மற்றொன்று**

சரியான வயதினில், சூழ்நிலையில் காதல் கொள்வது, திருமணம் செய்வது மிக அவசியமானது. காதலில் தோல்வி ஏற்பட்டால் இனிமேல் கவலைப்படவே கூடாது. உங்கள் பார்வையில் ஆயிரமாயிரம் பேர் வந்து போவார்கள். அவர்களில் பழையதைவிட இன்னும் சிறப்பான மனிதர்கள் இருப்பார்கள். உயிர்தான் மிக முக்கியம்; தற்கொலைகள் மிகக் கேவலமானவை. எப்போதும் வெற்றி கிடைத்துக் கொண்டிருக்கும் என்பதை ஏற்காதீர்கள்; தோல்விகளும் வரும், அதைத்தான் மிக ஆர்வமாக ஏற்கப் பழகிக் கொள்ளவேண்டும்.

**புரிந்துகொள்வது, உண்மை பேசுவது**

மாப்பிள்ளை பார்த்து பெற்றோர் செய்து வைக்கும் திருமண முறையிலும், நிச்சயத்திற்கு முன்னரே ஒருவரை ஒருவர் கலந்து பேசிப் புரிந்து கொள்வது அவசியம். பெற்றோர்கள் அதைத் தருகிறேன், இதைத் தருகிறேன் எனப் பொய் பேசி, திருமணத்திற்குப் பிந்திய வாழ்க்கையை பிரச்சனைக்குரியதாக்காமல் உண்மையை மட்டும் பேசுங்கள். அவரவர் தகுதிக்குத் தகுந்த இடத்திலேயே திருமணம் செய்யுங்கள். அகலக்கால், போலிக்கால் வைக்காதீர்கள்.

அப்புறம் சண்டை சச்சரவுகள், சில இடங்களில் விவகாரத்து வரையிலும் போய்விடும்.

**காதல் திருமணம் எளிதாக**

திருமண வயதைத் தாண்டிய பெண்கள், சம்பாதிக்கும் பெண்ணைக் கொண்டு வாழ்க்கை நடத்துவதால் திருமணம் செய்யாமல் காலம் கடத்தும் பெற்றோர்களின் மகள்கள், திருமணச் செலவு செய்ய வசதியற்ற குடும்பத்துப் பெண்கள் இவர்களுக்கெல்லாம் இன்றைய சூழ்நிலையில் காதல் திருமணம் ஒரு வரப்பிரசாதம் தான்.

காதல் என்பதை எளிமையாக்குங்கள். ஒரு ஆணோ, பெண்ணோ பிடித்தமான எதிர்பால் எவரிடமும் விருப்பத்தைச் சொன்னால், இனிமேலும் பெரிதுபடுத்திக் கொண்டு தாமதப்படுத்தாதீர்கள். உடன்பாடு உண்டு, இல்லை என்பதை உடனேயோ அல்லது கால அவகாசம் கேட்டு சில நாட்களிலேயோ சொல்லி விடுங்கள். உடன்பாடு இல்லையென்று பதில் தெரிந்த பிறகு தொந்தரவு செய்யாதீர்கள்; துரத்திக் கொண்டிருக்காதீர்கள், அப்புறம் பிரச்சினைகள்தான் வரும்.

இந்தப் பூமியில் அந்த ஒரே நபர்தான் சிறப்பானவர், அழகானவர் என்று நம்புவதை விடுத்து அடுத்தடுத்த நபரிடம் வெற்றிபெறும் வரை முயற்சிக்கலாம். அநேகமாக எதிர்கால இந்திய நகர வாழ்க்கையில் காதல் திருமணங்கள்தான் அதிகமாக நடைபெறலாம் என்ற சூழ்நிலையில் சரியான காதலனையோ, காதலியையோ தேர்ந்தெடுப்பதில் அவசரமிலலாமல் நல்ல உள்ள அறிவை பயன்படுத்துங்கள்.

இனிமேலும் சினிமாக்கதைகள், வசனம் பேசி, பாடல்கள் கேட்டு, கவிதைகள் எழுதிப் பொழுது போக்குவதை முழுவதுமாக நம்பி, ஏமாறிச் சின்னாபின்னமாகி முட்டாளாகாதீர்கள், காதலுக்கு சினிமாவையே முக்கியமான வழிகாட்டியாக ஆக்கிக் கொள்ளும் தவறைச் செய்யாமல், உங்கள் பாணியில் உங்களுக்குப் பிடித்த வகையில், இயற்கையாக, நல்ல இலட்சியங்கள், செயல்பாடுகளோடு உண்மையான காதல் செய்யுங்கள்; என்றபோதிலும் இதுவும், எதுவும் கட்டாயமுமில்லை. நன்றாகச் சிந்தித்துச் செயல்படுங்கள்.

# பெண்களுக்கு லட்சணமே முதல் முக்கியம்

பெண்களுக்கு லட்சணம் என்பது எந்தளவுக்கு அவசியம் என்பதை இப்பகுதியில் காண்போம். மரமாக இருந்தால் கூட அது நேராக வளர்ந்திருந்தால்தான் கூடுதல் மதிப்பு. வீடு, தோட்டங்களில் மரம் நேராகவோ கோணலாகவோ வளர்வதற்கு மனிதர்கள்தான் மறைமுகமானக் காரணமாகிறார்கள். அம்மரத்தின் வகைக்குத் தகுந்த மாதிரி அது வளர்ந்து மரக்கிளைகளுடன் மேலே சூரியனை நோக்கி வெளிவருவதற்கு மற்ற மரங்கள் கட்டிடங்களின் இடைஞ்சல், இடர்பாடுகள், நிழல்களின்றி சுற்றிலும் போதுமான இடைவெளி இருத்தல் அவசியம்.

உச்சிவெயில் எந்தெந்தத் தாவரங்களின் தலைப்பாகத்தின் மீது நேரிடையாக முழுவதும் விழுகிறதோ, அவைகளே நேராக செழித்தோங்கி வளர்கிறது, வளர முடியும். எனவே சிறிய இடத்தில் நிறைய மரங்கள் வைப்பது புத்திசாலித்தனமில்லை. அத்தாவரங்கள் ஓரளவுக்கு மேல் செழித்து வளராததோடு இறுதிவரை நல்ல பயனையும் தராது. சுற்றிலும் போதுமான நல்ல இடைவெளியுடன் இடத்திற்குத் தகுந்த அளவு மரங்கள் வைப்பதே சிறப்பு. அப்போதுதான் மரங்கள் நேராக வலிமையாக செழித்து வளர்வதோடு நீண்ட காலத்திற்கு பெரும்பயனையும் தரும்.

விலங்குகளை எடுத்துக் கொண்டால் வலிமையான கம்பீரமான வேகமான விலங்குகளுக்கே அவைகளின் ராஜ்ஜியத்தில் கூடுதல் மதிப்பிருப்பதாகப்படுகிறது. வீட்டு விலங்குகளான ஆடு, மாடுகளிலும், நாய் போன்றவற்றிலும் லட்சணத்திற்குத் தகுந்த மாதிரி விலை, பராமரிப்பு, பயன் அதிகமாக உள்ளது. குறிப்பாக கொம்புள்ள மாடுகளின் இரட்டைக் கொம்புகள் எவ்வளவு அழகாகச் சரியாக பொருத்தமாக இருக்கிறதோ அதற்கேற்றாற்போல் அதற்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

கொம்பு அழகாக இருக்கும் மாடுகள் சற்றுப் பெருமையாக இருப்பதோடு, சுறுசுறுப்பாக, வலிமையாக, அழகாக இருப்பதாகவும் தெரிகிறது. விலங்குகளுக்கும் சில அறிவுகள் இருக்கிறது என்பதை ஆராய்ந்துப் பார்த்தால் புரிந்துக் கொள்ள முடிகிறது. நாய்களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. அந்தளவுக்கு உடல்வலிமை, அழகு, அறிவு, வீரம், புத்திசாலித்தனம், சுறுசுறுப்பு, குரைப்பு, இனம் இவைகளுக்கேற்றார்போல் அதன் பலவகையான குணம் பளிச்சிடுகிறது. மேற்கூறிய காரணிகள் குறைவாக இருக்கும் தெருநாய்களுக்கு மிகக் குறைந்த முக்கியத்துவமே மனிதர்களாலும் மற்ற நாய்களாலும் கொடுக்கப்படுகிறது.

அடுத்தது மிக முக்கியமாக மனிதர்களின் தோற்றம், அழகு நிலை ஆகியவற்றைப் பார்ப்போம். ஒரு மனிதனுக்குத் தேவையானவைகளாக அறிவு, அழகு, அளவு, வலிமை, சுறுசுறுப்பு, உழைப்பு, முயற்சி, திறமை, குணம், பண்பு போன்றவற்றைக் கூற முடியும். இன்றைய பல மனிதர்களுக்கு மேற்சொன்னவைகளில் பலவும் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இதில் ஆண்களுக்கு அழகு என்பது

மேற்கூறியக் காரணிகளின் வரிசையில் இரண்டாம் மூன்றாம் நிலையிலேயே முக்கியத்துவம் உள்ளதாக இருக்கிறது. அது ஒரு வகையில் நியாயமானதும்கூட.

ஆனால் பெண்களுக்கு லட்சணம் என்பது மிகமிக முக்கியமாகிறது. அழகு என்பதைவிட லட்சணம் என்று இங்கு குறிப்பிடுவதே ஏற்புடையதாகும். இதைப்பலர் புரிந்துக் கொண்டிருந்தாலும் இன்னும் சிலர் உணராததாகவே உணரத் தோன்றுகிறது. பெண்களைப் பொறுத்தவரையில் லட்சணத்திற்கு அடுத்தப்படியாகத்தான் குணம், பண்பு, அறிவு, செல்வம் இன்னும் இன்னபிற இத்யாதிகளெல்லாம் வருகின்றன. எடுத்த எடுப்பில் ஒரு பெண் அவளுடைய லட்சணத்தினால்தான் பிறரைக் கவரவும், தாக்கத்தை ஏற்படுத்தவும் முடிகிறது. இதுதான் மற்ற எல்லாவற்றையும் விட ஒரு பெண்ணிற்கு மிக முக்கியமானது என்று சொன்னால் சிலர் வேற்றுமையாக எதிர்த்துப் பேசலாம். நடைமுறையில் அனுபவத்தில் இது எந்தளவுக்கு நியாயம் என்பதை ஊடுருவிப் பார்த்தால் உண்மை விளங்கும்.

அழகிற்கே பிரதான இடம் முகம்தான். ‘அகத்தின் அழகு முகத்தில் தெரியும்’ என்பார்கள். அந்தளவுக்கு அதன் முக்கியத்துவம் உள்ளது என்பதில் சற்றுக்கூட மிகையில்லை. கண், காது, மூக்கு, வாய் என நான்கு புலன்களில் முழுப்பகுதியையும், ஐந்தாவதான மெய்ப்புலனின் ஒரு பகுதியையும் கூடப் பெற்று முகம் என்னும் மனிதனின் அடையாளப்பகுதி உடலின் அனைத்துப் பகுதிகளிலும் தலை சிறந்தது என்பதில் யாதொரு வியப்புமில்லை.

மேற்படி புலன் உறுப்புக்களில் கண் தெரியாத, காது கேட்காத, வாய்ப்பேசாத ஊனங்கள் உள்ள மனிதர்கள் பிறப்பதும், நன்றாக சிலர் பிறந்தும் இடையில் அவர்களுக்கு இடையில் ஊனங்கள் உண்டாவதும் அவ்வப்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இது ஒரு பெரிய பாவம் என்பதை உணர்வுள்ள முழு உலகமும் உணரக்கூடியது. சிலருக்கு கண், காது, வாய், மூக்கு இவற்றில் சில சிறிய குறைகள் இருக்கும். இன்றைய நவீன மருத்துவ வளர்ச்சியில் அவற்றைச் சரி செய்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. இவைகளுக்குச் செலவு அதிகமாகலாம் என்பதாலும் அப்படி இருப்பதால் லட்சணத்திற்கு ஒன்றும் பெரிய இடர்பாடு இல்லை என்பதாலும் அதைப் பெரிதுப்படுத்திக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

முக அழகிற்கே முத்தாய்ப்பாய் இருப்பது முத்துக்கள் என வர்ணிக்கப்படும் பற்கள்தான். இப்பற்கள் பாதிக்கு மேற்பட்ட மக்களுக்கு சரியாக அமையப் பெற்றிருக்கவில்லை. அப்பாதியில் சிலருக்கு மிக அசிங்கமாக நீட்டிக் கொண்டிருப்பது, அளவுக்கு அதிகமாக பெரிதாக இருப்பது, அழுக்காகக் கறையேறி, கறுத்து, சிறுத்து, தேய்ந்து, உடைந்து, தெறித்து, ஓட்டை விழுந்து, பூச்சிப்பிடித்து ஈறுக்கரைந்து, காரைப் படிந்து என எப்படி எப்படியெல்லாமோ இருக்கிறது. இவற்றில் பற்கள் வெளியே விகாரமாக நீட்டிக்கொண்டிருப்பது அவலட்சணமாக இருக்கும்.

ஆண்களை விட பெண்களை இது மிகவும் பாதிக்கிறது. இதற்கு குழந்தைப் பருவத்திலிருந்தே வாயைத்திறந்து தூங்கும் பழக்கம், விரல் சூப்பியது, வாயால் சுவாசிப்பது போன்றவைகளும் சில காரணங்கள்.

நன்குப் படித்த, பதவியில் உள்ள, செல்வமுள்ள, நன்றாக சம்பாதிக்கும் பெண்களுக்குக்கூட இக்காரணத்தினால் சரியான முக்கியத்துவம், மரியாதை, நட்பு, கிடைக்காமல் போய்விடுகிறது. நன்றாகப் படித்தவர்கள், டாக்டர்கள், அதிகாரிகள், பேராசிரியைகள் போன்ற பணிகளில் இருக்கும் பெண்களில் சிலருக்குக்கூட இந்தப் பல் பிரச்சினையால் திருமணம் நடக்காமல் போவது இந்தச் சமுதாயத்தில் நடந்துக் கொண்டிருக்கிறது.

உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் பெண்களுக்கும், அலுவலகத்தில் பணிபுரியும் சில பெண்களுக்கும் பற்கள் அசிங்கமாக இருக்கும்பட்சத்தில் அவர்கள் மனரீதியாகப் பெரும் பாதிப்பை அடைகிறார்கள். எப்போதும் தாழ்வு மனப்பான்மை, மற்றவர்களால் புறக்கணிக்கப்படுதல் போன்ற காரணங்களால் உடலும், மனமும் சீரழிந்து அவமானத்தோடு வாழ்கிறார்கள். இவர்கள் இறக்கும் வரையிலும் இப்படித்தான் இருக்க நேரிடுகிறது.

சென்ற காலங்களில் இப்பிரச்சினைக்குத் தீர்வுகள் இல்லாமலிருந்தது வாஸ்தவம்தான். இப்போதெல்லாம் இவைகளை அற்புதமாகச் சரி செய்து கொள்வதற்கு வழிகளுள்ளன. எல்லா நகரங்களிலும் தகுதிபெற்ற பல் மருத்துவர்கள் வியாபித்திருக்கிறார்கள். இவர்களில் பலர் நல்ல தேர்ச்சிப் பெற்றவர்களாக விளங்குகிறார்கள். வெளியே நீண்டிக் கொண்டிருக்கும் பற்களை உள்ளே தள்ளுவதற்கு ஒருவகை ரப்பர் சாதனம் சிலவகை 'கிளிப்' போடும் முறைகள் உள்ளன. பதிமூன்று வயதிலிருந்து இதைச் செய்து கொள்ளலாம்.

வசதியற்றவாகள் குடும்பத்தில் இப்பிரச்சினை இருக்குமாயின் அப்பெண்ணிற்கு எந்தெந்த செலவுகளைக் குறைக்க முடியுமோ அவற்றையெல்லாம் குறைத்து எப்பாடுபட்டாவது 'கிளிப்' போட்டு விடுங்கள். இங்கே பல் மருத்துவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள் வைக்கப்படுகிறது. ஏழை, எளிய மக்கள் 'கிளிப்' போட வந்தால் உங்களால் எந்த அளவுக்குக் கட்டணத்தைக் குறைக்க முடியுமோ அதைச் செய்து சமூக சேவையாகக்கூட அவர்களுக்கு உதவி செய்யுங்கள். வேண்டுமானால் இதன் இழப்பை பணக்காரர்களிடம் சரி செய்து கொள்ளலாம். மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் இவ்வசதி இருக்கலாமென்றே தெரிகிறது.

இவ்விடத்தில் அப்படி குறையுள்ள பெண்களின் பெற்றோர்கள், சகோதர, சகோதரிகளுக்கு ஓர் வேண்டுகோள். உங்கள் மகளுக்கு, சகோதரிக்குக் கல்லூரி மேல் படிப்பைத் தராவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் அப்பெண்ணின் பற்களைக் காலத்தே சரி செய்துவிடுங்கள். வருங்காலத்தில் கல்லூரிப்படிப்பு பலபேருக்கு சோறுபோடப் போவதில்லை, வசதியான வாழ்க்கையைத் தரப்போவதில்லை என்பதை அடித்துக் கூற முடியும். அதே நேரத்தில் பெண் லட்சணமாக இருக்கும்பட்சத்தில் அவளுக்கு சிரமமின்றி திருமணம் நடந்து கணவனும் வாழ்க்கையும் கிடைத்துவிடும். அவள் கடைசி வரையில் சமுதாயத்தில் கேவலப்பட்டு வாழ வேண்டியிருக்காது. அலங்கோலமான, சந்தோஷமற்ற பணமுள்ளவளாக வாழ்வதைவிட அழகாக, எளிமையாக, மகிழ்ச்சியாக வாழ்வதே மேன்மை. சிலரிடம் பலரிடம் இருக்கும் பெரிய பணம் பொய் வாழ்க்கையே வாழ்கிறது.

‘ஆளும் வளரனும், அறிவும் வளரனும் அதுதான்டா வளர்ச்சி’ என்றார் கவிஞர். அத்துடன் அழகும் வளரனும் என்று சேர்த்துக்கொண்டாலும் தப்பில்லை.

எவ்வளவு படித்திருந்தாலும் பெண் அவலட்சணமாக இருந்தால் அவள் நிம்மதியாக, திருப்தியாக, மகிழ்ச்சியாக, மரியாதையாக வாழ முடிவதில்லை. அதேவேளை சுமாராகவே படித்த அல்லது படிக்காத பலப் பெண்கள் லட்சணமாக இருக்கும் காரணத்தினால் நல்ல வாழ்க்கைக் கிடைக்கப்பெற்று சிறப்பாக வாழ்வதை பரவலாகப் பார்க்க முடிகிறது.

எனவே பெண்கள் தாங்கள் மேல் படிப்புப் படிப்பதைக் காட்டிலும் தங்கள் லட்சணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. இது ஏதோ பக்கம் நிரப்புவதற்காகவோ பொழுதுபோக்கிற்காகவோ எழுதப்படவில்லை. இம்மாதிரிப் பலப் பெண்களின் துயரறிந்தே எழுதப்பட்டுள்ளது. பற்கள் சரியானக் காலத்தில் சீரமைப்பு செய்யப்படாவிட்டால் பின்னால் அது இயலாததாக ஆகிவிடும். எவ்வாறு ஒரு ஊனமுள்ளப் பெண்ணுக்கு முக்கியத்துவம் குறைந்திருக்கிறதோ அதில் கால் பங்குக்காவது இந்த அசிங்கமான பற்களினால் பாதிப்பிருக்குமோ என அஞ்சவைக்கிறது.

தேவைப்படும் ஆண்களும் இவற்றைக் கடைப்பிடிக்கலாம். அவர்கள் அவலட்சணமாக இருந்தால் கூட செல்வம் உள்ளவராக, சம்பாதிப்பவராக இருந்தால் நிச்சயம் திருமணம் நடந்துவிடும். இப்போதைய நிலைக்கு ஒப்பிடுகையில் சென்றக் காலங்களில் பெண்கள் குறைவாக ஆண்கள் அதிகமாக இருந்தக் காரணத்தினாலும், பலதார

திருமணங்களினாலும் அவலட்சனமாக இருந்த பெண்களுக்கும் நன்முறையில் திருமணங்கள் நடந்தேறின.

நிகழ்காலமும் வருங்காலமும் அப்படியிருக்கப போவதில்லை என்பதை அடித்துச் சொல்ல முடியும். பரவலாகப் பெண்களின் பிறப்பு விகிதம் அதிகமிருப்பதாலும் அவர்களிலும் அழகானப் பெண்கள் நிறையவே இருப்பதினாலும் ஒருதார முறை சட்டமாகியிருப்பதாலும் அழகற்ற பெண்கள் குடும்பத்தலைவிகளாவது இனி சற்று சிரமமே. எனவே இக்குறையுள்ள பெண்களை உடைய குடும்பத்தினர் இன்றே சிந்தித்துச் செயல்படுங்கள். மற்ற பல பற்குறைகளையும் சரி செய்து கொள்ளுங்கள். ஒரு வகையில் படிப்பைக் காட்டிலும் பல் அழகே முக்கியம் என்று கூறினால் அது வேடிக்கையில்லை. ஊடுருவிப் பார்த்தால் நியாயம் புரியும். புரிந்து செயல்பட்டால் சரி. அனைத்தும் அவரவர்கள் விருப்பத்திற்கே.

# நட்பு

**நட்பின் சிறப்பு**

மனிதர்களுக்கு மட்டுமன்றி விலங்குகளுக்கும்கூட இது உயிரோடிணைந்த காவியத்தன்மையான உணர்வுள்ள ஒரு விஷயம். குறிப்பாக மனித வாழ்க்கையில் இதன் இலக்கணமும் இலக்கியமும் மிக சுவாரஸ்யம் மிகுந்து ஆதி முதல் இன்று வரையில் பலவிதமான நட்பு வகைகள் உலகத்தில் நிலவி வருகின்றன. காதலைப் போலவே நட்பும் மிகுந்த மரியாதைக்குரியது, அவசியமானது, போற்றுதலுக்குரியதாகி வாழ்வு நிலையின் கட்டாயத் தன்மையோடு முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

இன்றைய நிலையில் நட்பு என்பது என்ன, எப்படிப்பட்டது? என்பதை பல்வேறு கோணங்களில் ஆராய வேண்டியிருக்கிறது. நட்பை இதற்கு முன்னரும், தற்போதும், பிறகும் பலரும் முறையே பலவிதமாக விவரித்தும், விவரித்துக் கொண்டும், விவரிக்கப் போகிறதுமாக இருக்கிறப்படியால் விதவிதமானக் கருத்துக்கள், விளக்கங்கள் எப்போதும் கிடைக்கக் கூடும். இங்கே நாமும் அந்நட்பைச் சற்று வேறுகோணத்தில் ஆராய்ச்சி செய்து பார்க்கலாமென்று தோன்றுகிறது.

இங்கே விதவிதமான நட்புமுறை நடைமுறைகளில் இருந்து எது மெய், எது பொய்? என்று கண்டுபிடிக்க இயலாத அளவுக்கு மனித மனம் தடுமாறிப்போய் குரங்கு மனமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறதென்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

மனிதர்களுக்குள் உள்ள நட்புகளுக்கிடையே வயதுவரம்பு, ஜாதி மத பேதம், பால் இனப் பாகுபாடு போன்ற இனங்கள் தடையாக இருக்க முடியாது. நட்பு உண்மையாக இருக்கும்பட்சத்தில் யார் யாருடன் வேண்டுமானாலும் நட்புக் கொண்டாடலாம். இருப்பினும் சூழ்நிலைகள்தான் நட்பை நிர்ணயம் செய்யும் அதிகாரியாக விளங்குகிறது என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் தெளிவாகும்.

**கிராம, நகர நட்பின் தனித்தன்மைகள்**

மனிதர்களின் நட்பு அகராதியில் கிராமப்புறத்தினருக்கும் நகர்ப்புறத்தினருக்கும் தனித்தனி அர்த்தங்கள் இருப்பதாகப்படுகிறது. ஏனெனில் கிராமத்து மக்களில் பெரும்பாலோர் பிறப்பு முதல் இறப்பு வரையில் ஒன்றல்லது இரண்டு கிராமங்களுக்குள் வாழ்ந்து விடுகிறார்கள். பக்கத்து நகரங்கள் மற்றும் வேறு இடங்களுக்குச் சென்றாலும் அதிக நாட்கள் அங்கு தங்கும் வாய்ப்பில்லாததால் சொந்த ஊர் அல்லது வசிக்குமிடத்தைச் சார்ந்த, பெரும்பாலும் தங்களைப் போலவே அனைத்து அமைப்புகளும் பொருந்திய மனிதர்களுடன் மட்டுமே நட்பு, உறவு, உறவு சார்ந்த நட்பு உண்டாகிக் கொண்டாடுவது வழக்கம். இதில் சில விதிவிலக்குகள் இருக்கலாம்.

கிராமத்து நட்பில் பல காரணங்களுள் ஒரு முக்கிய காரணமான, ஓர் ஜாதி அடிப்படையில் அதிகமாகச் சூழ்ந்து வாழும் வழக்கத்தின் காரணமாக சில நன்மைகளுடன் கூடவே தீமைகளும் இருக்கும். கிராமங்களில் எவ்வளவு நட்பு இருந்தாலும் ஒருவர் முன்னேறுவதை அடுத்தவர்

அவ்வளவாக மனதார விரும்புவதாக, பாராட்டுவதாக, வரவேற்பதாகத் தெரியவில்லை. இதற்கு முக்கிய காரணங்களாகச் சிலவற்றை கூற முடியுமென்றால் அவை பெருந்தன்மை, சகிப்புத் தன்மை, புரிந்து கொள்ளுதல், ஒத்துக் கொள்ளுதல், ஏற்றுக் கொள்ளுதல் போன்ற குணங்களில் சற்று விகிதம் குறைவாக இருக்கலாமோ எனத் தோன்றுகிறது. அதே நேரத்தில் ஆபத்து அவசரம் என வந்துவிட்டால் கிராமத்து நட்புக்கு ஈடு இணையாக நகர்ப்புற நட்பைக் கூற இயலாது.

நகர்ப்புறங்களைப் பொருத்தவரையில் நட்பும், மனிதர்களும் சூழ்நிலைக்கேற்றாற் போல் மாறும் தன்மையுடையவைகள். ஆரம்பப்பள்ளிப்பருவம், உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிப் பருவம், கல்லூரி, வேலை, தொழில், வியாபாரம், தற்காலிக, நிரந்தர வீடுகள் அமையுமிடங்கள் எனச் சூழ்நிலைகள் இடங்கள் பலருக்கும் அவ்வப்போது மாறக்கூடிய வாய்ப்புகள் அதிகமிருக்கிறது.

அந்தந்தக் காலக்கட்டங்களில் புதுப்புது நட்புகள் தோன்றி ஒரு சிலருக்கு மட்டும் ஒரு சில நட்புகள் இறுதிவரையில் வரலாமேயன்றி, பலருக்கு பழைய நட்புகள் காலப்போக்கிலோ, உடனேயோ கூட மாறிப்போகின்றன, மறந்து போகின்றன. திருமணத்திற்குப் பிறகு ஆணுக்கும், பெண்ணுக்கும் திருமணத்தின் மூலம் கிடைத்த புதிய நட்புகள், நிரந்தர வசிக்குமிடங்கள், பணியிடங்களுக்கு வந்தபோது அங்கு உருவாகும் புதிய நட்புகளும் பல காலம் தொடர்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. மேலும் அவரவர் செய்யும் தொழில், பணி, வியாபாரம், அரசியல் போன்றவைகளின் மூலமாக நண்பர்கள் அமைவது

பெரும்பாலும் எளிதாகச் சாத்தியமாகும். தீய தொழில் செய்பவர்களும் தங்களுக்கேற்ற நட்பு வட்டாரத்தை உருவாக்கிக் கொள்வார்கள்.

ரயில், பேருந்து பயணங்களின் போதும், ரயில் நிலையம், பேருந்து நிலையம், கடைத் தெரு, வழிபாட்டுத்தலங்கள், விளையாடுமிடங்கள் போன்ற இடங்களிலும், தற்காலிக, நிரந்தர நட்புகள் உருவாகின்றன.

நட்பு என்பது ஒருவரைப் பற்றி எல்லா விபரங்களையும், ரகசியங்களையும் தெரிந்ததாக இருந்தாலன்றி அது முழுமையாகாது. இம்மாதிரியாக இன்று மிகக்குறைந்த சதவிகித மக்களுக்கே முழுமையான நட்பு கிடைத்திருக்கிறது எனலாம். மற்றதெல்லாம் அரைகுறைப் பொழுதுபோக்கு, பெயரளவுக்குமான நட்பாகத்தானிருக்க முடியும். நட்புப் போர்வையில் ஏமாற்றுக்காரர்கள், திருடர்கள், அயோக்கியர்கள் போன்றோர் நிறைய உலாவிக் கொண்டிருக்கிறார்கள்.

## ஆண்களுக்குள் நட்பு

அந்தந்தக் காலகட்ட நட்புகளிலெல்லாம் ஆண்களைப் பொறுத்தவரையில் 'தண்ணி' அடிப்பது, சிகரெட் குடிப்பது அல்லது இவைகளைக் கற்றுக் கொள்வது. சினிமா, ஹோட்டல், சுற்றுலா செல்வது, பெண்களைச் சீண்டுவது, சைட் அடிப்பது, விபச்சாரிகளிடம் போவது போன்றவைகளைச் செய்து வருகிறார்கள். அதனுடன் ஜாலியாக, கிண்டலாகப் பேசி பொழுதுபோக்குவது, சமயத்தில் வாதம், வாக்குவாதம் முற்றி சண்டை போட்டுக் கொள்வது, எதிரியாகவே ஆகிவிடுவது என

இருக்குமேயொழிய உண்மையான நிரந்தர அன்புடன் கூடிய நல்ல நட்பு இருப்பதில்லை.

இந்த நட்புப் பருவங்களில்தான், குறிப்பாக இளமைக் காலங்களில் ஆறு, ஏரி, குளம், குட்டை, கிணறு, ஓடை, அருவி இப்போது பம்புசெட் இங்கெல்லாம் ஆனந்தமாகக் கும்மாளம் போட்டுக் குளிப்பதும், வித்தைகள் செய்வதும் நடக்கும். சிலருக்கு இசை, நடனம், கூத்து, கும்மாளம், செக்ஸ், ஊர் சுற்றல் போன்றவைகளுடன் நட்புக்காலம் நடந்தேறுகிறது.

**பெண்களின் நட்பு**

பெண்களின் நட்பில் இளமை முதல் முதுமை வரையில் பெரும்பாலானவர்கள் அந்தந்தக் காலத்திற்கேற்ப அமைந்த நட்புப் பரிமாற்றத்தில் நிரந்தரமாகச் சில குணங்களை வைத்திருக்கிறார்கள். ஆடை, அணிகலன்கள் மற்றும் குடும்ப, உறவினர் பெருமைகள், சமையல், சங்கீதம், நடனம், கோலம், சினிமா, நடிகர், நடிகைகள், சுற்றுப்புறத்திலுள்ளவர்கள், பண்டிகைகள் போன்றவைகளைப் பற்றிப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் எனலாம். இளைஞிகளிடம் பாடங்களின் விவாதங்கள், அழகான ஆண்களை தங்களுக்குள் விமர்சனம் செய்வது, ஐஸ்கிரீம் சாப்பிடுவது, மற்றவர்களைப் பற்றி குறையாகப் பேசிக் கொண்டிருப்பது போன்ற செயல்களுக்கு முன்னுரிமை இருப்பதாகத் தெரிகிறது.

**ஆண், பெண் நட்பு**

ஆணுக்கு ஆண் நட்பு, பெண்ணுக்குப் பெண் நட்பு இருப்பது போல இப்போது ஆண், பெண் நட்பு என்ற

ஒன்று, அதுவும் முக்கியமாக இந்தப் பருவ, இளமை வயதில் மட்டும் அதிகமாக இருந்து வருவது மிகப்பரவலாக நகரம், கிராமம் என எல்லா இடங்களிலும் காண முடிகிறது.

ஆண், பெண் நட்பினைப் பற்றின சினிமாக்கள், தொலைக்காட்சித் தொடர்கள் வந்த வண்ணமிருக்கின்றன. தமிழ்நாட்டின், இந்தியாவின் பண்டைய கலாச்சார, பண்பாட்டின்படி இந்தப் பருவ வயது ஆண், பெண் நட்பென்பது அவசியமில்லாததோடு, தவறாகவும் கருதப்பட்டது.

இன்றைய சூழ்நிலையில் பலவிதக் காரணங்களினால் இது அவசியமா, அவசியமில்லையா? சரியா, தவறா? என விவாதிப்பதும் ஆழ்ந்த ஆராய்ச்சியும் செய்து கொண்டிருக்கத் தேவையில்லை. இந்த இருபாலர் நட்பு எப்படி இருக்க வேண்டுமென்பதும், எவ்வகையில் அது கொண்டாடப்படுவதாகக் கூறப்படுகிறதோ அவ்வகையில் நடைமுறையில் நடைபெறுகிறதா என்பதை மட்டும் சிறிதுப் பார்க்கலாம்.

எங்கெங்கும் இருபாலரும் சேர்ந்து பயிலும் பணிபுரியும் பள்ளிகள், கல்லூரிகள், பணியிடங்கள் போன்றவைகள் வந்துவிட்டதால் இருபாலருக்குமிடையில் நட்பு இருப்பதில் எந்தவிதக் குற்றமுமில்லை, அதைப்பற்றிப் பேச வேண்டியதுமில்லை. ஆனால் அது வரம்பு மீறாமல் உள்ளதா, காமத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதா என்பதை மனமாரச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உண்மையில் இங்கே பலவிதங்கள் உண்டு.

மேல்நாட்டு வெள்ளைக்கார வாழ்க்கை வாழும் வாய்ப்புகளில்லாத இந்திய வழிவழி கலாச்சாரப் பண்பாட்டில் வந்த இந்திய ஆணிகளில் குறிப்பிட்ட சதவிகிதத்தினர் கிழடாகி மடியும் வரையிலும் பெண் ஆசை தீராத, முழுமையாக திருப்தியடையாத மனிதர்களாக வாழ்ந்து வருகிறார்கள். பெரும்பாலோர் படிக்கும், பணிபுரியும், தொழில் செய்யும் நேரங்களிலும் மற்ற நேரங்களிலும் பெண்களைப்பற்றி, பெண்மையைப்பற்றி ஆர்வமாய், ஆசையாய் விரும்பி கருதிக்கொண்டிருப்பார்கள். சிலபலர் சக மனிதர்களோடும், தன் மனத்திற்குள்ளும் பேசுவது, விவாதிப்பது, விமர்சிப்பதோடு மட்டுமல்லாமல் அதையே நினைத்துக் கொண்டு தங்கள் வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் சிலர் வம்புக்காக வேண்டுமானால் மறுத்துப் பேசலாம். இதைத்தான் ‘ஆண்பால்’ என்று அடித்துச் சொல்பவர்களும் உண்டு.

பெண்களைப்பற்றி இந்த வகையில் எப்போதும் அவர்கள் ஆண்களை விரும்பி நினைத்துக் கொண்டிருக்கிறார்களா என்பதைப்பற்றி சொல்வதற்கு சரியாகத் தெரியவில்லை. அதோடு அதைச் சொல்வதற்கு ஆண்களுக்கு முழு உரிமையும் இந்நாட்டில் கொடுக்கப்படவில்லை என்றே தோன்றுகிறது.

இப்படியான ஆண்களும், பெண்களும் பழகிக் கொள்ளட்டும், சேர்ந்து ஊர் சுற்றட்டும், ஹோட்டலுக்குப் போகட்டும், இரவில் ஒன்றாகத் தங்கிக் கொள்ளட்டும். சிலர் கட்டிப் பிடித்துக் கொஞ்சிக் கொள்ளட்டும். எல்லாம் நட்பாக இங்கே அங்கீகரிக்கப்பட்டு விட்டன. இங்குள்ள பொதுமக்கள், பெற்றோர்கள் சகோதர சகோதரிகள் இவைகளை

ஏற்றுக்கொள்ளும் மனநிலையை அடைந்து கொண்டிருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது.

ஆனால் இந்தப் பருவவயது அல்லது இடைநிலை வயது ஆண், பெண் நட்பு கொண்டாடுபவர்களில் சிலர் நட்பைப் போர்வையாக, சாதனமாக, பாதுகாப்பாக வைத்துக் கொண்டு காமக்களியாட்டம் போடுவதை எங்ஙனம் ஏற்க முடியும். நட்பு என்னும் அந்தப் புனிதத்தை இப்படியா கேவலப்படுத்துவது! காமவெறியைத் தீர்த்துக் கொள்வதற்கு! பல இடங்களிலும் நண்பர்கள் என்று சொல்லிக்கொண்டு பாதுகாப்பான முறையில் அதற்கானச் சாதனங்களுடனோ அதுவும் இல்லாமலோ விரும்பிய சமயங்களில் உடலுறவு கொள்வது வெட்கக்கேடு. இவற்றோடு பாதுகாப்பான நாட்களில் 'டேடிங்' என்னும் உறவு கொண்டாடுவதுப் போன்றவைகள் இந்தியப் பண்பாட்டிற்குச் சரிப்பட்டு வருமா?

ஒரு சில கொள்கைக் கோட்பாடு, வரைமுறையில்லா மக்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம், செய்து கொள்ளட்டும். அவர்களைப் பார்த்து ஒட்டு மொத்த சமுதாயமுமே சீரழிந்து போகக்கூடாது. நட்பு எனும்போது அதற்குரிய இலக்கணத்தோடு திகழ வேண்டும். அவர்களே பாராட்டுக்குரியவர்கள். அப்படியும் பல நட்புகள் இருக்கத்தான் செய்கின்றன. நட்பே சிறிது காலத்தில் சிலருக்கு காதலாக மாறும். அப்போது அதற்குரிய தன்மைகளோடு நடந்து கொள்ளட்டும். இந்த ஆண், பெண் நட்பைச் சாதுரியமாகப் பயன்படுத்தி சில ஆண்கள் பல பெண்களை 'வேட்டையாடிவிட்டு' அவ்வப்போது ஆளை மாற்றி, பழையதைத் தூக்கியெறிவதையும் சமூகத்தில் காணமுடிகிறது. அதேபோல் ஒரு பெண்ணை வைத்துப்

பல பெண்களிடம் நட்பு உருவாக்கி பலவிதக் கூத்தடிக்கும் ஆண்கள் இச்சமுதாயத்தில் பலருண்டு.

**நட்புக்கு இலக்கணம்**

இவற்றையெல்லாம் ஒருபுறந்தள்ளி நட்பு எப்படி இருக்க வேண்டுமெனக் கூற வேண்டுமானால், நட்பு என்பது ஆபத்து, அவசரம், ஆறுதலுக்கு, மற்றும் உதவிக்கு வரக்கூடியதாக இருக்க வேண்டும். மனதை, கருத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு, ஆலோசனை, வாதம், விவாதம் செய்வதற்கு நட்பு மிக அவசியமானதாக ஆகுவதால் அதை இவ்வகைகளில் மனிதர்களுக்குள் பரிமாறிக்கொள்ளும் தன்மையில் மனிதர்கள் நடந்து கொண்டு வாழ வேண்டும். நட்பு என்பது மானிடப்பிறவி ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியம் என்பதைப் புரிந்து, அறிந்து ஒழுக்கமான, உயர்வான, உண்மையான நட்பு பாரம்பரியத்தைப் போற்றிக் கொண்டாடி மகிழ வேண்டும்.

# உலக மனித வாழ்க்கைக்கு நன்மையானவைகள் (அவசியமானவைகள்)

1. ஆடம்பரம் குறைந்த, சத்து நிறைந்த போதிய உணவு.
2. ஒழுக்கத்தை உயர்த்தும் வகையிலான, முறையான, வரம்பு மீறல் இல்லாத ஆடைகள், அலங்காரங்கள்.
3. ஆடம்பரமும் அளவு மிகுதியும் கட்டாயமில்லாத ஆனால் வலிமையான வசிப்பிடம்.
4. நீடித்த பயனுள்ளவைகளுக்கான உழைப்பு,
5. உழைப்பிற்கு பிந்தைய ஓய்வு, போதுமான (இரவு) தூக்கம்
6. நல்ல பொருத்தமான வாழ்க்கைத் துணை.
7. சமூகம் வகுத்துள்ளபடி முறையான காதல், காமம்.
8. இப்புவியில் வாழ்ந்து சென்றதற்கு ஆதார அடையாளமாக ஒரு வாரிசுக் குழந்தை.
9. அனைத்திலும் தூய்மை.
10. சுகாதாரம் மற்றும் இயற்கை வாழ்வுமுறையை அதிகம் பேணுதல்.
11. பயனுள்ள கல்வி.
12. அனைவருக்கும், வாழ்க்கை வருமானத்திற்கான வேலைவாய்ப்பு, தொழில்
13. அளவு தாண்டக்கூடவே கூடாத மனமகிழ்வு செயல்கள், பொழுதுபோக்குகள்.

14. சேமிப்பு, பொது சிக்கனம்.
15. தாவரங்களை நிறைய வளர்த்து பசுமை நிர்வாகம்.
16. நன்னீர் சிக்கனம்.
17. மனிதசக்தி, நேரம், உழைப்பு, செல்வம் வீணாக்காமை.
18. நற்குணங்களை வளர்த்துக் கொள்வது (அன்பு, அடக்கம், பணிவு, பொறுமை, அமைதி, சகிப்புத் தன்மை, இரக்கம், மனிதாபிமானம், உதவிக்குணம், நேர்மை)
19. தீய குணங்களை விட்டொழித் தல் (பொறாமை, தற்பெருமை, சினம், திமிர், அகங்காரம், வீண் பிடிவாதம், துரோகம், ஏமாற்று, திருட்டு, பொய், பிறரின் துன்பத்தில் மகிழ்வது, தூற்றுவது, புறம்பேசுதல்)
20. நல்லவைகளை மட்டும் வரவேற்பது, பின்பற்றுவது.
21. சான்றோர்கள், மூத்தோர்களை மதித்தல்.
22. உண்மையான முறையில் நட்பு, உறவு பேணுதல்.
23. நல்ல மக்கள் தலைவர்கள், ஆட்சியாளர்கள்.
24. கட்டாய வாக்களிப்பு.
25. வீடு, ஆடைகள், சமையல் பாத்திரங்கள், மிதிவண்டி, கடிகாரம், ரேடியோ போன்றவற்றை முதல் நிலையிலும், தொலைக்காட்சி பெட்டி, மிக்ஸி, கிரைண்டர், காஸ் அடுப்பு, மோட்டார் சைக்கிள், பர்னிச்சர், மின் விசிறிகள், தொலைபேசி ஆகியவற்றை இரண்டாம் நிலையிலும் அவசியமானப் பொருட்களாகக் கையாளுதல்.

## உலக மனித வாழ்க்கைக்கு தீமையானவைகள் (அவசியமற்றவைகள்)

1) ஏழ்மை, பஞ்சம், பட்டினி.
2) எண்ணிலடங்கா நோய்கள் அதற்கான சூழல்கள்.
3) விபச்சாரம், கள்ளக்காதல், நீலப்படம்.
4) தவறான சினிமாக்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பத்திரிக்கைச் செய்திகள்.
5) தவறான முறைகெட்ட, எதிர்பாலினரிடம் தகராறு மற்றும் தவறு செய்யத் தூண்டும் உடைகள், அலங்காரங்கள்.
6) காமத்தைத் தூண்டி குற்றங்களை அதிகரிக்கச் செய்யும் முறையில்லாத, மட்டமான ஆடல், பாடல்கள்.
7) அதிகபட்ச புகை, போதை பழக்கங்கள்.
8) லஞ்ச ஊழல், கடத்தல் மற்றும் கலப்படம்.
9) மோசமான அரசியல்வாதிகள், ரவுடிகள், திருடர்கள், குற்றவாளிகள் மற்றும் இவர்களுக்குள் உள்ள நட்பு, கூட்டு.
10) அயோக்கியர்கள், திருடர்கள், ரவுடிகள் முரடர்கள் அரசியல்வாதிகளாவது மற்றும் அதன் போர்வையில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவங்கள்.
11) தவறு செய்யும் காவல்துறையினர், அரசு ஊழியர்கள் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவர்களுடன் இவர்களது அன்னியோன்யத் தொடர்பு.

12) மக்களில் கணிசமானப் பகுதியினருக்கு போதிய வருமானத்திற்கான வேலைகள் இல்லாமலிருப்பது.

13) தீவிரவாதச் செயல்கள்.

14) சுற்றுப்புற சீர்கேடு மற்றும் மாசுபடுத்துதல் (விஷ வாகன புகைகள், ஒலி பெருக்கிகள், அதிக ஒலி, தண்ணீருடன் இரசாயனக் கழிவுகளைக் கலத்தல் போன்றவை)

15) பயன்தராத நீண்ட உழைப்பு, நடை பயணங்கள்.

16) அர்த்தமற்ற, பயனற்ற, நேரத்தை வீணாக்கும் பொய் நட்பு, உறவு.

17) வாழ்க்கைக்கு உண்மையில் பயனில்லாத நேரம், மனித சக்தி, செல்வம் போன்றவற்றை கெடுக்கும் தேவையற்ற அளவுக்கதிகமான விளையாட்டு நிகழ்ச்சிகள், குறிப்பாக மனிதர்களுக்குள் கடுமையாக அடித்துக் கொள்ளும் விளையாட்டுகள் என்கிற கொடுமைகள்.

18) தேவையற்ற பயணங்கள் மற்றும் சரியானத் திட்டமிடாமல் தேவைக்கு அதிகமாக வாகனங்களைப் பயன்படுத்துதல்.

19) தெருநாய்கள் மற்றும் வீடுகளில் அதிகமாக நாய்கள், பூனைகள் வளர்ப்பது.

20) பைத்தியங்கள், பிச்சைக்காரர்களை வெளியில் உலாவ அனுமதித்தல்.

21) அதிக அளவிலான வெடி, வான வேடிக்கைக் கொண்டாட்டங்கள்.

22) தவறான உணவுகள்.

23) அதிகக் குழந்தைப் பேறு, மக்கட் பெருக்கம்.

24) அதிகபட்ச விளம்பரங்கள், அதனின் அதனால் வியாபாரங்கள்.

25) லாட்டரி, சூதாட்டங்கள்

26) அதிக மக்கட்தொகை கொண்ட நாடுகளில், அதிக அளவில் இயந்திரங்கள், கம்ப்யூட்டர்கள், மின்னனு சாதனங்களைப் பயன்படுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரித்தல்.

27) தகுதியற்றவர்கள் மற்றும் தகுதி குறைந்தவர்களுக்கு இயற்கை நியதிக்குப் புறம்பான, தவறான முறையில் வேலைவாய்ப்பு, பதவி உயர்வு, அதனால் பயன்களில் வீரியம் குறைவது, ஏற்படுத்துவது.

28) மனிதர்களைக் கொல்லும் சண்டைகள், போர்கள், அவற்றிற்கான ஆயுதங்கள் கண்டுபிடிப்பது, தயாரிப்பது.

29) மக்களைக் கெடுத்து குட்டிச்சுவராக்கும் தேவையற்ற இதர தீய கண்டுபிடிப்புகள்.

30) பல மதங்கள், அவற்றின் பிரிவுகள், சாதிகள், பல கடவுள் கொள்கை, இவற்றால் மனிதர்களுக்குள் தீராத விரோதம், அழிவு .

31) தீய குணங்களான பொறாமை, தற்பெருமை, சினம், திமிர், அகங்காரம், வீண் பிடிவாதம், துரோகம் ஏமாற்று, திருட்டு, பொய், பிறரின் துன்பத்தில் மகிழ்வது, தூற்றுவது, புறம்பேசுதல்.

32) கொலை, கற்பழிப்பு, உடலுறுப்பு திருட்டு, தற்கொலை, கொடூரக் காமசெயல்கள் போன்ற பயங்கர குற்றங்கள்.

**உலகத் தீமைகள் (கொடிய குற்றங்கள், பாலுணர்வு தவறுகள், விபச்சாரம், கள்ளக் காதல், அதிக போதை, எதிர்காலத்தில் பயங்கர வேகத்தில் பரவ இருக்கிற எய்ட்ஸ் போன்ற உயிர்க்கொல்லி நோய்கள்) ஒழிய. . .**

1) ஒவ்வொரு நாட்டிலும் ஆண், பெண் இருபாலரின் எண்ணிக்கை கிட்டத்தட்ட சமவீதத்தில் இருக்க வேண்டும். இதன் மூலம் ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்ற நல்ல முறையில், ஆனால் கணவன், மனைவி நீண்ட நாட்கள் பிரிந்து வாழும் சூழலில் குடும்ப வாழ்க்கை நிலை இருக்கக் கூடாது.

2) மாறாக ஒரு நாட்டில் பெண்கள் அதிகமிருந்தால் இரட்டை மனைவியர் முறையும், ஆண்கள் அதிகமிருந்தால் இரட்டைக் கணவர் முறையும் சட்டப்படி அனுமதிக்கப் படலாம், பெண்கள் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுவதற்கு அவர்கள் உபரியாக இருப்பதும் மிக முக்கியக் காரணமாகிறது; ஆண்களைவிட பெண்கள் அதிகமாக இல்லையெனில் விபச்சாரம் உள்பட பல குற்றங்கள் குறைந்து விடும். விபச்சாரப் பெண்களை லஞ்சமாகக் கொடுத்து, அதை அனுபவிக்கும் கொடியவர்களில் பலர் அதன் வீரியத்தினால் கொலைகள், கொள்ளைகள், பெரும் ஊழல்கள் போன்ற மிகத்தீய செயல்கள் செய்து வருவதாகத் தெரிகிறது.

3) நாட்டில் அனைத்து குடும்பத்தினருக்கும் போதிய வருமானம் கிடைக்குமாறு பகிர்ந்தளிக்கும் முறையில் திட்டம் இருக்க வேண்டும். சில குடும்பங்களுக்கு

மட்டுமே செல்வம் குவிந்து பலர் சாதாரண மற்றும் ஏழைகளாகும்படியாக உள்ள சூழ்நிலைகள் மாற்றப்பட வேண்டும்.

4) குறிப்பாக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகக் காரணமாகிய மக்கள் தொகை அதிகமுள்ள நாடுகளில், ஒரு குடும்பத்தில் கணவன், மனைவியர் இருவரில் அதிகபட்சமாக ஒருவர் மட்டுமே அரசுப் பணிக்கு தகுதியானவர் என்றாக்கப்படலாம். இருவரும் அரசுத்துறை ஊழியர்களாக இருக்கும்பட்சத்தில் ஒருவர் அரசுப் பணியிலிருந்து நீக்கப்பட வேண்டும். இந்நிலைக்காக தம்பதியரில் எவர் வேலையை விடுவது என்பதில் பிணக்கு ஏற்படலாம். இதற்கென ஒரு நிரந்தர 'அரசு நடுவர் குழுவின்' மூலமாக குலுக்கல் முறையில் நீக்கப்படுவரைத் தேர்ந்தெடுக்கும் முறையைப் பின்பற்றலாமே.

இதனால் நாட்டில் அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவன பணியாளர்கள் உள்ள குடும்பங்கள் கிட்டத்தட்ட இரட்டிப்பாகி பல குடும்பத்தினர் மகிழ்ச்சி கொள்ள ஏதுவாகும். அரசு வேலை என்றாலே ஒரு அலாதி சுகம் மற்றும் தைரியம் தானே.

மேலும் எண்ணற்ற வேலையில்லா ஆண்கள், பெண்களுக்கு அரசு ஊதியம் பெறும் ஒரு வாழ்க்கைத் துணையாளர் கிடைக்கும் நிலை ஏற்படும். குடும்பம், குழந்தைகள், பெரியவர்கள் கவனிக்கப்படுவதற்கு வாய்ப்பு கூடும்; நல்ல பண்பாடு, கலாச்சாரம் 'திரும்ப' வரலாம்!

5) வாழ்க்கைத்துணை தேர்வு பற்றி அவரவர் குடும்பத்தினருடன் நன்கு கலந்து பேசி முடிவெடுப்பது பிற்காலத்திய பிரச்சினைகளை நீக்கும்.

6) காதல் செய்யும் நிலையில் மிகக் கவனம் தேவை; கண்டதும் காதல் எனும் அவசரம் அறவே அடித்து விரட்டப்பட வேண்டும்.

7) வாழ்க்கைத் துணையைத் தேடும்போது உணவு முறை, குடும்ப பாரம்பரியம், பழக்க வழக்கங்கள், உடல் – மன பொருத்தம், கல்வி, அறிவு, செல்வ நிலை போன்றவைகளில் ஓரளவுக்காவது தகுதிப் பொருத்தம் ஆகியவைகளை அவசியம் கவனத்தில் கொள்வது சிறந்தது. இது இறுதிவரையில் விருப்பமுள்ள இணைந்த வாழ்க்கையைத் தரும். இல்லையேல் ஏதாவதொரு காரணம் கூட வேறு காரணங்களாக ஆக்கப்பட்டு இடையிலேயே தம்பதியர் இரண்டாக பிட்டுக் கொள்வர்.

8) கணவராகும் ஆண்கள் இல்லற தாம்பத்தியத்திற்கு உகந்த நல்ல உடல், காம வலுவுடன் இருப்பது அவசியம்.

9) மேற்கூறிய வகைக்கு போதை, புகை நீக்கி அல்லது மிகக் குறைவாக்கி கொண்டு, (குளிர் நாடுகளில் சற்றுக் கூடுதலாகக் கொள்ளலாம்) நல்ல உடலுழைப்பு அதனால் பசியுடன் சத்துணவு உண்டு, ஓய்வு – அமைதி ஆகியவை வழக்கமாக வேண்டும்.

10) திருமணம் வரை பாலுணர்வுகளை எப்படி கட்டுப்படுத்துவது என்பதற்கு தனி ஆலோசகர்கள், வீடுகளில் மூத்தவர்கள் மற்றும் கல்விக்கூட வகுப்புகள் மூலமாகக் கற்றுத் தரலாம்.

11) காலந்தாழ்த்திய திருமணங்கள் தவிர்க்கப்பட்டு, தக்க பருவ வயதுகளில் நடத்தப்படுவது நல்லது.

12) மாணவ, மாணவியர் 'பள்ளிக் கல்வியை' தங்கள் வசிப்பிடத்திற்கு அருகிலுள்ள கல்விக் கூடங்களில் பயிலுமாறு செய்யப்பட்டு, பெற்றோர், பெரியோர்களால் எளிதாக நன்கு கண்காணிக்கப்பட்டு, முக்கியமான விடலை இளமைப் பருவத்தில் நல்வழி நடத்தப்பட வேண்டும். அனைத்து இடங்களிலும் தரமான கல்வி முறை கொண்டு வருவது மிக முக்கியம்.

13) முன்னர் இருந்த சீரிய முறையைப் போல, பன்னிரண்டு முதல் பதினெட்டு வயது வரை இருபாலருக்கும் தனித்தனி கல்விக் கூடங்கள் நடத்துவது ஒழுக்கத்தை உயர்த்தும்.

14) இளநிலை பட்டப்படிப்பு வரை, கல்விக்கூடங்களில் மாணாக்கர்களுக்கு அதே பாலினத்தவர்களே ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

15) இரவு எட்டு மணிக்கு தாண்டாத வகையில் வியாபார, வணிக நிறுவனங்கள், கடைகள், அலுவலகங்கள், தொழிலகங்கள் போன்றவை நடத்தப்பட வேண்டும். பொதுமக்களின் வெளி நடமாட்டம் இரவு ஒன்பது மணியோடு நிறுத்தப்படலாம்.

16) இரவுப் பணியில் பெண்கள் அவசியமாக உள்ள இடங்களில் அவர்கள் அதிகம் பேர் ஒரு பிரிவில் பணி செய்வதாக அமைக்கப்பட வேண்டும். பகல் நேரத்தை விட இரவுப் பொழுதினில் காமத்தின் செயல்பாடு உச்சம் பெறுவதால் குற்றங்கள், தவறுகளுக்கு அந்நேரங்களில் அதிக வாய்ப்பு உண்டாக்கப்படுகிறது. இதற்கான சாத்தியக் கூறுகளை தவிர்ப்பதும் சமூக ஒழுக்கத்தை உயர்த்தும்.

17) வேலை நேரங்களில் ஒரு சிறிய பகுதியைக் கூட, எதிர்பாலினத்தைப் பற்றிய காமத்தினாலான நினைவுகளோடு வைக்காமல், கொண்ட பணியில் முழு கவனம், ஈடுபாடு செலுத்த வேண்டும்.

18) சூதாட்ட கேளிக்கை விடுதிகள், போதை விற்பனை – சேவை ஆகிய இரவு நேர மசாலாக்கள் ஒன்பது மணியுடன் நிறுத்தப்பட்டால், நிச்சயமாக பல குற்றங்களின் சதவிகிதம் குறையும்.

19) புலியைப் பார்த்து பூனை சூடு போட்டக் கதையாகி விடாமலிருக்க, வசதியான மக்களின் வாழ்க்கையைப் பார்த்து, பொருள் வசதி குறைவாக உள்ள மக்கள் அதே முறைகளில் வாழ நினைப்பது மடமை. அறிவு, செல்வம், தோற்றம், செயல்பாடு போன்றவைகளில் மனிதர்களுக்குள் உள்ள வித்தியாசங்கள் எக்காலத்திலும் தவிர்க்க முடியாதது.

20) குடும்ப நபர்கள் ஒருவருக்கொருவர் நல்ல பாசத்துடன் இருக்க வேண்டும். மேலும் நெருங்கிய

உறவினர்கள், நண்பர்களிடம் நல்ல அன்பு, புரிதல் பராமரிக்கப்பட வேண்டும்.

21) இயற்கையின் அமைப்பில் சராசரியாக கூடுதல் உடல் வலுவுள்ளவர்களாகப் படைக்கப்பட்டுள்ள, எளிதாக காம உணர்ச்சி வசமடையும் ஆண்களை, தவறுகள், தகராறுகளுக்குத் தூண்டும் வகையில், பெண்களின் உடல், பாலுறுப்புகள் தெரியும் வண்ணம் ஆடைகள் இருக்கக் கூடாது; இது ஒன்று சரியானால் உலகின் பாதி குற்றங்கள் தானே குறைந்து விடும்.

22) ஆனால் விந்தையாக ஆண்களில் பெரும்பகுதியினர் முழு உடல் ஆடை அணியும்போது, உலகத்தில் பெண்களில் பெரும்பகுதியினர் அரைகுறை ஆடை அணிகின்றனர். அதிலும் குளிர் நாடுகளில்கூட குளிரைத் தாங்கிக் கொண்டு, தொடை, பின்புறம், வயிறு, முதுகு, நெஞ்சு ஆகிய இடங்களில் சிறிது மறைத்தது போக, பாக்கி பெரும்பகுதி திறப்புடன் அலங்கோலமாய்த் திரிகின்றனர். இவை மாற வேண்டும்.

23) அதிகபட்ச பொழுதுபோக்குகள், அதிக செயற்கை அலங்காரங்கள், தேவையற்ற செயல்கள், செலவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

24) ஏற்கெனவே உலகத்தில் பல கோடியாகியுள்ள காதல் பாடல்கள், பெண்களின் உடலுறுப்புகளை வர்ணிக்கும் காமப்பாடல்கள் இயற்றுவது, இசையமைத்து காம களியாட்டம், பேயாட்டம் போடுவது மிகவும் குறைக்கப்பட வேண்டும்.

அனைத்து உறவுகளின் அவசியத்தையும் மனிதர்கள் உணரும் வகையில் பாடல்கள், கதைகள் இயற்றுவது தேவை. ஆனால் கவிஞர்கள், எழுத்தாளர்கள் பலர், தீராத சொந்த சுய, காம, பண, புகழ் வெறியோடு மொத்த சமுதாயத்தையும் கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் இதை விட்டுவிட்டு வேறு ஏதாவது நல்ல உருப்படியானக் காரியங்களைச் செய்யலாமே.

25) மிக முக்கியமாக சினிமா, தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கைத் துறையினர் இலாபத்தை மட்டுமே எண்ணி தொழில் செய்யாமல், உயர்ந்த ஒழுக்கமுள்ள அற்புத சமுதாயம் உருவாக, தங்களின் தற்போதைய முறைகளில் கணிசமாக மாற்றம் செய்து சேவை செய்திட வேண்டும். இன்றைய கலாச்சார சீர்கேடுகளுக்கு மற்ற அனைவரையும் விட மேற்கூறப்பட்டுள்ளோர்களே மிக முக்கியக் கர்த்தாக்கள் ஆவர் என பல தரப்பிலும் கூறப்படுவதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

26) ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் ஜனநாயகம் இருக்குமாறு சட்டங்களை மாற்றிக் கொள்ளலாம்.

27) சட்டம் இருபாலருக்கும் சமமாக இருந்து குற்றம் செய்தவர் எப்பாலினத்தவராயினும் தண்டனை ஒரே அளவில் இருக்க வேண்டும்.

28) விவாகரத்துக்கள் எளிதாக்கப்பட்டு, மறுமணங்கள் சர்வ சாதாரணமாக்கப்படலாம்.

29) கிறிஸ்தவம், இஸ்லாம், புத்தம், இந்து போன்ற மதங்களிலிருந்து சிறப்பான நடைமுறைகளை எடுத்து ஒன்றிணைத்து மகிழ்ச்சி தரும் வாழ்க்கை முறை ஒன்றை ஏற்படுத்தலாம் . இம்மதங்கள் அனைத்திலும் தேவையற்றவைகள், தேவையானவைகள் பல அளவுகளில் உள்ளன; இவற்றில் தேவையானவைகளை தேவைப்படும் அளவிற்கு எடுத்து பின்பற்றலாம். உதாரணமாக கிறிஸ்தவத்திலிருந்து நாகரிகம், முன்னேற்றம், இஸ்லாமியத்திலிருந்து ஒழுக்கம், இலகுவான வாழ்க்கை முறை, புத்த மதத்திலிருந்து அமைதி, எளிமை, இந்து மதத்திலிருந்து சகிப்புத் தன்மை, அனைத்திற்கும் அனுசரிப்பு, கட்டாயமற்றக் கட்டுப்பாடு போன்றவைகளை எடுத்துக் கொண்டு 'பொது மனித மதமாக கடைபிடிக்கலாமே!

30) அனைத்திற்கும் மேலாக குடிமக்கள் அனைவரும் கட்டாயமாக வாக்களித்து மக்கள் தலைவர்கள், பிரதிநிதிகள், ஆட்சியாளர்கள் நல்லவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களும், இவர்களும் நல்ல முன்னுதாரணங்களாகத் திகழ வேண்டியது மிக அவசியம்.